# சுடர்

## கவிமணி மலர்

**1965**

விலை 40 காசு



மலர் 14

தில்லித் தமிழ்ச் சங்கம்

# A. & F. HARVEY LTD.,

MADURAI

S. INDIA

*MANAGING AGENTS*

*FOR*

## MADURA MILLS CO., LTD.,

COTTON YARNS OF ALL DESCRIPTION
TYRE CORD WARP SHEET AND OTHER INDUSTRIAL PRODUCTS

## PUNALUR PAPER MILLS LTD.,

ALL VARIETIES OF PAPER

## THE INDIAN TEXTILE PAPER TUBE CO., LTD.,

ALL TYPES OF PAPER CONES, TUBES, ETC., FOR TEXTILE INDUSTRY
ALL TYPES OF PAPER CONTAINER

## FENNER COCKILL LIMITED.

V-BELTS, TEXTILE RUBBER ACCESSORIES
OIL SEALS 'O' RINGS ETC., ETC.

# WE
# INVITE YOU

A discerning buyer as you are, you would certainly want to be assured of the Quality of the Diamonds you buy besides the excellent workmanship and fine designing of the Jewels you wish to be made. For these you do need the assistance of a trusted Jeweller.

Being foremost in the field for over 50 years now, we invite you to avail of our long experience and trusted assistance. Reasonable prices and prompt Delivery are additional features, you will highly appreciate.

*

**SELECT AT BAPALAL'S WITH CONFIDENCE**

# BAPALAL & CO.,

*Diamond Merchants, Manufacturing Jewellers &*
*Gold and Silversmiths,*

**Ratttan Bazaar. :: MADRAS - 3.**

**Phone : 32396** **Grams : NECKLACE**

*

**By appointment : Valuers of Jewellery to Government of India.**

## INDEX TO ADVERTISERS


| Name | Page | Name | Page |
|---|---|---|---|
| Air India | 68 | Mahomed Ebrahim | 84 |
| Aluminium Industries | 117 | Meenakshi Group | 86 |
| Ammapettai | 72 | Mettur Chemicals | 34 |
| Anantaswamy T. G. | 8 | Modella | 170 |
| Anticorrosive | 76 | Narendra Stores | 165 |
| Apeejay | 158 | National Electric | 208 |
| Arvind | 205 | National S. I. C. | 6 |
| Atlas | 187 | Nestles | 184 |
| Automobile Products | 134 | Northen Railway | 144 |
| Baidyanath | 132 | Oriental Bldg | 11 |
| B & C. Mills | 178 | Oriental Power | 160 |
| Bapalal | 1 | Orwo Films | 5 |
| Balussery | 118 | Pilot Pen | 15 |
| Bliss & Cotton | 148 | Pfizer | 33 |
| Britannia | 42 | Precision Bearings | 75 |
| British Motor | 172 | Prominent Chit | 70 |
| Central News | 166 | Pudumjec | 150 |
| Chennimalai | 128 | Pudhu Ilakkia Pathippagam | 206 |
| Dalmia | 174 | Ramco Group | 81 |
| Delhi Cloth mills | 3rd Cover | Rampur Eng. | 182 |
| Devi Films | 190 | Sarabhai | 202 |
| Dinesh Mills | 123 | Sakti Textiles | 164 |
| Elgi Equipments | 9 | Shan Sewing | 105 |
| Enfield | 156 | S. I. Viscose | 171 |
| Escorts | 130 | S. I. B. House | 60 |
| Fritz & Singh | 196 | S. P. worsted | 16 |
| Geep | 90 | Somasundaram Mills | 11 |
| Govt. of India | 102 | Southern Railway | 188 |
| Govt. of Madras (Ind) | 200 | Statesman | 154 |
| Govt. of Madras (Inf) | 55 | Supreme Mechanical | 152 |
| Handloom House | 152 | Swadesamitran | 89 |
| Harvey A & F. | 2nd Cover | Southern Structurals | 112 |
| Hoechst | 82 | Swastik | 108 |
| Imperial Tobacco | 184 | Tamilnad Handloom | 4th Cover |
| Indian Aluminium | 24 | Tata - Ralli - Fison | 162 |
| Indian Bank | 7 | Tata - Iron Steel | 94 |
| India Cements | 180 | Teksons | 66 |
| Indian Overseas Bank | 15 | Toshniwal | 182 |
| Indian Std. Metal | 126 | Travancore Cements | 194 |
| Indo - Swiss | 204 | T. I. Cycles | 135 |
| Jammi | 203 | Union Dairy | 3 |
| Jeevanlal | 168 | United India | 198 |
| Kalaimagal | 192 | Usha Forgings | 4 |
| Kanchi Silk | 199 | Velo Industries | 166 |
| Kerala Soaps | 195 | Vijaya | 97 |
| Khandelwal | 92 | Well - Wisher | 34 |
| Lakshmi mills | 20 | White Horse | 191 |
| Macropole | 188 | Wyeth | 158 |
| Madras Hotel | 115 | Zenith Tin | 143 |
| Mafatlal | 124 | | |



Edited and Published by Sri T. G. Anantaswami, for *Delhi Tamil Sangam, New Delhi*. Printed by T.N.Veeraraghavan, at *The Thara Press, Nagapattinam*.

SERVING THE NATION FROM 1932

**UNION DAIRY (Regd)**

97, BAIRD ROAD NEW DELHI

*Leading Manufacturers of*

**FRESH AND PURE BUTTER AND GHEE**

ALSO

**FRESH CREAM FOR FRUITS**

AND

**COOKING CHEESE**

*ALL OUR PRODUCTS ARE HIGHLY RELIABLE*

Please ring up : **45263**

தில்லியில்

உயர்தர வெண்ணெய், நெய்,

புத்தம் புது 'கிரீம்'

தயாரிப்பாளர்கள்

**யூனியன் பால் பண்ணை,**

*97, பேர்டு ரோடு, புது தில்லி.*

*Certified By :*

The Hon'ble Minister for Food & Agriculture, Government of India (1952), Commanders-in-Chief of Indian Army & The Navy. Royal Houses, High Government officials, Embassies, Clubs, Hotels & Schools.

*With the Best Compliments*

*from*

## USHA FORGINGS & STAMPINGS LIMITED

JEEWAN VIHAR,
3, PARLIAMENT STREET,
**NEW DELHI-1.**

*MANUFACTURERS OF*

FITTERS HAND TOOLS
SPANNERS, WRENCHES
ETC.

ORWO

ORIGINAL WOLFEN

A NAME WITH A TRADITION OF 55 YEARS

ORWO FILM

PHOTO * CINE * X-RAY

ORWO

VEB FILMFABRIK WOLFEN

THE GERMAN DEMOCRATIC REPUBLIC

ORWO PRIVATE LIMITED, 134-A, ANNIE BESANT ROAD, BOMBAY-18. ■ BOMBAY & NEW DELHI

ORWO FILMS EASTERN UNIT, 35/10, MOUNT ROAD, MADRAS-2. ■ MADRAS & CALCUTTA-13

# THE NATIONAL SMALL INDUSTRIES CORPORATION LIMITED

4 – ROUSE AVENUE,

NEW DELHI.

NSIC assists small Industrialists by

Providing machines on easy Hire Purchase basis.

Assistance in securing contracts from D. G. S. & D., Railways etc.

NSIC also undertakes

Production of prototypes of machines and tools.

The extension of training at its prototype and Production Centres at Okhla, Rajkot & Howrah in modern workshops and production practices.



# இப்பொழுது இந்தியன் பாங்க் லிட். டிபாசிட் துகைகளின் பேரில்

# $7\frac{1}{2}$ சதவிகிதம்

## வட்டி வரை அளிப்பது உங்களுக்கு தெரியுமா?

| | | | |
|---|---|---|---|
| 91 நாட்கள் மற்றும் அதிக மாக ஆனல் 6 மாதங்களுக்குள் | 5% | 3 வருடங்கள் மற்றும் அதிகமாக ஆனல் 5 வருடத்திற்குள் | $6\frac{1}{2}$% |
| 6 மாதங்கள் மற்றும் அதிகமாக ஆனல் ஒரு வருடத்திற்குள் | $5\frac{1}{2}$% | 5 வருடங்கள் மற்றும் அதிகமாக ஆனல் 7 வருடத்திற்குள் | 7% |
| 1 வருடம் மற்றும் அதிகமாக ஆனல் 2 வருடத்திற்குள் | 6% | 7 வருடங்கள் மற்றும் அதிகமாக ஆனல் 9 வருடத்திற்குள் | $7\frac{1}{4}$% |
| 2 வருடங்கள் மற்றும் அதிகமாக ஆனல் 3 வருடத்திற்குள் | $6\frac{1}{4}$% | 9 வருடங்கள் மற்றும் அதிகமாக | $7\frac{1}{2}$% |

**சேவிங்ஸ் பாங்கு டிபாஸிட்டுகளுக்கு 4%**

THE INDIAN BANK LTD. ESTD. 1907

## இந்தியன் பாங்க் லிட்.

பதிவு அலுவலகம்: சென்னை-1

ELEGANT

# சுடர்

விசுவாவசு ஆடு மலர் 14 1965

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கவியின் பெருமை | நாமக்கல் கவிஞர் ... | 10 |
| கவிமணி நினைவில்... | தே. ப. பெருமாள் ... | 12 |
| பூமகளின் புன்னகை | சாலை. இளந்திரையன் ... | 17 |
| நான் கண்ட கவிமணி | கி. வா. ஜகந்நாதன் ... | 28 |
| கவிதைகளும் கடிதமும் | கவிமணி ... | 39 |
| சில நினைவுகள் | பெ. நா. அப்புஸ்வாமி ... | 47 |
| நல்ல சகுனம் | கு. குமாரசுவாமி ... | 57 |
| நான் கண்ட கவிமணி | சோமலெ ... | 61 |
| கவிமணி. தே. வி. பிள்ளை | சுப்புலட்சுமி நாராயணன் ... | 77 |
| புலவன் சொல் பெருமை | இளமுருகு பொற்செல்வி ... | 83 |
| கவிதா வாசகம் | பெ. நா. அப்புஸ்வாமி ... | 87 |
| நாம் செய்த தவறுகள் | மு. வரதராசன் ... | 98 |
| ஆற்றங்கரையில் | ஏ. ஆர். ராஜாமணி ... | 106 |
| விட்டில் | ' நாணல் ' ... | 110 |
| சில சீமை நம்பிக்கைகள் | சோமு ... | 113 |
| சுமை | ' மாயாவி ' ... | 119 |
| குழந்தைகள்......கவிமணி | அழ. வள்ளியப்பா ... | 136 |
| தலைநகரில்......செய்தி நிலையம் | அகிலன் ... | 140 |
| குமரிக் கவிஞர் | சொக்கு சுப்பிரமணியன் ... | 142 |
| ஒரு கவி ராமாயணம்! | நா. வேணுகோபால் நாயகர் | 145 |
| லாஸ்யாநந்தா | '' தூன் '' ... | 161 |
| ஈ | வண்ணைமுத்து ... | 175 |
| கவிமணியுடன் ஒரு மணி | பெ. தூரன் ... | 185 |
| திருக்குற்றாலக் குறவஞ்சி | தர்மா ராஜாராமன் ... | 193 |



Send notices, marriage invitations and horroscopes of eligible bachelors to

**T. G. ANANTASWAMI,**

Regd. Trade Marks Agent,

38/Vth Trust Cross Street, MADRAS - 28.

ELGI URACA

We now manufacture in India Service Station Equipment in collaboration with Messrs. Pumpenfabrik Urach, West Germany, whose fifty years experience and technical know-how are available to us.

OUR SERVICE STATION EQUIPMENT

*Assure you :*

HIGH STANDARD OF QUALITY
TECHNICAL PERFECTION
AFTER SALES SERVICE

*MANUFACTURERS :*

**ELGI EQUIPMENTS (PRIVATE) LTD.,**

**INDIA HOUSE TRICHY ROAD COIMBATORE**
**Grams : "HYDRAULICS" Phone : 3311**

*SOLE SELLING AGENTS :*

ASSOCIATED TRADERS
Tool House,
7/3, Patullos Road,
MADRAS-2.

# கவிப் பெருமை

நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை



தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதென்றன் செவிப்பெருமை;
ஆசிய ஜோதியெனும் புத்தர் போதம்
அழகு தமிழில் சொன்னான் அது போதும்.

கோழி குலவிவரும்; கிளி கொஞ்சும்;
குழந்தை எழுந்து துள்ளிக் களி மிஞ்சும்;
ஏழை எளியவர்கள் யாவருக்கும்
இன்பம் கொடுக்க அவன் பாவிருக்கும்.

உழுது தொழில் புரியும் பாட்டாளி
உழைப்பில் ஓய்வுதரும் பாட்டாகும்;
தொழுது அடிமைப்படும் துயரமெல்லாம்
தூரத்தள்ள மனம் உயருமடா!

படித்துப் பழகாத பாமரருக்கும்
பாடிப் பருக அதில் சேமமிருக்கும்;
ஒடித்துப் பொருள் பிரிக்கும் சந்திகளில்லை;
ஊன்றிப் பதம் கூட்டும் பந்தனமல்ல.

காடும் மலையும் அதில் கலைபேசும்;
கடலும் ஞானம்தர அலைவீசும்
பாடும் தேசிக விநாயகத்தின்
பழமை பாடிடஎன் நாஉவக்கும்.

# தலைநகரிலே

# தமிழ்க்கோயில்

தமிழ்ப் பெருமக்கள் திருமுன்......

தில்லியிலே தில்லித் தமிழ்ச் சங்கம் ஒரு தமிழ்க் கோயிலாகவே திகழ்கிறது. 'தமிழ்ச் சங்கம் இருப்பதால் தில்லி மாநகரம் தமிழகமே' என்று தமிழ் மக்கள் நாளும் நாளும் எண்ணும் வகையிலே இயங்கி வருகிறது தில்லித் தமிழ்ச் சங்கம்.

"தமிழ்ச் சங்கத்திற்கென ஒரு சொந்தக் கட்டடம் வேண்டும்" என்ற நீண்ட நாள் கனவு நனவாகும் காலம் வந்துவிட்டது. சுமார் 22,000 ரூபாய் விலையில் தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்குரிய நிலம் வாங்கப்பட்டுள்ளது. அதிலே தமிழ்ச் சங்கக் கட்டடத்தைத், தமிழின் மாண்புக்கேற்ற வகையிலே, கட்டி எழுப்ப வேண்டியது நமது கடமை. நமக்கு நல்லதோர் வாய்ப்பு வாய்த்திருக்கிறது. அவ்வாய்ப்பை நழுவவிடாமல், தலைநகரிலே தமிழ்ச் சங்கக் கட்டடம் என்னும் தமிழ்ப் பெருங்கோயிலை எழுப்ப நாம் ஒவ்வொருவரும் முன்வருவோம் ; நம்மாலான எல்லா உதவிகளையும் செய்வோம்.

[தாராள நன்கொடைகள் கொடுப்பவர்கள் 30ஆம் பக்கம் பார்க்க.]


## THE SOMASUNDARAM MILLS PRIVATE LIMITED.

Established 1933.
Post Box No. 134.
**COIMBATORE-1.**

Grams : "SOMSUNDRAM"
Phone : 4041-44 & 5562
Residence : 2260
Spindles : 30140
Looms : 382

"B" Mills at
Somanathapuram
Muthanendal
MANAMADURAI.
Phone : 44.

**SPINNING.**

Ring yarn of all connts from N. f. 17 to N. f. 64

SINGLE — DOUBLE
HANKS — CONES

**MANUFACTURING.**

GADA — DHOTIES
MULLS — LONGCLOTH
SHIRTINGS — SHEETINGS

*Managing Director :*
Sri. P. S. S. SOMASUNDARAM CHETTIAR.

# கவிமணி நினைவில்

( கவிஞர் தே. ப. பெருமாள் )

❋

''என்னருமை இளங்கவியே! கவிதை யூற்ருய்
எழுகின்ற உன்னிதயம் பரிசு கண்டேன் ;
மின்னனைய உணர்ச்சியினை மொழியில் தேக்கி,
விதவிதமாய்த் தெளிவுதரும் வடிவம் நல்கி,
இன்னமுதச் சுவையூட்டி, எளிமை ஏற்றி,
எழில்பெய்து, காலமெல்லாம் கோலம் காணும்
பொன்னனைய கவிபொழிவாய், பொழிவாய்!'' என்றே
போற்றியென்னை வாழ்த்துவித்தாய்! வணக்கம்
[தேவீ!

விழிகளிலே அருள்மணக்கும் ; தளர்ந்த மேனி
வடிவமதில் ஒளிமணக்கும் ; இதயம் தன்னில்
கொழித்திருக்கும் வலுமணக்கும் ; கண்பரோடு
குலவுவதில் நகைமணக்கும் ; விளக்கம் கூறி
மொழிவதிலே கவிமணக்கும் ; கலைமணக்கும் ;
கருத்துரையில் அணிமணக்கும்; கவிதை வெள்ளப்
பொழிவினிலே சுவைமணக்கும் ; கவிஞர் தேவி
பொன்படைப்பில் மணக்காத பொருளும் உண்டோ?

நாஞ்சியினில் புத்தேரிப் பதியில் தேவி
நலம்நாடித் தமைத்தேடி வருவோர்க் கெல்லாம்
வாஞ்சையுடன் சுவையவலும், கனிவு மிக்க
மதுமட்டிப் பழங்கலந்தும் செய்வி ருந்தை
யாஞ்சொல்ல வேண்டுவதோ? நாடு சொல்லும் ;
இதயஒலி டி. கே. சி. *பாஸ்கர் போன்ருர்
தாஞ்சொல்வார்! இதுவுண்மை! அன்பின் பண்பு
தனிநடஞ்செய் இடமன்ருே தேவி இல்லம்!

---

* திரு. பாஸ்கரத் தொண்டைமான்.

மந்திரிக்கும் மந்திரியாய், மதியில் தேர்ந்து
வல்லமைகொள் தந்திரியாய்த் திகழும் ஞானச்
சிந்தையொளிர் ராஜாஜி, தேவி பாடல்
திறன்கண்டு, புத்தேறித் திருவூர் சென்று,
எந்தவித 'டாம்பீக' இயல்பு மின்றி
எளிமையினில் வீற்றிருந்த கவிஞர் கண்டே
சந்தமிகு பொன்னுரையால் புகழ்ந்து போற்றித்
தகுஞ்சிறப்பு செய்ததுவும் தக்க தன்றோ!

சேரர்கோன் திருநாட்டில் சிறப்பில் நின்று
திகழ்ந்திட்ட மலையாளம், ஆங்கி லத்தின்
நேரிடையே தமிழின்பால் காதல் நீண்டு,
நித்திலமாய்க் கவிதைகளை நிறைத்தார் தேவீ!
பேருயர்த்தல் கவியாக இருந்த போதும்
பெருமார்வத் தொண்டெல்லாம் சாஸ னங்கள்
சீரறிதல்; ஆங்கிலத்தில் தேவி யாத்த
தீங்கவிதை பலவுண்டு, புலமை காட்ட!

விண்ணினையும் மண்ணினையும் அளந்து, மேலும்
வெட்டவெளி சென்றளந்து, வையத் துள்ள
எண்ணினையும் எழுத்தினையும் அளந்து, காலம்
ஏற்றுள்ள தொல்பழமை யளந்து, நெஞ்ச
நுண்ணுணர்வை அளந்திந்த வாழ்வின் தன்மை
நுனித்தளந்து, நேர்முகத்துக் காட்சி யெல்லாம்
கண்ணளந்து. கருத்தளந்து. கவிதை தந்த
கவிமணியின் திறனளந்து கணிக்கப் போமோ?

செந்தமிழின் முதிர்ப்பண்பைப் பிழிந்து சாறாய்த்
தருஞ்சங்கப் புலவர்களின் தகைமை கேட்கும் ;
வந்திருக்கும் அறநூலை உலகுக் கீந்த
வள்ளுவனார் புகழ் கேட்கும் ; விண்ணின் தேனாய்ச்
சிந்தைக்கு விருந்தளிக்கும் கம்பன் மாண்புச்
சீரொலிக்கும் ; இளங்கோவின் சிலம்பொலிக்கும் ;
எந்தையுயர் பாரதியின் சங்க நாதம்
எழுந்தொலிக்கும் கவிமணியின் கவிதைக் காவில்!

உயிர்கள்படும் வேதனையைப் பார்த்த தேவி
ஊனுருக, உளமுருக, விழிநீர் சிந்தித்
துயரமிகு கனல்பிழம்பாய்க் கனன்ற பாடல்
சூடெழுப்பி வன்னெஞ்சும் உருக வைக்கும் ;
புயலாகக் கருணையினைப் பொழிந்த வள்ளல்,
போதனைகள் தந்தபிரான், புத்த தேவன்
மயலொழிக்கும் வாழ்வான ஒளியின் தீப
மணிக்கவிகள் தமிழணங்குக் கணியாய் நிற்கும் !

கவின்புல்லில் தங்கியொளிர் பனியும், வீசு
கதிரொளியால் காணாது மறைதல் போல
புவிவாழ்வும் ஆருகின்ற தன்மை கூறிப்
பூங்கிண்ண மதுவருந்தி, வைய வாழ்வைச்
சுவையாகச் செய்கவெனும் உமர்கய் யாமின்
சுடர்ஞானக் கருத்துகளைத் தமிழ்ப்பூங் காவின்
கவிமலராய்க் கோத்தளித்துத் தேவி தந்தார் !
கவியமுத நலச்சுனையைக் காட்டி நின்றார் !

---

* இக் கவிதைகள், சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 17-வது மாநாட்டுக் கவியரங்கில் (22—12—1963) 'கவிஞர் பற்றிக் கவிஞர்' என்னும் பொருளில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களைப் பற்றி அரங்கேற்றியவற்றில் ஒரு பகுதியாகும்.

PILOT PEN * PILOT PEN * PILOT PEN * PILOT PEN

PILOT PEN * PILOT PEN

*With the*
*best*
*Compliments of*

## THE PILOT PEN COMPANY (INDIA) PTE., LTD.,

"CATHOLIC CENTRE" ARMENIAN ST.,
MADRAS-1.

PILOT PEN * PILOT PEN

PILOT PEN * PILOT PEN * PILOT PEN * PILOT PEN

# இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு லிமிடெட்

(தலைமை அலுவலகம்: சென்னை - 2.)

## டிபாசிட்டர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

18-2-1965-ல் இருந்து கீழ்க் காணும் விகிதப்படி வட்டி விகிதங்களை உயர்த்தியிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 15 தினங்களும் | 45 தினங்கட்குள்ளும் | $1\frac{1}{2}\%$ |
| 46 ,, | 90 ,, | 3% |
| 91 ,, | 6 மாதங்களுக்குள்ளும் | $5\frac{1}{2}\%$ |
| 6 மாதங்களும் | 1 ஆண்டுக்குள்ளும் | $5\frac{5}{8}\%$ |
| 1 ஆண்டும் | 2 ஆண்டுகளுக்குள்ளும் | $6\frac{1}{8}\%$ |
| 2 ஆண்டுகளும் | 3 ,, | $6\frac{3}{8}\%$ |
| 3 ,, | 5 ,, | $6\frac{5}{8}\%$ |
| 5 ,, | 7 ,, | $7\frac{1}{8}\%$ |
| 7 ,, | 9 ,, | $7\frac{3}{8}\%$ |
| 9 ஆண்டுகளுக்குமேல் | | $7\frac{5}{8}\%$ |

எம். சிடி. முத்தையா,
சேர்மென்.

கே. எம். நஞ்சப்பா,
ஜெனரல் மானேஜர்.

WHEN OUT SHOPPING LOOK OUT FOR THIS

TRADE MARK

HALL MARK OF QUALITY

*FOR YOUR FULL REQUIREMENTS IN*

WORSTED WOOLLEN SUITINGS
TERRYWOOL SUITINGS
TWEEDS VALOUR
ETC. ETC.

*FABRICATED BY:*

# S. P. WORSTED SPINNING MILLS,

**VERKA.**
(DISTT. AMRITSAR.)

*

***THE PREMIER MANUFACTURERS OF:***

SUPERFINE WORSTED AND
WOOLLEN FABRICS
RENOWNED FOR THEIR
EXTRA SOFTNESS GUARANTEE
STRENGTH
SMOOTHNESS

# பூமகளின் புன்னகை

சாலை இளந்திரையன்

தமிழகத்தின் தெற்குக் கோடியில் அமைந்த நாஞ்சில் நாடு நீர்வளமும் நிலவளமும் மிக்கது ; கடலின் அரவணைப்பும் மென்காற்றின் நன்னயமும் பெற்றுச் சிறந்தது. தெங்குகள் அணியணியாக நின்று காண, செந்நெற்கதிர்கள் தென்றலுடன் கைகோத்து நின்றாடும் கலையழகு கொஞ்சும் இந்த நாட்டிலே, தமிழும் மலையாளமும் கலந்து இசைக்கும் ஒலி மணம் செவிக்கு இனியதோர் நல்விருந்து. இயற்கை வளமும் செயற்கைச் செழுமையும் நிறைந்த இந்த நாஞ்சில் நாட்டிலே, 1876 ஆம் ஆண்டு ஜூலை மாதம் (தாது வருடம் ஆடி மாதம் 14ஆம் நாள்) பிறந்தார் தேசிகவிநாயகம்பிள்ளை.

ஆங்கிலமும் தமிழும் வல்ல சிவதாணுப்பிள்ளை என்பவருக்கும், தமிழ் நலப் பெருங்குடும்பம் ஒன்றிலே தோன்றிய ஆதிலட்சுமி அம்மையாருக்கும் மகவாகத் தோன்றிய தேசிகவிநாயகம், சுமார் எழுபத்தெட்டு ஆண்டுக் காலம் இந்தப் பூவுலகில் வாழ்ந்திருந்தார். இந்த நீண்ட ஆயுளில் அவருடைய வாழ்க்கை நடந்த நயமும், அதில் விளைந்த பயனும் தமிழர் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்துப் பெருமிதம் கொள்ளத் தக்கவை.

அண்மைக்காலப் புலவர்களிலே தமிழகத்தின் இயற்கை எழிலையும் வரலாற்று மாண்பையும் பாடாதவர்கள் யாரும் இல்லை. எல்லோருடைய நெஞ்சமும் கவர்ந்த இனிய தமிழகத்தை,

தேங்குசுனை பளிங்கருவி தெளிசாரல் நாடு
சிற்றோடை கால்பரந்த செய்யதமிழ் நாடே !

என்று பாடி மனம் குளிர்ந்தார், தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்கள். இந்த நாட்டில் இயற்கை மட்டும்தான் சுனையாகப் பொங்கி, அருவியாக வழிந்து, சிற்றோடையாக நடக்கிறது என்பதில்லை ; — இங்கு வந்து பிறக்கும் கலைஞர்களின்

வாழ்வும் இவ்வாறேதான் நடைபெறுகிறது. நாஞ்சில்மணி தேசிகவிநாயகனாரின் வாழ்வு மெல்லிய அருவியாகச் சரிந்து தெள்ளிய சிற்றோடையாகவே சலசலத்துப் பாய்ந்தது....

## புற இதழ்

1876 ல் பிறந்த நம் தேசிகவிநாயகர், 1931 வரை, அதாவது சுமார் ஐம்பத்தைந்து வயது வரை குடத்து விளக்காகவே இருந்துவந்தார். அதுவரையில் அவரை ஒரு கவிஞராகத் தமிழகம் அறியவில்லை. ஆயினும், அமைதியான அந்த வாழ்விலேயே இடையறாத ஆசிரியப் பணியாலும் ஆராய்ச்சிப் பணிகளாலும், தன்னில் தானே வளர்ந்து ஊட்டம் பெற்றுக்கொண்டே வந்தது அவர் உள்ளம்.

நாஞ்சில் நாட்டுத் தேரூரில் பிறந்த தேசிகவிநாயகர் அவ் ஊரிலேயே தொடக்கப் படிப்பை முடித்தார். பின்னர், தேரூரின் அருகில் உள்ள கோட்டாற்றில் உயர்நிலைப்பள்ளி வரை பயின்று கல்லூரியிலும் சேர்ந்தார். அவருடைய குடும்பநிலை, கல்லூரிப் படிப்பைத் தொடர்வதற்குச் சாதகமாக இல்லை. ஆதலால் கல்லூரிப் படிப்பைத் தொடக்கத்திலேயே நிறுத்திவிட்டு, ஆசிரியப் பயிற்சி வகுப்பில் சேர்ந்து அதை முடித்தார்.

அக்காலத்தில் நாஞ்சில் நாடு மலையாளநாட்டுடன் இணைந்திருந்தது. அங்கே பள்ளிகளிலோ கல்லூரிகளிலோ தமிழ் படிக்க வாய்ப்பு இல்லை. ஆயினும் தமிழ்க் குடும்பத்திலே பிறந்த தேசிகவிநாயகர் தம் தந்தையாரிடமும் பாட்டனாரிடமும் தனியே தமிழ் கற்றுவந்தார். பின்னர், தேரூர் அருகிலுள்ள வாணன்திட்டு மடத்தில் இருந்த சாந்தலிங்கத் தம்பிரானிடம் முறையாகப் பாடம் கேட்டுத் தமது தமிழறிவைப் பெருக்கிக்கொண்டார்.

## காய் அரும்பு

இவருடைய தாய்வழிப் பாட்டனார் ஒரு புலவர். இவர் தந்தையும் தமிழில் தேர்ந்தவர். அவ்வப்போது பல தமிழ்ப் புலவர்கள் இவர் தந்தையாரிடம் வந்து தமிழ் ஆராய்வதும் கவிதைகள் பாடுவதும் வழக்கம். இந்தச் சூழ்நிலையில் வளர்ந்த தேசிகவிநாயகருக்கு, இளமையிலேயே, தாமும் கவிபாடவேண்டும் என்ற ஆர்வம் இவரைப் பிடித்துக்

9882

கொண்டது. அவ்வப்போது நடைபெறும் ஊர்நிகழ்ச்சி களைப் பற்றி வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் பாடல்கள் இயற்றினர்.

திருநெல்வேலியிலிருந்த உமையொருபாகக் குருக்கள் என்னும் சிவசமயப் பெரியாரிடம் சைவதீக்கை பெற்றார் தேசிகவிநாயகர். அச்சமயத்தில் குருக்களைப் புகழ்ந்து அவர் பாடிய பாடல் இது :

> வேறு மொருதுணையான் வேண்டுவனே ? வேணுவனந்
> தேறுமுமை யோர்பாகத் தேசிகனே, – கூறுமெனக்கு
> எய்யாப் பிறவி இருளகல நியளித்த
> பொய்யா விளக்கிருக்கும் போது.

இதைத் தொடர்ந்து, தமது தமிழாசிரியரின் விருப்பத்தின் படி, தம்முடைய ஊர் இறைவியின்மீது **அழகம்மை ஆசிரிய விருத்தம்** என்னும் நூல் ஒன்றைப் பாடினார். அப்போது அவருக்கு வயது சுமார் பதினெட்டு. தேசிகவிநாயகர் சிறந்த கவிஞராக விளங்குவார் என்பதற்கான அறிகுறி இந்த முதல் நூலிலேயே தென்பட்டது.

## மொட்டு

பத்து வயதிலேயே தந்தையை இழந்த தேசிகவிநாய கருக்கு 25 ஆம் வயதில் (1901) திருமணம் நடந்தது. நாகர் கோயிலுக்கு வடக்கே சுமார் இரண்டுமைல் தொலைவில் உள்ள புத்தேரியில் பிறந்த உமையம்மை என்பவர் இவரது வாழ்க்கைத் துணைவியாரானார். அதே ஆண்டில் தேசிக விநாயகர் தொடக்கப்பள்ளி ஒன்றில் ஆசிரியப்பணியும் ஏற்றார். தொடக்கப் பள்ளியில் தொடங்கிய அவரது ஆசிரியப் பணி படிப்படியாக, நாகர்கோயில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, திருவனந்தபுரம் பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி என உயர்ந்து, – திருவனந்தபுரம் அரசர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலும், அரசர் பெண்கள் கல்லூரியிலும் ஆற்றிய தமிழாசிரியப் பணியாக நிறைவுற்றது. அவருடைய முப்பது ஆண்டு ஆசிரியப் பணி சிறுவர் சிறுமியர் மத்தியிலும் பெண்களிடையிலுமே நடந்தது. இயல்பிலேயே அமைதியான தேசிகவிநாயகரை இந்த வாழ்க்கைச் சூழ்நிலை மேலும் அமைதிக் கனிவினராக உருவாக்கிவிட்டது.

# THE LAKSHMI MILLS COMPANY LTD.

COIMBATORE

*Manufacturers of*

QUALITY FABRICS
STAPLE FIBRE &
COTTON YARN

*

GASSED, MERCERISED YARNS
A SPECIALITY

*

*Managing Agents :*

**G. KUPPUSWAMY NAIDU & COMPANY,**

COIMBATORE.

இந்த முப்பது ஆண்டுக்காலம்தான் தேசிகவிநாயகரை உருவாக்கிய காலம். இந்த நாட்களில் அவர் ஒரு பள்ளி ஆசிரியராகவும் தமிழாசிரியராகவும் மட்டும் ஒதுங்கி இருக்க வில்லை. ஆசிரியப் பணியின்போது கிடைத்த ஓய்வில் கவி பாடுவதும் கல்வெட்டு ஆராய்ச்சி செய்வதும் இவரது பொழுதுபோக்குகளாக அமைந்தன. குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் பல கவிதைகளைத் தாமே எழுதியதோடு, பல ஆங்கிலப் பாடல்களையும் தமிழ்க் கவிதைகளாக வடித் தார். அவை (திருவனந்தபுரம்) 'தமிழன்', 'கேரள சொசைட்டி' முதலிய இதழ்களில் அவ்வப்போது வெளி வந்தன.

இந்தக் காலத்திலேதான் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, இசையரசு தி. இலக்குமணப்பிள்ளை, ஆராய்ச்சி அறிஞர் கே. என். சிவராஜப் பிள்ளை, நீதிபதி கே. ஜி. சேஷையர் முதலிய தமிழறிஞர்களுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர்களுடன் அளவளா வுவதும் நூலாராய்ச்சிகள் செய்வதுமே இவருடைய இனிய பொழுது போக்குகளாக அமைந்தன.

ஆசிரியப்பணியும் அறிஞர்களின் தொடர்பும் அவர் நெஞ்சில் சமுதாய உணர்வை எழுப்பின. தாம் பிறந்து வளர்ந்த நாஞ்சில்நாட்டுத் தமிழ்ச் சமுதாயம் மருமக்கள் தாயம் என்னும் சொத்துரிமை முறையினல் பெரிதும் சீரழிவதை நெஞ்சு கனக்க உணர்ந்தார் தேசிக விநாயகம். அதன் விளைவாக அவர் பாடியதுதான், **மருமக்கள் வழி மான்மியம்** என்னும் சமூகச் சீர்திருத்தக் கவிதை நூல். மருமக்கள் தாயமுறையினல் சமுதாயம் சீர்கேடுறுவதை வன்மையான கண்டனக்குறிப்போடு படம்பிடிக்கிறது இந்த நூல். இது 1917-18 ல் "தமிழன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்து, நாஞ்சில்நாட்டு மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தது.

## முகை மொக்கு

முப்பது ஆண்டுகளை ஆசிரியப் பணியில் கழித்த தேசிக விநாயகர் 1931 ல் அப்பணியிலிருந்து ஓய்வு பெற்ருர். இதற்குள் இவரது உழுவல் அன்பர்களான வையாபுரிப் பிள்ளை, டி. கே. சி. போன்றவர்கள் இவரது கவிதைகளைத் தமிழகமெங்கும் வாரிப் பரப்பினுர்கள்.

"கவிமணியின் தமிழ் என்றும் மனத்தில் போற்றி வைக்கத்தகும் பொற்களஞ்சியமாக உள்ளது. நல்ல தமிழ்; நம் மூதாதையரின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை முற்றிய தமிழ்; கற்றூர்க்கும் கல்லார்க்கும், நகரத்தினருக்கும் நாட்டுப்புறத்தினருக்கும் ஒன்றுபோலவே இனிக்கும் தமிழ்" என்று போற்றினர் வையாபுரிப் பிள்ளை. "(கவிமணி தவிர) வேறு யாருக்கும் கவி என்பது வருகிறதில்லையே!" என்று ஓங்கி அறைந்தார், டி. கே. சி.

இவர் கவிதையில் கொண்ட பேரீடுபாடு காரணமாக, இப்பெருமக்கள் செய்த பிரச்சாரத்தால் தமிழகம் ஒருசேர எழுந்து நின்று, தெற்கே நாஞ்சில் நாட்டில் அமைதிவாழ்வு நடாத்திவந்த தேசிகவிநாயகரை அன்புடனும் கனிவுடனும் நோக்கியது. சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க அன்பர்கள், 1940 டிசம்பர் 24 ல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் கூடி, தேசிகவிநாயகருக்குக் **கவிமணி** என்னும் பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தார்கள். அதைத் தொடர்ந்து இங்கும், அங்கும், எங்கும் கவிமணியின் புகழ் ஒலிக்கத் தொடங்கியது. அடைபட்டுக் கிடந்த புகழ், மடை திறந்த வெள்ளமாகத் தமிழகமெங்கும் பொங்கிப் பரந்தது....கவிமணியின் மணிப் பாடல்களை இளையோரும், முதியோரும், எல்லோரும் பாடி மகிழத் தொடங்கினர்கள்.

## மலர்

நாஞ்சில் நாட்டையும் மலையாள நாட்டையும் விட்டு வெளியே சென்றிராத தேசிகவிநாயகர், கவிமணியாகத் தமிழகத்தின் சில ஊர்களுக்குச் சென்று பாராட்டுப் பெற்று மீண்டார். பெரும் பாராட்டுக்களுக்குப் பழக்கப்படாத அவரது உள்ளம் தமிழ் மக்களின் பேரன்பைக் கண்ட நன்றி உணர்வால் நெகிழ்ந்து கனிந்தது. அக்கனிவின் வெளிப் பாடாகத் தமிழ்மக்களுக்குப் பல கவிதைகளைப் பொழிந்தார் கவிமணி.

## இதழ்கள்

இவருடைய மருமக்கள் வழி மான்மியம் பற்றி முன்பே குறிப்பிட்டோம். பிற்காலத்தில் வெளிவந்த இவரது நூல் களில் மிக முக்கியமானது மலரும் மாலையும். இதிலுள்ள

பாடல்களில் சிலவற்றையாவது பாடி மகிழாத குழந்தை தமிழ்நாட்டில் இல்லை. இதில் ஒரு பகுதியே பின்னர் **குழந்தைச் செல்வம்** என்னும் தனிப்புத்தகமாக வெளி வந்தது. எட்வின் ஆர்னல்டு எழுதிய 'Light of Asia' என்னும் ஆங்கில நூலைத் தழுவி இவர் அமைத்த கவிதை **ஆசியஜோதி.** இதுபோன்ற மற்றொரு கவிதை நூல், **உமர்கய்யாம் பாடல்கள்.** பாரசீக மொழியில் உமர்கய்யாம் என்பவர் எழுதிய பாடல்களின் தமிழாக்கம் இது.

கவிமணியின் காலத்தில் தமிழ் இசை இயக்கம் தீவிர மாக நடந்தது. ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், ஆர். கே. சண்முகம் செட்டியார் போன்றவர்கள் முன்நின்று நடத்திய அந்த இயக்கத்துக்கு கல்கி, டி. கே. சி., இராஜகோபாலாச்சாரி முதலியோர் ஆதரவு தந்தார்கள். இதன் விளைவாகப் புதிய தமிழ் இசைப் பாடல்களை பலர் இயற்றினார்கள். கவிமணியவர்களும் பக்தி மணம் கமழும் பல இசைப் பாடல்களை இயற்றினர். அவைகளின் தொகுதி **தே. வி. யின் கீர்த்தனங்கள்** என்னும் புத்தகமாக வெளி வந்துள்ளது.

கவிமணியின் தமிழ்ப்பணி கவிதைப்பணியாகவும் இசைப்பாடலாகவும் முடிந்துவிடவில்லை. உரைநடையிலும் அவர் எழுதியுள்ளார். கல்வெட்டு ஆராய்ச்சியில் அவருக்கு ஆர்வம் மிகுதி. திருவாங்கூர்ப் பகுதியில் உள்ள கல் வெட்டுக்களை ஆராய்ந்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல கட்டுரைகள் எழுதினர். **காந்தளூர்ச்சாலை** என்ற பெயரில் இவர் ஆங்கிலத்தில் எழுதிய ஆராய்ச்சிநூல் அறிஞர்களால் பெரிதும் போற்றப்படுகிறது.

இவை தவிர, இவர் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள், நிகழ்த்திய சொற்பொழிவுகள், செய்த ஆராய்ச்சிகள் – ஆகியவற்றைத் தொகுத்து, **கவிமணியின் உரைமணிகள்** என்னும் நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

## அழகு

குழந்தைக் கவிஞராகவும், மொழிபெயர்ப்புக் கவிஞராகவும், ஆராய்ச்சியாளராகவும் விளங்கிய கவிமணிக்கு இவை யாவற்றுக்கும் அப்பாலும் ஒரு சிறப்பு உண்டு. அதுதான் அவருடைய வாழ்வின் சிறப்பு. ஆடம்பர மற்ற எளிய வாழ்வில் இருந்துகொண்டே அரிய பெரிய சிந்தனைகளை எட்டிப் பிடித்துத் தமிழ்ப்பாட்டிலே உலவ

WITH BEST COMPLIMENTS

FROM

## THE INDIAN ALUMINIUM CABLES LIMITED

**NEW DELHI.**

●

*Manufacturers of :*

ALUMINIUM CABLES - STEEL REINFORCED CONDUCTORS AND ALL ALUMINIUM CONDUCTORS USED IN POWER TRANSMISSION LINES FOR RURAL AND URBAN ELECTRIFICATION PURPOSES

Playing its humble part towards the prosperity of the Nation.

●

*WORKS :*

Delhi - Mathura Road,
12/1 Milestone,
Aurangpur
FARIDABAD (Pb.)

G. T. Road,
7/1 Milestone,
Ghaziabad (U. P.)

Grams : " NIKKISAN "

Phone: 77708

விட்டவர் கவிமணி. அதோடு அநீதிக்கு அஞ்சாத தெம்பும் பிறரிடம் எதையும் வணங்கி நின்று வாங்காத பெருந் தகைமையும் அவர் இயல்புகளாக அமைந்தன.

ஆசிரியர் என்றால் ஒரு ஏளனம், தமிழாசிரியர் என்றால் அதைவிட ஏளனம் என்றிருந்த காலத்தில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர் நம் கவிமணி. திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் வேலைக்கு ஆள் தேவைப் பட்ட போது, ''பிள்ளை அவர்களே இப்பொறுப்பை ஏற்க வேண்டும்'' என்று இவரை அப்பதவியில் நியமித்தார் கல்லூரித் தலைவர். ''பெண்கள் கல்லூரியில் பெண்களை நியமிப்பதே சரி'' என்று நம் தேசிகவிநாயகர் கூறியும் கல்லூரித்தலைவர் கேட்கவில்லை..........ஆனால் சிறிது காலம் கழித்து, கல்லூரித் தலைவரே இவரை அழைத்து, ''உங்களை ஆண்கள் கல்லூரிக்கு மாற்ற முடிவு செய்துள்ளோம்'' என்றார். தலைவர் மனம் போன போக்கில் காரியம் செய் வதைக் கவிமணியால் ஏற்க முடியவில்லை. அன்று அப்படிச் சொன்ன அதே வாய் இன்று இப்படிச் சொல்வதென்றால்? ........அதைச் சுட்டிக்காட்ட விரும்பிய கவிமணி, ''நன்றாகச் செய்யுங்கள்; ஆனால் நான் இந்த மாதிரி ஆடுவதற்கு ஆளில்லை. இன்றே நான் பதவியிலிருந்து விலகிவிடுகிறேன்'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். கவிமணியின் திண்மையைக் கண்ட கல்லூரித் தலைவர் தம் தவற்றை நினைந்து பின்வாங்கினார். ஆனால், ''இப்படி ஒரு எண்ணம் ஏற்பட்ட பின் இங்கு இருப்பது சரியில்லை'' என்று உணர்ந்த கவிமணி அந்த ஆண்டிலேயே — தமது ஐம்பத்துமூன்றாம் வயதிலேயே — பணியிலிருந்து விலகிக் கொண்டார். நல்லியல்புகளையும் நல்ல உணர்வுகளையுமே பெரிதென மதிக்கும் கவிஉள்ளம், பதவிக்காகப் பிறரின் ஏளனத்தைத் தாங்கிக்கொள்ளத் தயாராக இல்லை.

நம் கவிமணி வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின் அவருக்குப் பாராட்டு நடத்திப் ''பொற்கிழி'' வழங்கப் பலர் திட்டமிட்டார்கள். அதை அறிந்த கவிமணி, அப்படிச் செய்ய வேண்டாம் என்றும் தமக்குப் பணத்தேவை எதுவும் இல்லை என்றும் கூறி அந்த முயற்சிகளைத் தடுத்துவிட்டார். அதன் மூலம்,

> ''வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை,
> யாண்டும் அஃதொப்பது இல்''

என்னும் வள்ளுவப் பாட்டுக்கு இலக்கியமாக உயர்ந்து நின்றார் கவிமணி.

ஒருசமயம் செட்டிநாட்டு "ராஜா சர்" இவரை அழைத்துப் பாராட்டி ஓராயிரம் ரூபாயைத் தமது அன்பளிப்பாக வழங்கினர். கவிமணி, கூட்டத்தில் அதை மறுக்காமல் வாங்கிக்கொண்டு, மறுநாள், தந்தவரிடமே அதை நாகரிகமாகத் திருப்பி அனுப்பிவிட்டார். ராஜாசர் அத்துடன் விடவில்லை; பெருமிதம் மிக்க புலவர் பணமாகக் கொடுத்தால் வாங்கமாட்டார் என்று கருதி அந்த ஆயிர ரூபாய்க்கும் வெள்ளிப் பாத்திரங்களாக வாங்கிக் கவிமணிக்கு அனுப்பிவைத்தார். தேடிவந்த அச்செல் வத்தைப் பெற்றுக் கொள்ளவும் விரும்பாமல், மறுத் துரைத்து ஒரு நல்லவரின் மனத்தைப் புண்படுத்தவும் விரும் பாமல், கேரளப் பல்கலைக்கழகத்தில் தம் அன்னையாரின் பெயரால் ஓர் உபகாரச் சம்பளநிதி ஏற்படுத்த அவற்றைக் கொடுத்துவிட்டார் கவிமணி!

## நறுமணம்

கொள்கை வகையில் இவ்வளவு கண்டிப்பாக இருந்த நம் கவிமணி கரடு முரடானவரல்ல: எதிலே பிடிவாதம் வேண்டும் எதிலே அது கூடாது என்பதை நன்கு தெளிந்து வாழ்ந்தவர் அவர். அவர் காலத்திலேயே எத்தனையோ வேறுவேறு கொள்கையுடைய தலைவர்கள் இருந்தார்கள். அவர்களில் யாரும் கவிமணியை வெறுக்கவில்லை; யாரையும் வெறுத்துக் கவிமணியும் ஒரு சொல் சொன்னதில்லை. அதனலேதான்,

"பகைவரென ஒருவருமே இல்லாப் பண்பு
பாலித்த கவிமணியார், நமது பிள்ளை
முகைகளெல்லாம் நலம்பெருகி மலரப் பாட்டு
மொழிந்திருந்தது இக்காலம், நமது காலம்!"

ஆம், கவிமணியவர்கள் குழந்தைகளுக்கு ஒரு கவிஞர்; குணத்துக்கு ஒரு மனிதர்.

ஓய்வு பெற்றும், ஓய்வில்லாமல் தமிழ்க் கவிதைப் பணி ஆற்றிக்கொண்டு வாழ்ந்துவந்த நம் கவிமணி 1954 செப் டம்பர் 26 ஆம் நாள் அமரவாழ்வு எய்தினர். கடைசிக் காலத்தில், நாட்பட்ட சிரங்கும் நீரிழிவும் அவரைத் துன் புறுத்தி வந்தன. அவைகளின் ஊடேயும் – இனிய முகத் தோடும் இளகிய நெஞ்சத்தோடும், – வந்தவர்க்கெல்லாம் அன்பு விருந்தும், அறிவு விருந்தும், தமிழ்விருந்தும் தளராது வழங்கிவந்தார் கவிமணி.

எட்டாத இன்பம் எதையும் அவர் வேண்டி நிற்கவில்லை; ஆதலால் அவர் வாழ்வில் ஏக்கமோ தேக்கமோ இல்லை; தம் உயர்வைப் பிறர் உயர்வோடு ஒப்பிட்டுப் பார்க்க அவர் கருதியதே இல்லை; ஆதலால் முறிவுகளோ அழுக்குகளோ அவருடைய வாழ்க்கையாம் தெண்ணீர் ஓடையில் தடைகளாக இல்லை. என் கடன் கவிதை இசைப்பதே என்ற நோக்கில் தம் வாழ்வை அமைத்துக்கொண்ட அவர், இறுதி வரை அந்த வழியில் இனிதே நடந்தார். அவர் வாழ்வின் பெருமையை யாரும் எதுவும் தடுக்கவில்லை.

"பூமகளின் புன்னகைபோல் பூத்திடுவோமே — கம்பன்
பாமணக்கும் தமிழினைப்போல் பரிமளிப்போமே"

என்று பாடுகிறார்கள், கவிமணியின் செல்வக் குழந்தைகள். அவருடைய வாழ்வும் இப்படித்தான் பூத்தது; இப்படித் தான் பரிமளித்தது. ஆம், கவிமணியின் வாழ்வு பூமகளின் ஒரு புன்னகை; அது பண்புமிக்க ஒரு தமிழ்ப் புன்னகை.

[திரு. சுத்தானந்த பாரதி அவர்களும் திரு. செ. சதாசிவம் அவர்களும் கவிமணி வரலாறு எழுதினார்கள். அவைகளை ஆதரவாகக் கொண்டு கவிமணி என்னும் நூலை ஆக்கினார், புலவர் அரசு அவர்கள். இதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது பூமகளின் புன்னகை.]





கவிமணி வாழ்ந்த வீடு இது.
[இடது பக்கம் இருப்பது புதுத் தோற்றம்.]

# நான் கண்ட கவிமணி

*கி. வா. ஜகந்நாதன்*

தமிழ் எழுத்தாளர் மகாநாடு நாகர் கோயிலில் நடைபெற்றது. 1948 - ஆம் வருஷம் மே மாதம் இந்த மகாநாடு நடந்தது. அதற்கு நான் போயிருந்தேன். அதில் கவிமணியவர்கள் காலையில் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். அன்று நான் மாலையில் தான் போகமுடிந்தது. நான் போனபோது கவிமணியவர்களின் வரவேற்புரையைப் பற்றி அன்பர்கள்பேசிக்கொண்டிருந்தார்கள். சுசீந்திரத்தில் சில ஆபாசமான சிற்பங்கள் இருக்கின்றன என்றும், அவற்றைக் கோயில்களில் அமைத்தது தவறு என்றும் கவிமணியவர்கள் கூறியதாகச் சொன்னார்கள். அதோடு, எழுத்தாளர் மகாநாட்டில், கதையில் எவ்வளவு தூரம் காதலைக் கலக்கவேண்டும் என்ற பொருளைப் பற்றி ஒரு சுவையுள்ள விவாதம் நடந்ததாகவும் சொன்னார்கள். சிற்பத்திலும் கதையிலும் காமச் சுவைக்கு எவ்வளவு இடம் உண்டு என்ற விஷயமாகவே யாவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

காலையில் வந்திருந்தால் கவிமணியவர்களைப் பார்த்து அவர் பேச்சையும் கேட்டிருக்கலாமே என்று வருந்தினேன். எப்படியாவது அவரைப் பார்த்துச் சிறிது நேரமாவது பேசிவிட்டு வரவேண்டும் என்ற ஆவல் உந்தியது. மறுநாள் புத்தேரிக்குப் போனேன்.

ஏதோ ஒரு முடுக்குத் தெருவில் கவிமணியவர்களின் வீடு இருந்தது. நானும் சில நண்பர்களும் போயிருந்தோம். கவிமணியின் மருகர் திரு. குமாரசுவாமி எங்களை வரவேற்றார். கவிமணி மாடியில் இருந்தார். எங்கள் வரவைத் தெரிவித்துவிட்டுப் பின்பு அழைத்துச் சென்றார் குமாரசுவாமி.

படத்திலே கவிமணியைப் பார்த்திருக்கிறேன். ஆசிரியக் கோலத்தில் தலையில் பாகையும் உடம்பில் சட்டையும் அணிந்த நிலையில் அந்தப் படம் இருந்தது. அதற்கும் அப்போது நான் பார்த்த உருவத்துக்கும் எத்தனையோ வேறுபாடு. உடம்பு மிக மெலிவாக இருந்தது. ஆசிரியர் படம் மிடுக்காகத் தோன்றியது. இங்கே கவிமணியை நேரில் பார்த்தபோது குழைவே உருவாகத் தோன்றினார். எழுந்து நின்று இருகைகளையும் நீட்டி வரவேற்றார். சிறிது நேரம் அவரைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தேன். அரிப்பு நோயினால் அவர் படும் அவஸ்தையை நண்பர்கள் முன்பே சொல்லியிருந்தார்கள். அவர் மேனியை

அந்த நோய் அலங்கோலப் படுத்தியிருந்தது. ஆனால் அவருடைய தமிழ்ச் செந்நா, தளராமல், வறளாமல் செந்தமிழ்த் தேனைப் பிலிற்றிக்கொண்டே இருந்தது.

என்னிடம் கவிமணி எடுத்தவுடன் 'கலைமகள்' வரவரச் சிறப்பாக வெளிவருவதைப் பற்றியே பேசினார். "உங்களைப் போன்றவர்களுடையபேரன்பு இந்தப் பத்திரிகைக்கு இருப்பதனால் இது வளர்கிறது" என்று சொன்னேன். கவிமணியவர்களின் பாடல்களும் கீர்த்தனங்களும் கலைமகளில் அடுத்தடுத்து வெளி வந்தன. காந்தளூர்ச் சாலையைப் பற்றி அவர் எழுதிய ஆராய்ச்சி 'கலைமக'ளின் ஆரம்ப காலத்தில் வெளியாகியிருக்கிறது. 'பாரதியும் பட்டிக் காட்டானும்' என்ற அருமைக் கவிதை கலைமகளில்தான் முதலில் வெளியாயிற்று என்பது அன்பர் பலருக்குத் தெரியாது.

கவிமணியவர்களின் கீர்த்தனங்களைப் பற்றிய பேச்சு வந்தது. "பலர் இப்போது கீர்த்தனங்கள் எழுதுகிறார்கள். ஏதோ பல்லவி, அநுபல்லவி, சரணம் என்று எழுதிவிடுகிறார்கள். தமிழ் மரபை அடியோடு மறந்து போகிறார்கள்" என்று அவர் சொன்னார். தமிழ் மரபை வற்புறுத்தும் பேர்வழிகளில் நானும் ஒருவன் என்பதை அன்பர்கள் அறிவார்கள். நானும் அதைப் பற்றி நிறையப் பேசினேன். கவிமணியவர்களும் பேசினார்.

"கவிதை எழுதுவதில் ஆர்வம் இருக்கும் அளவுக்கு அதன் அமைப்பு முறையைத்தெரிந்து கொள்வதில் ஆசை இருப்பதில்லை" என்று அவர் தம் கருத்தைக் கூறினார். கலைமகளில் மிகவும் யோசித்தே கவிதைகளை வெளியிட்டு வருவதை அவர் பாராட்டினார்.

மெல்ல மெல்லச் சரித்திர ஆராய்ச்சி பற்றிப் பேச்சுத் திரும்பியது. அப்போது கவிமணிக்கு ஒரு புதிய உற்சாகம் உண்டாயிற்று. சேர நாட்டின் பெருமைகளை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துச் சொன்னார். உட்கார்ந்து பேசிக்கொண்டே இருந்தவர் திடீரென்று எழுந்தார்; ஒரு பெரிய ஆங்கிலப் புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு வந்து, "இதோ பாருங்கள்" என்று தம் கருத்துக்குரிய ஆதாரத்தை எடுத்துக் காட்டினார். ஒரு முறையல்ல, இரண்டு மூன்று முறை இப்படி எழுந்து சென்று சென்று புத்தகங்களை எடுத்துக் கொண்டு வந்து காட்டினார். அப்போது அவர் பேச்சிலும் சரி, செயலிலும் சரி, துள்ளுகின்ற மிடுக்கு இருந்தது. அவர் காட்டிய சரித்திரக் குறிப்புக்களைவிட அவரிடம் அப்போது தோற்றிய உற்சாகமே என்னை மிகுதியாகக் கவர்ந்தது. முதிர்ந்த அந்தப் பருவத்திலும் சரித்திர ஆராய்ச்சியில் அவருக்கு எத்தனை ஊக்கம்! எத்தனை எழுச்சி!

நான் அவருடன் பேசிக் கொண்டிருந்தது சில மணி நேரந்தான். ஆனால் அதற்குள் இரு வேறு உருவத்தைக் கண்டேன். ஒருவர் கவிமணி தேசிக

விநாயகம் பிள்ளையவர்கள். மற்றொருவர் சரித்திர ஆராய்ச்சிக்காரரர் தேசிக விநாயகம். கவிமணி அமைதியாக இருந்தார். பாரத நாட்டின் பெருமையிலே ஊறிய உள்ளம் படைத்தவராக இருந்தார். புன்முறுவல் பூத்த முகமும் அன்பு கனிந்த உரையும் உடையவர். தமிழ் மரபிலே ஊற்றெடுத்த எண்ணங்களைப் பெற்றவர். அலையெறியாத கடலைப் போல, ஒளி முத்துக்களையும் வண்ணப் பவளங்களையும் தம் உள்ளத்தே பொதிந்து வைத்திருந்தவர்.

சரித்திர ஆராய்ச்சிக்காரரோ, வரிசை வரிசையாகச் சரித்திரக் குறிப்புக்களை எடுத்துக் காட்டுகிறவர். தம் கூற்றுக்கு ஆதாரமாக நூற்றுக் கணக்கான புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துப் பிறருக்கும் காட்டுகின்றவர். சுறுசுறுப்பாக இருக்கிறவர். ஒரு விஷயத்தைச் சொல்வதற்கு முன்பே மற்றொரு விஷயம் முன்னே உந்தித் தள்ளிக் கொண்டு முந்தும் வேகம் உள்ளவர்.

இந்த இரண்டு நிலைகளையும் நான் கண்டேன். புதிதாகப்

---

No. JE — 3 (20)/62/4351

## OFFICE OF THE COMMISSIONER OF INCOME TAX, DELHI & RAJASTHAN

Dated, New Delhi, the 28th June, 1962
5th Asadha, 1814 (S)

To

The Hon. Secretary,
Delhi Tamil Sangam,
M. G. 1/3038, Parliament Street,
Connaught Circus, New Delhi-1.

Dear Sir,

Sub : EXEMPTION UNDER SECTION 11 & 88 OF THE INCOME TAX ACT, 1961 TO THE DELHI TAMIL SANGAM

Donations made to "The Delhi Tamil Sangam, New Delhi" will be exempt under Section 88 of the Income-Tax Act, 1961 in the hands of donors subject to the limits and conditions prescribed in the said section.

Yours faithfully,
Sd. R. N. MUTTOO,
*Commissioner of Income Tax.*

PS. Original of this Certificate bears the seal of the Commissioner of Income Tax, Delhi.

பார்க்கிறவர்களுக்கு அவருடைய ஆராய்ச்சி அறிவுதான் தட்டுப்படும். அதைத்தான் வெளிப்படையாகப் பார்க்க முடியும். ஆனால் எல்லை காண முடியாத அவருடைய கவிப் பண்பை ஒரு நாளில் அளவெடுக்க முடியாது. இமயத்தைச் சில மணியிலே கண்டு வரமுடியுமா?

எங்களுக்குச் சிற்றுண்டிகளைக் கொணர்ந்து தரச் செய்தார். அன்புடன் பேசினார் என்று சம்பிரதாயத்துக்குச் சொன்னால் போதுமா? அந்த அன்பு இதயத்திலிருந்து பொங்கியது.

விடை பெற்றுக் கொண்டேன்; "இன்னும் பல கவிதைகளைத் தமிழ் நாட்டுக்கு வழங்க வேண்டும்" என்ற வேண்டுகோளுடன் விடை பெற்றுக் கொண்டேன்.

## 2

கவிமணியின் கவிதையைத் தமிழுலகத்துக்கு அறிமுகப் படுத்தியவர்களில் முக்கியமானவர் இருவர். ஒருவர் ரசிகமணி டி. கே. சி. மற்றொருவர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள். ரசிகமணியவர்கள் கவிமணியின் கவிதைகளை விமரிசனம் செய்து யாவருடைய கவனத்தையும் அவற்றின்பால் இழுத்தார்கள். திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் கவிமணியை அடிக்கடி எழுதும்படி தூண்டினார்கள். கவிமணி தம்முடைய கவிதைகளை முதலில் வையாபுரிப் பிள்ளையவர்களுக்கு அனுப்புவார். ஏதாவது ஒரு கவிதை எழுதினால் அதில் ஒவ்வோரடியில் வெவ்வேறு பாடங்களை எழுதியிருப்பார். சில சமயங்களில் ஒரே கருத்தை இரண்டு மூன்றுவிதமான உருவத்தில் அமைத்திருப்பார். அவற்றில் சிறந்ததைத் தேர்ந்தெடுத்துப் பத்திரிகைக்கு அனுப்பும்படிக் கடிதம் எழுதுவார். எல்லாமே சிறப்பாகத்தான் இருக்கும். வையாபுரிப் பிள்ளையவர்கள் இந்தத் 'தேர்தல்' வேலையைச் செய்து அனுப்புவார். சில காலம் இப்படி நடந்தது. பிறகு கவிமணி கலைமகளுக்கு அனுப்பும்போது நேரே எனக்கே அனுப்பலானார்.

ஸ்ரீவைகுண்டத்தில் சிவகாமி வெளியீட்டகம் என்ற புத்தகக் கம்பெனி ஒன்று இருந்தது. அதன் தலைவர் திரு. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள்; நல்ல தமிழன்பர். அவர் வெளியிட்ட பாட புத்தகங்களில் கவிமணியின் பாடல்களையும் சேர்த்து வெளியிட்டார். அவர் எனக்கும் அன்பர். அவர் கவிமணியின் பாடல்கள் சிலவற்றைத் தனித் தனித் தாளில் அச்சிட்டு ஒன்றாகத் தைத்துத் தம்முடைய அன்பர்கள் படித்து இன்புறும்படி வழங்கினார். அது நல்ல முறையில் புத்தக உருவமாக இல்லாவிட்டாலும் அச்சிட்டிருந்தமையால் ஒரே சமயத்தில் கவிமணியவர்களின் பாடல்களைப் பார்த்து இன்புறுவதற்குத் துணையாக இருந்தது. கவிமணியினது கவிதையின் முதற்

பதிப்பு என்று அதைத்தான் சொல்லவேண்டும். அதைப் பார்த்தபோது, 'நல்ல முறையில் கவிமணியின் பாடல்களைத் தொகுத்து அழகான புத்தகமாக வெளியிட வேண்டும்' என்ற கருத்து எனக்குத் தோன்றியது. அன்பர் சுப்பிரமணியப் பிள்ளை அந்தக் கருத்தை மிக்க மகிழ்ச்சியோடு ஆதரித்து, "நீங்கள் அதைச் செய்து தருவதானால் கவிமணியவர்களிடம் சென்று பாடல்களை வாங்கி வரலாம், மிகவும் அழகான முறையில் புத்தகத்தை உருவாக்கலாம்" என்று சொன்னார்.

இச் சமயத்தில்தான் அன்பர் திரு. மு. அருணாசலம் கவிமணியின் பாடல்களைப் புத்தகமாக வெளியிடும் முயற்சியைத் தொடங்கினார். பல பாடல்களை அவருக்குக் கொடுத்தேன். 'ஆண்டான் கவிராயர்' என்ற புனைபெயரோடு கவிமணி சில பத்திரிகைகளில் எழுதியிருந்தார். 'லக்ஷ்மி' என்ற பத்திரிகையில் கவிமணியின் பாடல்கள் பல வந்திருந்தன. இவற்றையெல்லாம் தொகுத்து 'மலரும் மாலையும்' என்ற பெயர் சூட்டி, 1938 ஆம் வருஷம் நவம்பர் மாதம் வெளியிட்டார், திரு. மு. அருணாசலம்.

கவிமணியவர்களின் கவிதைகளையும் கீர்த்தனங்களையும் மிகுதியாகப் பெற்று வெளியிடும் பாக்கியம் 'கலைமகள்'க்குக் கிடைத்தது. ஆசிய ஜோதியில் பல பகுதிகள் கலைமகளில் வெளிவந்தவை. ஒரு முறை தீபாவளி மலருக்குக் கவிதை வேண்டுமென்று கடிதம் எழுதியபோது 'கலைமகளுக்கு எப்போதும் இல்லையென்று சொல்லாத கவிமணியவர்கள் இந்த முறை ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருப்பதற்கு மிகவும் வருந்துகிறார்கள்' என்று அவருடைய மருகர் எழுதினார். அந்தக் கடிதம் வந்த சில நாட்களில் 'கவிமணி இருக்கிறார்கள்', என்று சொல்லும் பாக்கியத்தை நாம் இழந்தோம்.

கவிமணியின் குழந்தைத் தன்மையையும், பேரன்பையும், சரித்திர ஆராய்ச்சி வன்மையையும் நேரிலே பழகி அறிந்த அன்பர்கள் பலர் அவர் வாழ்ந்த காலத்தில் ஒரு முறை பழகினால் அறிந்து இன்புறக்கூடிய இயல்புகள் இவை. ஆனால் கவிமணியின் கவித்துவம் அவரோடு பழகாதவரையும் அடிமைப் படுத்துவது; அவரை அணுகாமல் நெடுந்தூரத்தில் இருப்பவர்களையும் 'நம்முடைய கவிமணி' என்று உறவு கொள்ளச் செய்வது. இடம் கடந்து நிற்கும் இந்த உறவு காலம் கடந்தும் மனித உள்ளங்களில் இடம் கொள்ளும். ஆம். இனி வருங்காலத் தமிழ் மக்களும், "எங்கள் கவிமணி" என்று அவருடைய அற்புதமான கவிதைத் தேனை மாந்திப் பாராட்டிக் கூறிப் பெருமிதம் அடையத்தான் போகிறார்கள்.

*With the Compliments of*

Pfizer | DUMEX

**PFIZER PRIVATE LIMITED**

*With compliments*

*from*

**A WELL WISHER**

OF

# DELHI TAMIL SANGAM

# பிறவிக் கவிஞன்

கவிதா சக்தியை இறைவன் சக்திக்கு அடுத்தபடியாகக் கூறலாம். எந்தக் காலத்திலும் மனிதனுக்கு சிருஷ்டி சக்தியுண்டு. அவன் இயற்றும் ஓவியமும் சிற்பமும் இதற்குச் சாட்சியாக விளங்குகின்றன. இயற்கைக் காட்சிகளை ஓவியன் ஓவியத்தில் தீட்டுகிறான். ஆனால் கவிஞன் இயற்கையை மட்டுமல்ல, உள்ளத்தில் எழும் நிகழ்ச்சிகளையும் தன்னுடைய கவிதையில் தீட்டுகிறான். ஆகவே கவிஞனுடைய சிருஷ்டி சக்தியில் சிறந்தது. இதர கலைகளை நாம் சர்வகலாசாலையில் கற்கலாம். ஆனால் சிறந்த கவிதையை இயற்றும் ஆற்றலைக் கற்க இயலாது.

கவிஞன் பிறவியில் கவிஞனாக இருக்க வேண்டும். ஆகவே இத்தகைய கவிஞராகச் சிறந்து விளங்கும் கவிமணியைப் பாராட்டுவது நமது தமிழ் அன்னையையே பாராட்டுவதாகும்.

டாக்டர் R. K. சண்முகம் செட்டியார்

* * *

தமிழகத்தில் அரும் பெரும் நூல்கள் பல உண்டு; கன்னித் தமிழ் ஆட்சி மொழியாய் மாட்சியுற்றிருந்த காலத்தே எழுந்த இலக்கியங்களிற் பல இன்றைச் சிறுவர்க்கு எளிதில் விளங்குவதில்லை. ஆத்திச்சூடியும், கொன்றை வேந்தனும் அன்றையக் குழந்தைகட்கு எளிய இனிய நூல்கள். வேற்று மொழியின் ஆதிக்கத்தால் அத்தகைய தமிழறிவைப் பலர் இழந்து விட்டனர். இந்நிலையில் குழந்தை இலக்கியம் இன்றியமையாதாயிற்று. அக்குறையை நீக்கிக் குழந்தைகள் உளங் குளிர்ந்து பாடுதற்கு ஏற்ற எளிய கவிதைகள் பலவற்றைத் தந்தவர் கவிமணி.

ரா. பி. சேதுப்பிள்ளை

# தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு
# எங்கள் வாழ்த்துக்கள்

★

**தி மேட்டூர் கெமிகல் அண்ட் இண்டஸ்டிரியல்**
**கார்பொரேஷன் லிமிடெட்,**
**மேட்டூர் அணை, ஆர். எஸ்.**
**சேலம் ஜில்லா.**

★

**உற்பத்தியாளர் :**

காஸ்டிக் சோடா, ஸ்திர பிளீச்சிங் பௌடர், குளோரின் திரவம், ஹைட்ரோ குளோரிக் அமிலம், பொடாசியம் குளோரேட், கால்சியம் குளோரைடு, வனஸ்பதி, சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய், சோப்பு வகைகள்.

★

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் :
**சேஷஸாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,**
**திருச்சிராப்பள்ளி.**

★

தில்லி பிரதிநிதி :
**ரா. சக்கரவர்த்தி M. A., B. L.,**
E. 3/1, ஜான்டிவாலன் எக்ஸ்டென்ஷன்,
நியூ லிங்க் ரோடு, தபாற் பெட்டி எண். 89,
புது தில்லி – 1.

தொலைபேசி எண் : 568634        தந்தி : "காமதேனு"

## பாட்டாளி துயர்

தொழிலாளர் துன்பம் எண்ணி அவர் நெஞ்சம் கலங்குவார். அவர்களுக்கே இவ்வுலகம் சொந்தமெனச் சொல்வார்.

"பாடு படுபவர்க்கே — இந்தப்
பாரிடம் சொந்தமையா
காடு திருத்தி நல்லநாடு
காண்ப தவரல்லவோ"

"உழுது பயிர் செய்வோர் — வயிற்றுக்கு
உணவு பற்றுமல்
அழுதழுது நிதம் நிற்ப(து)
அறியீரோ ஐயா"

என்ற பாடல்கள் தொழிலாளர் மீது அவர் கொண்ட அன்பின் விரிவை விளக்குவதாகும்.

## குழந்தை உள்ளம்

குழந்தைகளிடம் எல்லையற்ற அன்பு அவரிடம் குடிகொண்டிருந்தது. தனது இல்லத்துச் சுவர்களில் குழந்தைகள் பலவற்றின் படங்களைத் தொங்க விட்டிருப்பார். பலகாலும் அவர் அவற்றைக் கூர்ந்து பார்ப்பார். ஊன்றி அவற்றை நோக்கும்போது தமக்குத் தோன்றும் உணர்ச்சிகளை வந்தவரிடம் கூறி மகிழ்வார். படங்களாக அவற்றை அவர் கருதுவதில்லை. உயிருடைய குழந்தைகளாகவே எண்ணி வந்தார். இத்தகைய பாசத்தைக் குழந்தைகளிடம் கொண்டிருந்ததாலேயே தமது "மலரும் மாலையும்" எனும் நூலைக் குழந்தைகட்கு முதலில் சமர்ப்பித்தார். குழந்தைகள் பொருட்டே அந்நூலை வெளியிட்டார்.

கவிமணிக்குத் தமக்கெனக் குழந்தைகள் இல்லை; எனினும் ஊரிலுள்ள குழந்தைகளை எல்லாம் தமதாகவே எண்ணினர். பிள்ளைகளின் துயரம் எல்லாம் கண்டு உள்ளம் உருகுவார். அவை அழுவதைக் காண அவரது மனம் இசையாது. அவை சிரிக்கும் போது தாமும் சிரிப்பார்; அழும்போது தாமும் கண்ணீர் வடிப்பார்.

— "கவிமணி வரலாறு" அருணு பப்ளிகேஷன்ஸ்



கவிதை புனையும் கவிமணி

# பசுவும் கன்றும்

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு — அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி.

அம்மா என்குது
வெள்ளைப்பசு — உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி.

நாவால் நக்குது
வெள்ளைப்பசு — பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக் குட்டி.

முத்தங் கொடுக்குது
வெள்ளைப்பசு — மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி.

* * *

# கோழி

கோழீ! கோழீ! வா வா;
கூரை விட்டு இறங்கி வா;
கோழீ! முட்டை இட வா;
கூட்டில் அடை காக்க வா.

பெட்டைக் கோழீ! வா வா;
பிள்ளைகளைக் கூட்டி வா;
குட்டை நெல்லைக் கொட்டினேன்;
கொத்திக் கொத்தித் தின்ன வா.

வஞ்சமாய்ப் பருந்ததோ
வானில் வட்டம் போடுது;
குஞ்சணைத்துக் காப்பாயோ?
கூட்டில் கொண்டு சேர்ப்பாயோ?

— கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

# பெண்ணினம் . . .

" அல்லும் பகலும் உழைப்பவரார் — உள்ளத்து
அன்பு ததும்பி யெழுபவரார்
உள்ளந் தளர்வுறும் நேரத்திலே — உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவரார்
அள்ளி எடுத்து மடியிருத்தி — மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவரார் ?
நீதி நெறியில்லா வம்பருமே — நல்ல
நேர்வழி வந்திடச் செய்பவரார்
ஓதிய மானம் இழந்தவரை — உயர்
உத்தமராக்க முயல்பவரார் ?"

* * *

" ஆவியைப் பிடித்து நான் அலேவதெல்லாம் என்றன்
அருமைக் குழந்தைகளுக்காகவே ஐயா "
வாடி முகம் படைத்த மக்களுண்டு — தீரா
வயிற்றுப் பசியு முண்டு நானுமுண்டு
வீடுங் குடியிருக்க இல்லே ஐயா — என்றன்
விதியின் கொடுமைகளும் கொஞ்சமோ ஐயா
நெல்லேயள்ளிக் குத்துவேனே நெய்திடுவேனே — நான்
நெருப்பினே மூட்டுவேனே கொட்டை நூற்பேனே

* * *

" மங்கையராகப் பிறந்ததனுல் — மனம்
வாடித்தளர்ந்து வருந்துவதேன்
தங்கு புவியில் வளர்ந்திடும் — கற்பகத்
தருவாய் நிற்பதும் நீரலவோ ?
செம்மையிற் பெற்ற குணங்களெல்லாம் — நீங்கள்
செய்வினேயாலே திருத்துவீரேல்
இம்மைக் கடன்கள் முடித்திடவே — முத்தி
எய்திச் சுகமா யிருப்பீரே."

— கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளே.

# மலர்கள்

பூமகளின் புன்னகைபோல்
பூத்திடுவோமே! — கம்பன்
பாமணக்கும் தமிழினைப்போல்
பரிமளிப்போமே!

வண்ண வண்ணச் சேலைகட்டி
மகிழ்ந்திருப்போமே! இந்த
மண்ணகமும் விண்ணகமாய்
மாறச் செய்வோமே!

மங்கையர்க்கும் ஆடவர்க்கும்
மணமுடிப்போமே! மன்னர்
தங்கமுடிமீதும் நாங்கள்
தங்கி வாழ்வோமே!

கரும்பினிலும் இனியரசம்
கருதிவைப்போமே! — அதை
விரும்பிவரும் நண்பர்க்கு
விருந்தளிப்போமே!

ஈசனருள் வேண்டி நிதம்
இணையடி போற்றி! — நல்ல
வாசமெழு தூப தீபம்
வழங்கி நிற்போமே!

# வாழ்த்து

பருவமழை பொய்யாது பெய்யவேண்டும்;
பயிர்களெல்லாம் செழித்தோங்கி வளரவேண்டும்;
தருமநெறி தவறாது தழைக்கவேண்டும்;
சாதிமதச் சண்டையெல்லாம் ஒழியவேண்டும்;
திருமகளும் கலைமகளும் சிறக்கவேண்டும்;
தேசாபிமான மெங்கும் திகழவேண்டும்;
கருமமெல்லாம் நற்கரும மாகவேண்டும்;
காந்திமதி நின்னடிகள் வாழ்த்தினேனே.

— கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை.


NUTRO
BISCUITS
Made from highly nutritive groundnut flour and enriched with vitamins, NUTRO biscuits are available in bulk packages of 5½ Kg. Ideal for distribution in schools and other institutions.
packed with nourishment —filled with flavour
Approved by the MEALS FOR MILLIONS ASSOCIATION for special distribution
VITAMIN CONTENTS/100 Gm. OF BISCUITS
Vitamin A ... 11,600 I.U.
Vitamin B1 ... 1.935 mg.
Vitamin B2 ... 1.935 mg.
Vitamin D ... 705 I.U.
Nicotinic Acid 17.60 mg.
Calcium ... 196.00 mg.
BRITANNIA
BISCUITS

## பொருள் ஒன்று – வடிவம் மூன்று

[ இது வடமொழி சுலோகம் ஒன்றிற்கு மூன்று வடிவத்தில் கவிமணி தமிழாக்கம் செய்தது. ]

रात्रिर्गमिष्यति भविष्यति सुप्रभातं
भास्वानुदेष्यति हसिष्यति पङ्कजश्रीः
इत्थं विचिन्तयति कोशगते द्विरेफे
हा ! हन्त ! हन्त ! नलिनीं गज उज्जहार ॥

வெண்பா

துன்றுமிருள் சாயும் சுடரொளியும் வானேறும்
மன்றலரவிந்தமிது வாயவிழும் – என்று சுரும்
பந்தண்மலரினகமுறைய அச்சுனையை
வந்துண்டு மாய்த்ததொருமா.

அல்லது

பெண்ணி மலருளிருக்கத்தடஞ்சுனையின்
வண்ணமழித்ததொருமா.

கட்டளைக் கலித்துறை

மூடிக்கவியுமிருட் பகை நீங்குமிம்மூதுலகம்
தேடிக்கதிருமுதிக்கும் கமலம் சிரிக்குமெனக்
கூடிக்குவியு மலருறை வண்டுளங்கொண்டமைய
ஆடிக்குடைந்து மதவேழம் ஓடையழித்ததுவே.

கும்மி

மாலையிருளகலும் கதிரவன்
வானிலுதித்தெழுவன்
கோலமலரிதுவும் மகிழ்ந்து
குலாவியலர்ந்திடுமே
வாவிமலர் விரிய எனக்குமிவ்
வன்சிறை நீங்கிவிடும்
பூவுலகெங்குமுள்ள மதுவனம்
போயுலாவித்திரிவேன்.
என் றெருதாமரைக்குள் மதுகரம்
எண்ணியிருந்திடவே
சென்று மதவேழம் சுனையதுவே.
தீயச் சிதைத்ததுவே.


9-12-42

கவிமணி, திரு பெ. நா. அப்புஸ்வாமி அவர்களுக்கு எழுதிய கடிதங்களில் ஒன்று.





நண்பர்களை வரவேற்கும் கவிமணி.

# சில நினைவுகள்

பெ. நா. அப்புஸ்வாமி

நான்கு பேரறிஞர்களைச் சென்னைக்கு எப்படியாவது அழைத்துக் கொண்டு வந்து விடவேண்டும்; அதனால் சென்னை நகரும், தமிழ்நாடும், தமிழும், சிறப்படையும்; அவர்களும் பண்பில் முன்னிலும் உயர்வடைவார்கள்; அவர்களுடைய மனம் முன்னிலும் அகன்று விரியும்; பெரும் பணி புரியும் வாய்ப்பையும், அதனால் பிறக்கும் மகிச்சியையும் அவர்கள் பெறுவார்கள்; — இதுவே தான் என் முக்கிய நினைப்பு. அவர்களுடைய நட்பையும், அவர்களோடு பேசிப் பழகும் வாய்ப்புக்களையும், அவற்றால் தோன்றும் நன்மைகளையும், மகிழ்ச்சியையும், நானும் பெறக்கூடும் என்னும் நினைப்பும் என் நெஞ்சின் உள்ளே இருந்திருக்வேண்டும், அதுவும் என் ஆசையைத் தூண்டியிருக்க வேண்டும், என்றே இப்பொழுது தோன்றுகிறது. அந்நால்வர்களில் இருவரின் விஷயத்தில் என் முயற்சி பலித்தது. திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரும், பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையும், சென்னைக்கு வர, வந்து தங்கிச் செயல்புரிய, இணங்கினார்கள்; வந்தார்கள். வேறு இருவரின் விஷயத்தில் — நான் எவ்வளவோ முயன்றும், எத்தனையோ காரணங்களை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லியும்; என்னிலும் அவர்களுடைய நட்புக்குப் பாத்திரர்களாக உள்ளவர்களையும், அவ் இருவரும் பெரு மதிப்பு வைத்திருந்த சிலரையும், கொண்டு மீண்டும் மீண்டும், சிபார்சு கூறச் செய்தும், என் முயற்சி பலிக்கவில்லை. மகா வித்துவான் ரா. இராகவையங்காரும், நண்பர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும், சென்னைக்கு வர இணங்கவில்லை. ஒரு சமயம், அவர்கள் சற்றே மனம் இளகியவர்களைப் போல் தோன்றினார்கள். அவ்வளவுதான். அவர்கள் வரவில்லை — அதாவது, சென்னையையே தங்களுடைய வாழிடமாகக் கொண்டு, சென்னையில் இருந்தவாறே செயல் புரிந்துவர அவர்கள் இணங்கவில்லை. அவர்கள் இருவரும் சென்னைக்கு வந்ததுண்டு; சில காலம் சென்னையில் தங்கியதும் உண்டு. சென்னைக்கு அதிர்ஷ்டம் இல்லை.

* * *

பல ஆண்டுகளுக்கு முன்னால், மயிலாப்பூரில் சித்திரக் குளக் கரையில் நான் இருந்த போது, சுமார் நாலரை ஆண்டுக் காலம் போல், வாரந்

தோறும், சனிக்கிழமையோ, அல்லது ஞாயிற்றுக் கிழமையோ, தமிழிலும் கவிதையிலும் சுவை உடையவர்களும், புலமை உடையவர்களும், ஆர்வம் உடையவர்களுமான, ஒரு சிலர் அங்கே கூடுவது வழக்கமாக இருந்தது.

அப்போது ஒரு நாள் டி. கே. சி. சூர்ப்பணகை இராமனைக் கண்டவுடனேயே அவன்மீது காதலுற்றதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது அதை ஒட்டி ஒரு சிறிய விவாதம் எழுந்தது. அதன்போது யார், யார், என்ன, என்ன சொன்னார்கள் என்பது அவ்வளவு முக்கியமில்லை; சொல்லப்பட்ட கருத்துக்களும், அவற்றுக்குரிய சான்றுகளுமே முக்கியம்.

'கண்டதும் காதல்' என்பது உண்மையா? அல்லது, கவி மரபா? அல்லது, வெறும் பிதற்றலா? இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் கண்ட போதே காதல் கொண்டார்கள் என்று கம்பன் சொல்லவில்லையா? பிற தமிழ் நூல்களிலிருந்தும், வடமொழி நூல்களிலிருந்தும், ஆங்கில நூல்களிலிருந்தும், இதற்குச் சான்றுகள் கூறப்பட்டன. 'எல்லாம் கதை' என்றார் ஒருவர்.

'கண்டதும் காதல்' உண்டானதைப் போல், 'கேட்டதும் காதல்' என்பதும் உண்டல்லவா? சீதையைப் பற்றிக் கேட்ட இராவணன் அவள்மீது காதல் கொள்கிறான். கிருஷ்ணனைப் பற்றிக் கேட்ட ருக்மணி அவன்மீது காதல் கொண்டதாகக் கூறும் கடிதம் பாகவதத்தில் தலை சிறந்த பகுதிகளில் ஒன்று. அர்ஜுனனைப் பற்றிச் சிறியோரும், பெரியோரும், பெண்டிரும், புகழக் கேட்ட சுபத்திரை, அவனையே மணக்க வேண்டும் என்று உறுதிகொள்கிறாள். தமயந்தியைப் பற்றிக் கேட்ட நளனும், நளனைப் பற்றிக் கேட்ட தமயந்தியும், ஒருவர்மீது ஒருவர் திடமாகக் காதல் கொள்ளுகிறார்கள் அல்லவா? — என்று சென்றது விவாதம். 'எல்லாம் கதை' என்று வந்தது. மறுப்பு.

சீன நாட்டிலே ஆண்-பெண் காதலைவிட ஓர் உயர்ந்தபடியிலேயே உயர்த்தி வைத்துப் பேசுகிறார்கள், கவிகள். காதலைப்பற்றிப் பிற நாடுகளில் பாடுவதுபோல், அந்நாட்டில் நட்பைப் பற்றிப் பாடுகிறார்கள். சுக்ரீவனின் மீது இராமன் கொண்ட நட்பு அவனைப் பற்றிக் கேட்டதால்தானே பிறந்தது? கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையும் ஒருவரைப் பற்றி ஒருவர் கேட்டதாலேயே — ஒருவரையொருவர் பார்த்துப் பழகாவிட்டாலும் கூட — நட்புக் கொள்ளவில்லையா? 'புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சி தான் நட்பாம் கிழமை தரும்' என்னும் குறளுக்கு விளக்கம் கூறிய பரிமேலழகர், 'புணர்ச்சி, ஒரு தேயத்தார் ஆதல்...பழகுதல், பலகால் கண்டும் சொல்லாடியும் மருவுதல், இவ்விரண்டும் இன்றிக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல், உணர்ச்சி

9882

ஒப்பின், அதுவே உடன் உயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்ப' என்று கூறியிருக்கிறார் அல்லவா ? — என்றார் ஒருவர். 'அதுவும் கதைதானே ?' என்று வந்தது மறுப்பு.

* * *

இந்த விவாதம் ஒரு புறம் இருக்கட்டும். கடித போக்கு வரவால் நட்பு — நெருங்கிய நட்பு — ஏற்படக்கூடும் என்பதற்கு அருமை நண்பர் தேசிக விநாயகம் பிள்ளையே சான்று.

நான் அவரைப் பற்றி நண்பர் வையாபுரிப்பிள்ளை சொல்ல, பலதடவை கேட்டிருந்தேன். நான் பத்திரிகையை நடத்தும் பொறுப்பை ஓரளவு ஏற்றிருந்த காலத்திலே, சிறுவர் படித்து மகிழக் கூடிய பாடல்களைப் பாடக் கூடியவர், விஞ்ஞானத்தில் பற்றும் பயிற்சியும் உடையவர் விஞ்ஞான ஆசிரியராகவும் இருப்பவர் என்று வையாபுரிப் பிள்ளை சொல்லக் கேட்டிருந்தேன். என் மனம் அவரை நாடிச் சென்றது. சிறுவர்க்கான பாடல்களைப் பாடித்தர வேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொண்டேன். அவர் அனுப்பினார். சிறிது காலம் கடிதப் போக்கு வரவு ஆன பின்பு, நான் சிற்சில, அழகிய, உணர்ச்சிமிக்க, சிறுவர் உள்ளத்தைத் தொடக்கூடிய, பாடல்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றை மொழிபெயர்த்து அளிக்குமாறு வேண்டிக் கொண்டேன். அவர் முதலில் பாடிய சிறு பாடல்களில் பல இவ்வாறுதான் பிறந்தவை. அவர்மீது நான் கொண்டிருந்த நட்பும், அவர்மீது வைத்திருந்த மதிப்பும் நாளுக்கு நாள் மிகுந்து வந்தன. அவர் எழுதிய கடிதங்களிலிருந்து அவரும் என்மீது நட்புக் கொண்டிருப்பது தெரியவந்தது — அவர் எழுதியவை எல்லாம் உள்ளத்திலிருந்து வெளி வருபவை, நாவின் நுனியிலிருந்து அல்ல, அல்லவா ?

* * *

ஒரு சில ஆண்டுகளாக நண்பர் தேசிக விநாயகம் பிள்ளைக்குப் பல கடிதங்களை எழுதியும், பாடல்களை அனுப்பி மொழிபெயர்த்து அளிக்குமாறு வேண்டியும், குழந்தைப் பாடல்கள் முதலிய சிலவற்றைப் பெற்றுவந்தேன். பின்னர், ஒருமுறை அவர் சென்னைக்கு வந்து, மயிலாப்பூரில், நண்பர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் வீட்டில் சில காலம் தங்கியிருந்தார். அப்பொழுது தான் அவரை நேரில் பார்த்துப் பேச நிறைய வாய்ப்புக்கள் கிடைத்தன. அப்போது பல முறை சித்திரக் குளத்தில் நான் இருந்த வீட்டிற்கு அவர் அடிக்கடி வந்து போவதுண்டு. அவர் குழந்தைகளின் மனத்தை நன்கு அறிந்தவர், குழந்தைகளோடு இனிமையாகப் பேசுவதில் ஆசை உடையவர், குழந்தைகளுடைய பேச்சையும், அவற்றில் இடையிடையே பளிச்சென்று தோன்றும் உவமைகளையும் எண்ணி மகிழ்பவர்.



கவிமணியும் — திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையும்
பிள்ளையவர்களுக்கு கவிமணி பல ஏட்டுச்சுவடிகளை வழங்குதல்



கவிமணியின் குடும்பத்துக் குழந்தைகள்

அக்காலத்தில் அவருடைய தலைமயிர் தொகுதி தொகுதியாக ஒன்று சேர்ந்து, திரண்டதுபோல், குச்சியாக உயர்ந்தும், சற்றே தாழ்ந்து தொங்கியும், காணும் – ஐன்ஸ்டைனின் தலைமயிரைப் போல. அதைக் கண்ட என் இளைய மகள் அவரைத் 'தென்னைமரத் தாத்தா' என்று அருமையாக அழைத்ததில் அவர் பேரானந்தம் அடைந்தார்.

அக்காலத்தில் தான் நான் அவரைச் சென்னைக்கே வந்து தங்குமாறு அழைத்தேன். எனக்குத் தெரிந்த வரையில் அவருக்குக் குடும்பத் தொல்லைகள் ஒன்றும் இல்லை. எல்லாக் குழந்தைகளின் மீதும் பேரன்பு கொண்ட அவருக்குச் சொந்தக் குழந்தை இல்லை. அங்கு வழங்கிய வாரிசு முறை மருமக்கட் தாயம். ஆயினும் சென்னைக்கு வர அவர் இணங்கவில்லை. வையாபுரிப் பிள்ளை என்னுடைய வேண்டுகோளை அறை குறை மனத்தோடுதான் ஆதரித்தார் என்று எனக்குத் தோன்றிற்று. அதனால் வையாபுரிப் பிள்ளையின் மீது எனக்குச் சற்றுக் கோபம்தான். அவரும் சேர்ந்து வற்புறுத்தியிருந்தால், ஒரு வேளை, நண்பர் இணங்கியிருக்கலாம் என்பது என் நினைப்பு.

* * *

பிறகு, அவரை விடாமல் பாட்டுக்களை— குழந்தைப் பாடல்களை — எழுதித்தர வேண்டும் என்று தூண்டிக் கொண்டேயிருந்தேன். சில ஆங்கிலக் கவிகளின் நூல்களையும் (உதாரணமாக, வால்ட்டு விட்டுமன் பாடற்றொகுதி) தெய்வத் துதிப் பாடல்களையும் (ஆக்ஸ்பர்ட் யுனிவெர்ஸிட்டி ப்ரெஸ் வெளியிட்ட தோத்திரப் பாடல்கள் – (Song of Praise) வாங்கி அனுப்பினேன். ஆயினும், நான் எதிர்பார்த்த அளவுக்கு பாடல்களை அவர் எழுதி அனுப்பவில்லை. தொல்பொருள் ஆராய்ச்சியின் ஒரு துறையாகிய சாசன ஆராய்ச்சி, கல்வெட்டு ஆராய்ச்சி முதலிய ஆராய்ச்சிகளில் அவர் இறங்கிவிட்டார். அதனால் அறிவுலகம் பயன் அடைந்தது; குழந்தை உலகத்துக்கு நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே, கலைமகளின் சார்பாகவும், என் ஆவலின் தூண்டுதலின் பேரிலும், அவருக்குச் சற்றே கடுமையாக – நட்பின் உரிமையே இதற்குக் காரணம் – ஒரு கடிதம் எழுதினேன். கல்லைப் புரட்டக் கூடியவர்கள், உங்களைப் போன்ற திறமையுள்ளவர்கள் பலர் இல்லாவிட்டாலும், ஒரு சிலராவது இருக்கிறார்கள். ஆனால் குழந்தைகளுக்காக உங்களைப் போல் உணர்ச்சியோடும், சுவையோடும், அன்போடும், தரம் அறிந்து, எழுதக்கூடியவர்கள் வேறு ஒருவரும் இல்லை. ஆதலால் கல்வெட்டைக் கைவிட்டுக் குழந்தைகளை மகிழ்விப்பதே உங்களுடைய கடமை – என்று எழுதியிருந்தேன். சில அருமையான பாடல்கள் கிடைத்தன.

பாடல்களை எழுதினால் தலை மிகவும் நோகிறது' என்று அவர் ஒரு முறை என்னிடம் சொன்னார்: அதன் பிறகு, நான் அவரை அவ்வளவு வற்புறுத்துவதில்லை.

ஆயினும், அவர் அவ்வப்போது பாடல்களை எழுதியனுப்புவார். அப்படி எழுதிய தாளின் விளிம்புப் புறங்கள் இரண்டிலும், பாடபேதங்களைப் போல், மாற்றுகக் கொள்ளக்கூடியவைகள் என்று சிலவற்றையும் குறித்து அனுப்புவார். அவை நண்பர் வையாபுரிப் பிள்ளையிடமோ என்னிடமோ, வந்து சேரும். பிறகு நாங்கள் – அதாவது வையாபுரிப்பிள்ளையும் நானுமாக – உட்கார்ந்து, படித்து, எந்தப் பாடம் சிறந்ததாக எங்களுக்குத் தோன்றிற்றோ அதையே பாடமாகக் கொண்டு, தேசிக விநாயம் பிள்ளை குறிப்பிட்ட பத்திரிகைக்கு — **கலைமகளுக்கோ**, வேறு ஏதேனும் ஒன்றுக்கோ – அனுப்பிவைப்போம்.

* * *

அவர் எழுதிய கடிதங்களில் அவருடைய அன்பும், அறிவும், ததும்பிக்கொண்டிருக்கும். சில கடிதங்கள் இன்னும் என்னிடம் இருக்கின்றன. முதலில் எழுதிய கடிதங்களை எல்லாம் அவர் கைப்படவே எழுதிவந்தார். பின்னர் மூப்பும், நோயும், குறுக்கிட்டபடியால், மருகர் குமாரசாமியைக் கொண்டு எழுதச் செய்து கையொப்பமிட்டு வந்தார்.

அவரால் அடிக்கடி சென்னைக்கு வரமுடியவில்லை. ஒரு முறை காரைக்குடியில் நண்பர் சா. கணேசன் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்திவரும் கம்பன் விழாவிற்கு வந்தார். என்னால் அங்கே சென்று அவரைக் காணமுடியவில்லை. 'இவ்வளவு தூரம் வந்தாய்விட்டதே; சென்னை வரையிலும் வரலாமே, என்று எழுதினேன், சொல்லியனுப்பினேன். வேறு காரணங்களால், அவரால் வர இயலாமல் போய்விட்டது.

நீதிமன்ற விடுமுறை நாட்களின் போது கொடைக்கானலுக்கும் மதுரைக்கும், சில சமயம் திருநெல்வேலி, குற்றாலம் வரையிலும், நான் போவதுண்டு. அப்போதெல்லாம் அவரை எப்படியாவது கண்டு வரவேண்டும் என்று நினைத்தும், செயலில் எண்ணம் நிறைவேறாமல் போய்விட்டது.

இதற்கிடையில், அவர்நோய் வாய்ப்பட்டு, உடல் சோர்ந்து, தளர்ந்து, அனேகமாகப் படுத்த படுக்கையாகவே ஆகிவிட்டார். அவரை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்று முடிவு செய்து, திருநெல்வேலியில் தலை சிறந்த வழக்கறிஞரும், எனது அருமை நண்பருமான, எஸ். வி. கோபாலகிருஷ்ணையர், அவரது மருகரும் வழக்கறிஞருமான எஸ். பூதலிங்கையர், ஆகிய இருவரோடும் கூட, நாகர் கோயிலுக்குப் போனேன். அப்போது வையாபுரிப்பிள்ளை திருவனந்தபுரத்

துப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியருள் ஒருவராகப் பணிபுரிந்து வந்தார். அவரை நாகர் கோயிலுக்கு வரும்படி எழுதவே, அவரும் வந்து சேர்ந்தார்.

நாங்கள் நால்வரும் வந்து காண விரும்புகிறோம் என்ற செய்தியை நண்பர் தேசிக விநாயகம் பிள்ளைக்குத் தெரிவித்து, அவரிடமிருந்து அனுமதி பெற்று, நாகர் கோயிலிலிருந்து புத்தேரிக்குப் போனோம். ஓர் ஒடுங்கிய சந்தில் உள்ள அவருடைய வீட்டுக்குச் சென்றோம்.

நாங்கள் வரப்போவது தெரிந்த அவருடைய உறவினர்கள், வாயிலிலிலேயே எங்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்கள். அங்கே ஒரு கட்டிலில், தூய வெள்ளைத் துணிப் போர்வை உடல் முழுவதையும் மூடி மறைக்க, நண்பர் படுத்திருக்கக் கண்டோம். முகம் மெலிந்திருந்தது, கன்னங்கள் குழிந்திருந்தன, தலைமயிர் — பாக்கி உள்ளது – முன்னிலும் வெள்ளையாக நரைத்திருந்தது. அவருடைய நோய், மனத்தைத் தளரச் செய்யும் நோய். ஆயினும், அவருடைய கண்களில் மகிழ்ச்சி ததும்பிக் கொண்டிருந்தது. முகம் மலர, வாய் சிரித்தது. எல்லோருக்கும் வணக்கம் கூறிய அவர் என்னை நோக்கி 'அந்த மூக்கு என் கண்ணை விட்டு ஒரு நாளும் அகலாது' என்று சொன்னபோது நான் கொண்ட மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் அளவில்லை, ஆயினும் அவருடைய நிலையைக் கண்டு நான் பெற்ற வேதனையே பெரிது. என் கண்களில் நீர் பெருகி, அந்த அருமை முகத்தைத் திருப்பிக் கொண்டேன். சிரித்துப் பேச முயன்றேன். நா எழவில்லை.

* * *

அன்று நாங்கள் நால்வரும் சென்ற, அவர் படுத்திருந்த, சிற்றறையில், அவருடைய கட்டிலுக்கும் எங்கள் நால்வருக்குமே இடம் இருந்தது என்று கூடச் சொல்லலாம். அங்கே நான்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஒரு சிறிய மின்சார விசிறியும் இருந்தது. அருமை நண்பர், தலை சிறந்த அறிஞர், சுவை மிக்க கவிஞர், அங்கே வருந்திப் படுத்திருந்தார். எங்கள் நால்வரில் வையாபுரிப்பிள்ளையே அவருக்கு மிகவும் நெருங்கிய, பலகாலமாகப் பழகிய, நண்பர். அடுத்தபடியாக நான். மற்றவர்கள் இருவரும் முன்பு நேரில் அறிமுகம் ஆகாதவர்கள். ஆகவே நண்பர் முதலில் அவ் இருவரையும்–அவர்களுக்குள்ளும் முதலில் வயதில் மூத்த கோபால கிருஷ்ணையரையும், பின்பு அவருடைய மருகரையும், உட்காரும்படி சொன்னார்; பிறகு என்னை; பின்பே வையாபுரிப் பிள்ளையை.

இந்த நயமான முறையைக் கண்டதும், காளிதாசன் சிவபெருமானின் திருமண வைபவத்தைக் கூறும்போது, அங்கு வந்தவர்களை அப் பெருமான்

எப்படி வரவேற்றார் என்று கூறுகிறார். குமார சம்பவத்தில் ஏழாம் அத்தியாயத்தில் நாற்பத்தைந்தாவது சுலோகம், அங்கு வந்தவர்கள் அனைவரையும், அவர்கள் வணங்கும் போது, நந்தி சிவபெருமானுக்கு ஒவ்வொருவராக அறிவித்தார் என்று கூறுகிறது. அடுத்த சுலோகத்தில், சிவபெருமான் தலையை அசைத்துப் பிரமனை வரவேற்றார்; வாய் திறந்து பேசி விஷ்ணுவை வரவேற்றார்; புன்சிரிப்பால் இந்திரனை வரவேற்றார், என்று கூறப்பட்டிருக்கிறது. அதை நான் நண்பருக்கு எடுத்துக் கூறினேன். அவர் காளிதாசனைப் புகழ்ந்தார்.

பிறகு பேச்செல்லாம் அநேகமாக இலக்கியத் துறையைச் சார்ந்ததாகவே இருந்தது. 'உலகத்திலுள்ள கவிகளில் எல்லாம் யார் சிறந்தவர்?' என்று பிறந்தது ஒரு கேள்வி. பல விடைகள் வந்தன. வேறு சில கேள்விகளும் எழுந்தன. நாங்கள் அவருடைய கருத்தைக் கூறும்படி கேட்காமலேயே, 'என் கருத்தில் ஷேக்ஸ்ப்பியரே யாவரினும் தலை சிறந்தவர்' என்று அவர் கூறினார். கோபாலகிருஷ்ணையர் ஆங்கில இலக்கியத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர், அதற்குரிய தேர்வில் முதல் தரத்தில், சென்னை மாநிலத்தில் முதல்வராக தேறியவர். வடமொழி, தமிழ், இந்தி, மலையாளம், முதலிய மொழிகளில் தேர்ச்சி உடையவர். வையாபுரிப் பிள்ளையின் தமிழ்ப் புலமையைப் பற்றிக் கூற வேண்டியதே இல்லை. பேச்சோ ஆங்கிலம், தமிழ், வடமொழி, இலக்கியங்களை ஒட்டியதாக இருந்தது. நேரம் போவது தெரியாமல் பறந்தது. நாங்கள் வந்து இரண்டு மணி நேரம் ஆயிற்று. நோயாளிக்குக் களைப்பாக இருக்குமே என்று எண்ணினோம். நேரம் ஆகிவிட்டதே என்று எச்சரிக்கை செய்தேன். உடனே தேசிகவிநாயகம் பிள்ளை 'நான் இதுவரை இவ்வளவு இனிமையாக இரண்டு மணி நேரம் அனுபவித்திருந்ததே இல்லை' என்றார். எங்களில் ஒவ்வொருவருக்கும் அப்படியே தோன்றிற்று.

பிறகு மனமே இல்லாமல், அவ் அறையை விட்டு வெளியே வந்தோம். எங்களுக்காகத் தயார் செய்து வைத்திருந்த, சிற்றுண்டிகள், பழங்கள், பானங்கள், முதலியவற்றை உண்டோம். அவர்களுடைய விருந்தோம்பலைப் பாராட்டினோம்.

மெதுவாக அவ்வீட்டை விட்டு வெளியே வந்தோம். அதுவே நான் அவர்களைக் கடைசியாகப் பார்த்தது.

**வள்ளல் கவிமணி**

கவிமணியுடன் உரையாடுவோர் சிலர் தொல்லையையும் துயரத்தையும் இடையிடையே கூறுவர். பொருளின்மையால் துயருற்றவர் அவர் என்பதனைக் கவிமணி உணர்ந்தால் பணம் வழங்கி அவர்தம் அல்லலை அகற்றுவார். வழங்கிய பொருளை அவர் பெரும்பாலும் திரும்பி வாங்குவதில்லை!

"கவிமணி வரலாறு" — அருணா பப்ளிகேஷன்ஸ்.

# கலை மணக்கும் தமிழகம்

*

* விண்ணைத் தொடும் கோபுரங்களும், நெஞ்சை அள்ளும் காவியங்களும், உணர்வுக்கு விருந்தளிக்கும் சிற்பக் களஞ்சியங்களும் தமிழ் நாட்டின் அருட் செல்வத்தையும் கலைச் செல்வத்தையும் பறைசாற்றிக் கொண்டே இருக்கின்றன.

** மதுரைக் கோயிலும், தஞ்சைக் கோபுரமும், மாமல்லபுரச் சிற்பமும், தமிழ்நாட்டின் தனிச் சிறப்புகள் ஆகும். எழில் சிந்தும் ஏர்க்காடும், உல்லாசம் மிகுந்த உதகைமண்டலமும், ஐந்தருவி வீழும் அழகிய குற்றாலமும், கோடையிலே இளைப்பாறுவதற்கேற்ற கொடைக்கானலும் தமிழ்நாட்டில் கண்டுகளிக்கத் தக்கவை.

*** இசைக் கலை வளர்த்துத் தமிழர் இசை வாழ்வு வாழ்ந்தவர். தொட்டிலை ஆட்டும்போது, சுண்ணம் இடிக்கும்போது, நாற்று நடும்போது பெண்கள் இசைக்கும் பாடல்கள் தமிழ் நாட்டின் இசைப் பெருமையைக் கூறுகின்றன. தமிழ்நாட்டின் நாதசுரமும், வீணையும் எழுப்பும் ஒலிகள் இசையாதாரையும் இசைய வைக்கும் இயல்புடையவை.

**** 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுமை நெறியைப் பரப்பி, பாரதத்தின் ஒருமைக்கு உரம் ஊட்ட வல்லவை தமிழ் இலக்கியங்கள்.

( தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது. )



கவிமணியும் அவர் இல்லாளும்

# நல்ல சகுனம்

கு. குமாரசுவாமி

திருவளர் செல்வி! ......... .........“உன் சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழ்த் துதுமே” என்று புது நெறி வகுத்து, தமிழணங்கை வாழ்த்துகின்றது, “மனேன் மணீயம்”. தாய் மொழிக்குத் தெய்வநிலை ஏற்றிப் பணிகின்ற வழக்கினைத் தமிழின் கண் காட்டிப் போந்த முதல்வர் சுந்தரனுர். அவர், மனேன் மணீயப் பாயிரத்தில் காட்டு கின்ற அழியாத சிதையாத இளமைத் தன்மை நந் தமிழோடு நாளும் ஒன்றி நிற்பதாம். இது யாங்ஙனம்?

கண்ணுல் காணக் கிடைத் துள்ள சங்கத் தமிழ்ப் பாக்கள் முதலாக நாம் வாழும் இரு பதாம் நூற்ருண்டு இலக்கியப் படைப்புக்கள் ஈருக எண்ணி நோக்கும் எவரும் தமிழின் மாரு இளமைக்குக் காரணம் தெளிவுறக் காண்பர். காலத் திற்குக் காலம் புதுமைக் கோலத்தை தமிழுக்கு ஆக்கிப் போந்தனர் புலவர் பெருமக் கள். அன்றைய நிலையிலேயே நின்று விடாவண்ணம் அழகு அமைப்புக்களோடு இலக்கியங் களை யாத்தனர். சங்கப் பாக்கள், நீதிப்பாக்கள் காப்பிய வகைகள், சிற்றிலக்கி யங்கள், பண்ணமையப் பாடப் பெற்ற பாசுரவகைகள், மொழி பெயர்ப்பு இலக்கியங்கள், புதினங்கள், நாடகங்கள், எளிமையோடு இனிமை உற வாடும் இந்நூற்ருண்டின் கவி மலர்கள், உரைநடை இலக்கி யங்கள் இன்னேரன்னவை காலவெள்ளத்தை எதிர்கண்டு கட்டிளமை குன்ருது நிற்கும் ஆற்றலைத் தமிழுக்குத் தந்தவை எனலாம்.

இந்நிலையில், உலகியல் மாற் றங்கள் பலவற்றையும், எண்ணத்தைக் கடந்த நிலையில் காட்டுகின்ற இருபதாம் நூற் ருண்டில், தமிழணங்கின் தண் ணெழில் இளமை தனி நின்ருேங்க கவிதைத் துறை யில் புத்திலக்கியங்களை யாத்த பெருமக்களுள் அறிஞர்களால் முதலிடம் தரப்பெறுபவர்கள் பாரதியும்–கவிமணியும் ஆவர். பாரதி தாய் நாடுகாக்கத் தனி வழிகண்டு, பாடிப் பாடிக் கவி மலர் குவித்த பெருமகன். பாரதி கண்ட கவிதை நெறி புத்தம் புதிய நெறி. எனவே புதுமெருகு பெற்ருள் தமிழ் அணங்கு. இளைஞர் முதல் முதியோர் ஈருக யாவரும் விரும்பும் வழிகண்டு, சீரிய கருத்துக்களைச் சிந்தையால்

எண்ணியெண்ணி, நேரிய பாக்கள் பலவற்றைப் பாடி தமிழணங்கின் இளமை காத்த செல்வர் 'தே. வி.'

தமிழிழந்தோர் கவிமணியின் இனிய பாக்களைப் பயின்று, "தேசிய விநாயகத்தின் கவிப் பெருமை தினமும் கேட்பது என் செவிப்பெருமை" என்று பேசி, 'கவிவாணர்' என அவரைப் போற்றுவர். "மருமக்கள் வழி மான்மியத்தை"க் கற்று, அதன் உட்பொருளை உணர்ந்து, 'சமுதாயச் சீர்திருத்தவாதி' என்று கூறி அதன் அமைப்பை நோக்கி, "நகைச்சுவை இலக்கியம் யாத்த நாயகன்" என்று பாராட்டுவர். "ஆசிய ஜோதியை"யும் உமார் கயாத்தை"யும் கண்டு, 'மொழிபெயர்ப்பின் மூதறிஞன்' என மொழிவர். "உரைமணிகளை" உளங்கொண்டு நயம்பாராட்டுவர். * கல்வெட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கண்டு 'ஆய்வுப் பெரும் புலவன்' என உரைப்பர். அவற்றின் ஆங்கில மொழி நடையைக் கண்டு இன்புறுவர் "தே-வியின் கீர்த்தனைகளை" இசைத்தேனுடன் உண்டு, உள மகிழ்ந்து பேசிய அறிஞர் கூற்றுக்கள் பற்பல.

இவ்வாறு, பல்வேறு வகைகளில் தமிழ் இலக்கிய வளத்தைப் பெருக்கிய கவிமணியின் நூற்களைத் தனித்தனியே ஆய்ந்து, அவற்றின் சீர்மையனைத்தையும் அளவிட்டுக்காட்டும் ஆற்றல் இலக்கிய ஆய்வுத்துறை அறிஞர் தமக்கே உரியதாகும். எனினும், வாழ்வின் இயல்புக்கும், இதயத்தெழும் பாவின் இயல்புக்கும் அமைகின்ற ஒருமைப் பாட்டை 'தேவி'யுடன் வாழும் பேறுபெற்ற நிலையில் உரைத்தல் ஈண்டு சால்புறும்.

இசைத்தட்டுக்களிலே கேட்கின்ற ஒரு பாடல்; ஏன்? "திரைப்படத்தில் கூட இந்தப் பாடலைக் கேட்டிருப்போம். ஆம், "நல்ல சகுனம் நோக்கிச் செல்லடி" என்று தொடங்கும் ஒரு கீர்த்தனை. விரகதாபத்தில் வேதனையுற்று, விம்மி, ஏங்கித் தவித்துத் தோழியைத் தன் தலைவன் பால் செல்லவிடுக்கும் தலைவி கூற்றாய் அமைகின்றது இப்பாடலின் பொருட்சுவை.

சொற்சுவை ஒன்றையே கருத்தாகக் கொண்டு வேற்றிசை என்னும் பொன்முலாம் பூசி, மெட்டென்னும் பொட்டும் வைத்து வடிவழகால் வாதிட வருகின்றனர் இக்காலக்கவிதைப் பெண்டிர். பொருட் சுவை என்னும் பேரழகை நிலையழகை தனக் காக்கும் பாவென்னும் பாவையையோ, இன்னிசை ஒன்றிய பொருள் திறம்மிக்க கீர்த்தனைக் கன்னியையோ கன்னித் தமிழில் இந்நாளில் கண்டால் அந்நிலை, கருநெல்லிக் கனி கண்ட அதியனின் நிலையே.

மேலே குறித்த கீர்த்தனைக்கு வருவோம்; "தேவியின் கீர்த்

---

* ஜர்னல் ஆப் ஓரியண்டல் ரிசர்ச், மலபார் குவார்ட்டர்லி ரிவ்யூ, கேரளா சொசைட்டிப் பேப்பர்ஸ் – ஆகிய இதழ்களில் 40 ஆண்டுகளுக்கு முன் கவிமணி கல்வெட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார். அவை புத்தகவடிவுற அச்சில் உள்ளன.

தனங்கள்'' என்ற நூலின்கண் இதனைக் காண்கிறோம். அகப் பொருள் துறையை அடியாகக் கொண்ட கீர்த்தனை இது. பாடலை மட்டிலும் காணும் நிலையுடையோர் தலைவியின் கூற்றாகக் கவிமணி, நடேசர் மீது அவர் உள்ளம் கொள்ளும் நிலையினைக் காட்டுகின்ற இனிமையைக் காண்பர். ஆனால் உண்மை வாழ்வில் ''தேவி''க்கு அசையாது அகலாது நின்ற அல்லல், இக் கீர்த்தனை உருவெடுக்கக் காரணமாய் நின்றது என்பதை அண்டையிருந்து கண்டவர்க்கு உணரவியலும்.

தம்மைக் காணவருவோர், எவரும் தம் உடல்நிலையால் உள்ளம் உறும் வேதனையை உணரவியலாவண்ணம் அமைந்திருக்கும் – கவிமணியின் கனிந்த சொல்லும் உபசரிப்பும். வருவோர் கருத்திற்கு இனிமைதோற்றுவித்து விடுப்பார் கவிமணி. இலக்கியத் தேனுண்டு களிகின்ற வண்டு அனையார் வருவரேல் - அன்று 'தே. வி'க்குக் கொண்டாட்ட நாள்தான். உடல் தொல்லை தலைகாட்டுவதே இல்லை. உள்ள உவகை மிகையால் அவர் இருக்கும் அறை சிரிப்பொலியின் சிகரமாய் விடும்.

''செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்'' என்றான் பொய்யா மொழி. சிந்தனைச் செல்வர்களாம் அறிஞர்கள் கூடிவிட்டால் செவிக்குணவிற்குப் பஞ்சமேது? பாரதியின் வாக்குப் போல தேன் வந்து காதில் பாய்ந்து கொண்டே இருக்குமே. ''வயிற்றுக்கு'' என்ற சொல்லாட்சி உடல் நலத்துக்கு என்பதனைத்தானே காட்டுகின்றது. அறிஞர்கள் உளமொன்றி, உறவாடி, உரையாடுகின்றபோது உடல் நிலை பற்றிய சிந்தையே ஓடுவது இல்லை. இத்தகைய வாய்ப்பைப் பெறுகின்ற பொழுதே கவிமணிக்குக் கிடைத்து வந்த பொற்பொழுது என்றால் அது மிகப் பொருந்தும்.

உரையாடத்தக்கோர் இல்லாத போழ்து உடல் நிலையிலே உள்ளம் சென்று விடும். உள்ளம் செல்ல மறுத்தாலும் உடல் விடுவதில்லை; இழுத்து விடும் அந்த அல்லல் நிலையில் கவிமணி கொண்ட துயர நிலைகளை நேரிற்கண்டோர் போலப் பிறரும் காண ஓவியமாய் வடித்துக் காட்டும் கவிதைகளும் சிலவுள. ''சிரங்கு'' என்ற தலைப்பில் வரும் பாக்கள் அவர் உடல் கொண்ட சிரங்கினைத் தெளிவுறக் காட்டும் ஓவியங்கள். அவை அவர்கொண்ட துயரநிலையை மட்டிலும் காட்டும் பாக்களாக நிற்பின் புத்தகம் காணும் புண்ணியம் பெறமாட்டா. ஆனால், இலக்கியச்சுவையும் கலந்து கற்போரின் கருத்தைக் கவர்வனவாய் அமைந்துவிட்டன. இப் பாக்களின் நயங்களை அறிஞர் பலர் பாராட்டிக் கூறியுள்ளவற்றைப் பரக்கக் காணலாம்.

இறுதி நாட்களில் கவிமணிக்கு உடல் தொல்லை எல்லையற்றதாகி விட்டது. அந்த எல்லையைக் கடக்க,

பிறவாப் பெருவாழ்வைப் பெற அவர் உள்ளம் நாடிற்று. அந்நாட்டமே மேலே குறித்த பாட்டிலே உட்பொருளாய் மிளிர்கின்றது. பேரின்பப் பெருவாழ்வை உட்பொருளாய்க் கொண்ட அக்கீர்த்தனையை மேலேழுந்தவாரியாக நோக்கின் சிற்றின்பத்தைச் சிந்தையால் நாடும் தலைவியின் கூற்றுகக் காணலாம். கருத்தைக் கவியாக்கி, தமிழைத் தோழியாக்கித் தம் துயரை எடுத்தியம்பி நிற்கும் அவரது கூற்றில் நடேசர் நல்லருளை நாடும் உள்ள நிலையின் பிரதிபலிப்பைக் காண்கிறோம்.

"என்று வருவான் எமன் என்று எதிர்நோக்கி நின்று தளர்கின்றேன்"-என்று அவர் பேசுகின்றபோது எமன் வரும் அக்காலம் பேரின்பக் கோட்டையின் தலைவாயில் திறக்கும் நல்ல நேரம் என்றே அவர் கருதுவதை உணர்கிறோம். "ஈசன் நடராசன் பாதத்து இடங்கண்டு வை நீ எனக்கு" என்று, பண்டிதமணியிடம் வேண்டிக்கொள்ளும் அன்பு வேண்டுகோளைக் காணும் பொழுது, நல்ல சகுனம் நோக்கித் தோழி செல்லாது எண்ணத்தில் தோல்வியடைந்த தலைவி அதனினும் மிக்கார் ஒருவரைத் துணைநாடி நிற்கின்ற நிலையினை அகக்கண்ணில் நாம் காண்கிறோம். இங்கே கவிமணி வெற்றி பெற்று விட்டார்.

சாதாரண அமாவாசை நாள் தே-வியின் பிறந்தநாள்; நல்ல சகுணம் பார்த்துச் செல்லுமாறு கூறியவர் அல்லவா? தான் செல்வதற்கு மிகமிக நல்ல சகுனத்தையே பார்த்துவிட்டார். மகாளய அமாவாசை (பெரிய அமாவாசை) இது 'தே-வி'. உலக வாழ்வை விட்ட நாள்.

சிற்றின்ப வாழ்வாம் உலகிற்கு வந்துற்ற காலம் சிறிய அமாவாசை; பேரின்ப வாழ்வாம் பெருமான் திருவடிப் பேற்று வாழ்விற்கு அவர் சென்றநாள் பெரிய அமாவாசை; அவர் நல்ல சகுனம் பார்த்தே சென்றார். ஆனால் அவர் சென்ற அச்சகுனம் நம்மவர் உள்ளங்களிலே வேதனையை உருவாக்கிய ஒன்று. எனினும், அப்பெருந்தகை ஆக்கிச் சென்ற கவிதைத் தேனைப் பருகிப்பருகி நம் உள்ள வேதனையைப் போக்கிக் கொள்ளுதல் ஒருவாறு இயலும் அல்லவா? *


**VISITING DELHI?**

*THEN*

*REMEMBER US FOR*

Excellant Boarding and Lodging in

SOUTH INDIAN STYLE

**The South Indian Boarding House**

*AND FOR*

Clean, Wholesome, Delicious North and South Indian Dishes

**Modern Coffee House**

(Opp. TELEPHONE EXCHANGE)

**Connaught Circus, New Delhi.**

PHONE No. 48188 GRAMS: "SIBHOUSE"

# நான்கண்ட கவிமணி

'சோமலெ'

பல ஆண்டுகளுக்கு முன் ஓர் அமெரிக்கர் இந்தியாவுக்குப் புறப்பட்டார். இந்தியாவில் பார்க்க வேண்டியவை எவை என்று அவர் ஒரு நண்பரைக் கேட்டாராம். தாஜ் மஹால், இமயமலை, மகாத்மா காந்தி என்று அவருடைய நண்பர் குறிப்பிட்டாராம். அதுபோன்றே தமிழ் நாட்டின் தென் பகுதியான நாஞ்சில் நாட்டில் காணத் தக்கவை என்ன என்று கேட்பவரிடம், "கன்னியாகுமரி, சுசீந்திரம் கோவில், தேசிகவிநாயகம் பிள்ளை" என்று பெருமிதத்துடன் சொல்லிக் கொள்வது தமிழ் நாட்டில் வழக்கமாக இருந்து வந்தது.

பாட்டா – நாஞ்சில் நாட்டில் கவிமணி அவர்களை இப்படித்தான் அன்பாக அழைப்பார்கள் – இக்காலத்துக் கவிஞர்களில் தலைசிறந்த கவிஞராய் விளங்கினர். பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகளும் அவர் பாடல்களைப் பாடி மகிழ்வார். "கண்ணே மணியே முத்தந் தா, கட்டிக் கரும்பே முத்தந் தா......." என்பது போன்ற வரிகளைப் பாடும்போது சிறுவர் சிறுமியர்க்கு ஏற்படும் உணர்ச்சி அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். இவ்வாறு தாலாட்டு முதல் தரணி ஆட்சி வரையிலும் பாட்டாவின் கவிதைகளில் காணலாம்.

"உள்ளத் துள்ளது கவிதை — இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் — உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை."

கவிதைக்கு இவ்வாறு இலக்கணம் வகுத்தவர் நமது கவிமணி.

கவிமணியின் பாடல்கள் கற்றவர்களையும், கல்லாதவர்களையும் கனிந்துருக வைக்கும்; பாட்டாளி மக்களுக்குப் பரவசமூட்டும்; ஏழை எளியவர்க்கு இன்பத்தை நல்கும்; ஐந்து வயதுக் குழந்தைகளை ஆடிப் பாடச் செய்யும்; பூவை

யும் புலியையும் பேச வைக்கும்; குருடனையும் குதிரையையும் புலம்ப வைக்கும்; கோழியையும் கிளியையும் கேட்க வைக்கும்; பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் அத்தனைக்கும் தித்திக்கும் அரிய சுவைக் கரும்பு என்று அவர் கவிதைகளைச் சொல்லலாம்.

கவிமணி ஆடம்பரமற்றவர்; பதவி விரும்பாப் பண்பினர்; பிறர் குறைகாணுப் பெருந்தகையார்; பெரும் புகழால் நிதானம் இழக்காத பேரறிஞர்; அவருடைய உள்ளம், பேச்சு, செயல் – எல்லாம் அன்பு.

> "பாலைவனம் சோலைவன மாகவேண்டும்
> பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
> சாலைகளிற் பல தொழிலும் பெருக வேண்டும்
> சபைகளிலே தமிழெழுந்து முழங்கவேண்டும்."

என்பது அவர் விருப்பம்.

காதில் பழைய காலத்துக் கடுக்கன், வைதீகத்துக்கு எடுத்துக் காட்டாகத் தலையில் 4, 5 மயிர்கள், திருநீறு பூசிய நெற்றி, இடுப்பிலே ஒரு துண்டு, மேலே போர்த்திய ஒரு துவாலைத் துண்டு, இளைப்பாலும் சொறி, சிரங்கு நோயாலும் துன்பப்படும் உடம்பு, சிரித்த முகம் இவ்வாறு தான் கவிமணி காட்சியளித்தார்.

கவிமணி அரசியல் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து வந்தார். ஆனுல், எந்த அரசியல் கட்சியையும் அவர் ஆதரித்ததில்லை. எந்தக் கட்சியின் கருத்தாக இருந்தாலும், சிறந்த கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் இயல்பு அவரிடம் இருந்தது.

கட்சிக்கு அப்பாற்பட்டவராக இருந்த கவிமணி காட்சிக்கும் அப்பாற்பட்டவராக இருந்தார். திருவாங்கூர் எல்லைக்கு வெளியே அவர் ஒரு சில நாட்கள்தான் கழித்திருக்கிறுர். இலக்கிய யாத்திரையாக அவர் நாஞ்சில் நாட்டிற்கு வெளியே முதலில் வந்தது செட்டி நாட்டிற்குத்தான்.

அண்ணுமலைப் பல்கலைக்கழகம் நிறுவிய தமிழ் வள்ளலான ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களே கவிமணி அவர்களுக்குப் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார்கள். அவ்விழா 1943 மே 12உ ஆத்தங்குடி நா. அரு. மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

9882



ராஜா அண்ணுமலைச் செட்டியார் அவர்களால் பொன்னுடை போர்த்திய கவிமணி.
அதுபோது கவிமணி எழுதிய கவிதைகளில் ஒன்று கீழே உள்ளது.



மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை -600090.

மறுநாள் ராஜா அவர்களுடைய மாளிகையில் கவிஞருக்கு விருந்து நடைபெற்றது. விருந்துக்குப் பின் ஓர் உறையில் பரிசிலை வைத்து கவிமணியிடம் ராஜா கொடுத்தார். உடனே அதை மறுப்பது பொருத்தமில்லை என்று எண்ணி, கவிமணி அதை மறுநாள் அரசருக்குத் தக்கார் வாயிலாகத் திருப்பியனுப்பினர். ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரிடம் பரிசில் பெற முயன்றவர் பல்லாயிரவர். அவர் கொடுத்ததை ஏற்க மறுத்தவர் கவிமணி ஒருவரே. இந்நிகழ்ச்சி ராஜா அவர்களுக்கு வியப்பைத் தந்தது; ராஜதந்திரியான வள்ளல் உரிய பொருளை வெள்ளிப் பாத்திரங்களாக மாற்றினர்; கவிமணியின் நண்பர்களான டி. கே. சி. திவான்பகதூர் ஆவுடையப்ப பிள்ளை முதலிய தமிழன்பர் சிலர் வாயிலாக அனுப்பி, பாத்திரங்களையாவது கவிமணி ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார் அரசர். இதை மறுக்க இயலாத கவிமணி ஒரு தந்திரத்தைக் கையாண்டார். அவற்றை ஏற்றுக் கொண்டு தமது பணத்திலிருந்து உரிய தொகையைத் திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி, பி. ஏ., வகுப்பில் முதல் தகுதி பெறும் மாணவருக்குப் பரிசு கொடுப்பதற்கான திட்டம் ஒன்றை வகுத்து மூலதனமாக ஏற்படுத்தினர்.

ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களும் தம் தந்தையார் அவர்களைப் போலவே கவிமணி அவர்ளிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். தம் காலத்தில் கவிமணி அவர்களின் பேரறிவைப் பல்கலைக்கழகத்திற்குப் பயன் படுத்த அவர்கள் விரும்பினர்கள். அதன் பயனாக 26—10—1950-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினர் கவிமணியைக் கௌரவப் பேராசிரியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாக முடிவு செய்தனர். அவருக்கு வாடகையில்லாமல் பல்கலைக்கழகத்தில் ஒரு வீடு கொடுப்பதென்றும் அந்த முடிவில் தெரிவிக்கப் பட்டிருந்தது. ஓர் ஆண்டுக்கு ரூ. 6,000 வீதம் கவிமணி அவர்களுக்குக் கொடுக்கவும் பல்கலைக்கழகத்தார் விரும்பினர்.

சிறந்த அறிஞர்களை இவ்வாறு கௌரவப் பதவிகளுக்கு நியமிப்பது மேனாட்டு மரபு. டாக்டர் இராதாகிருஷ்ணன் போன்றோர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் இத்தகைய பதவிகளை வகித்திருக்கின்றனர். தாம் விரும்புகின்றபோது,

ஓராண்டில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் சொற்பொழிவு செய்யவேண்டும் என்ற வழக்கம் உண்டு. இந்த ஏற்பாட்டின் நோக்கம் பேரறிஞர்களுடைய தொடர்பு இளைஞர்களுக்கு ஏற்படுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பைத் தரவேண்டும் என்பதே ஆகும். ஆனால், அந்தப் பேறு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கவிமணி அவர்கள் புத்தேரியிலிருந்து 9—12—50-ல் பல்கலைக்கழகத்தாருக்குப் பின்வருமாறு எழுதினார்கள்.

ஐயா,

தாங்கள் 1—12—50-ல் 22142—1 நம்பரில் அனுப்பிய கடிதம் வந்து சேர்ந்தது. படித்துப் பார்த்தேன். ஸிண்டிகேட் அங்கத்தினர்கள் என் மீது வைத்திருக்கும் அன்பிற்காக என் மனமார்ந்த நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனக்கு இப்பொழுது வயது 76 நடக்கிறது. ஆஸ்த்மா, எக்ஸிமா என்ற இரு நோய்களும் என்னிடம் குடியிருந்துவிட்டன. ஒவ்வொரு நாளும் இவற்றால் நான் அனுபவிக்கும் கஷ்டம் இம்மட்டு அம்மட்டு என்று சொல்ல முடியாது. உடல் நன்றாகத் தளர்ந்துவிட்டது. பார்வை மங்கி விட்டது. உட்கார்ந்திருந்து படிக்கவோ, எழுதவோ முடியாது. ஏதேனும் ஊன்றி யோசித்தால் தலைச் சுற்று உண்டாகிறது. பூரண ஓய்வைத் தவிர ஒரு மருந்துமில்லையென்று டாக்டர் சொல்லுகிறார். நேரில் பார்த்தவர்கள் அண்ணாமலைநகர் வரை யாத்திரை செய்யவோ, அங்கே தங்கி வேலை பார்க்கவோ எனக்கு முடியுமென்று சொல்லமாட்டார்கள். மேலும் இந்தத் தள்ளாத பருவத்தில் என்னை விட்டுப் பிரிய என் பந்துக்களுக்குச் சிறிதும் சம்மதமில்லை.

ஆதலால் தங்கள் விருப்பத்தின்படி கௌரவத் தமிழ்ப் பேராசிரியர் வேலையை ஒப்புக்கொள்ள இயலாதவனாயிருக்கிறேன் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

— தேசிகவிநாயகன்.

"முகமது இருக்கிற இடத்திற்கு மலை வராவிட்டால், முகமதுதான் மலை இருக்கிற இடத்திற்குச் செல்லவேண்டும்"

*

*With best compliments*

*from*

INDIA'S LARGEST
HEAT EXCHANGER MANUFACTURERS
AND PIONEER MANUFACTURERS OF
LOW - PRESSURE HOSES

*

# TEKSONS PRIVATE LTD.

KOLSHET ROAD, THANA.

*

என்பது ஒரு பழமொழி. ஆகையால், கவிமணியின் இல்லத்திற்குத் தமிழாசிரியர் சிலரை அனுப்ப ராஜா அவர்கள் விரும்பினுர்கள். கவிமணி அவர்களுடைய வாழ்க்கை விரிவான முறையில் வெளிவர வேண்டுமென்பதும், அவருடைய கருத்துக்களையெல்லாம் திரட்டி நூலுருவில் பல்கலைக்கழக வாயிலாக வெளியிட வேண்டுமென்பதும் குறிக்கோளாக இருந்தன. இந்த நோக்கம் நிறைவேறுவதற்குள் காலன் முந்திக்கொண்டான்.

நம் நாடு, மக்கள், மொழி இவற்றின் வளர்ச்சி குறித்த பாடல்கள் பலவற்றைக் கவிமணி மிகுதியாகப் பாடியிருக்கிருர். தமிழ் முழுவதிலும் இசை கலந்து நிற்கிறது என்பது அவர் கருத்து. "பாலுக்குச் சீனியைப் போல் பசுந் தமிழுக்கு இன்னிசை துணை" என்று ஒரு பாட்டில் கூறியிருக்கிருர். "பாடல்களைப் பண்ணேடு பாடும்போது தான் அவற்றிற்கு உயிர் உண்டாகிறது; பொருள் விளக்கம் ஏற்படுகிறது; பூரணமாகிறது" என்று எழுதியிருக்கிருர். தமிழிசையில் கவிமணிக்கு எத்தகைய ஈடுபாடு இருந்தது என்பது இவற்றிலிருந்து தெளிவாகும்.

சிறந்த இசை யமைதிவாய்ந்த ஒப்பற்ற கீர்த்தனங்களைக் கவிமணி அமைத்திருக்கிருர். அவை தெளிவாகவும் எளிய சொற்கள் உடையனவாகவும், இலக்கியச் சுவை நிறைந்தனவாகவும் உள்ளன. நயமான சொற்ருெடர்களையும் ஆங்காங்கே கையாண்டிருக்கிருர். இக் கீர்த்தனங்கள் மனம் கனிந்த நிலையில் இயற்றப்பெற்றவை. கவிமணி இப் பரிபக்குவ நிலையை அடைவதற்குக் காரணமாயிருந்தது தமிழிசை இயக்கமே என்றும் தொடக்கத்தில் இவ்வியக்கம் அவரை ஊக்கியிருத்தல் வேண்டும் என்றும் நூலின் முன்னுரையில்–கவிமணி அவர்களுடன் 40 ஆண்டுகளாக நெருங்கிய தொடர்புடைய தமிழறிஞர் –பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் எழுதியிருக்கிருர்கள்.

தமிழிசை வளர்ச்சியில் கவிமணிக்கு ஆர்வம் மிகுதி. தம்மைக் காண வருவோரிடம் இதைப்பற்றி உரையாடுவார்; கீர்த்தனங்களைப் பாடுபவர்கள் கைக்கொள்ள வேண்டும் முறைகளை, "கவிமணியின் உரைமணிகள்" என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கிருர்; கீர்த்தனங்கள் புதிது புதிதாக எழுதப்படவேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார். தமிழிசைக்கெனத் தனியாக ஒரு பத்திரிகை வேண்டுமென்றும் ஆசிரியர் – இசை அமைத்தவர் – இசைவாணர் ஆகி




They're some four!
The Commander and his co-pilot
to whom a million miles are
just part of a life's work;
the navigator who has the
pathless skies all charted out;
as for the flight engineer,
does he have know—and how!

Fly with me and my lovely, sari-clad
hostesses. My flight-deck quartet
will swift you surely, skilfully,
across the skies—to Asia, East Africa
Australia, Fiji, the Middle East,
Europe, U.K., U.S.S.R., U.S.A.

**AIR-INDIA**

IN ASSOCIATION WITH B.O.A.C. AND QANTAS

யோரின் வரலாறுகளையும் தாங்கி அது வெளி வரலாம் என்றும் சில ஆண்டுகளுக்கு முன் தமிழிசை மலரில் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். சென்னையிலுள்ள கர்நாடக சங்கீதக் கல்லூரி தமிழிசையை வளர்க்க வேண்டுமென்றும் அவர் அறிவுரை வழங்கியிருக்கிறார்.

"கோவில் முழுதுங் கண்டேன்," "பாட்டுக்கொரு புலவன் பாரதி," "நல்ல சகுனம் நோக்கிச் செல்லடி," "சொன்னதெல்லாம் மறந்தாரே," "தெள்ளத் தெளிந்ததையா" என்பன போன்ற பல பாடல்களைத் திரைப்படங்களிலும், இசைத் தட்டுகளிலும், இசை அரங்குகளிலும் அடிக்கடி கேட்டு நாம் இன்புற்று வருகிறோம்; இவை கவிமணி அவர்கள் நமக்கு விட்டுச் சென்ற செல்வங்களில் சில.

கவிமணி சமயப் பற்று நிறைந்தவர். ஆனால், அது சடங்குப் பற்றாகவோ மூட நம்பிக்கைகளை முற்றும் ஆதரிக்கும் பழமைப் பற்றாகவோ இருந்ததில்லை. கோயில்களில் தமிழ் முழங்கவேண்டும், கலைகள் வளர வேண்டும், சிற்றின்ப உணர்ச்சிகளை ஊட்டும் சிற்பங்கள் நீக்கப்பட வேண்டும். இச் சீர்திருத்தங்களைச் செய்ய இயலாவிடில் கோயில்களைப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களிடம் ஒப்படைத்து விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

கவிமணி மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் மிக்கவர். ஆனால், அவருக்குப் பொருட் பற்றோ பதவிப் பற்றோ இருந்ததில்லை. தமக்காக நிதி சேர்க்கும் முயற்சியில் பெரிய செல்வர் சிலர் ஈடுபடப் போகிறார்கள் என்று அறிந்தவுடனேயே அதைக் கைவிட்டு விடும்படி அவர்களைக் கவிமணி கேட்டுக் கொண்டார். சென்னை அரசினர், தம்மை அவைக்களத்துப் புலவராக நியமிக்கக் கூடும் என்று தெரிந்ததும் அதைத் தாம் விரும்பவில்லையென்றும் அறிவித்து விட்டார். பரிசுத் திட்டங்களுக்குத் தம் நூல்களை அனுப்புவதை அவர் விரும்புவதில்லை.

கவிமணி பல ஆண்டுகளாக ஒரு வேளைக் கஞ்சிதான் உட்கொண்டு வந்தார். அவருடைய உடை ஆடம்பரமற்றது; நினைவாற்றல் வியக்கத்தக்கது; பெருமை எல்லையற்றது; அடக்கம் பேரறிஞரிடையே காணற்கரியது.

கவிமணி மிகச் சுறுசுறுப்பானவர். கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதுவார். அறிஞர் பலர் தம் குடும்பச் செயல்களைச் செவ்வையாகச் செய்வதில்லை. கவிமணி

PHONE NO : 277209 GRAMS : PROMINENT

*JOIN THE MOST PROMINENT CHIT FUND COMPANY*

FOR

*YOUR FINANCIAL REQUIREMENTS*

KNOWN FOR SERVICE SECURITY STABILITY & PROMINENCE

YOUR SMALL SAVINGS/INVESTMENTS ARE QUITE SECURE WITH US.

SEVERAL NEW SERIES STARTED UNDER THE MADRAS CHIT FUNDS ACT AS EXTENDED TO UNION TERRITORY OF DELHI.

SCHEDULE OF NEW SERIES

| MONTHLY INSTALMENT | PERIOD | TOTAL CHIT AMOUNT |
|---|---|---|
| Rs. 400/- | 50 months | Rs. 20,000/- |
| Rs. 200/- | 50 months | Rs. 10,000/- |
| Rs. 100/- | 50 months | Rs. 5,000/- |
| Rs. 100/- | 25 months | Rs. 2,500/- |
| Rs. 50/- | 50 months | Rs. 2,500/- |

MEMBERSHIP STARTED — JOIN IMMEDIATELY — AUCTION DATE WILL BE ANNOUNCED LATER

FOR DETAILS PLEASE VISIT OUR NEWLY CONSTRUCTED BUILDING "PROMINENT HOUSE"

# THE PROMINENT
## PRIVATE LIMITED

**Regd Office : 1750, CHUNA MANDI, PAHARGANJ, NEW DELHI**

NOTE :— The Subscribers who are already holding chits of our Company may please note that the auction will take place in our newly constructed building.

இதற்கு மாறுபட்டவர். அவர் காலத்திலேயே அவர் பயன் படுத்திய நூல்களையெல்லாம் வடசேரி கவிமணி நிலையத் துக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். எஞ்சிய ஏடு களையும் ஆராய்ச்சிக் குறிப்புக்களையும் பேராசிரியர் வையா புரிப் பிள்ளை அவர்களுக்கு வழங்கிவிட்டார். மறைமலையடி கள், திரு. வி. க. ஆகியோருக்குப் பின்னர் அவர்கள் குடும் பங்களின் நிலை எவ்வாறிருந்தது என்பதை ஒப்பு நோக்கு வார்க்குக் கவிமணியின் சிறப்புப் புலனாகும்.

கல்வெட்டு ஆராய்ச்சி என்றால் கவிமணிக்குக் கருப்புக் கட்டி. கன்னியாகுமரிக் கோயிலிலுள்ள சுவர்களில் இருந்த தமிழ்க் கல்வெட்டுக்களை மறைக்க, சுவரைப் பூச மலையாள அரசாங்கம் முயன்றபோது, அதைத் தடுத்தவர் கவிமணி. பல கல்வெட்டுக்கள் அவருக்கு மனப்பாடமாக இருந்தன. கல்வெட்டு ஆராய்ச்சியில் ஈடுபட விரும்பும் இளைஞர்க்கு உதவும் சில கட்டுரைக் 'கவிமணியின் உரைமணிகள்' என்ற நூலில் அவர் எழுதியிருக்கிறார். 'ஆசிய ஜோதி' தமிழர் உள்ளத்தில் ஒளியை ஏற்றிவைத்தது. 'மருமக்கள் வழி மான்மியம்' சமுதாயப் பிற்போக்காளர் கண்களைத் திறந் தது, 'உமார்க்கய்யாம்' அறிவுப் புரட்சிக்குத் துணை செய் தது. "காந்தளூர்ச் சாலை" ஆராய்ச்சி மனப்பான்மையை மலரச் செய்தது.

கவிமணியின் கருத்துக்களெல்லாம் உறுதியானவை தான். அரைகுறைக் கருத்துக்கள் அவரிடம் இல்லை. 50 ஆண்டுச் சிந்தனையின் முடிவுதான் அவை. பார்த்தால் பசுப் போல இருப்பார்கள். விவாதிக்கத் தொடங்கி விட்டால் சிங்கம்போல கர்ஜிப்பார்கள். புலிபோலப் பாய்வார்கள். அவ்வளவு ஆர்வம்.

கவிமணி அவர்கள் பல சந்தர்ப்பங்களில் என்னிடம் தெரிவித்த கருத்துக்களை, அவர்கள் சொற்களிலேயே கீழே காண்க :—

ஹிந்தி தேசிய மொழியாக இருக்க வேண்டுமானால் எனக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால், கட்டாயமாக இருக்கக்கூடாது. இங்கிலீசுக்குப் பதிலாக ஹிந்தி வர வேண்டும் என்று சொல்வது பைத்தியக்காரத்தனம். இப் பொழுது இங்கே நாஞ்சில் நாட்டில் தமிழ், மலையாளம், இங்கிலீசு மூன்றையும் பிள்ளைகள் படிக்கிறார்கள். இனி நான்காவது மொழியொன்றைப் படிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது.

PHONES { SOCIETY : 2433
PRESIDENT : 2933
DYE HOUSE : 3204
COLONY : 3437

TEL : "SOCIETY"
ESTD : 1938.

**Patronise Handloom Fabrics.** **Provide Work For Millions.**

*Always insist upon*

## THE SALEM AMMAPET SOCIETY'S PRODUCTS.

* LATEST DESIGN SAREES.
* CHOLI PIECES.
* DHOTIES, BHAVANCH, GUNDANCHU
* LACED DHOTIES & ANGAVASTRAMS.
* BEDSHEETS, KERCHIEVES ETC.,

*PLEASE VISIT OUR DEPOT AT*

*Whole Sale Depot,*
**55, 2nd Agraharam,**
**SALEM - I.**

OUR SALES DEPOTS :

1. Salem Sales Depot, 69-B, Ist Agraharam, SALEM – 1.
2. Shevapet Sales Depot, 85-B, Kannara Street, SALEM – 2.
3. Attur Sales Depot, 268, Bazaar street, ATTUR.
4. Harur Sales Depot, 151, Bazaar Street, HARUR.
5. Trichy Sales Depot, 35-B, Chinnakadai Street, TRICHY – 2.
6. Erode sales Depot, 292, Agraharam street, ERODE.
7. Shevapet Sales Depot No. 2. No. 5, Chairman V. Ramalinga Mudaliar Daily Market, Shevapet, SALEM – 2.
8. Tirunelvely Sales Depot, 103/87, West Car Street, THIRNELVELY TOWN.
9. Thirupathur Sales Depot, 22, Jinnah Road, THIRUPATHUR. (N. A. Dt.)
10. Neyveli Sales Depot, Cuddalore Main Road, NEYVELI – 2.
11. Neyveli Township sales Deopt Central Bazaar, Block No. 19, Shop No. 6, NEYVELI – 3.
12. SCHOOTER MSW. 5602.
13. PUSH CART No. 1 & 2.

*Thiagarayanagar Sales Depot,*
No. 9, Usman Road,
T. Nagar, MADRAS - 17
Phone No. 41723.

*Silver Jubliee Sales Depot,*
Thiru V. Ka. Pathai,
Ammapet,
SALEM – 3.

Our Products can be had from our Sales Depot, All Co-optex Units, Handloom Houses and our Agents.

A. MARIAPPAN,
*President.*

# THE AMMAPET HANDLOOM WEAVERS' CO-OPERATIVE PRODUCTION & SALE SOCIETY

S. 532, AMMAPET, SALEM - 3. (TAMIL NADU)

ஹிந்தியில் போதிய அளவு இலக்கியம் இல்லை. மற்ற வர்கள் சேர்ந்து அதை வளப்படுத்த வேண்டும் என்று சொல்லுவது பைத்தியக்காரத்தனம். நாம் எல்லோரும் சேர்ந்து ஒருவனைப் பணக்காரனுக்கிவிட வேண்டும்; பிறகு அவனிடமிருந்து எல்லோரும் கடன் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்லுவதுபோலிருக்கிறது.

தமிழ் மொழி மூலமே பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். அந்தப் படிப்புக்கு ஏற்ற விஞ் ஞான நூல்கள் தமிழில் வெளிவரவேண்டும்.

இப்பொழுது கல்வியின் தரம் குறைந்துவிட்டது. இதற் குக் காரணம் அரசியல் தலைவர்கள் கல்வித் துறையில் தலையிட்டதுதான்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஒவ்வொரு வகுப்பிலும் 15 பிள்ளைகளுக்கு மேல் இருக்கக்கூடாது. 60 பிள்ளைகளை வைத்துக் கொண்டு எப்படி முதல் வகுப்பை நடத்த முடியும். ஒவ்வொரு வகுப்பிலும் வருகைப் பதிவு எடுப்ப தற்கும் ஆசிரியர் பொடிப் போடுவதற்குமே பாதி நேரம் ஆகிவிடுகிறது. இவ்வாறு இருக்கும்போது பள்ளிக்கூட நேரத்தைக் குறைத்தால் அதைவிடக் கெடுதல் வேறு ஒன்றும் இல்லை. மாணவர்கள் எல்லோரும் தொழில்களைக் கற்றுக் கொண்டால் எல்லோருக்கும் வேலை கிடைக்காது. ஒரு ஆசாரிக்கு 4 பிள்ளைகள் இருந்தால், 4 பேர்களும் ஆசாரிகளாக முடியாது. சிமெண்டு வந்ததிலிருந்து ஆசாரி களுக்கே வேலை இல்லாமல் போய்விட்டது....

இக்காலத்து மாணவர்கள் தொல்காப்பியம், நன்னூல், கம்பராமாயணம், கலிங்கத்துப் பரணி, திருக்குறள் முதலிய வற்றைப் படிக்கவேண்டும். ஆங்கிலத்தில் சேக்ஸ்பியர், ஷெல்லி, மில்டன், வோர்ட்ஸ்வொர்த், அரவிந்த கோஷ் ஆகியோருடைய இலக்கியங்களில் எனக்கு மிகவும் ஈடுபாடு உண்டு. இந்தக் காலத்தில் விஞ்ஞான நூல்களை யெல்லாம் படிக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நாள்தோறும் பத்திரிகை படிக்க வேண்டும்....

T. S Elliott once said that good poetry was communicated before it was understood. ஒருவனிடம் கவிதை இருந்தால்தான் மற்றொருவருடைய கவிதையின் நயத்தை உணர இயலும். கவிதை அதைப் பாடும்போது உள்ள மனப்போக்கைப் பொறுத்தது. இயற்றியவரின்

மனப்போக்கில் படிப்பவரும் ஈடுபட வேண்டும். இக்காலத்தில் வசனகவிதை அதிகமாக வெளிவருகிறது. அதை நான் ஆட்சேபிக்கவில்லை. எதுகை, மோனை இயற்கையாக வர வேண்டும். அவை கருத்துக்களின் ஓட்டத்தைத் தடை செய்யக் கூடாது.

கவிமணி இயற்றிய பாடல்களில் மிகுதியானவை வாழ்த்துப் பாக்கள். 'சந்ததமும் வாழ்க தழைத்து', 'மன்னுலகில் வாழ்க மகிழ்ந்து', 'நித்தமும் வாழ்க நிலைத்து' என்ற ஈற்றடிகளை நிரந்தரமாக வைத்துக் கவிமணி நூற்றுக் கணக்கானவர்களை வாழ்த்தியிருக்கிறார். இவ்வாறு வாழ்த்துப் பெற்றிருப்பவருள் சிலர், நிறைந்த தகுதிகளோ அன்றி இனிய இயல்புகளோ இல்லாதவராக இருக்கக் கூடுமே என்று ஒருவர் கேட்டார். அதற்குக் கவிமணி தெரிவித்த மறுமொழி சுவையாக இருந்தது. கேள்வி கேட்டவர் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே, கவிமணி அமைதியாகச் சொன்னார்கள்: "ஒருவகையில் நீங்கள் கருதுவது சரி. ஆனால், நானும் இறந்து போவேன், பாடப்பட்டவரும் இறந்து போவார். எத்தனையோ நூற்றாண்டாகும். பாட்டு நிற்கும். ஒரு தமிழ்ப் பாட்டு ஏன் கெட்ட விஷயத்தைத் தாங்கி நிற்கவேண்டும்? நல்ல விஷயத்தைத் தாங்கித் தமிழ்ப்பாட்டுக்கள் நிலைக்கட்டுமே."

இந்நிகழ்ச்சி கவிமணியின் தூய உள்ளத்திற்குச் சான்று. அவர் இறந்துவிட்டார் என்பதை நினைக்கும் போது ஒரு பெரிய கவிஞர் இறந்துவிட்டார்; ஒரு பெரிய அறிஞர் இறந்துவிட்டார்; எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பெரிய மனிதர் இறந்துவிட்டார் என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது. தமிழகத்தின் தெற்கெல்லையைக் காத்த பெருங்கிழவர் மறைந்துவிட்டார். ஆனால், தமிழ்நாட்டின் பெயரோடு அவர் பெயரும் புகழும் நின்று நிலவுமென்பது உறுதி.

['பிரயாண இலக்கியம்' எனும் நூலின் சில பகுதிகள்.]

### கரும்பினும் இனிய சொற்கள்

துரும்பென மெலிந்ததேகம் துலங்கிடும் குளிர்ந்த பார்வை
இரும்பினும் வலிய உள்ளம் இனியவே செய்யும் எண்ணம்
பரம்பொருள் நினைவே காட்டும் பாரெல்லாம் பரந்த நோக்கம்
கரும்பினும் இனிய சொற்கள் "கவிமணி" வடிவமாகும்.

— நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை

WITH THE COMPLIMENTS

OF

# PRECISION BEARINGS INDIA LTD.

BOMBAY — BARODA.

# ANTI-CORROSIVE CHEMICALS PRIVATE LTD.

33, BRABOURNE ROAD, CALCUTTA - 1.

*Manufacturers of :*

* RED LEAD DRY Type 'A', 'B', 'C' to I. S. 57—1950
* YELLOW LITHARGE
* ACTIVE LEAD SUB-OXIDE

*Industrial Purposes :*

* Anti-Corrosive Priming Paint
* Lead-Glass (Crystal, Optical)
* Ceramic glazes
* Electric Storage Batteries
* Jointings for pipes
* Water proof coating for Cables
* Enamelled Ware
* Linoleum

With the know-how and modern equipment we manufacture different grades of quality-controlled Lead-Oxides for each and every consuming industry which makes its own demand.

# கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

சுப்புலட்சுமி நாராயணன்

இது 1964-ஆம் ஆண்டு சென்னையில் நடந்த கவிமணி பரிசுப் போட்டியில் பாராட்டுப் பரிசு பெற்ற கட்டுரை.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இளமையிலிருந்தே தமிழார்வம் கொண்டவர். அக்கால முதற்கொண்டே தமிழ் கவிகள் இயற்றுவதில் ஆற்றல் உடையவராக இருந்தார். தமிழ் நூல்களை முறையாகக் கற்க வேண்டும் என்ற பேரவா இவரது மனதில் தோன்றியது. இது இவரது ஊரின் பக்கத்திலுள்ள வாணன்திட்டு மடத்தில் வாழ்ந்த ஸ்ரீ சாந்தலிங்கத் தம்பிரானுல் ஒருவாறு நிறைவேறியது. தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐந்தாறு வருஷகாலம் இவர் பாடங்கேட்டார். இங்ஙனமாகத் தமிழையும் பின்னர் மலையாளத்தையும் கற்றுக் கொண்டார்.

கலாசாலை கல்வியை முடித்த பின்னரும் ஆங்கில நூல்களையும், ஆங்கில கவிதைகளையும் எப்பொழுதும் படித்து வந்தார். கல்வித்துறை வாழ்க்கையே தமக்குரியது என்று மேற்கொண்டார். கோட்டாற்றில் மத்தியதரப் பாடசாலையிலும், நாகர்கோவில் போதனுமுறை பாடசாலையிலும், திருவனந்தை பெண்கள் போதனுமுறை பாடசாலையிலும் உதவி ஆசிரியராகவும் இவர் அமர்ந்தார். ஆனல் இலக்கியக் கல்வியை இவர் ஒருபோதும் மறந்தவரல்லர். மேலும் மேலும் கற்பதும், தமிழ் நூல்களை ஆராய்ச்சி செய்வதும், பாடல்கள் இயற்றுதலும் இவருடைய அன்றாட வாழ்க்கையில் நடைபெற்று வந்தன. கலாசாலையில் இவரது கவிதா சன்னதம் மிளிர இவர் இயற்றிய கவிகள், கல்வித் துறை அதிகாரிகளாலும், பல அறிஞர்களாலும், தமிழ் விற்பன்னர்களாலும் பெரிதும் பாராட்டப் பெற்று வந்தன. இவருடைய கல்வியையும், கற்பிக்கும் ஆற்றலையும், கவித்துவத்தையும், நேர்மையையும், இனிய குணங்கள் பிறவற்றை

யும் திருவிதாங்கூர் பெருமக்கள் பலரும் உணர்ந்து இவரை போற்றி வரலாயினர். தமது உள்ளம் நிறைந்த தமிழையே தாம் கற்பிக்கும்படியாக நேர்ந்தது பற்றி கவிமணி பெரிதும் மகிழ்ச்சி கொண்டார். தமிழ் கல்வியும், ஆங்கில கல்வியும், இவரது பண்பாட்டுணர்ச்சியை மிகவும் வளர்த்தன. ஆனால் இவ்விருவகை கல்வியோடு இவர் அமைந்து விடவில்லை. நமது நாட்டு பண்டைய சரித்திரத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்ற அவாவினால் கல் வெட்டுகளையும், செப்புப் பட்டயங்களையும், ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். சுந்தரம் பிள்ளையவர்களுக்கு சிலாசாஸன இலாகாவில் உதவி புரிந்து வந்த பண்டித கணேச பிள்ளையின் தொடர்பு நமது கவிமணியின் ஆராய்ச்சிக்கு உதவி புரிந்தது. டாக்டர் கே. கே. பிள்ளையவர்களின் "சுசீந்தரம்" என்ற நூலுக்கு கவிமணியின் ஒத்துழைப்பே அடிப்படை.

அலுவலிலிருந்து ஓய்வு பெற்றபின், கவிமணி அவர்கள் நாகர்கோயிலை அடுத்துள்ள புத்தேரியில் வாழ்ந்து வந்தார். இவர் மிக்கத் தெய்வ பக்தி கொண்டவர். நெல்லை உமையொருபாக தேசிகர் என்பவரிடம் சிவதீக்ஷை பெற்றார். இவர் எழுதி உள்ள பாடல்கள் எண்ணிலடங்கா. தேரூர் அழகம்மையின் மீதும், சுசிந்திரம் தாணுமாலயப் பெருமாள் மீதும் பல பக்திபாமாலைகள் இயற்றியுள்ளார். Edwin Arnold அவர்கள் எழுதிய 'Light of Asia' என்னும் காவியம் கவிமணியவர்களை மிகவும் கவர்ந்தது. அதன் விளைவே "ஆசியஜோதி" என்ற அரிய தமிழாக்கம். மறுமொழி இலக்கியத்தின் தமிழாக்கத்தில் "ஆசிய ஜோதி" ஒரு சிறந்த வழிகாட்டி.

இவர் பிற மதங்களையும் பாராட்டிப் போற்றும் இயல்பு உடையவராக இருந்தார். இயேசு கிறிஸ்துவை குறித்து "ரக்ஷகர்" என்ற தலைப்பில் இவர் பாடிய செய்யுட்கள் இதற்குத் தக்க சான்றாகும். தமிழ் இலக்கியத்தில் திளைத்த கவிமணி.

கம்பனைப் பற்றி:—

> "இந்திரசாலமெல்லாம் கவியில்
> இயற்றிக் காட்டுவார்."
>
> "கவிதை சொல்லக் கேட்டால் உள்ளம்
> மயங்கச் செய்திடுவார்."

9882

வள்ளுவனைப்பற்றி :—

" அறிவின் எல்லை கண்டோன் — உலகை
அளந்து கணக்கிட்டோர் "

பாரதியைப் பற்றி :—

" ஆரமுதம் அனைய கவிபாடி,
அமரகவி என்றவரும் புகழப்பெற்ருர்."

மணிமேகலை ஆசிரியர் சுந்தரம் பிள்ளையைப் பற்றி :—

" ஆரா அமுதம் அனைய தமிழ் வளர்த்த
பேராசிரியப் பெருமானே."

ராஜாஜியைப் பற்றி :—

" விண்ணதே ஒத்த வியாசவிருந்தளித்த,
புண்ணியனே, வேதாந்த போதகனே."

என்றெல்லாம் புகழ்ந்து பாடி இருக்கிருர்.

கவிமணி, பாடிய வாய் தேனூறும் பாரதியின் பாடல் களின் பண்பை,

" உள்ளம் தெளியுமொரு பாட்டிலேயடா — மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலேயடா.
கள்ளின் வெறி கொள்ளுமோர் பாட்டிலேயடா,
ஊற்ருய், கண்ணீர்சொரிந்திடுமோர் பாட்டிலேயடா.

என்று அழகாக பாகுபாடு செய்கின்ருர். தமிழுக்கு இவர் செய்துள்ள அரிய சேவைக்கு, இவருக்கு எவ்வளவு நன்றி தெரிவித்தாலும் போதாது. எளிமையும் இனிமையுமே, இவருடைய பாடல்களின் சிறந்த பண்புகள். இவரது குழந்தைப் பாடல்கள் உண்மையாகவே குழந்தைகள் பாடி இன்புறக் கூடியவை.

" சின்னஞ்சிறு பள்ளியில் உனக்கொரு — சிங்கார
பெஞ்சுமிட்டு
தின்னக் களியளித்து—பாலபாடம் செப்புவன் கிளியே
கொம்பிற் கொலுவிருந்து — களித்து நீ
கூவும் குயில் போல
பம்பியெழும் சோலை — எனக்கு பரமபதமடியோ."

என்று கிளியை பற்றி பாடி இருக்கிறார். சிறு குழந்தையின் மீது போலவே, அவர் பூவின் நிறத்திலே, அதன் மணத்திலே புள்ளின் அழகிலே, அதன் குரலிலே, நிலவிலே, கடலிலே, நீரிலே, இயற்கை இன்பத்திலே முழுதும் ஈடுபட்டார்.

"மீனினம் ஓடி பார்க்குதம்மா — ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா.
வானும் கடலாக மாறுதம்மா ! இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா !
முல்லைமலர் பந்தல் இட்டனரோ ? தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ ?
வெல்லு மதியின் திருமணமோ ? அவள்
விண்ணில் விழாவரும் வேளை இதோ?

உலகில் எந்த பொருளும் கவிக்கு உரிய பொருளாம். ஐயா, என்று அவர் சொல்லுவது போல் கம்பன், வள்ளுவன், பாரதி, ராஜாஜி, இயேசு, ஆறு, கடல், ஆகாய விமானம், கடிகாரம், சைக்கிள் இவைகள் எல்லாம் அவர் கவிக்கு பொருள் ஆயின.

இவர் பாடிய பக்தி பாடல்களில் ஒன்றான ஆழ்வார் திருமகள் ஆண்டாள் கண்ட கனவை,

"தோரணம் நாட்டி துழாய்மாலை தொங்கவிட்டு,
பூரண கும்பம் பொலிவாக முன் வைத்து,
தரணி போற்ற தகுமோர் புரோகிதர் வந்து,
ஆரணம் ஓதக் கனக்கண்டேன் — அம்மா நான்

என்று காணுகின்றாள்.

கவிமணி இயற்றிய பாடல்கள் பாடப் பாட தெவிட்டாதவை. கவிமணியின் பாடல்கள் அடங்கிய நூல்கள் ஒவ்வொரு தமிழனது மனையிலும் அவசியம் இடம் பெற வேண்டும்.

> தேசிகவிநாயகம் பிள்ளை தற்சமயம் தமிழில் மாத்திரமின்றி நவீன இந்தியாவிலேயே மிகப் பெரிய உண்மைக் கவிகளுள் ஒருவர். அரசியல், இலக்கியம், புதைபொருள் ஆராய்ச்சி, வேதாந்தம் ஆகிய எல்லா விஷயங்களைப் பற்றியும் அவர் ஆர்வத்துடன் பேசுகிறார். அவருடன் பேசும் பொழுது நவீன உலகத்துடன் தொடர்பு விட்டுப்போகாத ஓர் உண்மை ஞானியுடன் பேசும் உணர்ச்சி ஏற்படுகிறது.
>
> K. M. அப்பாஸ்.

# RAMCO GROUP OF INDUSTRIES

**RAJAPALAYAM : SOUTH INDIA**

RAJAPALAYAM MILLS LIMITED,
Rajapalayam,
Modern Spinning Mills.

JAYARAM MILLS LIMITED,
Rajapalayam
Manufacturers of Grey Gada

THE RAMARAJU SURGICAL COTTON MILLS Ltd.,
Rajapalayam
Manufacturers of Antiseptic Dressings and
Proprietors : SUDARSANAM SPINNING MILLS

GOWRI HOUSE METAL WORKS
Rajapalayam
Manufacturers of Wood Screws & Wire Nails

MADRAS CEMENTS LIMITED,
Factory at TULUKKAPATTI, Sattur Taluk
"Ramamandiram", Rajapalayam
Manufacturers of "RAMCO BRAND"
Portland Cement

Sold & Distributed by
RAMCO CEMENT DISTRIBUTION CO., PRIVATE Ltd.,
"Lakshmi Nivas"
RAJAPALAYAM

**OUR SERVICE TO INDUSTRIALISATION OF INDIA**

HOECHST

*Remedia*

**»HOECHST«**

**A great tradition in medicine**

**HOECHST**

PHARMACEUTICALS LTD

Backbay Reclamation, Bombay 1

Branches at Bombay, Calcutta, Madras and New Delhi.

Depots at Ahmedabad, Cuttack and Gauhati.

(HOECHST generally pronounced HEXT

HC. 10-[illegible]

# புலவன் சொல் பெருமை

மீ. சு. இளமுருகு பொற்செல்வி

" புலவன் வாயில் பொய் வராது " என்பதும் " கற்ருேன் சொல் காற்ருேடு போகாது" என்பதும் நம் நாட்டில் நீண்ட கால கர்ணபரம்பரை வழக்குச் சொற்களாகும்.

புலவர்கள் கூறியவை பல அப்படியே நாட்டில் நடந்ததாக ஏராளமான நிகழ்ச்சிகளைப் பெரியவர்கள் கூறுவதுண்டு. அவை கேட்பதற்குக் கற்பனைக் கதைகளைப் போலக் கூட இருக்கும்.

கவிமணி அவர்கள் நம் காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்களுடைய கவிச் சொற்படி நடந்த இரண்டொரு நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டு வருவதால் கவிமணி அவர்களுடைய கவித் தன்மை புலப்படும்.

தேரூரில் உள்ள மடத்தில், தம்பிரானிடம் தமிழ்ப்பாடங் கேட்ட மாணவர்களில் இளமையில் நமது கவிமணி ஒருவர். அவருடன் கல்வி கற்று வந்த தேரூர்வாசி ஒருவர் கவிமணியின் அன்புக்குரிய நண்பராஞர். அந்த நண்பருக்குப் பூப்பெய்தாப் பெண்ணெருத்தியை மணம் முடித்து வைத்தனர் பெற்ருேர்கள். இளமை மணம் இவருக்கும் பலவிதத்திலும் இன்னலைக் கொடுத்தது. வீட்டுக்கவலை வேறு ஒரு புறம். ஆக அவருக்கு வாழ்க்கையில் வெறுப்புத் தட்டிற்று. அதனுல், ஒருவரிடமும் சொல்லாமல் அவர் எங்கோ போய் விட்டார். தம்பிரானுக்கு மட்டும், மதுரை மடத்திலிருக்கலாம் என்று ஒரு நம்பிக்கை இருந்தது.

நண்பரின் பிரிவும், அவருடைய வாழ்க்கையின் துன்பமும் நம் கவிமணிக்கு வருத்தத்தையே தந்தது.

நண்பர் சென்ற சிலகாலத்துக்குப் பின் அந்தப் பெண் பூப்பெய்திஞள். இந்தச் செய்தியினையும் சுற்றத்தார் அவரைக் காணுது கொள்ளும் வருத்தத்தையும் தம்பிரான் உணர்ந்தார். நம் கவிமணியை அழைத்தார். (அன்று நம் கவிமணி புகழ்பெற்றவரில்லை, ஏன் கவிதை வடிப்பவரென்ற நிலைகூடப் பெருத இளைஞர், தமிழ் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்) "தம்பீ!ஒரு பாட்டெழுதிக் கொடு. அதைச் சுவாமிக்கனுப்பி (பூசையின் போது ஆண்டவனிடம் முறையிட்டு) அவனை (தேரூர் நண்பரை) இங்கு அழைக்கலாம்" என்று கூறிஞர்.

தம்பிரானின் ஆணைப்படி நம் தேசிக விநாயகம் அவர்கள் உடனே ஒரு பாடல் இயற்றினர்கள்.

“ மந்தாரை மலர்ந்திருக்க மதுவுண்ணும் வண்டெங்கே ?
மாமுல்லைக் கொடிபடர வளருங்கொள் கொம்பெங்கே ?
சிந்தாத மணியிருக்க ஒளியெங்கே சென்றதெனத்
தேரூரில் பலர்கூடித் தெரிந்துகொளக் கேட்டதற்கு
நந்தாத பரஞான அமுதுண்டு தெவிட்டெறியும்
நற்பரமா னந்தனருள் பெறச்சென்ற நண்பாநீ
வந்தாலே மறுமொழியும் வகுப்பமெனச் சோதிடநூல்
வல்லாருங் கூறுகின்றுர் வகையேது மறியேனே”

என்று ஒரு பாட்டை இயற்றினர்கள்.

தம்பிரான் இப்பாடலைச் சுவாமியிடம் முறையிட்டதும் காணுமற் போயிருந்த நண்பர் தேரூர் வந்து சேர்ந்து மனைவியுடன் இல்லறம் நடத்தி வரலானுர்.

* * * *

வாழவைக்கும் கவிமணி அவர்கள் தவறு செய்பவர்களை மாளவும் வைக்கத் தயங்குவதில்லை போலும் !


THE HOUSE OF REPUTE THAT SERVED YOU FOR 35 YEARS OFFERS YOU THE FOLLOWING PRESTIGE PRODUCTS

MURPHY Radio
KAMCOS 16mm Projectors & Water Heaters
KHIRA Steel & Wooden Furniture
EVEREST Sewing Machines
DUNLOPILLOW Cushions & Mattresses
Electrical Appliances
Mecom Intercom sets
AHUJA Ampiifiers
FOLDELUXE Steel Folding Furniture
RALLIS Fans
PRESTIGE Pressure Cookers
HIMALUX Refrigerators
Gramophones and Records
Radio Parts

**MAHOMED EBRAHIM & Co. (Pvt) Ltd.**

7/8, Mount Road, MADRAS-2.
113-H, Brigade Road, BANGALORE.
Abid Road, HYDERABAD.

தேரூர்த்தம்பிரான் மதுரை மடத்துக்குச் சென்றிருந்த போது, அந்த மடத்தில் இருக்கும் சா. போற்றிக்கண்ணு என்பவனிடம் கொஞ்சம் பணங்கொடுத்து, உருத்திராக்கமணிகள் வாங்கியனுப்பும்படி ஏற்பாடு செய்துவிட்டு வந்திருந்தார். அவனோ, எவரையும் ஏமாற்றிப் பிழைப்பவன். ஆகவே, இன்று, நாளையென்று நாளைக் கடத்திக் கொண்டிருந்தான். தம்பிரானும் விடாது, உருத்திராக்க மணிகளை அனுப்பி வைக்கும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தார்.

வற்புறுத்தலிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, வெகு நாட்களுக்குப் பிறகு அஞ்சலில் ஒரு பொட்டணத்தை (பார்சல்) அனுப்பி வைத்தான் அவன். அந்த பொட்டணத்துக்குள் உருத்திராக்கமணி இல்லையென்பது பொட்டணத்தைப் பார்த்ததுமே தெரிந்து போய் விட்டது. எனவே, பொட்டணத்தை வாங்காமலே திருப்பியனுப்பி விட்டார் தம்பிரான்.

நமது கவிமணி அவர்களைப் பார்த்து "அப்பா! அந்த போற்றிக்கண்ணு நம்மை ஏமாற்றி விட்டான். அவனுடைய தவறுடைய செயலை வைத்து ஒரு கவி இயற்றித் தா. அதை அவனுக்கு அனுப்பலாம்" என்று கூறினார் தம்பிரான். கவிமணியும் பாடலை உருவாக்கினர்.

* "நெஞ்செரிய வயிறேங்க நினைக்கும் போது
நித்திரை கண் விட்டொழிய ... ... ...
... ... ... ... ... ... ... ... ...
... ... ... சா போற்றிக்கண்ணு நீயே"

என்று பாடல் அமைந்தது. பாடலைத் தம்பிரானிடம் தரும்போதே "சுவாமி! பாடல் ஏனோ அமங்கலமாக அமைந்துவிட்டது. என்ன நேருமோ தெரியவில்லை" என்று கூறிக் கொண்டே கொடுத்தார்.

என்ன விந்தை! இந்த அஞ்சல் எழுத்து, மதுரை செல்லும் போது, பெறுவதற்குப் போற்றிக்கண்ணு உயிருடனில்லை.

குற்றவாளிக்கு மரணம்; குணக்குன்றுக்கு வாழ்க்கை இன்பம். இது நம் கவிமணியின் உயர் இலட்சியம்.

பிறவிக் கவிஞர்; பேராண்மையாளர்; தீமையைக் கண்டால் வெகுண்டெழுபவர்; குழந்தையுள்ளம் ஆனால் கொள்கைக் குன்று; நமது கவிமணி அவர்களின் படப்பிடிப்பு இதுவே!

கவிமணி பிறந்த தமிழகத்தில்; அவர்கள் காலத்திலேயே பிறந்தோம்; — பெருமை கொள்வோம்!

---

* இந்தப் பாடல் இடைப்பகுதிச் சொற்களைக் கவிமணியவர்களே விடுபடச் செய்துள்ளார்.

# MEENAKSHI GROUP OF MILLS

**MADURAI (South India)**

*Manufacturers of :*

SINGLE YARN IN COUNTS Nf 14 TO Nf 84, CARDED AND COMBED, IN HANKS AND IN CONES FOR WEAVING AND HOSIERY FACTORIES AND GREY GADA. GREY AND BLEACHED MULLS, LONG - CLOTH, DYED CLOTH ETC.

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai, Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

# கவிதாவாசகம் — தேசிக விநாயகம் பிள்ளை*

பெ. நா. அப்புஸ்வாமி

தேசிகவிநாயகம் பிள்ளை ஓர் உண்மைக்கவி. அவர் விசாலமான மனம்படைத்தவர்; உணர்ச்சி மிக்கவர்; அன்புமிகுந்தவர்; பலமொழி கற்றவர்; பக்தி நிரம்பியவர்; கவித்திறமை வாய்ந்தவர். எளிமையான சிறுவர்பாடல்களையும், ஆத்திரம் ததும்பும் சமூகச் சீர்திருத்தப்பாடல்களையும், நவநவமான கருத்துக்கள் கொண்ட புதிய விஷயங்களைப் பற்றிய பாடல்களையும் அவர் இயற்றியிருக்கிறார், ஆங்கிலமொழியிலுள்ள சிறந்த பாடல்களைப் படித்து அனுபவித்த பிள்ளையவர்கள் அவற்றின் சுவையை நமது நாட்டிலே ஆங்கிலம் படிக்காதவர்களும் உணரவேண்டுமென்ற கருத்துக்கொண்டு, பல ஆங்கிலப் பாடல்களை மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஊன்றிப் பார்த்தால் எல்லாக் கவிதையும் ஒரு மொழிபெயர்ப்புதானே! மனத்தில் தோன்றும் இனிய உணர்ச்சிகளைச் சொல்லிலே மொழிபெயர்ப்பதுதானே கவிதையெனப்படுவது? இந்தக் கருத்தையே அவர்,

'உள்ளத்துள்ளது கவிதை — இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் — உண்மை
தெரிந்துரைப்பது கவிதை'

என்னும் பாடலில் வெளியிட்டிருக்கிறார்.

ஒரு பாஷையிலுள்ள கவிதையை மற்றொரு பாஷையில் மொழிபெயர்ப்பது எளிதன்று. 'கவிதையை மொழிபெயர்க்க முயன்றால் அதனால் விளையும் பயன் மொழிபெயர்ப்பாகவும் இராது; கவிதையாகவும் இராது' என்று ஆங்கில அறிஞர்கள் கூறுவதுண்டு. மிக்க திறமை வாய்ந்தவர்களே இந்தத் துறையில் வெற்றிபெறக்கூடும். ரவீந்திரநாத தாகூர், எட்வின் ஆர்னல்ட், ப்லேக், பிட்ஸ் கெரல்ட், எமெர்ஸன் முதலியோரின் ஆங்கிலப் பாடல்களிற் சிலவற்றைத் தேசிகவிநாயகம் பிள்ளை மொழிபெயர்திருக்கிறார். அம்மொழிபெயர்ப்புக்கள் தமிழ் மொழியின் பண்புக்கு ஏற்றவாறு அமைந்தவை. இவ்வ மொழி

* சென்னை ரேடியோ நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட பேச்சின் பகுதிகள்.

பெயர்ப்புக்கள் என்னும் எண்ணத்தையே நமக்கு உண்டாக்காதவை; அவரால் புத்துயிர் அளிக்கப்பட்டுப் புதிய சிருஷ்டிகளாகத் தோன்றுபவை. ப்லேக், தாகூர் போன்ற சிறந்த கவிகளின் அரிய பாடல்களிலுள்ள கருத்துக்களையும் சுவைகளையும் இவருடைய மொழிபெயர்ப்பு அதிகம் வேறுபடுத்தாமல் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. மூலத்திலுள்ள கற்பனை முதலியவை மொழிபெயர்ப்பில் நமது நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும் மரபுகளுக்கும் ஏற்றவாறு அங்கங்கே ஒரு சிறிது மட்டுமே மாறுபடுகின்றன. உதாரணமாக, ரவீந்திரநாத தாகூரின் ***கீதாஞ்சலியிற்*** காணும், "Thou hast made me endless" என்று தொடங்கும் பாடலை அவர் மொழிபெயர்த்திருப்பதைப் பாருங்கள்!

'என்றும் எனை அழிவிலாப் பொருளா யியற்றினை
 ஈதுனது திருவுள்ளமே
ஈடற்ற கலம்இது கவிழ்த்திக் கவிழ்த்தி உயிர்
 ஏனோ திருத்திவைப்பாய்?

குன்றினொடு குழியெலாம் இச்சிறிய வேயின்வரு
 குழல்கொண்டு சென்று, நீயுன்
குமுதவாய் வைத்து நவநவமான இசைகள்செவி
 குளிரவே ஊதி நிற்பாய்!

பொன்றுத லிலாதநிலை தரவல்ல உன்கரப்
 புனிதமுடல் தீண்டலாலே
பூரித்த உள்ளம்மகிழ் எல்லையறமாய்ந்ததும்,
 போற்ற மொழியற்று நின்றேன்

நன்றுதவி கொடைகோடி இக்குழவி கைகளில்
 நாளும் நீ அள்ளியிடினும்,
நான் குறைகள்சொல்லி, அருள்வேண்டா திருந்திடேன்
 ஞானவொளி வீசு மதியே'

ப்லேக் என்னும் கவி பாடிய "Tiger, tiger gleaming bright" என்று தொடங்கும் ஆங்கிலப் பாடலின் அற்புத அமைப்பும் போக்கும் எந்த மொழிபெயர்ப்பினும் அடங்காது என்பதை உணர்ந்து, அதிலுள்ள சிறந்த கருத்துக்களை எடுத்துத் தமிழ்ச் சிறுமியொருத்தி புலிக்கூட்டிலுள்ள புலியைக் கண்டு மற்றொரு சிறுமிக்குச் சொல்லுவதுபோல நடையையும் கற்பனைகளையும் சிறிது சிறிது மாற்றியமைத்துப் பாடியிருக்கிறார். மூலத்திலுள்ள சொற்களின் அழுத்தமும் வேகமும் சொற்செட்டும் நடையழகும் ஓரளவு குறைந்துவிட்டாலும் குற்றமில்லை.

★

WITH BEST

COMPLIMENTS

FROM

THE SWADESAMITRAN

★




STERLING GF 253

எளிமையான நடையில் இருந்தால் விளங்கும் என்று கருதி மிகவும் எளிமையாகப் பாடப்பட்டிருப்பது அந்தப் பாடல். புலிக்கூடு என்பது அதன் பெயர். இப்பாடல்களைப் பாருங்கள்.

'பந்தம் எரியுதோடி? — கண்களைப்
பார்க்க நடுங்குதடி!
குந்தம்வாள் ஈட்டியெல்லாம் — கூடவே
கொண்டு திரியுதடி!

வாயைப் பிளக்குதடி! — கையுறை
வாளும் உருவுதடி!
பேயைப் படைத்த பின்னே — இதனையும்
பிரமன் படைத்தானடி?

இடித்து முழங்குதடி! — தொண்டையும்
இரும்பாலே செய்ததோடி?
அடுத்து நெருங்காதேடி! — அதுமிக
ஆங்காரம் கொள்ளுதடி!'

இதைப்போலவே பாரசீகத்திலிருந்து பிட்ஸ்கெரல்ட் ஆங்கிலத்தில் இயற்றிய 'உமர் காயம்' பாடலின் தமிழ் மொழி பெயர்ப்பிலும், அவர் வேண்டியவாறு நமது நாட்டின் மரபுக்கேற்ற உவமைகள் முதலியவற்றைக் கையாண்டு, தமிழ் நாட்டிலே, தமிழ் படித்த தமிழனுக்குக் கவிதையின் கருத்தை விளக்க முயலுகிறார்.

'புலர்ந்து விடியும் பொழுதினிலே
பொய்கைக் கரையஞ் சோலையிலே
மலர்ந்த நல்ல மணம் வீசி
மகிழும் மலர்கள் ஆயிரமாம்

உலர்ந்து வாடிச் சேற்றினிலே
உதிரும் அவையும் ஆயிரமாம்
கலந்த உலக வாழ்வை இதிற்
கண்ணுற் கண்டு தெளிவாயே.'

'வெய்யிற்கேற்ற நிழலுண்டு;
வீசும் தென்றற் காற்றுண்டு;
கையிற் கம்பன் கவியுண்டு;
கலசம் நிறைய மதுவுண்டு;

தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுமுண்டு;
வையம் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ!'

*With Best Compliments*

*from*

**THE KHANDELWAL GROUP OF COMPANIES**

" **KHANDELWAL BHAVAN** ",

166, Dr. Dadabhoy Naoroji Road,

FORT, BOMBAY - 1.

‘பாரி போலக் கொடுத்தவரும்
பணத்தைப் புதைத்து வைத்தவரும்
தேரின் மண்ணாய்ப் போனதலாற்
செம்பொன் னுன தறியோமே

ஊரில் அவர்தம் உடலையெடுத்
துரையும் நிறையும் காணுரே
ஓடும் உள்ளத் துண்மையிதை
ஊன்றி நோக்கி யுணர்வாயே’

இவ்வாறு எத்தனையோ பாடல்கள். இவற்றின் எளிமையும் ஓசைநயமும் நன்கு பாராட்டத்தக்கவை. ஓமார் கையாமும் பிட்ஸ்கெரல்டும் கம்பனையும் பாரியையும் அறியார்கள். அவர்கள் இருவரையும் தங்களுடைய பாடலிலே அவர்கள் பாடவில்லை; தேசிகவிநாயகம் பிள்ளையால் அவர்கள் நமக்காகச் சேர்க்கப்பட்டவர்கள்,

இவ்வாறே எட்வின் ஆர்னல்ட் இயற்றிய “Light of Asia” அல்லது ஆசிய ஜோதி எனப்படும் புத்தர் பெருமான் வாழ்க்கையைக் கூறும் நூலில் வரும், “We are the voices of the wandering wind” என்று தொடங்கும் பாடலின் மொழிபெயர்ப்பும் நன்ருக அமைந்திருக்கிறது. சித்தார்த்தன் யசோதரையின் அந்தப்புரத்திலிருக்கும் போது அங்குள்ள வீணையின்மீது காற்று வீசியது. அப்பொழுது அவ் வீணையிலிருந்து உண்டான ஒலி கூறுவதாகக் கவி கற்பனை செய்கிருர்.

‘தேடும் இடங்களெல்லாம் — ஓய்வு
தேடியும் காணுமல்
ஓடி ஓடி அலையும் — காற்றின்
ஒலியே நாங்களையா.

ஆன்ற புவிவாழ்வும் — எண்ணில்
அற்ப வாழ்வேயாம்.
தோன்றும் ஒரு மூச்சாம் — புயலாம்
சூருவளியே யாம்,

மாறி வருந்துயரால் — இன்ப
வாழ்வே நமக்கில்லை.
தேறும் அறிஞனே நீ — உண்மை
தெரியக் கூறுகின்ருேம்.

அன்பிருக்கு மெனில் — அதிலும்
அளவரியவொண்ணு
இன்பம் எய்திடலாம் — ஐயம்
யாதுமேயில்லை.

## *A great beginning...*

In 1907, when India could not even produce a decent pin, the House of Tata announced its intention to build a modern steel works in India. There were not a few who doubted that the project would ever be a success.

Yet, shortly afterwards, India's first steel works was set up at Sakchi, as Jamshedpur was then called, and the first steel ingot was successfully rolled in February 1912. This event not only marked the birth of India's steel industry but also proved that India had the necessary potential in terms of iron ore and other raw materials to sustain an ever-expanding steel industry on modern lines.

The steel that has flowed out of Jamshedpur for over 50 years has helped India to take her first steps on the road to industrialization. And Tata Steel will continue to play an important role in our developing economy now poised to produce atomic power and manufacture steel plants to make more steel.

**TATA STEEL**



துன்பச் சுழியினிலே — விழுந்து
சுழலும் உலகத்தை
இன்பக் கரையேற்ற — நீயும்
இரங்கிடவேண்டும்.

கண்ணிலா உலகம் — இடறிக்
கவிழ்ந்துவீழாமல்
அண்ணலே எழுந்து — விரைவில்
அருள வேண்டுகின்ருேம்.'

புத்தபகவானுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த 'புத்தர் அவதாரம்', 'புத்தரும் ஏழைச் சிறுவனும்', 'கருணைக் கடல்', 'புத்தரும் மகனிழந்த தாயும்' என்னும் நிகழ்ச்சிகளை மிகவும் எளிமையாகவும் இனிமையாகவும் பாடியிருக்கிருர்.

எளிமையும் இனிமையுமே இவருடைய பாடல்களில் எங்கும் காணப்படும் குணங்கள். ஆதலால் இவர் எழுதியுள்ள குழந்தைப் பாடல்கள் உண்மையாகவே குழந்தைகள் தாமாகவே படித்து இன்புறக்கூடியவை.

குழந்தைகளைப்பற்றிப் பாடிஞல் மட்டும் அவை குழந்தைகளுக்கேற்ற பாடல்களாகா. அப்பேர்ப்பட்ட பாடலுக்கு ஓர் உதாரணமாக மக்டானல்ட் எழுதிய "Where did you come from, baby dear?" என்று தொடங்கும் பாடலின் மொழி பெயர்ப்பைக் கூறலாம்.

'எங்கே யிருந்து வந்தாய் குழந்தாய் — அதை
யானும் அறிந்திடச் சொல் குழந்தாய்
எங்கும் நிறைவெளியில் இருந்தேன் — சற்றே
இங்கும் இருக்க வந்தேன் அம்மா.

நீல மலர் போலும் விழிகள் — எங்கு
நீ தேடிப் பெற்ருய் என் குழந்தாய்
ஞாலம் இதற்கு வரும் வழியில் வானம்
நன்கொடை தந்த திவை அம்மா'

இவ்வகை பாடல்களைப் பெரியவர்களே அனுபவிக்க முடியும்.

சிறு குழந்தையின்மீது போலவே, அவர் பூவின் நிறத்திலே, அதன் மணத்திலே, பறவையின் அழகிலே, அதன் குரலிலே, நிலவிலே, கடலிலே, ஓடும் நீரிலே, இயற்கையின்பத்திலே முழுதும் ஈடுபட்டவர்.

'மாணிக்க மூக்கழகும்—மரகத வர்ண வடிவழகும்
காணக்கண் ணாயிரந்தான்—இருப்பினும் கண்டு முடிந்திடுமோ?'

என்று கிளியையும்,

'எல்லை யறியாப் பெருங்கடலே — நீதான்
இரவும் உறங்காயோ, கடலே?
அல்லும் பகலும் அலைகடலே — உனக்கு
அலுப்பும் இலையோ கருங்கடலே?'

என்று கடலையும் பாடுவதை உதாரணங்களாகக் காட்டலாம்.

தமிழ் இலக்கியத்தின் சுவை தேசியவிநாயகம் பிள்ளையின் இரத்தத்திலே ஊறிக்கிடக்கிறது. ஔவையையும் வள்ளுவரையும் கம்பனையும் பாரதியையும் பற்றி அவர் பாடியிருக்கிறார்.

'ஔவைக்கிழவி நம் கிழவி அமுதின் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும் தெரியக் காட்டும் பழங்கிழவி
கூழுக்காகக் கவிபாடும் கூனற் கிழவி — அவளுரையை
வாழும் வாழ்வில் ஒரு நாளும் மறவோம், மறவோம், மறவோமே!'

என்று ஔவையையும்,

'ஆரியம் நன்குணர்ந்தோன்—தமிழின் ஆழம் அளந்து கண்டோன்
மாரி மழைபோலக் — கவியின் மழை பொழிந்திடுவோன்.
இந்திர சாலமெல்லாம் — கவியில் இயற்றிக் காட்டிடுவோன்
மந்திரச் சொல்லாலேயே—உள்ளம் மயங்கச் செய்திடுவோன்.
அரக்கர் நெஞ்சறிவான் — முனிவர் அகமும் கண்டறிவான்
குரங்கின் உள் அறிவான் — வேடர் குணமும் நன்கறிவான்.
நாடகக் காட்சி யெல்லாம் — கவியில் நன்கு காட்டிடுவான்
பாடகர் போற்றிடவே இனிய பண்கள் தந்திடுவான்.

என்று கம்பனையும் அவர் வியந்து பாடியிருக்கிறார்.

இவர் தேசபக்தியும் தெய்வபக்தியும் நிரம்பியவர். தேசக் கொடி முதலியவற்றையும், நம்நாட்டுத் தெய்வங்கள், ஏசு, புத்தர் முதலியோரையும் பாராட்டியிருக்கிறார்.

சமூகத்தின் சீர்கேடான நிலையைக்கண்டு இவர் மனம் இளகிப் பாடிய பாடல்கள் பல.

நாடும், நாட்டுமக்களும், அகில உலகமும் இன்பமாக வாழ வேண்டும் என்பதே இவருடைய வாழ்த்து.

*

With Best Compliments

from

MESSRS. VIJAYA PRODUCTIONS
PRIVATE LTD.

MADRAS-26.

*

# நாம் செய்த தவறுகள்

டாக்டர் மு. வரதராசன்

ஒருவர் தவறு செய்தால், அந்தத் தவற்றின் பயனை அவர் அனுபவித்திடும் முறை உண்டு. அது ஊழ்வினை எனப்படும். ஊழ் இந்த அளவில் நிற்பதில்லை. ஒருவர் செய்யும் தவற்றின் பயன், அவரைச் சார்ந்த மற்றொருவர்க்குப் போய்ச் சேர்தலும் உண்டு. அந்த மற்றொருவர் மகனாக இருக்கலாம்; மகளாக இருக்கலாம். தந்தையின் உடலில் உள்ள குறை மக்களைச் சார்ந்து நிற்பதில்லையா? இதுவும் குறுகிய எல்லையில் காணப்படும் ஊழ்தான். இந்த இரண்டையும் விடப் பரந்த பெரிய எல்லையில் ஊழின் ஆட்சி நடப்பது உண்டு. ஒரு கூட்டத்தாரில் சிலர் செய்யும் தவறு, பலரையும் சென்று துன்புறுத்தல் உண்டு. ஓர் ஊரில் பத்துப் பதினைந்து பேர் போக்கிரிகளாக இருந்து வழிப் போக்கருக்குத் தொல்லை கொடுத்தால், பொதுவாக அந்த ஊர்க்கே கெட்ட பெயர் ஏற்படக் காண்கிறோம். அந்த ஊரைச் சார்ந்த நல்லவர் ஒருவர் வெளியூர்க்குச் சென்றால், அவர் இன்ன ஊரார் என்று அறிந்தவர்கள் அவர்க்கு உதவி செய்யாமல் கைவிடுதல் உண்டு. ஓர் ஊரார் தம் ஊரில் உள்ள மரங்களை வெட்டிப் பாழாக்குவதால், அந்த ஊரில் மட்டும் அல்லாமல் சில பக்கத்து ஊர்களிலும் மழை குறைந்து நீர் வளம் சுருங்கிப் போவது உண்டு. இவை எல்லாம், இடத்தால் பரந்து ஆட்சி செய்யும் ஊழ். இவ்வாறே காலத்தால் பரந்து நின்று ஆட்சிபுரியும் ஊழும் உண்டு. ஓர் ஊரில் ஒரு காலத்தில் பொய்யும் பித்தலாட்டமும் மலிந்திருந்ததைக் கொண்டு, அடுத்துப் பல ஆண்டுகள் வரையில் அந்த ஊராரை யாரும் எளிதில் நம்பாமல் புறக்கணிப்பார்கள். முயற்சி செய்ய வேண்டிய காலத்தில் ஊரார் ஒற்றுமை இல்லாமல் சோம்பியிருந்து பள்ளிக்கூடம் முதலியவற்றை ஏற்படுத்திக் கொள்ளாத காரணத்தால், அடுத்து வரும் தலைமுறையினர், கல்வித் துறையில் பின்தங்கிவிடுதல் காண்கிறோம். அவ்வாறே

உரியகாலத்தில் தொழிற்சாலை முதலியன ஏற்படுத்திக் கொள்ளத் தவறிய காரணத்தால், அந்த ஊர் மக்கள் அடுத்த இரண்டு மூன்று தலைமுறைகள் வரையில் பொருளாதார முன்னேற்றம் இல்லாமல் கீழ்படுதல் உண்டு. இவ்வாறே நாட்டுக்குப் பொருந்தும் ஊழும் உண்டு. இந்திய நாட்டு மக்கள் சாதி வேறுபாடு முதலானவற்றை ஒரு காலத்தில் வளர்த்துப் பாராட்டிய தவறு காரணமாக, இந்த நூற்றுண்டிலும் நாம் பிற நாட்டுக்கு அடிமையாக இருந்தோம்; அடிமைத் தன்மை நீங்கி விடுதலை பெற்ற பிறகும், தேர்தல் முதல் அலுவலகம் வரையில் பிரிவினைகளைப் பேசிப் பிளவுப்படுகிறோம்; ஆக்க வேலைகள் பலவற்றிற்கு இடையூறுகளே தேடிக் கொள்கிறோம்; வேகமாக முன்னேற முடியாமல் தட்டுப்பட்டு வருந்துகிறோம்.

இப்படிப்பட்ட ஊழின் வல்லமையான ஆட்சியை மொழித் துறையிலும் காண்கிறோம். இன்று இந்தியாவில் பதினான்கு மொழிகள் உள்ளன. அவற்றுள் ஒன்றாகத் தமிழ் உள்ளது. இந்தி, தெலுங்கு, வங்காளி இவற்றிற்கு அடுத்த சிறு மொழியாகவே உள்ளது. (மக்கள் தொகையில் மூன்று கோடி பேர் பேசும் – சிறு பான்மையோர் பேசும் – சிறு மொழியாக உள்ளது.) ஒரு காலத்தில்–இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், இந்தியாவில் நமக்கு மொழி என்று கருதப்படும் வட மொழி (சம்ஸ்கிருதம்), தென் மொழி (தமிழ்) எனக் குறிக்கப்பட்டன. தென்னாடு முழுதும் போற்றிப் பேசப்பட்ட நாகரிகப் பேச்சு மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் தமிழ் விளங்கியது. பிராகிருதம், பாலி என்பவை வடநாட்டாரின் கொச்சை மொழிகளாக இருந்த காலம் அது. அந்தக் காலத்திற்கும் முன்பு, மொகஞ்சதாரோ நாகரிகக் காலத்தில் இந்தியா முழுதும் ஒரு மொழியே இருந்தது என்றும், அது தமிழே என்றும் அறிஞர் கூறுவர். அப்போது நாவலந்தீவு எனப்பட்ட இந்தியா முழுதும் பழந் திராவிட மொழி எனப்படும் பழந் தமிழே பேசப்பட்டு வந்தது என்பர். இன்று அது, இந்தியாவின் அரசியல் சட்டம் ஏற்றுக் கொண்ட பதினான்கு மொழிகளில் ஒன்றாக, அதுவும் அந்தப் பதினான்கில் நான்காவதாக ஐந்தாவதாகக் கருதப்படும் நிலைக்கு வந்து விட்டது. ஒன்றே ஆக இருந்து, இரண்டில் ஒன்றாக விளங்கி, இன்று பதினான்கில் ஒன்றே ஆன காரணம் என்ன? ஊழ் – அதற்குக் காரணமாக நாம் செய்த தவறுகள் என்ன?

**என் ஆசை**

இந்நாட்களில் பாடிய கவிஞர்களுக்குள் வேலைப்பாடு நன்ருக அறிந்த கவிஞர், அதிலும் வெண்பா பாடக்கூடியவர் தேசிய விநாயகம் பிள்ளையவர்கள்தான்என்று டி.கே.சி. அவர்களை எனக்கு அறிமுகம் செய்வித்தார்கள். டி. கே. சி. அவர்களின் அன்பைப் பெற்ற அவர்களிடம் எனக்கு மிக மதிப்பு. அவர்கள் எழுத்தைத் தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பது என் ஆசை.

— ராஜாஜி.

ஒரு காலத்தில் கங்கைக் கரையில் இருந்த நாடுகள் தமிழ் வேந்தர்க்குப் பணிந்திருந்தன. கடாரம் எனப்பட்ட பர்மா பணிந்திருந்திருந்தது. சிங்களம் எனப்பட்ட இலங்கை தமிழ் வேந்தரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அங்கெல்லாம், அந்தக் காலத்தில் தமிழ் பரவியிருந்தால், இன்று, எவ்வளவு பெருந் தொகையான மக்கள் தமிழ் பேசுவோராக இருந்திருப்பார்கள்! தமிழர்கள் அக்காலத்தில் பிற நாட்டாரிடம் தோள்வலியும் வாள்வலியும் காட்டிப் புகழ் பெறுவதே நோக்கமாக இருந்தார்கள். அங்கே கொடி நாட்டி விட்டு, அந்த நாட்டு அரசர்கள் பணிந்து திறை கொடுத்ததும், திறை பெற்றுக் கொண்டு மறுநாளே திரும்பி விட்டார்கள். அவர்கள் திரும்பியவுடனே, அந்த நாடுகள் தமிழரைப் புறக்கணித்து விட்டனர். இன்று பர்மா தமிழரைத் துரத்தியது; இலங்கை தமிழரை வெறுத்துத் துரத்தி வருகிறது. நீர் வளம் மிகுந்த கங்கைக் கரையின் இலக்கிய வளமில்லாத இந்தி தமிழரை ஆட்டி வைக்க முற்படுகிறது. இலங்கையில் தமிழரின் கொடிகள் பறந்த காலத்தில், பர்மாவில் தமிழரின் கொடிகள் பறந்த காலத்தில், அந்த நாடுகளில் இலக்கியம் வளரவில்லை; மதிப்புள்ள மொழியும் இல்லை; எளிதில் அங்கெல்லாம் தமிழிலக்கியத்தையும் தமிழையும் (இன்று இந்திப் பிரச்சார சபையார் செய்வது போல் செய்து) பரப்பியிருக்கலாம். ஆனல் தமிழர்கள் அறிவு வலிமையையும் கலைப் படையெடுப்பையும் நம்பாமல், தோள் வலியும் வாள் வலியுமே துணையாகக் கொண்டு "வாழ்க வாழ்க" என்ற வாழ்த்தொலியில் தம் புகழ் கேட்டு மயங்கிக் கடமையைச் செய்யாமல் விட்டது ஒரு தவறு. அந்தத் தவறு அன்று செய்யாமல், தமிழைப் பர்மாவிலும் இலங்கையிலும் பரப்பியிருந்தால், காமன்வெல்த் நாடுகளில் இரண்டு மூன்று நாடுகள் தமிழரின் நாடுகளாக இருக்க

முடிந்திருக்கும். உலக நாடுகளின் அவையில் தமிழும் ஒரு மொழியாக ஏற்றுக் கொள்ளப்படும் நிலை ஏற்பட்டிருக்கும். போயிற்று! தவற்றின் பயன் வந்து விளைந்தது.

தென்னிந்தியா முழுதும் பேசப்பட்டு வந்த தமிழ், இன்று தென்னிந்தியாவில் ஒரு பகுதியில் மட்டுமே பேசப்படும் மொழி ஆயிற்று. தெலுங்கில் இலக்கியம் இல்லாதிருந்த பழங் காலத்தில் நெல்லூர், கருநல்லூர், கடப்பை என்றெல்லாம் ஆந்திர நாட்டில் ஊர்ப் பெயர்களும் வைத்த அந்தக் காலத்தில், தமிழர் அங்கெல்லாம் தமிழைப் பரப்பியிருக்கலாம். அப்படிப் பரப்பியிருந்தால், கிருஷ்ணவும் கோதாவரியும் பாயும் பகுதிகள் எல்லாம் தமிழ்ப் பகுதிகளாக ஆகியிருந்திருக்கும். ஆனால், அதையும் செய்யாமல், அந்த நாட்டில் வாழ்ந்த மக்களை மதிக்கவும் மதிக்காமல், "கல்லா நீள்மொழிக் கதநாய்வடுகர்" என்று புறக்கணித்தார்கள். புறக்கணிக்கப்பட்டவர்கள், இன்று தமிழரை விடப் பெருந் தொகையினராக விளங்கும் நிலை வந்தது. எருமை நாடு எனப் பட்ட மைசூர் மாநிலம் அக்காலத்தில் கன்னடம் என்ற மொழியில்லாமல், தமிழ் பேசப்பட்ட நாடாகவே இருந்தது. இந்திப் பிரச்சார சபையினரைப் போலவோ, ஆங்கில நாட்டு மிஷனரிகளைப் போலவோ, அந்த நாட்டில் தமிழ்ப் பள்ளிகள் வைத்துத் தமிழ்ப் புலவர்களைக் கொண்டு நம் முன்னோர் மொழியைப் பரப்பியிருந்தால், இன்று உள்ள மைசூர்ப் பகுதி முழுவதும் தமிழ் பேசும் பகுதியாக விளங்கியிருக்கும். தமிழ்நாடு காவிரி பிறந்து ஓடும் நாடாக இருந்திருக்கும். இன்று போல், நீர்ப்பெருக்குக் குறைந்த கடைக் காவிரியின் அருளுக்கு ஏங்கியிருக்க நேர்ந்திருக்காது. தமிழ்நாடு தனக்கென வளமான ஆறு ஒன்றும் இல்லாத நாடு என்ற குறையும் ஏற்பட்டிருக்காது.

அவ்வாறே கேரள நாட்டையும் தமிழ் பேசும் பகுதி

### கற்பகப் பூஞ்செண்டு

"தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ் செல்வம்; அரிய செல்வம்; தெவிட்டாத அமிர்தம்; ஆயுள் நாள் முழுதுமே தமிழ் மகன் தன்னுள் வைத்துக் கொண்டு அனுபவிக்க வேண்டிய வாடாத கற்பகப் பூஞ்செண்டு.

— ரசிகமணி டி. கே. சி.



METRIC SYSTEM - THE ONLY LEGAL SYSTEM
Metric System is the only Legal System
buy always in
Kilograms
Metres
Litres
DA 64/576

யாகவே காப்பாற்றியிருந்தால் எவ்வளவோ நன்மை இருந்திருக்கும். பெரியாறு முதலிய தமிழாறுகளின் நீரில் ஒரு பகுதியாவது வேண்டும் என்று கெஞ்சிக் கேட்கும் சிறுமை இருந்திருக்காது. மலையாளம் என்பது ஒரு மொழியாக வளர்ந்தது ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முன்பே யாகும். சங்க காலம் முதல் சேர நாட்டு இளங்கோ வடிகள் காலம் வரையில், அதன் பிறகு குலசேகர ஆழ்வார் காலத்திலும் சேரமான் பெருமாள் நாயனார் காலத்திலும் அங்கெல்லாம் தமிழே இலக்கிய மொழியாக இருந்து வந்தது. ஆனால் தமிழ்ப் புலவர்கள் தாம் எழுதும் செந்தமிழ் போலவே, மக்கள் பேசும் உயிர்த் தமிழைப் போற்றவில்லை. ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முன், சேர (கேரள) நாட்டு மக்கள் பேசிய தமிழைப் புலவர்கள் புறக்கணித்து வந்தமையால், அந்த மக்கள் செந்தமிழை வேறொரு மொழி போலவே கருதி விலகி நின்றமையால், சேர நாட்டுக் கலைஞர் சிலர் தம் நாடகங்களிலும் கூத்துக்களிலும் மக்கள் பேசிய கொச்சைத் தமிழ் மொழியையே கையாண்டு வளர்த்தனர். பிற்காலத்தில் வந்த எழுத்தச்சன், அவர்களின் நெறியைப் போற்றி, அந்தக் கொச்சைத் தமிழிலேயே எழுதத் தொடங்கினர். அவ்வாறு நாடகக் கலைஞரும் பிறரும் எழுதியவற்றைத் தமிழ்ப் புலவர்கள் எள்ளி நகையாடிப் புறக்கணித்தார்கள். ஆனால் வடமொழி கற்ற நம்பிஸ்ரீகள் (நம்பூதிரிகள்) அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்கள்; அந்தக் கொச்சைத் தமிழுக்கு மெருகு கொடுத்து நல்ல இலக்கியம் என்று தட்டிக் கொடுத்தார்கள். சேரர் தமிழ் என்ற பெயரை விட்டு மலையாளம் என்ற வேறு பெயரும் தந்து, அதற்குத் தனியே இலக்கணமும் எழுதி விட்டார்கள்.

சென்ற நூற்றாண்டில் வந்த ஐரோப்பியர் ஒருவர், மேற்குக் கடற்கரையில் இறங்கி அங்கிருந்து கிழக்குக் கடற்கரை வரையில் திரிந்து மக்களின் மொழியைக் கேட்டு, அதுமுதல் இதுவரையில் ஒரே மொழி பேசப்படுவதாகஎழுதியுள்ளார். கொச்சி முதல் சென்னை வரையில் தென்னிந்தியாவின் தெற்குப் பகுதி முழுதும் மலையாளம் என்ற மொழி பேசப்படுவதாக எழுதிச் சென்றார் அவர். அந்த அளவிற்கு ஒன்றாகவே இருந்த ஒரு மொழிப் பகுதி இன்று இரு மொழிகள் வழங்கும் இரு வேறு நாடுகள் ஆகி விட்டன. இலக்கியத் தமிழுக்கு அடுத்த நிலையில் மக்கள் தமிழையும் போற்றும் மனப்பான்மை தமிழ்ப் புல

வர்களுக்கு இருந்திருந்தால், இருவகைத் தமிழுக்கும் ஒரு பாலம் அமைத்திருந்தால், இந்தப் பிரிவினை ஏற்பட்டிருக்காது. தமிழ் மூன்று கோடி மக்கள் பேசும் சிறு மொழியாக இல்லாமல், சென்னை மாநிலம் எனப்படும் தமிழகமும் கேரளமும் மைசூரும் ஆந்திராவும் பேசும் பெருநிலப் பரப்பின் மொழியாக இருந்திருக்கும்; பத்துக் கோடி மக்கள் பேசும் பெரு மொழியாகப் பெயர் பெற்றிருக்கும்; வட நாட்டு மக்களும் போற்றிப் படிக்க வேண்டிய மொழியாக விளங்கியிருந்திருக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு தவறு செய்து, தமிழ் பேசும் நிலத்தின் எல்லை படிப்படியே குறைந்து வந்தது. முடியாட்சிக் காலத்தில் இந்தக் குறை தெரியவில்லை. குடியாட்சிக் காலத்தில், மக்களில் பெரும்பான்மையோர் ஆட்சிக்கு உரிமை பெறும் நிலையில், இந்தத் தவறுகளால் விளைந்த குறை நன்கு உணரப்படுகிறது. மக்களின் எண்ணிக்கையை ஒட்டிப் பல சிக்கல்களைத் தீர்க்கும் ஆட்சிமுறையில், எண்ணிக்கை குறைந்த மக்கள் பேசும்மொழியாகத் தமிழ் குறுகிவிட்டது. எந்த எந்தக் காலத்திலோ செய்த தவறுகள், இந்தக் காலத்தில் சிறுமை தருமாறு ஊழ் செய்து விட்டது. தமிழர் பிற மொழிகளை மதித்துக் கற்கும் நிலைமையும், தமிழைக் கற்காவிட்டாலும் கவலையில்லை என்ற புறக்கணிப்பான நிலைமையும் ஏற்பட்டுவிட்டன. பிறமொழிகளைக் கற்காவிட்டாலும் இந்தச் சிறுபான்மைத் தமிழர்க்கு வாழ்வு இல்லை என்ற நிலையும் நேர்ந்து விட்டது. மொழிகளின் பட்டியலில் பெருமை குறைந்து நிற்கும் நிலையும் தமிழுக்கு ஏற்பட்டு விட்டது.

பழங் கதைகள் — பழம் பெருமைகள் — பேசுவதில் பயனில்லை என்பது உண்மை. ஆனால் இன்றைய நிலை எவ்வாறு உள்ளது என்று எண்ணிப் பார்க்க வேண்டிய நெருக்கடி நேரும் போது, பழங்கதைகளை நினைந்து பார்க்காமல் இருக்க முடியவில்லை. நேற்றைய நிகழ்ச்சிகளை நினைந்தால் தானே இன்றைய நிலை விளங்கக் கூடியதாகும்? நாம் செய்த தவறுகள் என்ன என்ன என்று உணர்ந்தால்தான் நம் இன்றைய நிலைக்குக் காரணங்கள் விளங்கும்.

---


shan
Sewing Machines
Offer you More Value for Money
More value because of their modest price, cost free maintenance, fast and smooth operation and dependable performance.
PLUS VALUES :
• Electrically operated hand and foot machines
• Choice of elegant models
• Complete set of accessories supplied FREE including one embroidery plate
• 2 Years FREE service
• Special lubricant containing 'MOLYKOTE' made to give SHAN long lasting service
Shan exports to U.S.A., U.K. West Germany, Afghanistan and Middle East countries, earning a name for itself already in overseas markets.
For Demonstration contact your Local 'SHAN' Dealer
Manufacturers :
Paneser Mechanical Works (P) Ltd.
LUDHIANA-3, Punjab

# ஆற்றங்கரையில்...!

ஏ. ஆர். ராஜாமணி

பசி உடலை வளரச் செய்கிறது. ஆனால், காதலோ உயிரை மலரச் செய்கிறது! செடி தான் மலரைத் தருகிறது என்றாலும் மனிதன் செடியை விட்டு விட்டு மலரைத் தான் மதிக்கிறான்! காரணம், "அசையும் செடியிலே அலர்ந்த மலர்" அவன் சிந்தையை அள்ளுவதே யாகும்! கண்ட காட்சியிலும், கொண்ட கோலத்திலும் நெஞ்சைக் காணிக்கையாக்குவதே, மனித குலத்தின் இயல்பாக, 'கலா தர்மமாக' இருந்து வருகிறது!

அதனால் தான்; காதலின் காந்த நினைவுகள், காலங் காலமாகத் தொடர்ந்து மாந்தர்களின் இதயங்களைக் கவர்ச்சித்துக் குளிர்வித்து வருகின்றன போலும்!

காதல்...! அப்பப்பா; அதன் நினைவுகளின் வல்லமையும் — வசீகரமும் மிக மிகப் பெரியது! அது சித்தர்களைக் கூடப் பித்தர்களாக்கி அலைக்கழிக்குமாமே! காதலால், அது தரும் புத்துணர்ச்சியால் பேதையும் மூதறிஞனுவான். சில வேளைகளில் மூதறிஞன் என எண்ணப்படுவோன் காதலின் போதை தலைக்கேறிப் பேதையாவதும் உண்டு!" என்பர் உளவியல் ஆராய்ச்சியாளர்கள்! ஆயினும் காதலும் – அதையொட்டிய சிந்தனைகளும் மனித இனத்திற்கும், உயிருக்கும் மாறாத இளமையும் — விருத்தியையும் நல்கும் சிறந்த ஔஷதங்களாகத் திகழ்கின்றன. 'காதல் இன்றேல் சாதல்!' என்று சூளுரைத்த மஹாகவி, உயிர்குலத்தின் உற்பத்தி சக்திக்கு ஊட்டமளிக்கும் 'காந்தத்தை' ஏற்றிப் புகழ்வதும் இதனால் தானே? நவில் தோறும் தித்திக்கும் அகநானூறும், தேனூறும் நற்றிணையும், நல்ல **குறுந்தொகை**யும், கற்றோர் ஏத்தும் கலித்தொகையும்....இரு வேறு...... நெஞ்சங்களின் காதல் அளித்த பரிசுகளாக, மானுட சமுதாயத்தின் மதிப்பில் இன்றளவும் கருதப்பட்டு வருவதற்கு, அறிவால், உணர்வால் அறிந்த ருசியை மீண்டும் மீண்டும் எண்ணியெண்ணிச் சுவைக்கும் மனித மனத்தின் மாறாத இயல்பே காரணமாக இருக்கவேண்டும்!

காதல் தரும் மயக்கம் மனித வாழ்வை வளப்படுத்தும் ஊட்ட சத்து மிகுந்தது என்பதை மறுப்பாரில்லை! அத்தகைய மாண்புள்ள காதல், மனித வாழ்வில் – குறிப்பாகத்

'தமிழர் வாழ்வில்' – கட்டுப்பட்டு, வளர்ந்து, மலர்ந்து, மணம் வீசிய பாங்கை, காதலேயும் வீரத்தையும் இவைகளூடாகத்தேச பக்தியையும் உள்ளதை உள்ளவாறே, உயர்வு நவிற்சி ஏதுமின்றிக் கூறும் நல்லதொரு காதல்ஓவியமான, 'குறுந்தொகை' க் கவிகளொன்றில் காண்போம்!!! எல்லாச் சித்திரங்களுக்கும் நிலேக்களன் மிக மிக முக்கியம். இந்த வகையில் குறுந்தொகைச் சித்திரங்களுக்கு மலே, காடு, நெல்வயல், கடற்கரை, மணல்வளம் ஆகியவைகள் நிலேக்களனுகத் திகழ்கின்றன! காலே, மாலே, வைகறை, யாமம் முதலியனவே அச்சித்திரங்களே சித்திரிக்கப் பயன்படும் வர்ணங்கள்! பாடல்களில் கொந்தளிக்கும் பல புலவர்களின் கற்பனே நயமும், உணர்ச்சி மென்மையுமே சித்திரக் கோல்கள்! ஒவ்வொரு பாட்டும் அழகு மயமான ஒரு வாழ்க்கைச் சித்திரத்தை நமக்குணர்த்தும் ஆற்றலே அடக்கமாகக் கொண்டது. தோற்றத்தை மட்டுமின்றி உணர்ச்சியையும் உண்டாக்கும் உயிரோவியமாகவல்லவா அவைகள் விளங்குகின்றன!!! கவிகளின் கலேயே இச்சித்திரங்களுக்கு ஆதார சுருதியாக, ஜீவனுக அமைந்து கற்றவர்களின் இதயத்தை மகிழ்விக்கின்றன! தேர்ந்த கவிதை தரும் சுகமே அலாதிதான் என்று சும்மாவா சொன்னுர்கள்! திரும்பத் திரும்ப, அந்த சுகத்தை அணேவதில்தான் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சி!

காவிரி நதியின் உறையூர் மணல் துறை. இரவு நேரம். கிருஷ்ண பக்ஷ நிலவு. கீழ் வானம் முழுவதும் வெண் பஞ்சுத் திரள் திட்டுத் திட்டாகப் படர்ந்து பார்ப்போரைப் பரவசத்திற்கு உள்ளாக்குகின்றது! வெண்ணிலவு இவைகளுள் மறைந்து மறைந்து ஒளி விளேயாட்டுக் காட்டுகிறது!! மெல்லிய தென்றல் காற்று வீசும் சூழ் நிலேயில், ஆற்று நீரின் சல்லாப ஒசை மிதந்து வருகிறது!!! ஆம்பல், முல்லே, மல்லிகை போன்ற நறு மலர்களின் மணம் எங்கும் பரவி, ஆற்றங்கரையின் அமைதியான சூழ் நிலேயை மேலும் விகசிக்கச் செய்கிறது. இக் காட்சிகளுக்கு நடுவே......நல்ல உடற்கட்டும், அறிவும், திருவும் ஒருங்கே உடையவனுகத் தோற்றமளிக்கும் இளேஞனெருவன், தன்னந்தனியாக ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கிருன். அவன் தேகம் வெந்தழலில் வீழ்ந்த புழுவெனத் துடிக்கின்றது! மேனியெங்கும் வியர்வை ஆறு பெருக்கெடுத்தோடுகிறது. சில சமயம் அப்படியும் இப்படியும் நடப்பதும், பின்பு அமர்வதுமாய் அல்லல் படுகின்றுன். அடிக்கடி வான் முகட்டையே வெறித்துப் பார்ப்பதும், பெருமூச்செறிவதும் செய்கிருன். சுற்றிலும் தவழும் குளிர்ந்த காற்றும், நிலவொளியும் அவனது மனச் சூட்டை அதிகரிக்கவே உதவுகின்றன!

காதலியின் பிரிவாற்றுமையைத் தாங்க முடியாமல், அவள் நினேவில் வாடும் உயிரொன்றின் சஞ்சலங்கள் யாவும் அவனேப் பூரணமாகப்

பிணைத்திருந்ததுவெனில், அது வெறும் புனைந்துரையல்ல! இல்லத்தில் பஞ்சணை மீது சயனித்திருந்தவன், தன்னுடைய வாழ்க்கையை இனிக்கச் செய்தவளின் நினைவுகளினால் துயில் கொளாது புரண்டு புரண்டு பாதி இரவைக் கழித்தான்! நடு இரவும் கடந்தது! ஆனால் மனச் சுமைதான் குறையக் காணோம்!

சந்திரோதயமும், தென்றலும் தோன்றவும் அவன் பஞ்சணை அவனுக்கு, முள்ளணையாக மாறி விட்டதைப் போன்ற ஒரு பிரமையிலிருந்து அவனால் மீள முடியவில்லை. காதலியின் வடிவழகும், எண்ணத் தூய்மையும் சிந்தனை முழுவதும் வியாபிக்கத் தொடங்குவதை உணர்கிறான்! அதனால்தான் குளிர்ந்த காவிரிக் கரையைச் சேர்ந்து இயற்கை எழிலில் சற்று ஈடுபட்டு, அவள் நினைவை மறந்திருக்கலாமெனக் காவிரித் துறைக்கு வந்திருக்கிறான்!

வந்த அந்த இடத்திலாவது அவ்வாலிபனை அமைதி தழுவியதோ? இல்லை என்பதே அனுபவம்! காவிரியின் நீரோடும் ஓசையில் அவளது குரலினிமையைத் தான் கேட்கின்றான்! ஆம்பல் மலர்களின் நறுமணம் அவனுக்கு அவளது கூந்தல் மணத்தையே நினைவூட்டுகின்றது! வெள்ளம் தணிவதனால், ஆற்றுப் படுகையில் ஏற்பட்ட கருமணல் சுவடு அவளுடைய சுருண்ட கூந்தல் அழகின் காட்சியையே திரையிடுகிறது! இப்படியாக, அவளை அங்கும் மறக்க


ரிஜிஸ்டர்டு நெ. 111866.

தந்தி: ஸ்வஸ்திக்
போன்: நெ. 2.

எல்லோரும் விரும்புவது

**ஸ்வஸ்திக் வேதாரண்யம்**

ஸ்பெஷல்

**15 நயாபைசா பிளாஸ்டிக் பொட்டலங்கள்**

ஜி. டி. ஈரண்ணா,
ஸ்வஸ்திக் புகையிலை
கேன்வாஸிங் ஏஜண்டு,
மைசூர் ஸ்டோர்ஸ்,
நெ. 20 நியூ முனிசிபல்
மார்க்கெட், லோடி காலனி
நியூ டெல்லி – 3.

சேல்ஸ் டெப்போ,
559 பூந்தமல்லி ஹைரோடு,
மதராஸ் – 3.

போன்: நெ. 34913.

முடியவில்லை! பிறகு என்ன மீண்டும் உலாவுகிறான்! அந்த ஆம்பல் மலரில் சற்றுக் கவனம் செலுத்துவோம் என்று பக்கத்திலிருந்த ஆம்பல் மலரைப் பார்க்கிறான். அது அப்போது தென்றல் வீசுவதால் மெல்ல அசைந்து பக்கத்திலிருக்கும் தாமரை மொக்கை அணைக்கிறது! ஒரே சமயத்தில் ஐம்பொறிகளுக்கும், இதயத்திற்கும் இன்பமூட்டும், வள்ளவளின் சல்லாப ஊடல்கள் அடுக்கடுக்காக அவன் நெஞ்சில் நிழலாடுகின்றன! பார்க்குமிடமெங்கும் நீக்கமற அவள் நினைவே அவனுக்கு!! எங்கும், எதிலும் அவள் மயம்தான்!!! அவள் புறக்கண் முன்பு தோன்றுவது யாவும், கனவு போல பின் மறைந்து, காதலியின் வடிவமாய் உருமாறி, அவனது அகக்கண் முன் நர்த்தனமாடும்! இவ்வாறு, அவளது காட்சியே அவனுக்குச் சர்வ பிரகாசமாகத் திகழ்ந்தது என்கிறார் தம் பாடலில் புலவர் இளங்கீரனார்!

யானயந்துறைவோள்தேம்பாய்
— கூந்தல்
வளங்கெழு சோழருறந்தைப்
— பெருந்துறை
நுண்மணலறல் வார்ந்தன்ன
நன்னெறியவ்வே நறுந்
தண்ணியவ்வே!

என்பதே அப்பாடல்.

குளிர்ச்சி, கருமணல்படி, நல் வாசனை ஆகியவைகள் அனைத்தும் அவனுக்குக் காதலியின் கூந்தலிலேயே இருக்கின்றதாம்! அக் கூந்தலின் இயல்புகளை நினைந்து அவற்றால் பெரும் இன்பங்களை இடைவிடாமல் நுகரப் பெறலாமே என, தன் நெஞ்சோடு இரங்குகிறான் அந்த இளைஞன்! 'ஒருவனுக்கு ஒருத்தி' என்கிற கோட்பாட்டிற்கு இசைந்து வாழும் சமூகத்தின் உட்கோளையும் அதன் மாண்பையும் இந்த நிகழ்ச்சி எவ்வளவு தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது என வியக்கிறோம்!

உணர்ச்சி பொங்கி வழியும் தமது காதல் ஓவியத்தால் இவைகளை நமக்குப் புலப்படுத்துகின்றனர் புலவர் பெருமக்கள்! கவியைப் படிக்கும் போதே, ஆம்பல்பூத்த காவிரிப் பெருக்கையும், கருமணல் துறையையும், காதல் வண்டினங்களின் மொய்ப்பையும் அல்லவோ கண்முன்னே காண்கின்றோம்! அது மட்டுமா? வீரம், காதல் போன்ற துறைகளில் லயித்துவிட்டிருக்கும் மானுடனின் சிந்தனைத் தடத்தை மாற்றுவது என்பது அவ்வளவு எளிதான செயலல்ல என்கிற தத்துவத்தையும் அல்லவா உணர்கின்றோம்! குறுந்தொகையில் அநேகமாக எல்லாப் பாடல்களும் காதலின் வனப்பை எடுத்துக் கூறுவதாகவே'அமைந்துள்ளபடியால் அந்த நல்ல தொகை நூலை ஒரு கற்கண்டு பர்வதம் என்றே சொல்லலாம்! அதை எங்கே விண்டு சாப்பிட்டாலும் இனிப்பு மயமாய் இருக்கும் என்பது கலாரஸனை யுள்ளவர்களின் கட்சி! சங்க இலக்கியங்களுக்கு மட்டுமுள்ள தனிப் பெரும் சக்தியிது.

# விட்டில்

*"நாணல்"*

ஐயா, உன் திருமுகத்தைக் காண எண்ணி
ஆலயமாய் இம்மனத்தை அமைத்தாங்கே என்
தெய்வதமே, உன்வடிவைப் பதித்து, நாளும்
சேவிக்கத் துடிதுடித்தேன்; ஆனுல்...ஆனுல்...
வெய்யவினைப் புழுக்கூடும் கோயிலாமோ?
விண்ணையங்கே சிறைவைத்துப் பூட்டப்போமோ?
உய்வருளும் நெடுங்கருணைக்கடலே, உன்னை
ஓட்டை இந்த உளுத்த கையில் ஒடுக்கப்போமோ? (1)

கற்பநெடுங் கணக்கெழுதும் அண்ட கோளம்
கறங்கும் பாழ் விசுவவெளிக்காட்டில், மாயச்
சிற்பமெனப் பிறங்கிஎழில் சிதறும் மண்ணில்,
சிறுமலரில், திரிபுனலில், சிவ்வென் காற்றில்,
அற்புதத்தின் மண்டலமாய் அலகில்லாத
அழகுவிரிந் தலையாடும் அரங்கில் நீளக்
கற்பனை மின் சிறகு கட்டிப் பறக்கும் உன்றன்
கவிதை ஒளிப் பதத்தை என்னுற் கட்டப்போமோ? (2)

கருடனெனப் பறக்கின்ருய், கவிஞ, விம்மிக்
ககனமெல்லாம் நிறையும் உன்றன் சிறையின் வீச்சுப்
பெருகுநிழல் தன்னிலொரு சிறு சிட்டாய் என்
பேதைமையை விரித்திடவும் இடந் தாராயோ?
உருகிவிழுந் துலைகின்ற உயிரின் தாப
ஓயாத அவலத்தை உணர்ந்திடாயோ?
அருகில்உனை அணைந்தெனது துயரை உன்றன்
அரவணைப்பில் மறப்பதற்குக் கண்பா ராயோ? (3)

என்ன செய்வேன், வரம்புடைய சிதராய் என்னை
ஏன்படைத்தாய்? இவ்வுடைந்த பானைக்குள்ளே
மன்னிஉனை எண்ணிஎண்ணி மறுகும் காதல்
மாயாத வேதனையை ஏனோ வைத்தாய்?
துன்னியெழும் அகண்டமெனச் சூழுந்தீயைத்
தொட்டுவிடத் துடிக்கின்ற விட்டில் என்னை
என்னரசே, எப்படங்க எரிப்ப தென்றோ?
ஏழைஉயிர்ச் சாம்பரைநீ தரிப்ப தென்றோ? (4)

# ORIENTAL'S

FOR

## QUALITY & TASTE

- Building Construction
- Metal Grille & Aluminium Doors & Windows
- Sanitary Electrical Installation
- Furnishing & Interior Decoration

(Consult)

# Oriental Building & Furnishing Co. Pvt. Ltd.

'M' BLOCK, CONNAUGHT CIRCUS

NEW DELHI

*Telephones*: 48202, 47944, & 48222. *Grams*: "DECORATION"

# WAGON BUILDERS TO INDIAN RAILWAYS

- GENERAL AND SPECIAL STRUCTURALS
- DESIGNS
- TANKS
- AIR VESSELS
- PRESSED AND WELDED WORK

*Wagon building in collaboration with*

**M/s. Metropolitan-Cammell Carriage & Wagon Co., Ltd.,**
BIRMINGHAM-8.

# SOUTHERN STRUCTURALS LIMITED

**GDC Building, Cathedral Road, MADRAS-6.**

Factory : Pattabhiram, Southern Railway.

# சில சீமை நம்பிக்கைகள்

சோமு

திருவும் வளமும் நிரம்பிய அயர்லாந்துக் கிராமம் ஒன்றில், ஒரு பண்ணையாரின் வீட்டிலே சில ஆங்கிலேய நண்பர்களோடு ஒரு நாள் விருந்து சாப்பிட நேர்ந்தது. விருந்துக்குரிய மேஜையில் வழக்கம்போல் இரண்டு கண்ணாடிச் சிமிழ்களில் தனித்தனியே மிளகுத் தூளும் உப்புப் பொடியும் வைத்திருந்தார்கள். நண்பர் ஒருவர் உருளைக்கிழங்குத் தட்டில் மிளகுத் தூளைத் தூவி விட்டுப் பிறகு உப்புப் பொடியை அதன்மேல் தட்டினார். அப்போது மேஜையின் மீது கொஞ்சம் உப்புச் சிதறி விட்டது. உடனே அந்தப் பண்ணையார் வீட்டு அம்மாள், எங்களோடு உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவள், என்ன செய்தாள் தெரியுமா? 'பட பட' என்று எழுந்து வந்து அந்த உப்புச் சிமிழை எடுத்து நண்பரின் இரண்டு தோள்பட்டையிலும் கொஞ்சம் உப்பைத் தூவினாள்! இந்த விநோதக் காட்சியைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த என்னிடம் அந்த அம்மாள் சொன்னாள்: "உப்புச் சிதறினால் கலகம் வரும். அதற்குப் பரிகாரம், சிந்தியவரின் தோளின் மேல் கொஞ்சம் உப்பைச் சிதற வேண்டும்."

நம்முடைய நாட்டிலும் உப்பைச் சிதறக் கூடாது என்று வயசான பெண்டுகள் சொல்வதை அந்த அம்மாளுக்குக் கூறினேன். இந்தச் செய்தி அவளுக்கு ஒரே வெல்லமாகத் தித்தித்தது!

ஏதோ நாட்டுப்புறத்துப் பெண்மணியானதால் இப்படி ஒரு மூட நம்பிக்கை அவளுக்கு இருந்திருக்கும் என்று நினைக்கலாம். ஆனால் உண்மையில் நவநாகரிகம் பொங்கித் ததும்பும் லண்டன் நகரத்துப் பெண்களிடமும் எத்தனையோ பல விசித்திர நம்பிக்கைகளைக் கண்டேன். உப்பு நம்பிக்கைக்கு 'முதுகுக்கு மண் காட்டிவிடும்' நம்பிக்கைகள் அவை!

ஆங்கிலக் குடும்பங்களில் நீல விழிகளுடன் கூடிய பெண் குழந்தை பிறந்தால் அன்னையரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நீல விழி அழகோடு அதிருஷ்டமும் வாய்ந்தது என்பது அவர்களுடைய நம்பிக்கை. சாம்பல் நிறம் பேராசையையும், தவிட்டு நிறம் பொய்ம்மைக் குணத்தையும், பச்சை நிறம் பொறாமையையும் உணர்த்துவதாக அவர்களுடைய சாத்திரம்.

குழந்தைகளுக்கு நாசியின் கீழ் மச்சம் அல்லது மறு இருந்

தால் அந்தக் குழந்தை நிறைய பணம் சேர்க்குமாம். உதட்டில் மறு இருந்தால் பெரிய பேச்சாளியாகவும், நாடியில் இருந்தால் அறிவாளியாகவும் விளங்கும் என்பது அவர்களுடைய அநுபவ சித்தாந்தம்.

யாருக்காவது முன் பற்கள் இரண்டுக்கு நடுவில் ஆறு பென்ஸ் நாணயத்தைச் செருகிக் கொள்ளக்கூடிய அளவு இடைவெளி இருந்தால், அது செல்வச் செழிப்புக்கு ஒரு நல்ல அறிகுறி என்று நம்புகிறார்கள்.

* * *

நம் நாட்டுப் பஞ்சாங்கங்களில் 'நல்ல சகுனம்', 'கெட்ட சகுனம்' என்று விரிவாகப் போட்டிருக்கிறார்கள். நடைமுறையில் நாமும் பிறருக்குத் தெரிந்தும், தெரியாமல் அந்தரங்கத்திலும், இந்தச் சகுனங்களைப் பார்த்து வருகிறோம் அல்லவா! ஆங்கில தேசத்திலும் இப்படிப் பல சகுனங்களைப் பற்றிய இலக்கண சூத்திரங்கள் 'நாடக வழக்கிலும்', 'உலகியல் வழக்கிலும்' பயின்று வருகின்றன.

ஒருவர் புறப்படும் போது முயல் குறுக்கே சென்றால் அது நல்ல சகுனம். பின்னால் பாய்ந்தால் கெட்ட சகுனம். வைக்கோல் வண்டி எதிரே வந்தால் அவர்களுக்கு அது நல்ல சகுனம். வண்டியின் பின்புறத்தை மட்டும் பார்க்க நேர்ந்தால் அது கெட்டது. ஒற்றைக் காகம் தீய சகுனம் இரட்டை நல்லசகுனம். கரும்பூனையைப் பார்த்தால் அதிருஷ்டம். ஆனால், கறுப்போ வெள்ளையோ மஞ்சளோ எந்தப் பூனையானாலும், இடமிருந்து வலமாகப் போனால் அது மிகக் கொடிய தீய சகுனம். நாம் கருடனைப் பார்த்தால் எப்படி மகிழ்கிறோமோ அப்படி அவர்கள் 'ஸிகல்' என்ற பறவையைக் கண்டால் மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள். பரீட்சை எழுதப் போகும் மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வெளியே வான வெளியில் ஒரு 'ஸீகல்' பறந்து போகப் பார்த்துவிட்டால் அப்படியே கூத்தாடுவார்கள் வெற்றி உறுதி என்று.

ஸ்காட்லாந்தின் தலைநகரமாகிய எடின்பரோவில் ஒரு விசித்திரமான நம்பிக்கை நிலவுகிறது. துறவுக் கன்னிகளான 'நன்'கள் மூன்று பேர் சேர்ந்து எதிரே நடந்து வந்தால் அது மிகப் பெரிய நற்சகுனம்.

ஏணி சாத்தி வைத்திருந்தால் ஆங்கிலேயர்கள் அந்த ஏணிக்கும் சுவருக்கும் இடையில் நடந்து செல்லமாட்டார்கள். தப்பித் தவறி நடக்க நேர்ந்துவிட்டால், சில ஊர் ஆங்கிலேயர்கள் ஐந்து நாய்களைப் பார்க்கும்வரை வாய் பேசாமல் மௌனமாக நடந்து செல்வார்கள். அதாவது, ஐந்து நாய்களைப் பார்த்த பிறகுதான் அந்தக் கெடுதி விலகுமாம்!

* * *

மாணவர்களிடம் காணப்படுகிற நம்பிக்கைகள் ஏராளம். பரீட்சைக்கு முன்தினம் கனவில் குதிரையைக் கண்டுவிட்

டால் அவ்வளவு தான், பரீட்சை அரோகரா!

நம்மூர்ப் பிள்ளைகள் பரீட்சை தேற வேண்டும் என்பதற்காகப் பிள்ளையாருக்குத் தேங்காய் விடல் நேர்ந்து கொள்வதுபோல், அந்தப் பிள்ளைகளும் பல 'நேர்த்திக்' கடன்கள் செலுத்துவதுண்டு. இதையெல்லாம் காட்டிலும் முக்கியமாக இன்னொரு பழக்கம் ஆங்கிலேயச் சிறுவர்களிடம் இருக்கிறது; பரீட்சைக்குச் செல்லும்போது சட்டைப் பையில் ஒரு நிலக்கரித்துண்டைப் போட்டுக் கொண்டு செல்வார்கள், அதிருஷ்டம் என்று. சிறுவர்களிடம் உள்ள இந்த நம்பிக்கை வயதானவர்களிடமும் காணப்படுகிறது. ஆங்கிலேயத் திருடர்களும் கொள்ளைக்காரர்களுங் கூடத் தங்கள் தொழில் வேட்டைக்குப் புறப்படும்போது நிலக்கரித் துண்டு ஒன்றை உடன்கொண்டு செல்வது வழக்கமாகும். இது அவர்களுக்கு ஒரு தாயத்து, ஒரு ரக்ஷை மாதிரி என்று, 'டெயிலி மெயில்' பத்திரிகையின் பழைய இதழ் ஒன்றிலே ஒரு குறிப்பு வெளியாயிற்று. 1955 ஆம் ஆண்டில் தேர்தலுக்குப் போட்டியிட்டபோது ஸர் ஆந்தொனி ஈடனிடம் ஒரு பள்ளிச் சிறுமி நடந்து சென்று அவர் கையில் ஒரு நிலக்கரித் துண்டைக் கொடுத்தாளாம், அவருக்குத் தேர்தலில் வெற்றி கிடைக்க வேண்டும் என்று.

முதியோர்களிடமும் சிறுவர் சிறுமிகளிடமும் உள்ள நம்பிக்கைகளைப் போலவே, பருவப் பெண்களிடமும் பல அபூர்வமான மூடநம்பிக்கைகள் ஆசாபாசச்சூழல்களோடு சேர்ந்து வட்டமிடுகின்றன. மாடிப் படிகளில் ஏறும்போது ஒரு கன்னிப் பெண்ணுக்கு கால் இடறினால் அவளுடைய காதலன் அவளை நினைத்துக்கொண்டிருக்கிறான் என்று பொருள். ஒரு பெண்ணுக்குக் காதலன் இருக்கிறானா அல்லது இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு அவளுடைய சினேகிதிகள் என்ன செய்வார்கள் தெரியுமா? அவளுடைய விரலைப் பிடித்து இழுப்பார்கள். சுடக்கு விழுந்தால், அவளுக்குக் காதலன் உண்டு. சுடக்கு விழவில்லை என்றால் காதலனும் இல்லை.

கல்யாணத்திற்குரிய வயதை அடைந்த பெண்களிடையே

BEST FOR

SOUTH INDIAN DISHES

•

**MADRAS HOTEL**

HOTEL & RESTAURANT

•

**Connaught Circus,**
**New Delhi - I.**

Phone: 40595

இன்னொரு நம்பிக்கை இருந்து வருகிறது. கன்னிப் பெண் ஒருத்தி தேநீர் கலக்கும்போது அது 'கன' மாகவும், 'வலு' வாகவும் அமைந்து விட்டால். அவளுக்கு விவாகம் விரைவில் நடக்கும் என்றும், தேநீர் 'நெடு நெடு' என்று 'நெட்டை' யாக அமைந்துவிட்டால் அவளுக்கும் அவளுடைய காதலனுக்கும் சண்டை உண்டாகும் என்றும் ஒரு ருசியான நம்பிக்கை தேநீரோடு கலந்து வழங்கி வருகிறது.

நம் நாட்டில் 'அதிருஷ்ட விஞ்ஞானம்' என்று எண்களை வைத்து ஒரு கணக்குப் போட்டு வருகிறார்கள் அல்லவா? 'வீட்டுக்கு வீடு வாசற்படி' என்ற கணக்கில், பிரிட்டன் தேசத்திலும் இப்படிப் பல கணக்குகள் உண்டு. அங்கே பஸ்களும் டிராம்களும் ஏராளம்; அந்தப் பயணச்சீட்டுகளை யொட்டி ஒரு வேடிக்கையான நம்பிக்கை மாணவரிடையேயும் தொழிலாளரிடையேயும் முக்கியமாகக் காணலாம். ஒவ்வொரு முறை பஸ் அல்லது டிராம் டிக்கெட் வாங்கும்போதும், அந்தப் பயணச் சீட்டில் உள்ள எண்களைக் கூட்டிக் கணக்குப் போடுகிறார்கள். அந்த எண்களின் கூட்டுத் தொகை இருபத்தொன்று என்று வந்துவிட்டால் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. உதாரணமாக டிக்கெட் எண் 3846 என்று இருந்தால் இந்த எண்ணின் கூட்டுத் தொகை இருபத்தொன்று ஆகிறது அல்லவா? இப்படிப்பட்ட சீட்டை யாருக்கும் கொடுக்காமல் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கிறார்கள், அது அதிருஷ்டத்தைத் தரும் என்று நம்பி.

இந்தக் கட்டுரையை முடிக்கு முன்பு ஆபெர்டீனில்(Aberdeen) உள்ள பெண்களிடம் காணப்படுகிற ஒரு நம்பிக்கையைப் பற்றிச் சொன்னால்தான் 'முத்தாய்ப்பு' வைத்தது போல் ஆகும். ஏனென்றால் அது கன்னத்தில் விழுகிற முத்தாய்ப்பைப் பற்றிய நம்பிக்கை. புதிய ஆண்டு பிறப்பதற்கு முன்பு, அதாவது டிஸம்பர் 31–ஆம் தேதி நடுநிசி பன்னிரண்டு மணிக்கு, ஒரு பெண், தன் காதலனை அழைத்து அவனுடைய கன்னத்திலே ஓங்கி ஓர் அறை கொடுப்பாள். இப்படிச் செய்தால் அந்த ஒரு வருஷத்துக்குக் கவலையில்லை; அவன் அவளிடம் 'விசுவாசமாக' இருப்பான் என்று நம்பிக்கை. இந்த அறை நம்பிக்கையில் காதலியைப் போலவே காதலனுக்கும் முழு நம்பிக்கை இருக்கிறது. ஒரு கன்னத்தில் அறையை வாங்கிக் கொண்டு அப்படியே அரைகுறையாகி விடாமல் மறு கன்னத்தைத் திருப்பிக் காண்பிக்கின்றான் அவன்.

இது விஞ்ஞான யுகம். அறிவு பல துறைகளிலும் கிளைவீசிப் படர்கிறது. என்றாலும் எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் இதயத்தின் காரியம் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?

---



# OPERATION-AHLI

## Rural Electrification in the Union Territory of Delhi

The time has come, as the Walrus said, to talk of many things...of cabbages and kings...of rural electrification and aluminium conductors and cables!

For, Ahli village, near New Delhi—the former seat of kings and emperors—is now electrified! And, Ahli grows vegetables like cabbages and cauliflowers, besides wheat and maize.

One of a group of villages—sponsored by the Ministry of Irrigation and Power—given for electrification to various Electricity Boards, Ahli was the only village to be handed over to a private agency, but the very first to receive supply benefits.

Designed and executed by THE SOUTH MADRAS ELECTRIC SUPPLY CORPN. LTD., Tiruchirapalli, a sister company with a very fine rural record to its credit, "Operation—Ahli" is a project with which Alind is proud to be associated.

(i) **ALIND "SQUIRREL" ACSR** has been used on the 11 kV spur line to the village;

(ii) **ALIND "PANSY" AAC** has been used for the three-phase...and ALIND "IRIS" AAC for the single-phase distribution—also for the street lighting.

(iii) **ALIND "ENDUR-AL"** weather-proof wire has been used for the power and the light services; and

(iv) **ALIND "SOLIDAL"** underground cable has been used for the main connections from the LT terminals of the transformer substation to the main switch fuse and for the leads from the feeder switch fuses to the overhead LT feeders.



**ALIND**

**THE ALUMINIUM INDUSTRIES LTD.**
*India's largest manufacturers of aluminium conductors and accessories*
**Registered Office: Kundara (Kerala)**
**Plants: Kundara • Hirakud • Hyderabad**
*Managing Agents:*
**SESHASAYEE BROS. (TRAV.) PRIVATE LIMITED**

Selling Agents for N. India: THE ALLIED ENGINEERING CORPORATION, Post Box No. 280, New Delhi-1

எங்கள் சேவை

உங்களுக்குத் தேவை

✻

# பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414

மதராஸ் – 5.

தந்தி : "EVERMANS" போன் : 85834

✻

தில்லி கிளை அலுவலகங்கள் :

(1) "கான்ஸன் ஹவுஸ்"
1/24, அஸப் அலி ரோட், புது தில்லி-1.

(2) "பாலுஸேரி பில்டிங்"
10174, முதல் மாடி, குருத்துவாரா ரோடு, கரோல்பாக், புது தில்லி–5.

(3) 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி, புது தில்லி-3.

# சுமை

*மாயாவி*

அவள் நடந்து கொண்டிருந்தாள். எங்கே என்று தெரியாது. கால் போன போக்கில் தோளில் சுமையுடன் நடந்து கொண்டிருந்தாள்.

அப்பொழுது நடுநிசி. அமாவாசை தினம். உலகை இருள் மூடியிருந்தது. எனினும் தன்னை மூடிவிட்ட இருளைவிட இந்த இருள் பெரிதாகப் படவில்லை அவளுக்கு; ஆகையால் தயக்கமின்றி நடந்து கொண்டிருந்தாள்.

அது ஆடி மாதம். அடைமழைக் காலம். வானத்தில் ஒரு நட்சத்திரங்கூடத் தெரியாமல் மேகங்கள் சூழ்ந்திருந்தன. சூல் கொண்ட மேகங்கள். எச்சமயமும் குடமாகக் கொட்டலாம். ஆனால் தன் உள்ளத்தில் அப்பொழுது கொட்டிக் கொண்டிருந்த துன்பப் பெருக்கைவிட அந்த மழைப் பெருக்கு பெரிதாக இருக்க முடியாது என்று அவள் கருதினாள்; ஆதலால் மழைப் பயமின்றி நடந்து கொண்டிருந்தாள்.

எங்கோ நரிகள் ஊளையிட்டன; ஆந்தைகள் அலறின. கோட்டான்கள் கூவின. ஆனால் அச் சத்தம் எதுவும் அவளுக்கு அச்சத்தை ஊட்டவில்லை. ஏனென்றால் இவற்றையெல்லாம் விடப் பெரிய விதியின் ஊளையிடலைக் கூட அவள் அச்சமின்றி ஏற்கத் துணிந்தவள்; எனவே கொஞ்சமும் அஞ்சாமல் நடந்து கொண்டிருந்தாள்.

சாலை மரத்தில் தலைகீழாகத் தொங்கி மோனத் தவம் புரிந்து வந்த வௌவால் ஒன்று, அவள் அடி ஓசையால் தவம் கலைந்து, கோபமுற்று, பட்டையான தனது சிறகு அவள் முதத்தில் இடிக்கப் பறந்து சென்றது. அதைக் கண்டு அவள் சோகச் சிரிப்புச் சிரித்தாள். ''வௌவாலுக்கு இரவில் கண் தெரியும் என்பார்களே. ஒருகால் இந்தக் கேடுகெட்ட மானிடரைப் போல் கண் இருந்தும் குருடோ, இது?'' என்று வாய்விட்டுச் சொல்லிவிட்டு வழி நடந்தாள்.

அது நீண்ட நேர் வழிச் சாலை. ஒரு கோணல் - மாணல், ஒரு திருப்பங்கூட இல்லை. பகலாக இருந்தால் அதன் அழகை அள்ளிப்பருகிக் கொண்டே நடையின் களைப்புத் தெரியாமல் நடக்கலாம். ஆனால் இப்பொழுது இரவு; இருட்டு. ஆகையால் அது அவளுடைய நிச்சயமற்ற பயணத்தைப் போல் நிச்சயமற்ற பாதையாகவே இருந்தது. ஆயினும் அவள் நடந்தாள்; நடந்து கொண்டே இருந்தாள்.

* * *

சென்ற ஆண்டிலும் ஒருநாள் இப்படித்தான். நள்ளிரவு நேரத்தில் இதேபோல் அவள் நடந்துகொண்டிருந்தாள். அன்று அவள் பயணத்திற்கு ஓர் லட்சியம் இருந்தது — மரணம்; ஓர் எல்லை இருந்தது — ஊர்க்குளம். ஆனால் இன்று அவள் சாக நடக்கவில்லை; வாழவே நடந்துகொண்டிருந்தாள். ஆகையால் இந்தப் பயணத்துக்கு எல்லை வகுத்துக் கொள்ள முடியவில்லை. 'எங்கே வாழ முடியுமோ, அங்கே' என்பதைத் தவிர.

அப்படியானால் இவ்வளவு நாள் அவள் வாழவில்லையா? மரணப் படுக்கையிலிருந்து எழுந்து மறுவாழ்வெனும் புதிய உலகில் இனித்தான் அடி எடுத்து வைக்கப் போகிறாளா? அல்லது இன்றுதான் தாயின் வயிற்றில் இருந்து இந்த மாய உலகில் குதித்து, வாழ இடம் தேடிச் செல்கிறாளா? இல்லை, அவள் வாழ்ந்து கொண்டுதான் இருந்தாள். ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து வெவ்வேறு வாழ்வுகள் வாழ்ந்துவிட்டாள். ஆனால் இந்த ஐந்து வாழ்வும் பொய் வாழ்வென்று இன்று நிரூபணம் ஆகிவிட்டபடியால் புதுவாழ்வை நோக்கிப் புறப்பட்டு விட்டாள்; முன் போலவே. ஆனால் நேர் எதிரான லட்சியத்துடன் புதுப் பயணம் ஒன்றைத் துவக்கி விட்டாள்.

அன்று அவள் தனிமையில் கிளம்பினாள். இன்று சுமையுடன் செல்கிறாள். சரியாகச் சொல்வதென்றால் இச் சுமைக்காகவே செல்கிறாள். நேற்று வரையில் அவளுக்கு இது சுமையாகப் படவில்லை. இன்றுதான் இது சுமையாக அவளை உறுத்திற்று; தோளையல்ல; உள்ளத்தை.

அன்று அவள் தன் பயணத்தைத் துவக்கிய போதும் இச் சுமை அவளிடம் இருக்கத்தான் இருந்தது. ஆனால் அவள் அதை உணரவில்லை. ஏனென்றால் இன்று போல் அது அவள் தோளில் ஏறியிருக்கவில்லை. அவளுக்கு தெரியாதபடி, அவளே உணராதபடி வயிற்றுக்குள்ளே ஒளிந்துகொண்டிருந்தது.

அவளைப் போன்ற நிலையில் இருப்பவர்களுக்கு இது கனத்த சுமைதான்; ஆயினும் தாங்கியாக வேண்டிய சுமை. வேண்டுமானால் தோள் மாற்றிக் கொள்ளலாமேயன்றி, தற்போதைக்குத் தரையில் இறக்கி வைக்க முடியாத சுமை. என்றைக்கு அது இறக்கி வைக்கக் கூடிய நிலை அடைகிறதோ, என்றைக்கு அதைத் தாங்கக் கூடிய சுமை தாங்கி ஒன்று கிட்டுகிறதோ, அன்று வரையில் அவள் அதைச் சுமந்துதான் ஆகவேண்டும். சுமப்பதற்காக வாழ்ந்துதான் ஆக வேண்டும். ஆகையால் வாழ்வதற்கு வகை தேடி இப்பொழுது வழி நடந்து கொண்டிருந்தாள்.

* * *

அவள் பெயர் காந்தம். பெயருக்கேற்ப அவளிடம் காந்த சக்தி இருக்கத்தான் இருந்தது. அது தான் அவளை இந்த இருபது வயதுக்குள் ஐந்து வெவ்வேறு விதமான வாழ்க்கையில் புகுந்தோடச் செய்தது. அவ்வாறு ஐந்து இரும்புகளோடு ஒன்றிவிட்டு வந்ததால், இன்று சக்தி குன்றியிருக்கலாம். அதனால்தான் முன்பு இரும்புகள் அவளை நாடி வந்து பற்றிக் கொண்டது போக இன்று அவளை ஒண்ட ஓர் ஊசியேனும் கிடையாதா என்று ஓடிப் போக நேர்ந்து விட்டது போலும்.

அவள் பிறந்தது ஒரு குக்கிராமத்தில். அது எந்தக் கிராமம் என்று அவளுக்குத் தெரியாது. அங்கே அன்றாடங் காய்ச்சியான ஏழைக் குடியானவன் ஒருவனின் குடிலிலே இந்தக் காந்தம் உதித்தது.

காந்தத்துக்கு முன் ஐந்து குழந்தைகளைப் பெற்றுப் பறி கொடுத்தவள் அவள் தாய். மண்ணில் விழுவதும் உடனே விண்ணை நோக்கிப் புறப்படுவதும் முந்தைய குழந்தைகள் அவளுக்குத் தந்திருந்த அநுபவம். ஆகையால் அவள் காந்தத்தையும் வெட்டிச் சுமையாக வயிற்றில் தாங்கியிருப்பதாகத்தான் கருதினள், "இறக்கப் பிறக்கப் போகும் இந்தச் சனியன் பிறக்காமலே இருந்து விடக் கூடாதா?" என்று பிரார்த்தித்தாள். அவள் பிரார்த்தனை நிறைவேறவில்லை. காந்தம் பிறந்து விட்டாள். பிறந்த குழந்தையைப் பார்த்த போது பெற்றவள் பூரித்துப் போனாள். எத்தனை அழகு அது? எத்தனை ஆகர்ஷணம் அதனிடம்? "இதைச் சாக விடவே கூடாது; நம் உயிரைக் கொடுத்தாவது வாழச் செய்து விடவேண்டும்" என்று உறுதி கொண்டாள் அவள்.

ஆனால் அந்தக் காந்தம் பிறந்த மூன்றாவது மாதத்திலேயே தன் இயல்பைக் காட்டி விட்டது. கழனியில் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்துப் பிழைக்க வேண்டியவர்கள் அவள் பெற்றோர். நாள்தோறும் குழந்தையுடன்தான் வேலைக்குச் செல்வார்கள். வயல் ஓரமாக இருந்த தோப்பு நிழலில் மரம் ஒன்றில் 'தூளி' கட்டித் தொங்க விட்டு, வயலில் வேலை செய்து கொண்டிருப்பார்கள். அன்றும் அப்படித் தான் செய்திருந்தார்கள். நடுப் பகலில் குழந்தைக்குப் பால் கொடுக்கும் நேரம் நெருங்கி விட்டதை மார்பகம் உணர்த்தவே ஓடோடி வந்த தாய் கண்டது வெறும் தூளியைத் தான். காந்தம் இன்னொருவரைக் கவர்ந்து விட்டது!

அப்படிக் கவரப்பட்டது வேறு யாருமில்லை. அந்த ஊரில் சில நாட்களாக முகாமிட்டிருந்த ஒரு நாடோடிக் கும்பல்தான். குழந்தைகளைத் திருடி விற்பதைக் குலத் தொழிலாகக் கொண்ட அவர்கள், கண்ணி வைத்துக் காத்திருந்து அன்று காந்தத்தைக் கவர்ந்து சென்று விட்டனர்.

ஆனால் வியாபார நோக்கத்தோடு தன்னைக் கவர்ந்த அவர்களையும் காந்தம் கவர்ந்து விட்டாள். "நாற்பது — ஐம்பதுக்கு விற்பதற்குப் பதிலாக நாட்டியம் கற்றுக் கொடுத்தால், நாள் ஒன்றுக்கு நாலு-ஐந்து கொண்டுத் தருவாளே" என்று தோன்றவே நாடோடிக் குழுத்தலைவன் அவளைத் தன் மகளாக வளர்த்து வரலானான்.

அவர்களிடந்தான் அவள் ஐந்து வயது வரை வளர்ந்தாள். அவர்களும் அவளுக்குக் காந்தம் என்ற பெயரையே இட்டனர். அந்த ஐந்து வயதிலேயே ஆடவும் பாடவும் கற்றுக்கொண்டு காண்போரைச் கருத்திழக்கச் செய்தாள் அவள். எழிலென்ற கவர்ச்சியோடு, இந்த மலர்ச்சியும் சேரவே எல்லோர் மனமும் அவள்பால் சுண்டி இழுக்கப்பட்டது.

* * *

அவர் பெயர் கருப்பையா. அவர் ஒரு போலீஸ்காரர். ஆனால் நல்லவர். ஐம்பது வய

தாகிவிட்டது. இன்னும் ஐந்து வருஷந்தான் வேலை. பிறகு ஓய்வு. ஓய்வுக்காலத்தில் உட்கார்ந்து சாப்பிடப் போதிய பொருள் சேர்த்திருந்தார். ஆகையால் அந்தக் கவலை அவருக்கு இல்லை. ஆனல் வேருெரு கவலை அவரைப் பலகாலமாகக் கரைத்து வந்தது. அவருக்கு மனையிருந்தது; மனைவியிருந்தாள். ஆயின் அந்த மனையிலே மகிழ்ச்சி தர ஒரு மகவு இல்லை. அவர் போகாத கோயிலில்லை; கும்பிடாத தெய்வமில்லை. எனினும் கவலை என்னவோ தீர்ந்தபாடில்லை.

அன்று அவர் இந்த நாடோடிக் கும்பலை நாடிவந்தார். தொழில் முறையில் தான். ஊரில் ஒரு திருட்டு நடந்து விட்டது. அதைச் செய்தது இந்தக் கும்பலாக இருக்குமா என்று துப்பறியவே வந்தார். வந்த இடத்தில் காந்தத்தைக் கண்டார். களவை மறந்தார். தம் நெடுநாள் கனவை நினைத்தார். அவளை மகளாக்கிக் கொள்ள மனம் துணிந்தார். போலீஸ் கெடுபிடி பலன் தந்தது. காந்தம் கைமாறினுள். மூன்ருவது இரும்பில் ஒன்றினுள்.

கொஞ்ச நாள் ஊர் சிரித்தது. நாடோடிச் சிறுக்கி என்று நையாண்டி செய்தது. ஆனல் காந்தத்தின் கவர்ச்சி அவர்கள் சிரிப்பை விரைவில் விரட்டி விட்டது. இப்பொழுது அவள் கருப்பையாவின் மகள்.

கருப்பையாவின் மகளாக வளர்ந்துதான் காந்தம் குமரியாளுள். ஊர் இளைஞர்கள் உள்ளத்தை யெல்லாம் உருகி ஓடச் செய்தாள். அவளை அடைய நான்—நீ என்று போட்டி. ஆனல் காந்தத்தின் மனத்தைக் கவர்ந்தவன் ஒருவனே – கண்ணுயிரம். கண்ணுயிரம் ஊர் நாட்டாண்மைக்காரரின் மகன். பசையுள்ள இடத்துப்பிள்ளை. மானத்துக்கு அஞ்சி வாழும் குடும்பம். சரியான மருமகன்தான் என்று திருமணத்தை முடித்துக் கொடுத்தார் கருப்பையா.

அந்தக் கலியாணத்துடன் கருப்பையாவின் கவலை தீர்ந்துவிட்டது. அதனுல்தானே என்னவோ, அவரும் அவர் மனைவியும், காந்தமும் அவள் கணவனும் களிப்புடன் வாழ்வதைக் காணுமலே கம்பி நீட்டி விட்டனர். ஊரிலே பரவிய கொள்ளை நோய் அவர்களை அள்ளிச் சென்று விட்டது.

நாடோடியாகத் திரிந்த தன்னை வீடோடியாக்கி விட்டவர்கள் விண்ணுலகு ஏகிய துயர் காந்தத்தை வெந்து நீருகச் செய்தது. கண்ணுயிரம் அவள் கண்ணீரைத் துடைத்தான். ''நானும் உன்னை என் கண்ணுகக் காப்பாற்றுவேன்; கவலைப்படாதே'' என்று தேற்றினுன். ஆனல் அவன் கண்ணும் ஒருநாள் அவிந்துவிட்டது.

ஆயிரம் விட்டில்கள் சுற்றி வந்த பேரொளி காந்தம். இன்று அவள் ஒருவனின் மனைவியாகி விட்டாள். இருந்தாலும் விட்டில்கள் அவளைச் சுற்றி வருவதை நிறுத்தவில்லை. பித்தம் தலைக்கு ஏறிவிட்ட விட்டில் ஒன்று ஒரு நாள் கண்ணுயிரம் வீட்டில் இல்லாத போது உள்ளே நுழைந்தது. தன்னைப் பித்தாக்கிய பேரொளியை அடைய முயன்றது. அம் முயற்சியில் அதன் உடல்தான் கருகிற்று. காந்தத்துக்குக் குறையேதும் ஏற்படவில்லை. ஆயினும் அந்தச்சமயம் அங்கு வந்த கண்ணுயிரத்தின்

WITH BEST COMPLIMENTS

FROM

SHRI DINESH MILLS LTD.,

BARODA


MAFATLAL GROUP
With Best Compliments of
MAFATLAL
GROUP

கண்ணிலே அது ஊசியாகக் குத்தி விட்டது. காந்தத்தை கற்பிழந்தவள் என்று ஏசி, ஊர் கூட்டிப் பஞ்சாயத்துப் பேசி, கட்டிய தாலியைப் பறித்துக் கொண்டு வீட்டிலிருந்து விரட்டி விட்டான்.

அன்றுதான் அவள் தனது முதல் பிரயாணத்தைத் துவக்கினுள்.

* * *

இன்றுபோல் அன்றும் இரவு தான்; இருட்டுத்தான். ஆனுல் சாகத் துணிந்தவளுக்குச் சமுத்திரமும் முழங்காலளவுதானே? உயிரை முடித்துக் கொள்ள ஊர்க் கண்மாய்க்கு வந்தாள் காந்தம். சேலைத் தலைப்பை இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டு நீரில் குதிக்கப்போன அவளை இரண்டு கரங்கள் இடுக்கியாகப் பற்றி இழுத்தன.

வேலாயுதம் வெளியூர்க்காரர். வாழ்விலே வெறுப்புற்று வெறும் தோட்டக் கூலியாக அக்கரைச் சீமை சென்ருர். அங்கே அதிர்ஷ்டம் அவரைக் கங்காணி ஆக்கிற்று. கையில் பணம் சேர்ந்தது. பிறகு அவருக்கு வேலை அலுத்துவிட்டது. இறுதிக் காலத்தைப் பிறந்த மண்ணில் கழிக்கலாமென்று இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதுதான் ஊர் திரும்பியிருந்தார். அவருக்கு மனைவியில்லை; மக்களில்லை; சுற்றமில்லை; சுகமில்லை. எனினும் வாழவேண்டிய வாழ்வு இன்னும் மீதமிருந்ததே. ஆகையால் ஊர் திரும்பிய அவர் அந்த வாழ்வை நிம்மதியாகத் தள்ள நிலம் – நீச்சு வாங்க நிச்சயித்தார்.

அந்த வேலையாகத் தான் அவர் இந்த ஊருக்கு வந்தார். அவருடைய சொந்த ஊரில் இருந்த ஒரு நிலத்தின் சொந்தக்காரர் இந்த ஊரில் இருந்தார். அவரைச் சந்தித்து நிலத்தை விலை பேசி முடித்து விட்டு, இரவு ரெயிலைப் பிடித்து ஊர் திரும்புவதற்காக ஸ்டேஷனுக்குச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அவர் காந்தத்தைக் கண்டார். கண்மாயில் விழ இருந்த அவளைக் கட்டிப் பிடித்து நிறுத்தினுர்.

"நீ யாரம்மா? ஏம்மா இந்த முடிவுக்கு வந்தே?" என்று அவர் ஒரு தந்தையின் வாஞ்சையோடு அவளைக் கேட்டார்.

காந்தம் ஒன்றும் பேசவில்லை. கதறி அழத்தான் முடிந்தது அவளால்.

வேலாயுதம் அவள் வேதனையைக் கிளற விரும்பவில்லை. ஆறுதல் கூறி ஸ்டேஷனுக்கு அழைத்து வந்தார். அங்கு வந்த பிறகு மீண்டும் அவளுடைய கதையை விசாரித்தார்.

அந்த அவமானத்தை வெளியிட மனமின்றிக் காந்தம் எதுவும் கூற மறுத்துவிட்டாள்.

"உன் சொந்தக் காரங்க யாரின்னுவது சொல்லம்மா; கொண்டு போய் விட்டுடறேன்" என்ருர் வேலாயும்.

"எனக்கு இனிமேல் தெய்வம் தான் சொந்தம். அதைத் தேடித் தான் போய்க் கொண்டிருந்தேன்" என்ருள் காந்தம்.

"அப்படியாஞ அந்த தெய்வந் தான் ஒன்னை என் கையிலே பிடிச்சுக் கொடுத்திருக்குது. அடைக்கலப் பொருளை அழிஞ்சு போக விடமாட்டேன். என்கூட வா அம்மா. என் மகளாக

With
Compliments
from :

**The Indian Standard Metal Co., Ltd.**

I. S. M. Estate, Chinchpokali Cross Lane, Bombay 27.

*Manufacturers of :*

- NON - FERROUS ALLOYS & CASTINGS
- BELLS FOR CHURCHES & CLOCK TOWERS

இருந்துக்கிட்டிரு; என்று அழைத்தார் அவர்.

அன்பு ததும்பிய அந்த அழைப்பைக் காந்தத்தால் அசட்டை செய்ய முடியவில்லை. கிளம்பி விட்டாள். அவளுடைய ஐந்தாவது வாழ்க்கை தொடங்கி விட்டது.

* * *

ஊரிலே வம்பு கிளம்பிற்று. ''அக்கரைச் சீமைக்காரரில்லே? அதனுல்தான் அம்பதுக்கு மேலே அழகான குமரி கேக்குது. பணமில்லே பேசுது!'' என்று ஊர்வாய் அரற்றிற்று.

வேலாயுதம் அதைச் சட்டை செய்யவில்லை. காந்தந்தான் மனம் நொந்தாள். ''அப்பா, ஒங்களுக்குச் சுமையாகத்தான் வந்தேனின்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். இப்போ குறையும் வாங்கித் தந்துட்டேனே. என்னைப்போக விடுங்க அப்பா. கண்ணில்லாத இந்த உலகத்துக்கு ஒரு பொண் நல்லா வாழப் பொறுக்காது'' என்று அவள் புலம்பினுள்.

''நீ ஏம்மா அதையெல்லாம் காதில் போட்டுக்கிடுறே? வம்பு பேசற வாயை எம்புட்டு அடக்கினுலும் அடங்காது அம்மா. சூரியனைப் பாத்து நாய் குலைக்குதுன்னு சும்மா இரு'' என்ருர் வேலாயுதம்.

அவளும் சும்மா இருந்துவிடத்தான் தீர்மானித்தாள். ஆனுல்...

ஒருநாள் வேலாயுதத்துக்கு ஊர்ப் பஞ்சாயத்தார்களிடமிருந்து அழைப்பு வந்தது. போனுர்.

''இதெல்லாம் என்ன ஐயா அநியாயம்?'' என்று கேட்டார் பஞ்சாயத்துத் தலைவர்.

''என்ன அநியாயம் ஐயா நடந்து போச்சு? அநாதைப் பொண்ணு கண்மாயிலேவிழுந்து சாகப் போச்சுது. காப்பாத்து றேன்னு கூட்டியாந்திருக்கேன்.''

''காப்பாத்துங்க; யாரு வேண்டாம் என்கிறுங்களாம். காப்பாத்துறதை ஒழுங்கா காப்பாத்துங்கன்னுதான் சொல்ருேம். ஒரு தாலியைப் போட்டு வீட்டோடு வச்சுக்கிடுங்க; ஊர்ப் பேச்சு அடங்கிப் போகும்.''

''இப்போ நீங்க பேசறதுதான் அநியாயம் ஐயா. பெத்தமகளா நினைச்சுக்கிட்டிருக்கேன்; அதைப் போய் கட்டிக்கிடு என்கிறீங்களே?''

''அது சரிதான் ஐயா; பெத்த மகளாக் காப்பாத்துற ஆசை இப்போ பேரப்புள்ளை வேணுங்கிற வரைக்கும் போயிடிச்சே!''

''என்னங்க? என்ன சொல்றீங்க நீங்க?''

''இது மூணு மாசமாம் ஐயா அந்தப் பொண்ணுக்கு.''

''எந்தப் பய சொன்னது?'' வேலாயுதம் வெறிகொண்டு கத்திஞர்.

''அவ வயிறு சொல்லுது.''

''இருக்கவே இருக்காதுங்க'' என்று கூறிவிட்டு 'விர்'ரென்று வீட்டுக்கு நடந்தார் வேலாயுதம்.

வீட்டிலே காந்தம் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள். அண்டை வீட்டுக் கிழவி அவள் மண்டையைப் பிடித்துக் கொண்டிருந்தாள். ''மகன் பொறக்கப் போருன் படையாச்சி ஒங்களுக்கு'' என்ருள் அவள், பொக்கை வாய் நிறையப் பொய் சிரிப்பு வழிய.

தந்தி : சென்டெக்ஸ் போன் : 32 & 38

# சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

சென்னிமலை.

★

சென்டெக்ஸ்

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள் தரத்திற்கும், நவீன ரகத்திற்கும், அழகான கெட்டிச்சாயத்திற்கும் குறைந்த விலைக்கும் சிறந்தவை.

★

---

சென்னை அரசாங்கத்தாரால் முதற் பரிசுகளும், அநேக கண்காட்சிகளில் தங்கமெடல் சர்டிபிகேட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

---

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்.

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ., பி.எல்.
தலைவர்.

"மெய்தானா அம்மா?" என்று கிழவி வெளியே போனதும் உள்ளம் துடிக்கக் கேட்டார் வேலாயுதம்.

"மகனில்லீங்க; பேரன்!" என்றாள் காந்தம் வெட்கத்துடன் தலையைக் கவிழ்த்துக் கொண்டு.

"எப்படி?"

"கட்டியவன் கொடுத்தது."

"ஊர் நம்பிக்கிடாதே அம்மா."

"உலகமே நம்பாவிட்டாலும் உண்மை அதுதான்." சொல்லக் கூடாது என்றிருந்த கதையைக் காந்தம் சொல்லித் தீர்த்தாள். கட்டியவனின் பெயரையும் கொடுத்தாள்.

பஞ்சாயத்தாரிடம் திரும்பி வந்தார் வேலாயுதம். "என்கூட இரண்டு பேரு இரிசம்பாளையம் வரைக்கும் வாங்க ஐயா. ஓங்க சந்தேகம் தீர்ந்து போகும்" என்று இருவரை உடன் அழைத்துக் கொண்டு கண்ணாயிரத்தின் ஊருக்கு வந்தார்.

* * *

கண்ணாயிரம் விண்ணெட்டச் சாடினான். மனைவி கற்பிழந்தவள் என்று கூறிக் கொள்ள வெட்கிய அவன், "யாரையா நீங்க? கலியாணம் ஆகாத என் தலையிலே எந்தக் கேடு கெட்ட மூதியையே வச்சுக் கட்டவா வழி பாக்கறீங்க? என்று அவர்களை விரட்டி விட்டான். அவ்வூரில் இன்னும் சிலரும் காந்தம் ஊருக்கே அவமானத்தை ஏற்படுத்தி விட்டாள் என்று கருதியதால், உண்மையை ஒப்புக் கொள்ள விரும்பவில்லை. கண்ணாயிரம் கூறியதைத்தான் உறுதி செய்தனர்.

தவறு யார் மீது இருந்ததோ, வேலாயுதம் தலையைக் குனிந்து கொண்டுவந்து பஞ்சாயத்தார் முன் வந்து நின்றார். "இப்போ என்ன ஐயா சொல்றீங்க? ஒண்ணு தாலியைப் போடுங்க; இல்லாட்டி வாலிலே ஓலையைக் கட்டி விரட்டுங்க" என்றனர் பஞ்சாயத்தார்.

ஆனால் சாகப் போனவளை வாழ்விக்கிறேன் என்றல்லவா அவர் அழைத்து வந்தார்? இப்பொழுது எப்படி அவளை விரட்டியடிப்பார்? "சூல் கொண்ட பொண்ணு ஐயா. கொஞ்சம் பொறுத்துக்கிடுங்க. பிரசவம் ஆகட்டும். பிறகு போகச் சொல்லிடறேன்" என்று அப்போதைக்கு அவர்களுக்குச் சமாதானம் கூறினார்.

* * *

பிரசவம் ஆயிற்று. பேரன் பிறக்கவில்லை வேலாயுதத்துக்கு, பேத்திதான் பிறந்தாள். பிறந்த பேத்தி மற்றொரு காந்தமாக அவர் உள்ளத்தைக் கவர்ந்தாள். அவர்களை விரட்டவோ, விட்டுப் பிரியவோ அவருக்கு மனம் வரவில்லை. பஞ்சாயத்தார் அளிக்கும் தண்டனையையே ஏற்றுக் கொள்ளத் துணிந்து விட்டார் அவர். "என்ன செய்துடப் போறாங்க? சமூகத்திலேயிருந்து விலக்குவாங்களா? விலக்கிக் கிடட்டும். இந்தத் தெருவிலே இருக்கக் கூடாது என்பாங்களா? வேறு தெருவா இல்லை? இந்த ஊரை விட்டே போயிடணும் என்பாங்களா? போயிடறேன்" என்று துணிந்தார் அவர்.

குழந்தை பிறந்து ஒரு மாதமாகியும் காந்தம் கிளம்பவில்லை. பஞ்சாயத்தார் மீண்டும் கூடினர். வேலாயுதத்தை வர



# PRODUCTS OF DISTINCTION KNOWN THROUGHOUT THE WORLD

**MAHLE** PISTONS

Known for their reliability, efficiency, durability and high performance

**GOETZE** PISTON RINGS AND CYLINDER LINERS

Engineered to outperform and outlast all other rings and cylinder liners

**SÜKO** PISTON PINS

*Manufactured under licence*
*Sole Selling Agents:*

**ESCORTS LIMITED**
AUTOMOTIVE DIVISION,
BLOCK H, CONNAUGHT CIRCUS, NEW DELHI

*DISTRIBUTORS:*

**Sundaram Motors Private Ltd.**, 37, Mount Road, Madras. **T. V. Sundram Iyengar & Sons P. Ltd.**, Post Box No. 21, Madurai. **Central Automobiles Private Ltd.**, 466, S. V. P. Road, Bombay. **Bengal Auto Distributors**, 25-B, Park Street, Calcutta. **Components & Machinery Corporation**, 9/12, Lall Bazar Street, Calcutta. **Eclat Auto Agency**, Outside Gandhi Gate, Amritsar. **Modern Motor Works**, G. T. Road, Ludhiana. **Siyaram Brothers**, Kashmere Gate, Delhi. **P. Sharan & Company**, Kashmere Gate, Delhi. **Kulwant Motors**, Mirza Ismail Road, Jaipur. **New Garage Limited**, Connaught Place, New Delhi. **Aeicorp Private Limited**, 10, Lall Bazar Street, Calcutta. **Manohar Motors**, Kashmere Gate, Delhi. **Century Automobiles**, 9, Mathew Road, Bombay-4. **Diesel Corp. (Sec'bad) Pvt. Ltd.**, 148, Rashtrapathi Road, Secunderabad. **Gupta Trading Corpn. (India) P. Ltd.**, Kashmere Gate, Delhi.

Falcon/AMD/389

988.

வழைத்து வாக்குறுதியை நினைவூட்டினர். "அதை விரட்ட மனசு வல்லீங்க" என்றார் அவர். "அப்பிடின்னா ஒரு நல்ல நாளு பார்த்து நாலு பேர் முன்னே அதுக்கு ஒரு தாலிச் சரட்டைக் கட்டுங்க. இல்லாட்டி இந்த ஊரிலே இருந்துக்கிட முடியாது" என்று எச்சரிக்கை விடுத்தனர் பஞ்சாயத்தார்.

அது நகரமல்ல; கிராமம்-குக் கிராமம். அங்கே அந்த அந்த சமூகத்துக்கு அதன் பஞ்சாயத்துத்தான் சர்வ வல்லமை யுள்ளது. அதை எதிர்த்து எந்த சமூகத்தாரும் வாழ்ந்துவிட முடியாது. ஆகையால் ஊரை விட்டே கிளம்பத் தீர்மானித்து விட்டார் வேலாயுதம்.

ஆனால் இதற்குள் இந்தச் செய்தி எப்படியோ காந்தத்தை எட்டி விட்டது. தன்னைக் காப்பாற்றியவருக்கு காப்பாற்றிய தற்காகத் தண்டனையா? தன் நிமித்தம் அவர் சொந்த ஊரை விட்டுச் செல்வதா? அவள் அதை விரும்பவில்லை. ஆகையால் தானே கிளம்ப நிச்சயித்து விட்டாள்.

வேலாயுதம் வீட்டுக்கு வந்ததும் அவள் அவர் பாதத்தைத் தொட்டு வணங்கிவிட்டு, "போய் வரேன் அப்பா" என்றாள் கண்களில் நீர் மல்க.

"எங்கே அம்மா?"

"முன்னைப் போலவே தெய்வத்தைத் தேடி."

"உன்னை அப்படிப் போகவிட நான் இங்கே கூட்டிகிட்டு வரலை அம்மா."

"போகாட்டி அவங்க உங்களை வாழ விடுவாங்களா?"

"அதுக்காகத்தான் அவங்க முகத்திலே விழியாம ரெண்டு பேரும் போயிடலாமின்னு தீர்மானம் செய்திருக்கேன்."

"ஐயையோ! வேண்டாங்க. அது அவங்க முடிவை மெய்யாக்கிடும்."

ஆமாம், அதை அவர் நினைக்கவே இல்லையே! அப்படியானால் வேறு வழி? சிந்தித்தார்.

காந்தமும் சிந்தித்தாள். அவளுக்குத்தான் தந்தைக்கு ஒப்பாகத் தன்னைக் காத்து வந்த அந்த உத்தமரைப் பிரிய மனமில்லை. தவிர இப்பொழுது அவள் தாங்க வேண்டிய சுமை ஒன்றும் இருக்கிறதே? சட்டென்று அவளுக்குத் துணிச்சலான வழி ஒன்று தென்பட்டது. "அப்படின்னா ஒரு காரியம் செய்யுங்க அப்பா. அவங்க மனம் போலவே எனக்கு ஒரு தாலியைப் போட்டுடுங்க" என்றாள் அவள்.

"என்ன?" என்று அலறினார் வேலாயுதம். "நீ கூட என்னைச் சோதனை செய்யுறியா அம்மா?"

"சோதனை இல்லை அப்பா; ஓங்க வேதனையைப் போக்க ஒரே வழி. நான் ஒன்னும் ஓங்க சொந்த மக இல்லையே. அந்நிய மானவதானே. ஆபத்துக்குப் பாவமில்லே. அப்படியே செய்திடுங்க. யோசிக்காதீங்க."

"நான் அத்தினி பாவியாகிவிட மாட்டேன் காந்தம். மகளாக வளர்த்த ஒன்னை மனைவி ஆக்கிக்கிடவா? அதிலேயும் ஐம்பது வயசுக்குப் பிறகு...?"

"தாலி கட்டிக் கிட்டா வீட்டுக் காரியாத்தான் வாழணுமின்னு கட்டாயமில்லே அப்பா. இது ஊர் வாயை மூடப் போடற

*With Compliments*

Shree

# BAIDYANATH AYURVED BHAWAN PRIVATE LTD.

CALCUTTA — PATNA — JHANSI — NAGPUR — ALLAHABAD

●

**Baidyanth Chyavan Prash**

**Basant Kusumakar Rasa**

**Sidha Makar Dhwaj**

**Baidyanath**

**Drakshasava**
**Ashokarishta**

**Janam Ghuti**

●

Leading Ayurvedic and Patent Medicines Manufacturers in India.

தாலி. நாம் எப்போதும் போல் அப்பாவும் மகளுமாகவே இருந்துக்கிட்டிருப்போம்.''

வேறு வழியின்றி இணங்கினர் வேலாயுதம். பிரச்சினை சுலபமாகத் தீர்ந்து விட்டதெனப் பூரித்தாள் காந்தம். ஆனால் அது தீர்ந்ததா?

* * *

காந்தத்துக்கு ஊரறியத் தாலி கட்டுவதாகப் பஞ்சாயத்தாரிடம் கூறிவிட்டார் வேலாயுதம். நாள் கூடக் குறித்தாகி விட்டது. நாளைக் காலையில் கலியாணம், இன்று மாலை, குழந்தையின் துணிகளைத் துவைத்து வர ஊர்க் குளத்துக்குச் சென்றாள் சாந்தம்.

சூரியன் மலைவாயிலில் விழுந்து கொண்டிருந்தான். மாலைக் கடன் கழிப்போர் இன்னும் குளத்துக்கு வரும் நேரமாகவில்லை. ஆகையால் குளம் வெறிச்சோடிக் கிடந்தது. காந்தம் அங்கே தன்னந் தனியே துணி துவைத்துக் கொண்டிருந்தாள். சட்டென்று யாரோ தன்னைப் பெயர் சொல்லி அழைப்பதைக் கேட்டு அவள் தலைநிமிர்ந்தாள். கரையில் ஒரு நாடோடிக்கிழவன் நின்றுகொண்டிருந்தான். காந்தத்தால் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ''யார் ஐயா நீங்க? என்னையா கூப்பிட்டீங்க?'' என்றுகேட்டாள்.

''என்னைத் தெரியவில்லை காந்தம்? உன்னைப் போலீஸ்காரருக்குக் கொடுத்த இந்தப் பாவியை மறந்துட்டியா?''

''அப்பா!'' என்று ஓடிவந்து கிழவனைக் கட்டிக்கொண்டாள் அவள். ஆமாம், அவனைத்தான் அவள் தன் தந்தையெனக் கருதியிருந்தாள்.

''சுகமா இருக்கிறியா காந்தம்? இந்த ஊரிலேதான் இருக்கிறியா? கலியாணம் — கார்த்திகை ஆயிப் போச்சா?'' என்று விசாரித்தான் நாடோடி தலைவன்.

காந்தம் தன் கதையைக் கூறினாள். கணவனால் விரட்டப் பட்டுத் தற்கொலை செய்து கொள்ள வந்தது வரையில் சொல்லிவிட்டு, அந்தச் சமயத்திலே இந்த ஊர்க்காரர் ஒருத்தர் வந்து என்னைத் தடுத்திட்டாரு அப்பா. இப்போ நான் அவர் மகளாத்தான் இருந்துக்கிட்டிருக்கேன்.''

''புண்ணியவான் நல்லாயிருக்கணும். உன்னைப் பிறந்த மண்ணுக்கேகொண்டாந்திட்டாரே.''

''பிறந்த மண்ணு?''

''ஆமாம் காந்தம். நீ இந்த நாடோடியின் மகள் இல்லை அம்மா, இந்த ஊரிலே ஒரு குடியானவர் மகள். நாங்க உன்னைத் திருடிக்கிட்டுப் போயி வளத்துக்கிட்டிருந்தோம்.''

''இந்த ஊர்க்காரியா நான்? என் அப்பா யாருங்க? அம்மா யாருங்க?''

''அவங்க போன இடம் புல்லு முளைச்சுப் போச்சு காந்தம். உன்னைப் போலீஸ்காரருக்குக் கொடுத்திட்டபிறகு நான் இங்கே வந்திருந்தேன். அவங்களைப்பத்தி விசாரிச்சேன். உன்னைப் பறி கொடுத்த துக்கத்திலே உன் அம்மா போயிட்டாளாம். உன் அப்பாவும் மனசு வெறுத்துப் போயி எங்கேயோ அக்கரைச் சீமைக்குப் போயுட்டாராம்.''

''அக்கரைச் சீமைக்கா? அவர் பெயர் தெரியுமா உங்களுக்கு?''

''வேலாயுதப்படையாச்சின்னு பேரு அம்மா.''

WITH COMPLIMENTS OF

AUTOMOBILE PRODUCTS OF INDIA LIMITED

BHANDUP — BOMBAY - 78

இடி விழுந்தது காந்தத்தின் தலையில்! பெற்றத் தந்தைக்கா அவள் நாளை மாலையிடப் போகிறாள்? ஐயா! யாருடைய குழந்தையையோ அவருக்குப் பிறந்ததென்று உறுதி செய்து, அதற்காக அவரை மணக்கவும் இணங்கிவிட்ட பிறகா இந்த உண்மை வெளியாக வேண்டும்? இனி இதை யார் நம்புவார்கள்? வேலாயுதம் நம்புவார். ஆனால் அவர் நம்பி என்ன பயன்? மீண்டும் பிறந்த மண்ணைவிட்டு அவரைக் கிளப்புவதையின்றி, வேறு என்ன பயனை அது அளிக்கப் போகிறது?

“வேண்டாம். மகளென்று அறியாமலே மகளாகப் பாசம் செலுத்திப் பராமரித்து வந்த அந்த உத்தமரை ஊரைவிட்டு விரட்ட நான் காரணமாக மாட்டேன். என் விதியை நான்தான் அநுபவிக்கவேண்டும். என் சுமையை நான்தான் சுமக்க வேண்டும்.”

அன்றிரவு வேலாயுதம் ஆழ்ந்த நித்திரையிலிருந்தார். காந்தம் அவர் பாதத்தைக் கடைசி முறையாக வணங்கிவிட்டுத் தன் சுமையுடன் புறப்பட்டுவிட்டாள்.

இருள் வேளைப் பயமுறுத்தவில்லை. மழை அவளைப் பயமுறுத்தவில்லை. வழி அவளைப் பயமுறுத்தவில்லை. பாழும் விதிகூட அவளைப் பயமுறுத்தவில்லை. நடந்தாள்; நடந்தாள்; நடந்துகொண்டே இருந்தாள்!

---


The THREE
most renowned cycles in the world

Hercules

PHILLIPS

and BSA

Made by: T. I. CYCLES OF INDIA, Madras 53, Proprietors: Tube Investments of India Limited, Madras

# குழந்தைகள் கொண்டாடும் கவிமணி

அழ. வள்ளியப்பா

❋

சின்னச் சின்னச் சிறுவரெல்லாம்
சேர்ந்து பாடலாம் — தேவி
செய்தளித்த பாட்டைப் பாடிக்
கூடி ஆடலாம்.
அன்னை தந்தை சுற்றமெல்லாம்
மகிழ வைக்கலாம் — பல
ஆயிரம்பேர் கேட்டே மனம்
மயங்க வைக்கலாம்.

கண்ணுக் குமைக் கொண்டுவரும்
காக்கை காணலாம் — அதன்
'காகா காகா காகா'என்னும்
ஒலியும் கேட்கலாம்.
பண்ணுடனே பாண்டியாடும்
பங்க ஜத்தையும் — அவள்
பாட்டி தந்த பல்லங்குழிப்
பரிசும் காணலாம்.

ஆட்டுக் கிடாய்ப் பாண்டியனும்
நாயும் வந்திடும் — கூண்டில்
அடைத்த புலிக்கண் ணிரண்டும்
பந்த மாகிடும்.
சாட்டையடி பட்டுப்பட்டுக்
குதிரை புலம்பிடும் — புல்
தனது சரிதம் கூறிநம்மை
வியப்பி லாழ்த்திடும்.

பந்த டிப்பார் சிறுவரென்றே
வெண்ணி லாவுமே — இந்தப்
பாரில் வர அஞ்சிநிற்கும்
கதையைக் கேட்கலாம்.
விந்தைமிகு கள்வன் வந்தே
கொள்ளை யிட்டதை — ரோஜா
விம்மி விம்மிக் கூறக்கேட்டே
உள்ளம் உருகலாம்.

தீயுமில்லை, புகையுமில்லை
தெருவில் சென்றிடும் — நல்ல
சிங்கார மானசைக்கிள்
வண்டி காணலாம்.
வாயு வேக மாகவானில்
வட்ட மிட்டிடும் — அந்த
வான வூர்திகூறும் அகிம்சை
வழியில் செல்லலாம்.

பவளக் காரத் தெருவில்காணும்
பவளம் தன்னையே — நாம்
பச்சைக் கிளியின் சிவந்தமூக்கில்
பார்த்து வியக்கலாம்.
துயில் துறந்து, கண்மலர்ந்து
அரசெ ழுந்திட — அங்கே
சுற்றுப்புறக் காட்சி காட்டிச்
சொக்க வைக்கலாம்.

பச்சைப் புல்லைத் தின்றுவெள்ளைப்
பாலைத் தந்திடும் — சாதுப்
பசுவின் அரிய பண்பையெல்லாம்
உணர்ந்து கொள்ளலாம்.
கொச்சி மஞ்சள் பூசவரும்
பச்சைக் கிளியுடன் — சிறு
குழந்தை யெல்லாம் கூடிஆடிப்
பாடி மகிழலாம்.

* * *

சுட்ட பழம் என்றுகூறி
நாவற் கனிகளை — அவ்வை
'தூ தூ'என்றே மண்ணை ஊதித்
தின்னச் செய்தவன்,
சுட்டிப் பையன் உருவில்வந்து
ஆடு மேய்த்தவன் — அந்தச்
சுந்தரனும் கந்தன்கதை
சுவைநி றைந்த தாம்.

செட்டியாரின் வீட்டில் அப்பம்
திருடச் சென்றதாம் — தானுய்த்
தின்றுதின்றே எலியின் வயிறும்
ஊதிப் புடைத்த தாம்.
மட்டில்லாமல் தின்று மூச்சுத்
திணறிப் போனதால் — அந்தோ
வையவாழ்வை விட்டு வானப்
பயணம் சென்றதாம்.

எலிக்கும் எலிக்கும் கலியாணம்
இனிது காணலாம் — அதில்
எத்தனையோ எலிகள் வகை
தெரிந்து கொள்ளலாம்.
சலிப்பில் லாமல் உதவுகின்ற
நமது கைத்திறன்
சலிப்பே யின்றிக் கூறக்கேட்டுக்
களிப்புக் கொள்ளலாம்.

* * *

சின்னஞ் சிறிய பிள்ளைகள்
சேர்ந்து பாடி மகிழவே,
இன்ப மான கவிதைகள்
இயற்றித் தந்த கவிமணி.

பள்ளி தோறும் பிள்ளைகள்
　　பாடிப் பாடித் தினமுமே
துள்ளிக் குதிக்கச் செய்திடும்
　　தூய மனிதர் கவிமணி.

குழந்தை உள்ளம் குளிரவே
　　கொஞ்சு கின்ற முறையிலே,
பழகு தமிழில் பாடல்கள்
　　பலவும் தந்த கவிமணி.

குருவி, காகம், கிளியெல்லாம்
　　கூட்டி வந்து காட்டுவார்,
அருமை யாகப் பாட்டிலே
　　அன்பு மிக்க கவிமணி !

வண்ண வண்ண மலரையும்
　　வட்ட மான நிலவையும்
கண்ணின் முன்னே நிறுத்துவார்
　　கவிதை யாலே கவிமணி !

மலரும் தொடுத்த மாலையும்
　　வாடிப் போகும். ஆயினும்,
மலரும் மாலே யும்என
　　வாடி டாத நூலையே

எங்க ளுக்குத் தந்தவர்.
　　இன்பம் பொங்கச் செய்தவர்,
தங்க மான கவிமணித்
　　தாத்தா வைநாம் போற்றுவோம்.

# தலைநகரில் தமிழ்நாட்டுச் செய்தி நிலையம்

அகிலன்

மராத்திய எழுத்தாளர் திரு. திகேகர் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தபோது தமிழ் எழுத்தாள நண்பர்களை சந்தித்துத் தங்களது மகாராஷ்டிர மாநிலத்தைப் பற்றிச் சில செய்திகளைக் கூறினர். அவரது மாநிலத்தின் மொழி, கலை, இலக்கியம், வரலாறு, நாகரிகம் முதலியவற்றைப் பற்றிய பல விஷயங்களைத் தமிழ் எழுத்தாளர்கள் தெரிந்து கொள்ள அது ஓர் வாய்ப்பாக இருந்தது. அத்தோடு மகராஷ்டிரத்துக்கும் தமிழகத்துக்கும் ஏற்பட்டிருந்த தொடர்புகள் பற்றியும் அவர் வரலாற்று ஆதாரங்களுடன் சில செய்திகளை வெளியிட்டார். குறிப்பாக அவருடைய பணி, சிறந்த பண்பாட்டுப் பணியாக இருந்தது.

அவர் கூறிய ஒரு செய்தி என்னை மிகவும் கவர்ந்தது. ஏனென்றல் அது நமது நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களையும் இணைக்கக் கூடிய வாய்ப்பைத் தரும் செய்தியாக இருந்தது. அமெரிக்காவையோ, ருஷ்யாவையோ, பிரிட்டனையோ அறிந்த அளவுக்கு நம்மில் பலர் நமது நாட்டுப் பிற மாநிலங்களைப் பற்றி அறிந்திருப்போமா என்பது சந்தேகமே.

தேசிய ஒருமைப்பாடு என்பது வெறும் அரசியல் ரீதியாக மட்டிலும் ஏற்படுத்த முடியாத ஒன்று. உணர்ச்சி ஒருமைப்பாடு மக்கள் மனத்தில் ஏற்பட வேண்டும். நமது கலைகள், இலக்கியங்கள், பழக்க வழக்கங்கள், தனிப் பண்புகள் இவற்றை முதலில் நாம் நமக்குள் பரப்பிக் கொள்ள வேண்டும். ஓரளவாவது ஒவ்வொரு இந்தியனும் பிற மாநிலத்தாரைப் பற்றி முதலில் தெரிந்து கொள்ள முடிந்தாலே, பிறகு உணர்ச்சி ஒருமைப்பாடு வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

இந்த விஷயத்தில் மகாரர்ஷ்டிர மாநில அரசாங்கம் ஓர் நல்ல காரியத்தைத் துவங்கியிருப்பதாகத் திகேகர் குறிப்பிட்டார். தில்லித் தலைநகரத்தில் அவர்கள் ஒரு தகவல் அறிவிப்பு நிலையம் துவங்கியுள்ளார்களாம். அங்கிருந்து மகாராஷ்டிரத்தைப் பற்றி மற்றவர்கள் அறிந்து கொள்வதற்காகச் சிறுசிறு நூல்களை ஆங்கிலத்தில் வெளியிடுகிறுர்களாம். சின்னஞ்சிறு திரைப் படங்களையும் தயாரித்து அவைமூலம் அந்த மாநிலத்தின் கலைகள், மக்களது வாழ்க்கை நிலை, பண்புகள் இவற்றை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுகிறுர்களாம்.

பிற மாநிலங்களிலிருந்து வரும் கலாச்சாரப் பணியாளர்களுக்குத் தங்கள் மாநிலத்தை அறிந்து கொள்ளக் கூடிய வகையில் வசதிகள் செய்கிறார்களாம்.

தமிழ் நாட்டு அரசாங்கம் பல விஷயங்களில் சிறப்பான நற்பணிகளைச் செய்திருக்கிறது. ஆனால் பண்பாட்டு விஷயத்தில் அது இன்னும் செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. மற்ற மாநிலத்தாருக்கு நமது நாட்டுத் தனிப் பண்புகளை அது வெளிப்படுத்தவேண்டும். அதுபோலவே மற்றவர்களை அறிந்து கொள்ளவும் அது தமிழர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். எழுத்தாளர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள் இவர்களைக் கொண்டே இந்தக் காரியங்களை அது செய்ய முடியும். தமிழர்களைப்பற்றிச் சரியான முறையில் மற்றவர்களுக்குச் சொல்வதற்கு அது மகாரஷ்டிர மாநிலத்தைப் பின்பற்றுவது நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது.

தலைநகரத்தில் உள்ள தமிழ்ச் சங்கம் இதற்கு ஒரு தூண்டுகோலாக விளங்க முடியும். அந்தச் செய்தி நிலையத்தின் வெளியீடுகள், அதைப் பற்றிய தகவல்கள், அதனுல் ஏற்பட்டுள்ள பலன்கள் இவற்றை அது ஆராய்ந்து தமிழ் நாட்டு அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லலாம். அங்குள்ள தமிழ் நாட்டுத் தலைவர்களைக் கொண்டும், அங்கு வரும் தமிழ் நாட்டுத் தலைவர்களை அணுகியும், இதற்கு ஒரு வழிவகை செய்யலாம். தில்லித் தமிழ்ச் சங்கத்து அன்பர்கள் இதற்கு முயற்சி செய்தால், அது தேசீய ஒருமைப்பாட்டுத் துறையில் முதல் அடி எடுத்து வைப்பதற்கு ஒப்பாகும். நாட்டுக்கு விடுதலை கிடைத்தவுடனேயே மத்திய அரசும், எல்லா மாநில அரசுகளும் செய்திருக்க வேண்டிய முக்கியமான காரியம் இது. அரசியல் பொருளாதார வளர்ச்சி எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் வாய்ந்தது மக்கள்து உணர்ச்சியின் வளர்ச்சி. இதற்காகவே ஒவ்வொரு மாநிலமும் கலாச்சாரப் பிரிவு அமைச்சகம் என்று ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதும் அவசியமே. இந்த நாடு பல மொழிகள், பல இன மக்கள், பல்வேறு பழக்க வழக்கங்கள் கொண்ட ஓர் துணைக்கண்டம் போன்றது. முதலில் நமக்குள் ஒற்றுமை வேண்டும்; உறவு வளர வேண்டும்; நாம் உற்றார் உறவினர் என்ற உணர்வு நமக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

இந்தக் காரியத்தை தில்லித் தமிழ்ச் சங்கம் தொடங்குமென்றும், தமிழ்நாடு அரசாங்கம் விரைவில் தில்லியில் ஓர் செய்தி நிலையத்தை ஏற்படுத்தும் என்றும், எல்லா மாநிலங்களுமே அப்படிச் செய்து நாட்டில் ஒற்றுமை வளருவதற்கு ஆவன செய்யும் என்றும் எதிர்பார்க்கிறேன்.

# குமரிக் கவிஞர்

சொக்கு சுப்பிரமணியன் எம். ஏ.,

கடலலைகள் தாவிவரும் அழகு நாடு ;
கழனிகளில் பசுமையெழில் சேர்க்கும் நாடு ;
மடல்விரியும் தாழைமணம் வீசும் நாடு ;
மா தரசி குமரியருள் பொங்கும் நாடு ;
கெடலரிய தமிழ்த்தாயின் குமரி நாட்டில்
கிளிகொஞ்சும் நாஞ்சிலகம் தந்த தேவி
திடமனமும் நெக்குருகக் கவிதை தந்தார் ;
தீந்தமிழின் கவிமணியாய்ப் புகழைப் பெற்ருர். 1

பள்ளியிலே தமிழாசான் பதவி ஏற்ருர் ;
பண்புடனே தமிழ்வளர்த்தார்; மொழியைக் காத்
வெள்ளமெனத் திரள்கின்ற கூட்டந் தன்னில் [தார்;
விரிவுரைகள் பலநிகழ்த்தி வெற்றி கண்டார் ;
உள்ளவுயர் அரும்பணியாம் ஆசா ஞக
உழைத்ததுவே கவிமணியார் பாதி வாழ்க்கை ;
கள்ளமனக் கொடியார்தம் பார்வை நின்று
கனிதமிழைக் காத்திடுதல் அவரின் வேட்கை. 2

பகடைக்காய் கவிதைச்சூது ஆட வில்லை ;
பணந்தேடப் புகழ்பாடிப் பணிய வில்லை ,
சகடக்கால் போலவரும் செல்வம் தன்னைச்
சரியாக உணர்ந்திட்டார் ஆத லாலே
விகடகவி பாடியவர் மயக்க வில்லை ;
விலையுயர்ந்த முத்துக்கள் ஈன்றெடுத்தார் ;
மகுடிக்குப் பாம்பாடி நிற்றல் போல
மன்னரெலாம் அவர்கவியில் மயங்கி நின்ருர். 3

மழலையரின் குழாத்திற்குக் கவிஞர் தேவி
மீன்கூட்டம் தனைப்போன்ற மின்ன வல்ல
பழகுதமிழ்க் கவிதைகளை ஈந்து சென்ருர் ;
பம்பரமாய்க் குழந்தைகளும் ஆடு கின்ருர் ;
அழகுதவழ் வானத்தை அங்குக் காண்பார் ;
அதிலொளிரும் வெண்மதியைக் கூடக் காண்பார்;
கழல்தூக்கி மெதுவாக நடந்து சென்று
கை கூப்பி அவரடியைப் பணிந்து நிற்பார். 4

WITH COMPLIMENTS

FROM

ZENITH TIN WORKS PRIVATE LTD.

CLERK ROAD, MAHALAKSHMI

BOMBAY - 34

# 'HELP US TO HELP YOU'

"Cleanliness is next to Godliness", according to an old adage. Clean surroundings radiate joy. More than that they help in controlling diseases. On Railway Platforms, In Waiting Rooms and in Carriages, etc., where people gather, it is of paramount importance to maintain proper hygienic conditions, to preserve the health of the passengers. You can help the Railways in this fight against diseases by :

**EXTENDING YOUR CO-OPERATION FOR KEEPING THE SURROUNDINGS CLEAN AND BY AVAILING OF THE SERVICES OF SANITARY STAFF PROVIDED AT STATIONS WHENEVER REQUIRED.**

# NORTHERN RAILWAY

# ஒரு கவி இராமாயணம்!

ஸ்ரீ. நா. வேணுகோபால் நாயகர்

ஸ்ரீமானுங்கள் இதோ! இக் கவிச் சித்திரத்தை!!

"அரியணை அநுமன் தாங்க!
அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன் வெண் குடை கவிழ்க்க!
இருவம் கவரி வீச!
விரை செறி குழலி ஓங்க!
வெண்ணெயூர்ச் சடையான் தங்கள்
மரபுளோர் கொடுக்க! வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி!!

இராம பட்டாபிஷேகந்தான்! நுணுக்கமாக விவரிக்கப் படுகிறது! நாம் நேரில் பார்த்து வைக்கக் கொடுத்தது போல!

ஏழு காண்டங்களாக அமைந்தது இராமாயணம்! இராம பட்டாபிஷேகமும் ஏழு அம்சங்களாக இயம்பப்படுகிறது இக் கவிச் சித்திரத்திலே! ஏழு காண்டங்களின் சாரத்தையும் சேர்த்துக் கலந்த அமுதமோ இது!

* * *

முடி சூடும் வைபவத்தில் முதல் சேதி: 'அரியணை அநுமன் தாங்க!' அடுத்தபடியான சேதி: 'அங்கதன் உடைவாள் ஏந்த!'

ஒரு வானரம் சிங்காதனத்தைத் தாங்குகிறதாம்! மற்றொன்று சக்ரவத்தியின் சர்வ வல்லமையைக் குறிக்கும் உடை (யிலே சேர்ந்தபடித் தொங்கும் விசேஷமுள்ள) வாளைத் தாங்குகின்றதாம்!

சிங்காதனத்தைத் தாங்க வேணும்! உடை வாளையும் தாங்க வேணும்! அவ்வளவு தானே! ஏன் அங்கதன் அரியணை தாங்கலாகாது! அநுமன் உடை வாளை ஏந்தலாகாது! ஆபத்துத்தான்! பேராபத்துத்தான்! இராமயணத்தைத் திருப்பி எழுத வேண்டியதாகி விடும்!

அநுமனுடைய பெருமை இராமனுடைய திருவடிகளில் கைங்கரியம் செய்தது மட்டுமல்ல; திக்கற்றவர்கட்கும், தீனர்

கட்கும் இராமனது திருவடிகளையே தஞ்சமாகக் காட்டித் தந்ததும், பெற்றுத் தந்ததுமான பெருமையும் அநுமனையே சாரும்!

நாடிழந்து நலமிழந்து வாடிய திக்கற்ற சுக்கிரிவனுக்கு இராமனின் திருவடிகளில் அடைக்கலம் தருவித்தது அநுமனே! 'எதிராளியின் உளவாளி', என்று எல்லோரும் சந்தேகித்த சூழ் நிலையிலே வாதாடி, தீனனான விபீடணனுக்கு இராமனின் திருவடிகளில் தஞ்சம் அளிக்கச் செய்ததும் இவ் வனுமனே!

இன்றும் இராமனின் திருவடிகளில் சரணம் அடைய விரும்பும் பக்தர்களுக் கெல்லாம், வழியும், வழிகாட்டியுமாக விளங்குபவனும் அநுமனே யாகும்! 'திருவடி' என்றாலேயே அநுமனைத் தானே குறிக்க முடியும் ஸ்ரீ வைணவ பரிபாஷையிலே!

எனவே, அரியணையைத் தாங்குகிறான் அநுமன்!

இது என்ன கதை! அரியணையையா தாங்குகிறான் அநுமன்! இராமனும் சீதையும் வீற்றிருக்கும் சிங்காதனத்தைச் சுமந்து கொண்டிருக்கவில்லையே அநுமன்; அம்பாரம் தாங்கும் யானை போல! அல்லது பெருமாளைத் தூக்கிச் செல்லும் கருடன் போல!

இராமனின் திருவடிகள் பொருந்தியுள்ள 'சிறிய ஆசன'த்தையே தாங்குகிறான் அநுமன்! சிங்காதனத்தை அல்ல!

ஆனால்

'அரியணை அநுமன் தாங்க' என்றல்லவா விவரிக்கிறார் கவி! இராம காதை இராம பக்தர்கட்குச் சொல்லப்படுகிறது. இராம பக்தர்கட்கு இராமன் சீதையுடன் வீற்றிருக்கும் சிம்மாதனம் முக்கியமில்லையாம்! இராமனைத் தஞ்சமடைய உதவும் அவன் திருவடிகளும், அந்தத் திருவடிகள் பொருந்தியுள்ள 'சீரிய ஆசன'மே சிறந்த ஆசனமாம் சிம்மாசனத்தையும் விட!

எனவே, இராமன் சிம்மாதனம் ஏறியதைவிட உலகோர்க்குத் தஞ்சமாக இராம பாதங்கள் சீரிய ஆசனம் ஏறியதே பக்தர்கட்குக் கொண்டாட்டமல்லவா? இந்த நுண்ணிய ஆழ் பொருளையே, எடுத்த எடுப்பிலேயே, விவரித்துக் காட்டுகிறான் கவி; அநுமன் புரியும் சேவையிலே! இச்சேவையில் அநுமனைத் தவிர அருகதை யாருக்கு உண்டாம்!

* * *

அநுமனை உடைவாள் ஏந்த வைப்போமே! அனர்த்தம் தான்!

'கண்டுவா சீதையை!' என்றனுப்பினால்; இலங்கையைத் தீப்பற்றி எரியக் கண்டல்லவா வந்தான் அநுமன்! தீப்பற்றி எரிக்கவா அனுப்பினான் கருணை எள்ளல்! ஊர் தேடி வா என்ற

உத்திரவையே இப்படி நிறைவேற்றி வைத்தால்; உடைவாளை யும் ஏந்த வைத்து விட்டால் என்ன கதியாகும்!

ஆகவே அநுமன் உடை வாள் ஏந்தவில்லை! ஏந்தலாகாது!

* * *

உடை வாளை ஏந்த அங்கதனுக்குத்தான் என்ன அரு கதையோ? ஆம்! அப்படிக் கேளுங்கள்!

அலை கடல் தாண்டி இலங்கைக்குச் சென்று வந்தான் அநுமன்! சீதையும் மீளவில்லை; இராவணனும் யுத்த களம் வந்து தொலையவில்லை! இரண்டும் கெட்டான் நிலையாகவே இருந்தது!

அங்கதன் சென்றான் தூதாக! 'தேவியை விடுக! அன்றேல் செருக் களத்து எதிர்ந்து தன்னின் ஆவியை விடுக!' என்று அறைகூவி அழைக்கவே! 'அமருக்கு அஞ்சி அரண் புக்குப் பதுங் கி'னன இராவணனைத்தான்! தூதின் பலன் என்னவாயிற்று! 'ஏந்திழையாளை விட்டுத் தன்னுயிர், பெறத்தவறிய இராவணன்; 'தலைகள் பத்தும் சின்னு பின்னங்கள் (இராமனின் வாள்களாகிய சரங்கள்) செய்யச் செருக்களம்' சேர்ந்தான்! காரியம் நடந்து விட்டது!

'நீடிய அரக்கர் சேனை நீறுபட்டு அழிய வாகை சூடிய சிலை இராமன்' வாள் வலி விளங்கியது அங்கதன் தூதினாலேதான்!

அதனாலே தான் அருகதையுடன் ஏந்துகிறான் அங்கதன் உடை வாளை! அவனல்லவா அதன் பெருமையை இராமயணத் தில் விளங்கச் செய்தான்! ராமனைச் சயராமனாக்கினான்!

* * *

வாள், பராக்கிரமத்தின் சின்னம்! இராமனுக்குப் பராக் கிரம் எது! 'இராமம் சத்தியம் பராக்கிரமம்!' அதாவது இராமனுக்கு சத்தியமே வாள்! அவன் ஏகவசன விரதனல்லவா?

வாலி இறக்குமுன் தன் மைந்தனை அங்கதனை அடைக் கலமாக இராமன் கையில் ஒப்படைத்தான். அங்கதனும் இராமன் 'தன் அடி தாழ்தலோடும், தாமரைத் தடங்கணானும்' (இராமனும்) 'பொன்னுடைய வாளை நீட்டி 'நீ இது பொறுத்தி!' என்றான்.' அதாவது அங்கதனை அடைக்கலமாக மாத்திரம் ஏற்றுக்கொள்ளாமல்; கிட்கிந்தை இராச்சியத்துக்கு இள வரசாகவும் நியமித்தான்! சுக்கிரீவ பட்டாபிஷேகம் கிட்கிந்தை யிலே நடந்தது. இப்போது 'அங்கத இளவரசு பட்டாபிஷேகம் அயோத்தியிலே நடக்கிறதாம்! ஏக வசன விரதனான இராமன் திருமுன்பே! திரு ஆணையால்! கலியாணத்தின்போது பூணல் கலியாணமும் நடக்கிற மாதிரி!



PREVENT CHAPPING OF

PRETTY FACE!

LOVELY HANDS!!

USE

ALMOND BENZOIN
GLYCERINE
HAND LOTION

# BLISS & COTTON

DISPENSING & FAMILY CHEMISTS,
12-E, CONNAUGHT PLACE,
NEW DELHI.

PHONE: 42170

அநுமனுக்கு எதற்காகப் பட்டங் கட்டுகிறதாம் இந்தச் சமயத்திலே !

* * *

அங்கதன், அரியணை (அடியிணை) தாங்கலாமா ?

தூதனாகிய அங்கதன் முடிவுரையாக இராவணனிடம், ''துணிந்து உரை! (வாழ) உறுதி பார்க்கின் துன்று இருங் குழலை (சீதையை) விட்டுத் (இராமனின் திருவடிகளைத்) தொழுது வாழ் !'' என்று கூறினான்.

ஆனால், இராவணன் இராமனுடைய திருவடிகளைப் பற்ற வில்லை. அங்கதன் முயற்சி இத் துறையில் தோல்வியாகவே முடிந்தது.

எனவே, அங்கதன் அரியணை (அடியிணை) தாங்கவில்லை ; தாங்கலாகாது !

* * *

இறைவன் அவதாரம் செய்வதின் முக்கிய நோக்கம் ; பக்தர்களை ரட்சிக்கவும், தீயோரைத் தண்டிக்கவுமே ! அதாவது சிஷ்ட பரிபாலன துஷ்ட நிக்ரத்துக்காகவே ! அநுமனின் சம்பந்தமுடைய நிகழ்ச்சிகளில் சிஷ்ட பரிபாலனம் காணப்படு கிறது. அங்கதனின் சம்பந்தமான நிகழ்ச்சிகளில் துஷ்ட நிக்ரகம் காணப்படுகிறது. எனவே இராமாவதார நோக்கங் களின் நிறைவை ; பட்டாபிஷேக மகோற்சவத்தின் முதல் இரு நிகழ்ச்சிகளில் காட்டுகிறார் கவி !

* * *

சுக்கிரீவ சரணாகதியை வெற்றிகரமாக நடத்தி ; சிஷ்ட பரிபாலனத்தை ஆரம்பித்து வைக்கிறான் அநுமன், கிஷ்கிந்தா காண்டத்திலே ! துஷ்ட நிக்ரகத்தை இராவண வதத்தின் மூலம் நிறைவேற்றி வைக்கிறான் ; அங்கதன், யுத்த காண்டத் திலே !

எனவே, அநுமன் அங்கதனுடைய பெயர்ப் பிரயோகங் களாலே, கிஷ்கிந்தா காண்ட, யுத்த காண்டங்களின் சாரத்தை யும் குறிப்பிடுகிறார் கவி !

மேலே என்ன என்று பார்ப்போம். இராமன் திருமுடியின் மேலே குடை கவிக்கப்பட்டுள்ளது ! எதற்காக ? முடிசூட்டு மண்டபத்தில் மழை கொட்டுகிறதா ? அல்லது வெய்யில் கொளுத்துகிறதா ! அப்படி ஒன்றும் இல்லை ! சக்கரவர்த்தி என்று பட்டம் சூட்டப்பெறுவதால்; 'கொற்ற வெண் குடை'க் குக் கீழ்தான் இருக்க வேண்டும் சக்ரவர்த்தியார் அவர்கள் !

★

GREASEPROOF, AMMUNITION AND OTHER

SPECIALITY

## PAPERS & BOARDS

★

*Manufacturers*

## PUDUMJEE PAPER MILLS PRIVATE LTD.,

60, FORBES STREET,

BOMBAY-1

(Tel. 254607)

★

அதுவும் சிங்காதனத்தின் மீது ஏறி எழுந்தருளியிருக்கையில் கண்டிப்பாக வேண்டும் கவிகை! எனவே, 'வானுளும் மாமதி போல் வெண்குடைக்கீழ், மன்னவர்தம் கோனாகி வீற்றிருந்து' காட்சி தருகிறான் இராமன்!

இப்படியான காரணத்திற்காக :

'பரதன் வெண்குடை கவிக்க !'

நிழல் தரும் குடையைப் பிடிக்க நிழலைப் போல காடு சென்ற போதும் இராமனைப் பின் தொடர்ந்த இலக்குமணன் இல்லையா? பிறர் நிழலில் ஒதுங்கி வாழ்ந்த குணமுடைய சத்துருக்கனன்; இக்குடை நிழலிலும் குதூகலித்திருக்கலாமே!

* * *

இப் பட்டாபிஷேக ரயில் பதினாலு வருடம் தாமதமாக வந்துள்ளது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்! 'முழுது உலகளித்த தந்தையான தயரதன் முந்தையோர் முறையினின்றும் வழுவி'னின் பதினான்கு ஆண்டுகளுக்கு முன்! தான் செய்த தவறுதான் இதற்குக் காரணம் என்பது பரதனின் திடமான எண்ணம். அந்தத் தவறாவது; அவன் கைகேயி வயிற்றில் பிறந்ததுதான்!

எப்படியோ கஷ்டங்களை அநுபவித்துப் 'பூழிவெங்கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி, ஏழிரண்டாண்டில்' வந்து சிங்காதனம் ஏறும்போது; இன்னும் உயிருடன் இருக்கிற கைகேயி, தன்னை வியாச்சியமாக வைத்து மறுபடியும் சரித்திரத்தை ஆரம்பித்துவிட்டால்! என்ன நேருமோ என்ற பயம் பரதனுக்கு உள்ளூர! அயோத்தியின் இளவரசுப் பட்டம் வேறே ஒட்டிக் கொண்டிருக்கிறதே பரதனுக்கு! கைகேயி அல்ல; வேறு எவருமே தன்னை முன் தள்ளி இராமபட்டாபிஷேகத்தை மறுபடியும் தடுக்காமல் இருப்பதற்கே; 'இளவரசு ஏந்தல் பரதராம்! எடுத்தே குடையைப் பிடித்தாராம்!'

* * *

பரதனின் இராம பக்தியும், தியாகமும் அயோத்தியா காண்டத்தில் சுடர்விட்டு மிளிர்கின்றன. 'தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் "தீவினை!" என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப் போயி'ன பரதனை நோக்கிய குகனும், "ஆயிரம் இராமர் நின்கேழ் (உனக்கு ஒப்பு) ஆவரோ! தெரியின் அம்மா!" என்று வியப்புக் கடலில் மூழ்கினான்! பரதனுடைய பெயரைச் சம்பந்தப்படுத்தும் போது; அயோத்தியா காண்டத்தின் மேன்மையைக் குறிப்பிடுகிறார் கவி!

* * *

*With Best Compliments*

*from*

## SUPREME MECHANICAL AND ELECTRICAL ENGINEERING WORKS

**LUDHIANA - 3**

(Manufacturers of Bicycle Tube Valve Bodies.)

Fabrics from the four corners of India — in glowing colours, exciting weaves and textures. A rainbow of raw silks, cascades of colourful cottons and a fabulous range of sarees.........a wealh of traditional and modern handlooms brought straight to you from loom to counter.

## handloom house

*a treasure house of textiles*

9-A Connaught Place, New Delhi.

இலக்குவ சத்துருக்கனர்கட்கு இளவரசு பட்டமும் கிடையாது ; 'இன்பமரும் செல்வமும் இவ்வர'சின் வாசனையுங் கூட ஒட்டியதில்லை. அவர்கள் அடுத்துப் பணி செய்யவே பிறந்தவர்கள் !

இக்காரணத்தால்

'இருவரும் கவரி வீச !'

நின்றார்கள் இருபுறமும் !

* * *

தற்போதைய சட்ட சபைகளில் ஒருவரை சபாநாயகராகத் தேர்ந்தெடுத்தால் அவர் உடனடியாகத் தாவிப்போய் சபாநாயகர் பீடத்தில் அமர்ந்து கொள்வதில்லை. ஆளுங்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அவரை இருபுறமும் கைலாகு கொடுத்து அழைத்துப் போய் பீடத்தில் அமர்த்துவார்கள். இரு சார்பாருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமாக இருக்கவேண்டுமாம் அவர் !

* * *

திரு அயோத்தியிலும் இரண்டு கட்சிகள் ! ஒன்று இராமனை நேசிக்கிற கட்சி ! இதற்குத் தலைவன் இலக்குமணன் ! மற்றொன்று இராமன் பெயரைக் கேட்கவும் விரும்பாத கட்சி ! பரதன் மீது ஏற்பட்ட அளவு கடந்த பாசத்தாலே சத்துருக்கனுக்கு இராமனைப் பிடிக்காமல் போய்விட்டது ! இராமனைப் பற்றிய கவலையும் இல்லை துளிக்கூட சத்துருக்கனுக்கு ! வலது சாரிக் கட்சியின் தலைவன் இலக்குமணன் என்றால், இடதுசாரிக் கட்சியின் தலைவன் சத்ருக்கனனே ! இவ்விரு சார்புக் கட்சிகளும் ஆமோதித்து ஆதரித்தனவாம், இராம முடிசூட்டு விழா வைபவப் பிரேரணையை ! எனவே இருவரும் இருபுறமும் ஒத்து வீசுகின்றனர் கவரியை !

* * *

இங்கே ஒரு நுணுக்கம் ! இராமனைப்பற்றித் துளிக்கூடக் கவலைப்படாத சத்ருக்னனும் ஏன் கவரி வீசுகிறான் ! தான் வணங்கும் பரதன் இராமனின் சேவையில் ஈடுபட்டுக் கொற்றக் குடை பிடிப்பதால் தானும் அப்பரதன் உகப்பிற்காக அவனுடன் ஒத்துழைத்துக் கவரி வீசுகிறானும் !

மதுரகவி யாழ்வார் தம் குருவான நம்மாழ்வார் பெருமானை வணங்கியதால், மதுரகவியும் பெருமானை வணங்கினாராம் !

சத்துருக்கனன் கவரி வீசினாலும் ; பரதன் நின்ற பக்கமாகவே தானும் நின்று வீசுகிறான் ! ஒப்புக்காக இராம

Over

1,45,000

discriminating persons

read

The Statesman

every day.

*Are you one of them?*

னுக்கு வீசுவது போல; பரதன்மேல் படும்படியாகவும், அவன் அநுபவிக்க இயலும்படியாகவும் வீசியிருக்கலாம்! இராமனுக்குச் சத்துருக்கன்னுயிற்றே!

* * *

இலக்கும சத்ருக்கனர்களின் சேவையும் தியாகமும் சிறந்து விவங்குவது ஆரணிய காண்டத்தில்தான்! 'பொருந்தார் கைவேல் நுதிபோல் பரல்பாய, மெல்லடிகள் குருதிசோர, விரும்பாத சான் விரும்பி வெயிலுறைப்ப வெம்பசி நோய் கூர,' இராமனும் சீதையும் இருக்க நேர்ந்தபோது இலக்குமணனே எல்லாக் குற்றேவல்களையும் ஏற்று உடனிருந்தான்; தன் மனைவி ஊர்மிளையையும் அயோத்தியில் விட்டுவிட்டு! அதே சமயத்தில் இராம பாதுகைகளுடன் திரும்பிய பரதன்; அயோத்தியிலும் அடிவைக்காமல் நந்திக் கிராமத்தில் இராமனைப் போலவே சகல இன்பங்களையும் துறந்து வாடியபோது, சத்துருக்கனனும் உடனிருந்து வாடினன்!

எனவே, 'இருவரும் சவரி வீச' என்று இலக்கும சத்துருக்கனர்களைக் குறிப்பிடுகையில்; கவி ஆரணிய காண்ட நிகழ்ச்சிகளை மறைமுகமாகக் காட்டுகிருர்!

* * *

அநும, அங்கத, பரத, இலக்கும, சத்ருக்ன சமேதனுக எழுந்தருளியுள்ள பட்டாபிராமன்; சீதாராமனுகவும் காட்சியளிக்கிருன். ஒரே சிம்மாதனத்தில் இராமனுடன் எழுந்தருளியிருப்பதால் சீதையான்.

'விரை செறி குழலி ஓங்க!'

வீற்றிருக்கின்ருள்.

பல்லாயிரக் கவிகள் கொண்ட இராம காதையில் சீதைக்குப் பல்வேறு அடைமொழிகளை ஆங்காங்கு அமைத்து வருகிருர் கவி. இங்கு சீதையை 'விரை செறி குழலி' என்றே குறிப்பிடுகிருர்! திருமகளின் அவதாரம் என்ருவது, ஜனகரின் மகள் என்ருவது, மற்ற குண, மேனி அழகுகளையாவது கூறவில்லை!

விரை செறி (மணம் மிகுந்த) குழலி (கேசத்தை உடைய) யான சீதை விரை செறி குழலியாக இல்லாதிருந்த சமயமும் இருந்தது. அப்போது அவள் களிப்பு ஓங்கியிருக்கவில்லை! ஆனல் கற்பும் குணவழகும் ஓங்கியிருந்தன! இதுவே பிராட்டி அசோக வனச் சிறையில் இருந்ததாகும்! இது சுந்தர காண்டத்திலாகும்! 'இற்பிறப்பு என்ப தொன்றும் இரும் பொறை என்ப தொன்றும், கற்பு எனும் பெயரது ஒன்றும் களி (சீதை என்னும் உருவில்) நடம் புரியக் கண்டதாக'த் தெரிவிக்கின்ருன் அநுமன் இதை கண் கண்ட சாட்சியாக! ஸ்ரீ ராமாயணத்தின்

BACK - UP THE SENTINELS OF DEFENCE
SPEED - UP INDUSTRIAL PRODUCTION
FREEDOM IS DESERVED AND PRESERVED
BY DUTY - CONSCIOUS CITIZENS
ACCELERATE THE TEMPO OF ECONOMIC
GROWTH OF OUR NATION WITH
MORE SAVINGS AND WISE INVESTMENTS
STRENGTHEN NATION'S ECONOMY
WITH INCREASED PRODUCTIVITY

INSERTED BY AN INDUSTRY
AT MADRAS

மேன்மையே 'சிறையிருந்தவள் ஏற்றந்தான்!' என்று ஸ்ரீ வைணவ ஆச்சாரியர்கள் தீர்மானித்துள்ளார்கள்! மணமற்ற குழலுடன் மனம் வாடியிருந்த சீதை சிம்மாதனத்திலே இராமனுடன் சிறந்து விளங்குகிருள். பிராட்டியும், பெருமாளும் சேர்ந்த சேர்த்திய பக்தர்கள் சரணடைய மிக உயர்ந்த சமயம் ஆகும்!

சுந்தர காண்ட நிகழ்ச்சிகளை மனதில் வைத்தபடி நற்போது சீதையைத் தரிசிக்கும் கவியின் களிப்பு; ஆசியும்கூட!

'விரை செறி குழலி ஓங்க!'

* * *

அயோத்தி இராச்சியத்தின் கொள்கை; "பிரஜை என்ருல் பின்னுல் ஆடி வரும் வால் என்பதல்ல! மக்களுக்காகவே மன்னன். அயோத்தி மக்களின் பண்பையும் மேன்மையும் பால காண்ட நாட்டுப் படலம், நகரப் படலங்களில் விரிவாகக் காணலாம்.

"கொள்வார் இலாமையால்; கொடுப்பார்களும் இல்லை மாதோ!" என்ற பெருமை பட்டாபிஷேக சமயத்தில் போய்த் தான் விடுகிறது!

அயோத்தி மக்கள் மிக வள்ளல்கள். இராமனுக்குச் சக்கர வர்த்தியின் முடியையே வழங்குகின்ருர்கள்! இராமனும் வாங்கிக் கொள்ளுகிருன்! அதாவது தங்களை ஆளும் அதிகாரத் தைத்தான் அயோத்தி மக்கள் மனப்பூர்வமாக வழங்குகிருர்கள் இராமனுக்கு! தங்கள் நல்வாழ்விற்காக அயோத்தி மக்கள் 'சக்ரவர்த்தி' என்ற பெயரில் தங்கள் காவலனை நியமிக்கிருர்கள்!

'சுதந்திரமாக வாழ நாம் சட்டத்தின் அடிமைகள் ஆவோம்!' என்ருர் ஒரு ஞானி! தங்களை ஆளும் உரிமையை அயோத்தி மக்கள் இராமனுக்குத் தானம் செய்தார்கள்! இதுவும் வள்ளல் தன்மைதானே! இப்படியான பண்புடைய சமுதாயத்தில்தானே சடையப்பர் தோன்றக் கூடும். 'ஈத்து உவக்கும் இன்பம்' அறிந்த சடையப்ப வள்ளல் போன்ற முத்துக்கள் தோன்றுவது பண்புடைய மக்கள் சமுதாயப் பண்ணையிலிருந்துதான்! எனவே அயோத்தி மக்கள் சடையப்பரின் முன்னேர்கள் தான்!

எனவே கூறுகிருர் கவி:

'வெண்ணையூர்ச் சடையான் தங்கள் மரபுளோர் கொடுக்க!'

பால காண்டத்தின் எதிரொலிகளை இவ்வரிகளில் காண்பது முன்பே கூறப்பட்டது.

* * *

WITH BEST COMPLIMENTS

OF

# APEEJAY PRIVATE LTD.,

135, CANNING STREET,

CALCUTTA-1.

Phone : 22 - 7695 Cable : APEEJAY

WITH THE BEST COMPLIMENTS

OF

★

# WYETH LABORATORIES

ஜனநாயக ஆட்சியிலும், ஜனநாயக ஆட்சியின் அடிப்படையில் அமைந்த முடியாட்சியிலும்; மகத்தான பொது விஷயங்கள் மக்கள் சபையிலும் பிறகு மேல் சபை எனப்படும் தேர்வான முக்கியஸ்தர்கள் சபையிலும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

'வெண்ணெயூர்ச் சடையான் தங்கள் மரபுளோர்' கொடுத்தார்கள் என்றால் 'மகுடம் புனை மசோதா' (Bill of Accession) மக்கள் சபையிலே நிறைவேற்றப்பட்டது என்றுதான் பொருள்!

* * *

மக்கள் கொடுத்த பிறகு? வைபவம் பூர்த்தியாகிவிட்டது!

'வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி!'

ராஜ குரு வசிஷ்டர், தவச் சிரேஷ்டர்கள், மேதைகள், குண சீலர்கள் கூட்டத்தின் தலைவர்! சின்னம் என்றும் கொள்ளலாம்!

எனவே மகுடம் அணி மசோதா மேல் சபையிலும் நிறைவேற்றப்பட்டதாகும்!

* * *

தசரத ராமன், 'ராஜா ராம'னாகி விட்டான்! 'ராம ராஜ்யமும்' ஆரம்பமாகி விட்டது! பட்டாபிஷேகத்தை ஒட்டியும் பிறகும் நடந்தவை உத்தர ராமாயணயத்தைச் சேர்ந்தவை. எனவே வசிட்டர் இராமனுக்கு மகுடம் புனைந்ததைத் தெரிவிக்கும் கவி உத்தரகாண்டத்தையே குறிப்பிட்டு இராமாயணத்தின் ஏழு காண்டங்களை இவ்வொரு கவியில் பிரதி பலிக்கச் செய்து விட்டார்!

* * *

இந்த ஆழமான கருத்தைப் பிரதிபலிக்கும் ஒரு அருமையான நாட்டுப் பாடலையும் கேளுங்கள்!

*'' சீராமர் அயோத்தி வந்தா ராம்!*
*சிங்காதனம் ஏறி ஆண்டா ராம்!*
*சிறந்த அநுமன் அடி வருட!*
*சீதா பிராட்டியும் அருகிருக்க!*
*இளவரசு ஏந்தல் பரத ராம்!*
*எடுத்தே குடையைப் பிடித்தா ராம்!*
*இலக்கும சத்துருக்கன ராம்!*
*இருபுறங் கவரி வீசின ராம்!*

ஐய்யன் இராமன் அடி தொழுவோம்!

வையம் முழுதும் வாழ்ந்திடவே!!

---

WITH COMPLIMENTS FROM

❋

**ORIENTAL POWER CABLES LTD.**

**P. O. CABLE-NAGAR**

**KOTA (RAJ.)**

❋

MANUFACTURER OF

PAPER INSULATED POWER CABLES UPTO 33 KV.

*Registered Offiice*
*& Works :*
**P. O. CABLENAGAR,**
**Distt. KOTA (RAJ.)**
**( Phone No. 4 3 4 )**

*Bombay Office :*
**Warden House,**
**Sir P. M. Road.**
**BOMBAY-1.**
**( Phone No. 2 5 4 4 4 0 )**

# லாஸ்யாநந்தா

"தூன்"

உலகத்தை உத்தாரணம் செய்ய என்ன நடவடிக்கைகளை சாதுக்கள் எடுத்துக் கொண்டால் வராகப் பெருமான் பூமியை கெல்லி எடுத்து வந்தது போல உலகத்தை உத்தாரணம் செய்யலாம் என்று பரிசீலனை செய்ய அன்று சாது சமாஜம் கூடியது.

அந்தப் பெரிய ஹாலில் கூடியிருந்த சாமியார் கூட்டத்தின் காஷாயங்களின் நிறங்கள் தாம் எத்தனை! எத்தனை!! சோளக் கொண்டை மஞ்சள் நிறம், மஞ்சள் ரோஜா நிறம், ஆரத்தி நீர் நிறம், மஞ்சள்காமாலைக் கண் நிறம், பட்டு ரோஜா நிறம், வெள்ளை ரோஜா நிறம்; ஸில்கில் செய்த காஷாயம், டெர்லினில் காஷாயம், ரேயான் காஷாயம், நைலான் காஷாயம், டெகாரான் காஷாயம்; பெரிய மடங்களின் சின்னங்களை குறிக்கும் அணிகள், தனியாக சாமியார் தொழிலை "பிராக்டீஸ்" செய்பவர்களின் வெவ்வேறுன விதவித அணிகள்; இவர்கள் நடுவில் வெள்ளை ஆடை அணிந்த சாமியார்கள் சிலர்.

காஷாயத்தில் இவ்வளவு வேறுபாடுகள் என்றால் கமண்டலங்களிலும், கண்டபூஷணங்களிலும் எண்ணற்கரிய வேறுபாடுகள். வெள்ளைத் தாடி சாமியார்கள், கருந்தாடி சாமியார்கள், மிளகு பொடியையும் உப்புப் பொடியையும் கலந்த நிறமுள்ள தாடி வளர்த்த சாமியார்கள்; நீண்ட தாடிகள், குட்டைத் தாடிகள், பள பளவென பத்துத் தரம் எதிர்க்கத்திப் போட்டு க்ஷவரம் செய்த கன்னங்கள்; வழுக்கைத் தலைகள், மொட்டையடித்து பல வித நீளங்களில் கேசம் வளர்ந்துள்ள மண்டைகள், ஜடைதாரிகள், அந்த ஜடைகளில் பலவித கொண்டைகள்.

சமஸ்கிருதம் பேசுபவர்கள், ஆங்கிலம் பரிசுத்தமாகப் பேசுபவர்கள், தமிழர், கன்னடர், மலையாளிகள், வங்கத்தார், நேபாளிகள், திபெத்தியர்கள் இவர்களிடையே சில வெள்ளைக்காரர்கள். எஸ்கிமோக்களும், ஆப்ரிகர்களும் மட்டும் அங்கு இருந்ததாகத் தெரியவில்லை!

இத்தனை வித உலகந்துறந்தார் கூடி விட்டால் உலகத்தை உத்தாரணம் செய்ய உருப்படியாக ஒரு வழி எப்படிப் பிறக்கும்? இவர்கள் கூறிய வழிகளை பூமி தேவி பிரசன்னமாகி கேட்டிருந்தால் "நல்ல வேளை இவர்கள் என்னை துறந்து சென்றனரோ நான் பிழைத்தேனு" என்று கூறியிருப்பாள். அல்லது "என்னை வேண்டாம் என்று ஒதுக்கி விட்டுச் சென்ற இவர்களுக்கு இப்படி என் மீது திடீர் கரிசனம் ஏற்பட்டது ஏதோ பெரிய ஆபத்துக்குத்தான் என்று அஞ்சி நடுங்கி பூகம்பத்தை உண்டாக்கி கூடத்திலிருந்த சாமியார்களோடு இதரர்களையும் ஒரு தினுசாக புதைத்திருப்பாள். வால்மீகியும், வியாசரும், விச்வாமித்திரரும், வள்ளுவரும், சொன்னதைக்


Tata-Fison and Ralli
are happy to be with you
on this occassion
TATA-FISON RALLIS

கேட்டுத் திருந்தி விடாத உலகம் இவர்கள் சொல்லிக்கேட்டு உருப்பட்டு விடப்போகிறதா என்று சிரித்திருப்பாள்.

இந்தக் கூட்டத்தில் என் கவனத்தை மிகவும் ஈர்த்தவர் ஒரே ஒரு சாமியார்; அவர்பெயர் லாஸ்யாநந்தா. ஆள் கருவல்; இரட்டை நாடி; தாடி இல்லே; ஆழ்ந்த கண்களில் ஒரு குறும்பு; வயது ஐம்பத்தைந்திருக்கலாம். அவர் உதட்டை அசைக்கும் போதெல்லாம் கொல்லென்ற சிரிப்பு கூட்டத்தில். அவர் ஒருவர் தான் கூட்டத்தைத் தாக்கிப் பேசினர். ஆசாமி கெட்டிக்காரர் ஆனதால் ''நாம் எல்லாம் சாதுக்கள். கோபம் என்பதே வரக் கூடாது நமக்கு. ஏன், வரவே வராது! ஆகையால் நான் சொல்லப் போவது பல உங்களுக்கு பிடிக்கா விட்டாலும் கோபம் வருவது மட்டும் உங்களுக்கு கொஞ்சமும் பிடிக்காது என்ற தைர்யத்தில் சில விஷயங்களேக் கூறப் போகிறேன் '' என்ற பீடிகையோடு '' நாம் எல்லாம் மக்கள் நல்ல கதியடைய கை காட்டிகள். அரசியல் கஷ்டம் தீரவும், அரிசிக் கஷ்டம் தீரவும் நம்மிடம் என்ன ஆலோசனைகள் இருக்க முடியும்? இந்தக் கஷ்டங்கள் தீர நம்மை கூட்டுவித்திருப்பது அலிகளே ஆண்பிள்ளை பிறக்க வேண்டிக் கொள்வது போல் தான். நம்மிடம் முட்டாள்தனம் மலைபோல இருக்கிறது என்றால் அதன் கைலாச சிகரம் இந்தக் கூட்டமே'' என்ருர் லாஸ்யா நந்தா.

சாதுக்கள் எப்படி கோபிக்க முடியும் என்று பல்லில்லாதவர்கள், உள்ளவர்கள் எல்லோருமே சிரித்தனர் — ஆனல் எல்லோருக்கும் உள்ளூரக் கோபம்தான்.

என் பத்திரிகை சார்பாக கூட்டத்தின் ரிபோர்ட்டை எடுத்தனுப்ப வந்த நான் இந்த சாமியாரின் பேட்டிக் கதை ஒன்றையும் அனுப்பவேண்டும் என்று உறுதி செய்துகொண்டு, கூட்டம் முடிந்ததும் அவரைத் தனியாகச் சந்தித்தேன். ''சுவாமிஜீ! நீங்கள் பட்டவர்த்தனமாகவும், சிரிக்கச் சிரிக்கவும் சொன்னவை எனக்குப் பிடித்தன. உங்கள் பேட்டிக் கதை ஒன்று என் பத்திரிகைக்கு வேண்டும். முக்கியமாக நாம் அரசியல் படியில் இன்று காலே வைத்தால் பிறகு யாராவது அரசி மடியில் தலையைக்கொண்டு வைப்போம். சாமியார்,காமியார் ஆவார் என்றீர்களே ! எவ்வளவு உண்மை !'' என்றேன்.

சாமியார் என்னை உற்றுநோக்கி ஒரு இழை புன்னகையை உதடுகள் மீது திரித்து ஒட்டினர்.

''என்னிடம் என்ன அய்யா பேட்டி காணப்போகிறீர்? நான் என்ன காமகோடிப் பெரியவாள், சிருங்கேரிப் பெரியவாள், தர்மபுர ஆதீனதிபதி யோன்ற முற்றிலும் துறந்தவன! இந்தக் கூட்டத்தில் அப்படியில்லே. அவர்களைப் போல நாங்கள் இருந்தால் இப்படி கிளம்புவோமா? எங்களில் மிகப்பெருக்கு சாதுவேஷம் ஜீவனேபாயம். எங்களில் பெரும்பாலோர் தத்துவ விசாரணை செய்யவோ, ஆன்மிக உண்மையை அறியவோ அறிந்தோ காஷாயம் பூணவில்லே. வாழ்க்கையில் வெல்லம் தேடி வேப்பம் பட்டை கஷாயம் கிடைத்ததால் காஷாயம் பூண்டோம் சிலர். காதல் முட்படலில் துணியை உலர்த்தி கிழித்துக் கொண்டவர்கள் சிலர். குற்றம் செய்து குகையில் புகுந்து மனதில் தோய்ந்த சாயத்தில் நனைத்த துணி அணிந்

Grams : "SAKTHI" Phone : 171

# SRI SAKTHI TEXTILES PRIVATE LTD.,

POST BOX No. 36,

**POLLACHI.**

*

TEXMARK : 3642

Total Ring Spinning Spindles : 12040

Doubling Spindles : 1212

MANUFACTURING YARN IN COUNTS

Nf. 17, Nf. 34, Nf. 52 Indian

&

Cones in Nf. 17 and

Doubled Yarn In Nf. 2/17

*

CONSUMERS AND HANDLOOM WEAVERS

ALWAYS INSIST

## ON SAKTHI'S YARN

SINCE

THEY POSSESS ALL THE UNIQUE QUALITIES

தவர் சிலர். ஏன் எல்லோரையும் நான் பேசவேண்டும். என்னைப் பற்றியே நான் சொல்லிக்கொண்டால் போதுமே" என்ருர் அவர்.

அவரிடம் கூட்டத்தில் பேசிய ஹாஸ்யமின்றி இப்போது அவருடைய தொனியில் உண்மை உணர்ச்சியின் கடுமை தென்பட்டது.

சினிமா நட்சத்திரங்களில் சொந்த வாழ்க்கையானல் அதை ஊடுருவிக் கேட்டு அவசியமான உண்மைகளை மறைத்து, பொய்களை மழுப்பி, மக்கள் விரும்பிப் படிக்கும் சுவையான 'பீச்சர்' ஒன்றை எழுதிவிடலாம்.

இந்தச் சாமியார் கதை எத்தகையதோ, எப்படியெல்லாம் புரையோடிக் கொண்டு போகுமோ, என்று என் மனதை கிளறிக்கொண்டே மண்டையைச் சொரிந்துகொண்டேன்.

சாமியார், நான் கேள்வி கேட்க வேண்டுமென்றே காத்திருக்கவில்லை. மாதாக் கோவில் பாதிரிகளிடம் போய் செய்த குற்றத்தைக் கூறிப் பாவமன்னிப்புக் கோரும் பக்தன்போல் அவர் தன் கதையைத் தானே சொல்லத் தொடங்கிவிட்டார்.

சாமியார் கதையை அவர் வாயிலாகவே கேளுங்கள் :

## II

" நானும் ஒரு சமயம் இளமையாகத்தான் இருந்தேன்.

இந்த ஆச்ரமத்துக்கு வந்தால் பழய ஆச்ரமத்தின் சிரமங்களும் நினைவுகளும் மறந்தா போய் விடும்! அது ஓரம் ஒன்றில் ஒண்டிக்கொண்டு ஒரு சமயம் மனதில் இனிக்கும், மறு கணம் கசக்கும். இனிக்கும்போது காஷாயத்தை கங்கையில் விட்டு விட்டு மறுபடி பழய வாழ்வுக்குப் போய் விடலாமா என்று தோன்றும். கசக்கும்போது காஷாயத்துக்கு இன்னும் கொஞ்சம் சாயம் ஏற்றுவோமா என்று தோன்றும். அதாவது மண்டையை மொட்டை அடித்துக்கொண்டாலும், அல்லது அதன் மேலே இமயமலைபோல குகைகளும் சிகரங்களும் வைத்து சடை சூடினுலும் அந்த மண்டைக்குள் அடைந்துள்ள மனக்குரங்கை அடக்கி ஆளுவது மட்டும் கடினந்தான், ஐயா, கடினம்தான்!

என் இளமைக் காலத்தில் ஒரு ஆப்பிள் முகக்காரி, கருந்திராட்சை கண்ணழகி, தேனடை கொண்டை சிருங்காரி என் வாழ்வில் வந்து புகுந்தாள்.

அவளை நான் கண்டது ஒரு விநோதம். நான் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அந்தப் பெண்ணும் அதே வண்டி


WITH COMPLIMENTS FROM

**NARENDRA STORES**

47-G, CONNAUGHT CIRCUS,

NEW DELHI.

Phone: 46520

(HIGH CLASS STATIONERS AND PRINTERS)

Our Congratulations & Good Wishes
to Delhi Tamil Sangam in their efforts
to bring out their Literary Annual
"CHUDAR"

*From*

**M/s. VELO INDUSTRIES,**
BHAVNAGAR

Manufacturers of Bicycle chains
marked "VELO"

*Sole Distributors :*

**M/s. Associated Exp. & Imp. Syndicate**
345, Kalbadevi Road,
BOMBAY-2.

Air Mail Edition of
HINDU and SWADESAMITRAN
now available in Delhi
on the evening of the publication
HOME DELIVERY ARRANGED

*Local Agents*

**CENTRAL NEWS AGENCY**

*Head Office :*
23/90, CONNAUGHT CIRCUS,
NEW DELHI - 1.
Phone: 44762
46312

*Branch Office :*
15A/55, W. E. A., Karolbagh,
NEW DELHI - 5.
Phone : 57340

யில் ஒரு குடும்பத்துடன் நடுவில் தஞ்சாவூர் ஸ்டேஷனில் ஏறினுள்.

அந்தக் குடும்பம் தஞ்சாவூரிலிருந்து சிதம்பரத்துக்கு குடும்பத் தலைவருக்கு மாற்றலாகிவிட்ட காரணத்தால், பிரயாணம் செய்தது. எட்டுப்பெட்டிகள், பத்து டின்கள், ஐந்தாறு பைகள், இரண்டு மூன்று சாக்குகளில் சாமான்கள் ஏறின. இந்தச் சாமான்களை வண்டியில் ஸீட்டுகளுக்கு அடியிலும், மேலேயும் அகப்பட்ட இண்டு இடுக்குகளிலும் பங்கிடு செய்ய நான் உதவிய போது அந்தப் பெண்ணின் பெயர் லோவிதாக்ஷி என்று தெரிந்து கொண்டேன். அவளுடைய கண்களுக்கு ஏற்ற பெயர்.

லோவிதாக்ஷி எனக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டாள். அவள் கைவிரல்கள் கருப்பில் அரசிலை அச்சிடப்பட்டிருந்த மஞ்சள் பட்டுப் புடவை அணிந்திருந்த அவள் துடையில் தாளம் போட்டுக் கொண்டிருந்தன. புடவை சற்று பழசு. ரயில் பிரயாணத்தில் கரியாக போகும் துணி சற்றுப் பழசாக இருந்தால் என்ன என்று உடுத்தி வந்திருக்கலாம் என்று எண்ணினேன்.

ஐயம்பேட்டை ஸ்டேஷனை வண்டி தாண்டும் போது அவள் கண்ணில் கரித்தூள் ஒன்று அவளுடைய கருங்கண் தான் தான்தோண்டி எடுக்கப்பட்ட நிலக்கரிச் சுரங்கமோ என்று அறியப் புகுந்தாற்போல் பாய்ந்தது. வலது கண்ணை அவள் கசக்கத் தொடங்கினுள். வலது கண்ணில் கரித்தூள் பட்டால் இடது கண்ணை கசக்கவேண்டும் என்று ஆலோசனை கூறினேன். இடது கண்ணில் தூள் விழுந்திருக்கிறது என்றுள் அவள். நூறு சதுர மைலுக்கு அப்பால்ரோஜா வயல், அதன் நடுவே ஒரு மரம், அந்த மரத்தில் ஒரு தேன்கூண்டு, அதிலிருந்து ஒருவன் தேன் பிழியச் சென்று, புறங்கையை நக்கிப் பார்க்கிறுன் என்முல் அந்த தேனின் மணமும் சுவையும் எப்படியிருக்கும் அப்படியிருந்தது பதிவிறுத்திய அவளுடைய குரல். அவள் காதுகளில் உயர்ந்த பூஷணங்கள் அணிந்திருக்கவில்லை. ஆனுல் வண்டியின் குலுங்களில் அந்தச் சிப்பிக் காதின் அசைவிலிருந்த அழகுக்கு ஆபரணங்கள் ஏதுக்கு என்று தோன்றியது. இப்படி சிதம்பரம் வரும் வரையில் நான் வெளியில் ஓடும் பசுங்காட்சியை பார்ப்பதும் எதிரில் இருப்பவள் உடல் உலுங்கும் காட்சியை ரசிப்பதுமாக பிரயாணம் செய்தேன்.

சிதம்பரம் ஸ்டேஷனில் அவர்களுடைய மூட்டை முடுச்சுகளை இறக்க நான் உதவினேன். அவர்கள் சாமான்களை இறக்க உதவியதில் என்னுடைய பை ஒன்றை இறக்கிக் கொள்ள மறந்துவிட்டேன். நான்தான் உலகத்தை துறக்கப் போகிறவனுயிற்றே என்று என்னை என் பை முதலிலேயே துறந்துபோய்விட்டதோ என்னமோ! யார் கண்டார்கள்! அசேதனப் பொருள்களுக்கும் ஒரு உள்ளறிவு இருக்கத்தான் செய்கிறது. நாம் அசேதனம் என்றுக் கருதும் பண்டங்கள் எவ்வளவு சேதனம் எவ்வளவு அசேதனம் என்று நம்மால் அறிய முடிவதில்லை. ஆனுல் ஒன்று கூறுவேன், அணுக்களும் பரமாணுக்களும் எப்போதும் அசைந்து கொண்டே, சுழன்று கொண்டே இருக்கும் பொருள்கள் என்று முடிவுகொண்டே பிறகு அசையாப் பொருள் அறிவில்லாப் பொருள் என்று எதை நாம் கூற முடியும்?

AN ALUMINIUM UTENSIL OR AN ALUMINIUM SECTION

OR JUST A PRESENTATION ARTICLE IN ALUMINIUM

*MANUFACTURERS OF*

**CROWN** PURE ALUMINIUM + THE CROWN + **BRAND**

ALUMINIUM WARES & ANODISED ARTICLES

SUPPLY ALL YOUR REQUIREMENTS

# JEEWANLAL (1929) LIMITED

CROWN ALUMINIUM HOUSE

23, BRABOURNE ROAD,

CALCUTTA-I.

ADEN — BOMBAY — DELHI — MADRAS — RAJAHMUNDRY

சிதரம்பரத்தில் அந்தப் பெண்ணை சிற்றம்பலத்திலும் சின்னக்கடைத்தெருவிலும் சினிமாக்கொட்டகைகளிலும் அடிக்கடி நான் காணப்பிரமேயம் ஏற்பட்டது. அவளைக் காணுத போதெல்லாம் காணவில்லையே என்று ஏக்கம், கண்டால் பேச வில்லையே என்ற ஏக்கம்! தென்ன மரத்தில் வண்டு புகுந்து குடைந்தால் வண்டைக் கொக்கி வைத்துப் பிடித்து எடுத்து விடலாம். உள்ளத்தில் ஒரு பெண்ணெருத்தி புகுந்து அரித்தால் அவளை கொந்தி எடுத்தெறிய என்ன கொக்கி, ஐயா, உண்டு!

வேலாலாவை நினைத்துக் கொண்டே ஓட்டலுக்குள் சாப்பிடப்புகுந்தேன். அந்தக் காலத்தை நினைத்தால் இப்போது என் உடம்பெல்லாம் ஏதோ செய்கிறது. ஓட்டலில் ஒருவேளை சாப்பாடு ஆறு அணு; மாதத்துக்கு ரூபாய் பதினைந்து, இரண்டு வேளை சாப்பாடு அன்று இலட்ச போசனப் செய்வித்த இந்த நாட்டில் இன்று சோற்றுக் கலகத்தில் துப்பாக்கிப் பிரயோகம். மஹாமகத்துக்கு வந்த கோடிக் கணக்கான மக்களுக்கு வடை பாயசத்தோடு வயிறு நிறைய அன்னதானம் நடந்த இந்த நாட்டில் ஒரு இருபது வருடத்துக்குள் சோற்றுப் பஞ்சம் எப்படி வந்தது! தொலையட்டும் இது. என் கதைக்கு வருகிறேன்.

நான் சாப்பிட உட்கார்ந்த போது என் பக்கத்து இலையில் அஷ்டபதி வந்து உட்கார்ந்தான். அஷ்டபதி உலகத்தில் ஒரு தனிப் பிரகிருதி. அவனுக்குள்ள சாமர்த்தியத்துக்கும் ஆளுமைக்கும் அவன் தபால்காரனை விட இன்னும் பெரிய பதவியில் இருக்கலாம். அவன் தபால்காரன் உத்யோகத்துக்கு வந்தது ஒரு விந்தை. அவன் சிறுவனுக இருக்கும் போது தெருவில் தபால் பட்டுவாடா செய்து வருபவர் வீட்டுக்கு வீடு தபால் வழங்குவார். ஆனுல் அவர் அஷ்டபதி வீட்டில் கடிதம் போடுவதே கிடையாது. தபால்காரர் தன் வீட்டுக்குமட்டும் தபால் போடாமல் போனது அஷ்டபதியின் இள மனதைத் துன்புறுத்தியது. யாரோ எங்கிருந்தோ எழுதிய தபால்களை தபால்காரர் பட்டுவாடா செய்கிருர் என்று புரியாத அஷ்டபதியின் மனதில் தபால்காரர் ஒர வஞ்சமாக தன் வீட்டுக்குத் தபால் போடுவதில்லை என்று பட்டது. தான் மட்டும் பெரியவனுகி விட்டால் ஒரு வீடு தவருமல் தபால் போடவேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. இதன் அடிப்படையில் அவன் தபால்காரனுகவே ஆகவேண்டும் என்ற ஆசை வளர்ந்தது. விபரம் தெரிந்த பிறகும், தபால் எப்படி வழங்கப்படுகிறது என்று கற்றறிந்த பிறகும் தபால்காரனுக வேண்டும் என்ற ஆசை போகாமல் வளர்ந்தே வந்தது. அவன் ஹைஸ்கூல் படிப்பை, நல்ல மார்க்குகள் பெற்றுத் தேறியும் தபால்காரனுகவே வேலை தேடிக் கொண்டான். ஊரின் சுகதுக்கங்களை சுமந்து சென்று பட்டுவாடா செய்வதில் பெரிய இன்பம் இருப்பதாக அவன் மனப்பூர்வமாக எண்ணுபவன்.

நான் ஒழுங்காக சாப்பிடாமல் எங்கோ நினைவாகச் சாப்பிடுவதைக் கண்ட அஷ்டபதி, கை கழுவி விட்டு நாங்கள் வெளியே வந்ததும் நான் ஒரு மாதிரியாக இருந்ததற்கு காரணம் என்னவென்று கேட்டான்.

வண்டியில் கூடப்பிரயாணம் செய்தவள் எப்படி என் உள்ளத்தில் ஒண்டிக் கொண்டு தங்கி



INTERPUBLICITY MD64
modella
MAKES THE BEST USE
OF MY WOOL
modella
For the finest in worsted fabrics,
'Terylene'/wool suitings,
tweeds, velours, blazer cloth, blankets
and knitting wool.
4C, VULCAN INSURANCE BUILDING, VEER
NARIMAN ROAD, BOMBAY 1.

விட்டாள் என்று விவரமாக கூறினேன்.

"ஒரு கடுதாசி எழுதிப் பார்க்கிறது தானே!" என்றான் அஷ்டபதி.

"கடிதம் வீட்டில். யார் கையிலாவது அகப்பட்டு விட்டால் என்ன செய்வது?" என்றேன்.

"கவலைப்படாதே! நான் தான் அவள் தெருவுக்குப் பட்டுவாடா செய்பவன். அவளிடம் தவிர வேறு ஒருவரிடமும் கடிதத்தைக் கொடுப்பதில்லை" என்றான்.

முட்டாள் தனத்தில் அஸ்திவாரம் போட்டு அசட்டுத்தனத்தில் அகழி வெட்டி சந்திரமண்டலம் வரையில் உப்பரிகைகள் வைத்துக் கட்டக்கூடிய கோட்டை காதல் கோட்டை ஒன்று தான்!

அஷ்டபதியின் ஆலோசனை என் காதலுக்கு ஆவேசமூட்டியது. இரவே கடிதம் எழுதி மறுநாள் கட்டில் சேர்த்து விட்டு அஷ்டபதியிடமும் கடுதாசி போட்டிருப்பதைச் சொல்லி விட்டேன்.

கடிதம் வியாழன் அன்று போட்டேன்; வெள்ளிக்கிழமை பட்டுவாடாவாகியது; சனி அன்று பதில் இல்லை; திங்களும் இல்லை; செவ்வாய் பிறந்தது. பதில் வரவில்லையே என்றேன் அஷ்டபதியிடம்; ஒரு கடிதத்துக்கு பதில் போடுவாளா உத்தமப் பெண்டிர், என்றான். மற்றொன்று எழுதினேன்: மறுநாள் பட்டுவாடாவுக்குப் பிறகு லோலா கடிதத்துக்காக வாசலில் காத்திருந்தாள் என்றான். அன்றிரவு தூங்கவில்லை: காரணம் மறுநாள் இன்னுமொரு கடிதம் எழுதினேன்: மறுநாளும்


MAN MADE FIBRES

FOR QUALITY YOU CAN COUNT ON

**SOUTH INDIA VISCOSE PRODUCTS**

**RAYON YARN** — Rated among the best - comparable to imported yarn. Available in 75, 100, 120 & 150 Deniers Bright. Cones, Hanks & Cakes.

**STAPLE FIBRE** — Superb in quality 1·5 D X 1·5"
The uniform excellence of South India Viscose Products is the result of collaboration with one of the world renowned producers, SNIA VISCOSA, ITALY; upto date machinery; and latest manufacturing technique.

*For further particulars contact :*

**SOUTH INDIA VISCOSE LIMITED,**

RACE COURSE, COIMBATORE — 1.

Grams : "VISCOSE" Phone : 3206 & 3207 Secretary : 3208

Non-Genuine and Spurious Spare Parts will not only shorten the life of your vehicle but may cost precious human life

USE ALWAYS GENUINE SPARE PARTS

Get your requirement of Hindustan Parts

from

*Authorised Jobers*

BRITISH MOTOR CAR CO. (1934) PVT. LTD.

CONNAUGHT CIRCUS

NEW DELHI

Telephone : 40444 44086

Telegram : BRITISH

லோலா கடிதத்துக்காகக் காத்திருந்ததாக கூறினன். பத்துக் கடிதமாகியும் பதில் வரவில்லையே என்று மனம்புழுங்கினேன் அஷ்டபதியிடம். அஷ்டபதி எனக்கு ஆறுதல் கூறினன். மறுநாள் பட்டுவாடாவின் போது பத்து கடிதம் போட்டும் பதில் போடவில்லையே என்று லோலாவை அவன் கேட்டதற்கு "நீங்கள் தினம் கடிதம் கொண்டு வாருங்கள் மொத்தமாக எழுதிவிடுகிறேன் ஒரே பதிலாக" என்று அந்தக் குறும்புக்காரி கூறியிருக்கிருள். வண்டியில் பார்த்தபோது அவள் குறும்புக்காரியாகத் தோன்றவேயில்லை. ஆனல் காதலைப்போலக் குறும்பு கற்றுக்கொடுக்க ஒரு சுய போதினி கிடைய்வே கிடையாதல்லவா !

கிட்டத்தட்ட ஒரு மண்டலம் இராக் கண் விழித்து பகலில் லிகிதம் எழுதி வந்தேன்.

ஒரு நாள் அஷ்டபதி பட்டுவடாச் செய்துவிட்டு என்னைச் சந்தித்தான். அவன் முகம் தொங்கிப் போய்விட்டிருந்தது.

"உன்னை லோலா இன்று மாலை ரயிலடிக்கு அப்பால் சந்திக்க வேண்டும் என்று சொல்லி உன்னை அழைத்து வரச்சொல்லியிருக்கிருள்" என்ருன்.

அன்று மாலை ரயிரலடிக்கு அப்பாலுள்ள தூங்குமூஞ்சு மரத்தடிக்கு என்னை அஷ்டபதி இட்டுச் சென்ருன். லோலா அங்கிருந்தாள். "உங்கள் கடிதங்கள் தவருமல் கிடைத்தன" என்று பேச்சைத் தொடங்கினுள் அவள்.

மரத்தை அணுக படபடப்பு அதிகமான என் நெஞ்சு இப்போதுவெகுவேகமாய் அடித்துக் கொண்டது.

"சந்தோஷம்!"

"நான் உங்களுக்குச் சொல்லப் போவதை அஷ்டபதி மூலமாகவே சொல்லியிருக்கலாம். ஆனல் அவரை நீங்கள் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது பாருங்கள்."

"அஷ்டபதியின் பெருமை எனக்குத் தெரியும். நான் அவனை தவருக எடுத்துக்கொள்ள மாட்டேன்."

"நான் செய்த, அல்லது செய்யப் போகும் தவற்றை நீங்கள் அவரால் வந்ததாக நினைக்கக் கூடாது"

"நீங்கள் கடிதம் எனக்கு எழுதவில்லை அவர் எனக்குக் கொண்டு வரவில்லையே!!" என்றேன் நான்.

அஷ்டபதி ஏதோ குற்றம் செய்தவன் போல் தரையை நோக்கியவண்ணம் அசையாமல் நின்று கொண்டிருந்தான். "முதலில் உங்கள் தவற்றை மாற்ற எனக்கு அனுமதி கொடுங்கள். நீங்கள் கடிதத்தில் எழுதிவருவது போல நான் அந்தப் பணக்கார வீட்டுப் பெண்ணல்ல. உங்களைப் போல அஷ்டபதியைப் போல நானும் ஒரு சாதாரணப்பட்டவள்" என்ருள் லோலா.

"மிகவும் இதில் சந்தோஷம்" என்றேன்.

"ஒன்று......"

"சொல்லு......"

"மனம் இடியமாட்டீர்களே ?"

"நீ கலியாணம் ஆனவள் என்ரு கூறப்போகிருய் ?"

"இல்லை"

"நோயாளி என்ரு சொல்லப் போகிருய்?"

"இல்லை!"

WITH THE COMPLIMENTS

OF

**DALMIA CEMENT (BHARAT) LIMITED,**

**DALMIAPURAM,**

TRICHY DISTT. (MADRAS STATE)

**ORISSA CEMENT LIMITED, Rajgangpur (Orissa)**

**RAZA BULAND SUGAR COMPANY LIMITED,**

Rampur (U. P.)

**THE RAMPUR DISTILLERY & CHEMICAL COMPANY LIMITED,**

Rampur (U. P.)

**DALMIA MAGNESITE CORPORATION,**

Salem, (Madras State)

DALMIA ENTERPRISES

H. O.: 4, SCINDIA HOUSE, NEW DELHI - 1.

"பிறகு!"

"கடிதம் எழுதியவரைக் காதலிக்காமல் நான் கடிதம் கொண்டுவந்தவரைக் காதலிக்கிறேன்."

இந்த பிரபஞ்சமே என்னை நடுவாக்கி பயித்தியங் கொண்டு எண்ணற்கரிய வேகத்துடன் சுழன்றது. கிறுகிறுப்புத் தெளிந்தபோது என்னை அஷ்டபதி ஒரு புறமும் லோலா ஒரு புறமும் பிடித்துக் கொண்டிருந்ததை உணர்ந்தேன்.

"அஷ்டபதியின் சூழ்ச்சி என்று நீங்கள் எண்ணுமலிருக்க நான் உங்களை நேரே வரவழைத்துக் கூறினேன். அவர் என்னை ஏற்க மாட்டேன் என்ருர். நான் புது மோஸ்தரில் மனப் பக்குவம் பெற்றவள். வரித்த ஒருவனை அன்றி மற்ற எவனையும் மணக்க மாட்டேன் என்று கூறிவிட்டேன் — மனதாலும் சிந்திக்கமாட்டேன் என்றேன்," என்ருள்.

அஷ்படதியின் உடல் வியர்த்துக் கொண்டிருந்தது. தர்மசங்கடத்தில் அவன் தவித்துக்கொண்டிருந்ததை அவன் களையிழந்த முகம் நன்ருகக் காட்டியது. அவன் நிலைமையை நான் புரிந்து கொண்டேன். இருவரும் என்னை விட்டுவிட்டார்கள்.

நான் நகர்ந்தேன்: திரும்பினேன்; வீடுவந்து சேர்ந்தேன். அவள் வரித்த ஒருவனைத் தவிர வேறு ஒருவனையும் மணக்கமாட்டேன் என்ருல் நான் மட்டும் வரித்த ஒருவளையன்றி வேறு ஒருத்தியை மணப்பது தருமமாகுமா என்று யோசனை செய்தேன்; ஒரு முடிவுக்கு வந்தேன். வண்டி ஏறினேன். காஷாயம் பெற்றேன்." ❋

## ஈ

ஈயை வீட்டில் சேர்க்காதே — அதை
எதிலும் அமரப் பார்க்காதே (ஈயை)

சாணம் அழுகல் மீதமரும் — நீ
சாப்பிடும் உணவில் வந்தமரும் (ஈயை)

வாந்தி பேதி வைசூரி — இவை
வளரச் செய்யும் இப்பாரில் (ஈயை)

குப்பை கூளம் அதன்வீடு — சளி
கோழை எச்சில் சாப்பாடு (ஈயை)

ஈக்கள் மொய்த்த பண்டமதை — நீ
என்றும் உண்ணப் பழகாதே (ஈயை)

வாழ்வோர் தமக்கு பகையாளி — அதை
வளரச் செய்யான் அறிவாளி. (ஈயை)

— வண்ணைமுத்து.




பாரத முதல்வரிடமிருந்து சங்கீத நாடக அகாதமியின் விருது பெற்ற 'நவாப்' டி. எஸ். ராஜமாணிக்கத்திற்கும், ஒன்பதாவது இளைஞர் விழாவில் கலந்துகொள்ள தில்லிக்கு வந்திருந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகக் குழுவினருக்கும், அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் தலைமையில் தில்லித் தமிழ்ச் சங்கம் வரவேற்பளித்தது.




1964 பாரதி விழா : தில்லி பிரதம கமிஷனர் திரு. விசுவநாதன் தலைமைவகித்தார். தமிழக முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் கலந்துகொண்டார்.




1964 பாரதி விழா : நினைவுத் திறனாய்வு போட்டியில் பரிசு பெற்ற சிறுமி உஷா பிரார்த்தனை கீதம் பாடுகிறாள்.



# BINNY'S

# MARLBOROUGH

## SUITING 67% TERENE 33% COTTON

10 shades with subtle check designs for men's suiting, boys' wear and dresses for the lady executive. Undeniably magnificent value for money. * *'TERENE' is India's new name for 'TERYLENE'*

THE BUCKINGHAM & CARNATIC COMPANY LIMITED,
A Subsidiary of BINNY & CO. LIMITED, MADRAS

# தில்லித் தமிழ்ச் சங்கம்

## செயற்குழு — 1965

*

| | |
|---|---|
| தலைவர் : | திரு கே. வி. வேங்கடாசலம் |
| துணைத் தலைவர் : | திரு என். கிருஷ்ணமூர்த்தி |
| நிருவாக துணைத்தலைவர் : | திரு எஸ். ஸ்ரீநிவாசன் |
| பொதுச் செயலாளர் : | திரு டி.வி.நாராயணசுவாமி |
| இணைச் செயலாளர் : | திரு சேது. கிருஷ்ணமூர்த்தி |
| பொருளாளர் : | திரு எஸ். குருஸ்வாமி |

வட்டாரச் செயலாளர்கள் :

| | |
|---|---|
| கரோல்பாக் பகுதி : | திரு சு. ஜெயராம் |
| விநயநகர் பகுதி : | திரு ஆர்.எஸ்.வேங்கடேசன் |

(கன்னுட்பிளேஸ் தலைமை நூலகம், விநயநகர், கரோல்பாக் கிளை நூலகங்கள்)

| | |
|---|---|
| நூலக நிர்வாகிகள் : | திரு ஓ. ஆர். ராமகிருஷ்ணன் |
| | திரு எஸ். பி. சேஷாத்திரி |
| | திரு ஜி. பாலகிருஷ்ணன் |
| | திரு எஸ். ரங்கராஜன் |
| உறுப்பினர்கள் : | திரு எம்.பாலசுப்பிரமணியம் |
| | திரு ஆர். விசுவநாதன் |
| | திரு ஏ. சுந்தரம் |
| | திரு பி. ஆர். வேங்கடகிரி |
| | திரு ஆர். கே. நேரு |
| | திருமதி எஸ். தர்மாம்பாள் |
| கணக்குத் தணிக்கையாளர்கள் : | திரு எஸ்.எஸ்.வேங்கடராமன் |
| | திரு கே. கே. சுந்தரமூர்த்தி |
| 'சுடர்' நிருவாக ஆசிரியர்: | திரு தி. கோ. அனந்தசுவாமி |
| ஆராய்ச்சி அரங்க செயலர் : | புலவர் க. ஆறுமுகம் |

நவ பாரதத்தின்
நிர்மாண வேலைகளுக்கு
சிறப்புற பணி ஆற்றுவது

**சங்கர் பிராண்ட்**

**போர்ட்லண்ட் சிமெண்ட்**











**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், மதராஸ்-2**

## புதுமையான ஒரு பணிக்கு உங்கள் அனைவரையும் அழைக்கிறது தில்லித் தமிழ்ச் சங்கம்

தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் செய்வதற்காக, 'தமிழ் ஆராய்ச்சி அரங்கம்' ஒன்றை ஏற்படுத்தி உள்ளது தில்லித் தமிழ்ச் சங்கம். நிரந்தரமான பயனும் மதிப்பும் உள்ள தமிழ்ப் பணிகள் சிலவற்றையாவது செய்வதற்கு ஆராய்ச்சி அரங்கம் திட்டங்கள் வகுத்து வருகிறது. அவைகளில் ஒன்றாக, தமிழ் மக்கள் அனைவருமே பங்குகொள்ளத்தக்க ஒரு திட்டம் உருவாகியுள்ளது.

தமிழகத்தில் தமிழே ஆட்சிமொழியாகவும் பாடமொழியாகவும் வரப்போகிறது. அது ஒரு நாளிலோ இரண்டு நாளிலோ ஆகிவிடக் கூடிய காரியமல்ல. தமிழின் தகுதியை மிகுதிப்படுத்தக்கூடிய பல துணைப் பணிகள் நடந்தால்தான், தமிழன் எல்லாவற்றையும் நடத்தக் கூடிய ஆற்றலைத் தமிழ் மக்கள் பெறுவார்கள். ஆட்சியைத் தமிழில் நடத்தவும், பல துறைப் பாடங்களையும் தமிழில் எழுதிக் கற்றுத் தரவும் பலபல ('டெக்னிகல் டெர்ம்ஸ்' என்னும்) கலைச் சொற்கள் வேண்டும். அவைகளை மற்ற மொழிகளிலிருந்து கடன் வாங்கப் புறப்படும் முன்னதாக, அத்தகைய சில தமிழ்ச் சொற்களாவது நம்மிடம் உண்டா என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

உழவு, தச்சு, வியாபாரம், வைத்தியம், கட்டிடம், கொடுக்கல் வாங்கல் முதலிய தொழில்கள் சம்பந்தப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ்ச்சொற்களை, நமது தமிழ்க் கிராமங்களில் இப்போதும் பேச்சு வழக்கில் கேட்கிறோம். அவைகளைத் தொகுத்து வரிசைப்படுத்திப் பார்த்தால், புதிய துறைகளுக்கு வேண்டிய பல தமிழ்ச் சொற்கள் கிடைக்கும் என்பது நிச்சயம். இதைச் செய்யத்தான் ஆராய்ச்சி அரங்கம் தமிழ் மக்கள்அனைவரையும் அன்புடன் அழைக்கிறது......

நீங்கள் செய்ய வேண்டியது: மேலே சொன்ன பல தொழில்களைப் பற்றிய சொற்களை அடிக்கடி உங்கள் உங்கள் ஊர்களில் கேட்பீர்கள். அவைகளைக் குறித்துக்கொள்ளுங்கள்; அவைகளையே மற்ற ஊர்க்காரர்கள் வேறு சொற்களால் குறிப்பது உங்களுக்குத் தெரிந்தால், இந்தச் சொற்களுடன் அவைகளையும் எழுதிக்கொள்ளுங்கள். ஆங்கிலம் தெரிந்தவர்கள் இச்சொற்களுக்குச் சரியான ஆங்கிலச் சொற்களையும் குறிப்பது நல்லது. இவ்வாறு நீங்கள் சேகரித்த சொற்களை, அவ்வப்போது, கீழே கொடுத்துள்ள முகவரிக்கு அனுப்புங்கள். சொற்களை எழுதி அனுப்பும்போது அவை எந்தெந்த ஊர்களில் வழங்குகின்றன என்பதையும் மறவாமல் குறிப்பிடுங்கள். கடைசியாக, உங்கள் முகவரியைக் குறிப்பிட மறந்துவிடாதீர்கள்......

சேகரித்த சொற்களைத் தகுந்த அறிஞர்களின் உதவியுடன் வரிசைப்படுத்தி தில்லித் தமிழ்ச் சங்கம் வெளியிடும். அரசாங்கம் அல்லது மற்ற நிறுவனங்கள் முன்வந்தால், அவர்கள் மூலமாக வெளியிடச் செய்யலாம் என்பதும் திட்டம்.

ஆராய்ச்சி அரங்கம், தில்லித் தமிழ்ச் சங்கம்
பாராளுமன்ற வீதி, புது தில்லி-1.

*FOR ANY REQUIREMENT*
*IN*
SCIENTIFIC - MEDICAL - INDUSTRIAL
ELECTRONIC EQUIPMENT AND SERVICING

PLEASE CONTACT
**TOSHNIWAL BROS. PRIVATE LTD.**
3E/8, JHANDEWALEN EXTN.,
NEW DELHI - I
Phones : 57131 - 32 - 33 Grams : VIGYANTRE

*With Compliments from :*

**RAMPUR ENGINEERING CO. LTD.**
20, Netaji Subhas Marg,
Daryaganj,
DELHI.

MANUFACTURERS OF HANSA CEILING,
EXHAUST AND PEDESTAL FANS
HANSA COOLANT PUMPS, HANSA BICYCLES
AND HANSA FRACTIONAL HORSE POWER
ELECTRIC MOTORS.

* தலைநகரில் வாழும் தமிழ் அன்பர்களை ஒன்றுகூட்டி, உரைகள், நிகழ்ச்சிகள் மூலம் முத்தமிழ்க் கலைகளை, அனுபவிக்கச் செய்கிறது.
* தமிழகக் கவிஞர்களையும் ஏனைய பெரியோர்களையும் விழாக்கள் மூலம் போற்றுகிறது.
* பொங்கல் புத்தாண்டு போன்ற தமிழ் விழாக்களைக் கொண்டாடுகிறது.
* சத்தியமூர்த்தி நினைவு நூல்நிலையம், இலவச வாசக சாலை, இலக்கிய வகுப்புகள் ஆகியவற்றை நடத்துகிறது.
* ஆண்டுதோறும், 'சுடர்' மலரை உயர் கலை மலராக வெளியிடுகிறது.
* தலைநகர மக்களுக்கு நல்ல தமிழ் நூல்கள் கிடைக்க வசதி செய்கிறது.
* அவ்வப்போது, கருத்தரங்குகள் மூலம் தமிழ்மொழி, தமிழரைப் பற்றிப் பிற மொழியினரும் அறிந்து கொள்ள வழி செய்கிறது.
* பிற மொழிகளின் இலக்கியச் செல்வங்களை தமிழ்ப் பெயர்ப்பு நூல்கள் மூலம் அறிந்து கொள்ள வகை செய்கிறது.

*More Coffee*

*enjoyment with*

**NESCAFÉ**

100% PURE INSTANT COFFEE

NESTLÉ

A NESTLE PRODUCT





# கவிமணியுடன் ஒரு மணி

பெ. தூரன்

"பாட்டையா விட்டிற்கா போகிறீர்கள்?" என்று கேட்டார் ஒரு பெரியவர். புத்தேரியில் பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி. புத்தேரிதான் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் வாழ்ந்த அழகிய ஊர். நாகர்கோவிலிலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலிருக்கிறது.

கவிமணியைப் பாட்டையா என்றுதான் அந்தப் பக்கத்திலுள்ள மக்கள் அன்போடும் மரியாதையோடும் அழைத்தார்கள். அவர் பாட்டையாவே. எல்லோருக்கும் பாட்டன் போன்ற வயது நிறைந்தவர். அதோடு அவர் அழகிய பாட்டெழுதும் பாட்டையா.

"ஆமாம், பாட்டையா வீட்டிற்குத்தான் போக வேண்டும். வழி எது? என்றேன் நான்.

"இதோ இந்த வழியாகப் போய் பாட்டையா வீடு எங்கே என்று கேட்டால், குழந்தைகூடக் காண்பிக்கும்" என்றார் பெரியவர்.

பாட்டையாவின் வீட்டிற்குள்ளே உள்ளத்தில் தனிப்பட்ட ஓர் உணர்ச்சியோடு நுழைந்தேன். அன்போடு வரவேற்றார் கவிமணி.

பழுத்த உடல். தளர்ந்து தள்ளாடும் நடை. ஆனால் தளர்வெய்தாத கவிதை ஆர்வம்.

கவிமணி அன்போடு பேசலானார். அவர் பேச்சிலே இளமையின் துடிப்பு மிதந்து கொண்டிருந்தது. ஏதாவது ஒரு பொருளைப் பற்றி சொல்லுவார். அதற்குச் சான்று காட்ட ஒரு நூலை எடுக்க வேகமாக எழுந்து போவார். அந்த வேளையிலேயே அவருடைய முதுமையும் மறைந்து விடுகிறது. "இந்தக் காலத்திலே தமிழ் வேகமாக வளர்ந்து வருகிறது; பலர் எழுதுகிறார்கள். மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றார் பாட்டையா.

இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் பொழுதே அவர் உள்ளம் எதையோ சிந்திக்கத் தொடங்கி விட்டது. "நமது எழுத்தெல்லாம் பழந்தமிழ் மரபை படிப்படையாகக் கொண்டு எழ வேண்டும். நம் நாட்டுச் சேலையைப் போர்த்துக்கொண்டு உள்ளே மேல்நாட்டு உடல் இருந்

தால் அது சரிப்படுமா? மரத்தில் பழைய இலைகள் உதிர்ந்து போகும்; புதிய இலைகள் தோன்றும். அந்தப் பழைய இலைகளை எடுத்துப் பழைய படி மரத்தில் ஒட்டி வைக்கக் கூடாது. மெய் தான். அந்த இலைகள் வேண்டியதில்லை. பழுத்துப் பயனற்ற அவ்விலைகள் அழகு கொடுக்கமாட்டா. ஆனல் மரத்தின் வேர் மட்டும் நிலையாக அப்படியே இருக்க வேண்டும். அதை மறக்கக் கூடாது. மண்ணிற்குள்ளே இருந்தாலும் அது முக்கியம்'' என்று மளமள வென்று பேசிக் கொண்டே போனர். அவர் தமது உற்சாகமான பேச்சை நிறுத்தவே இல்லை. நிறுத்த வேண்டும் என்ற ஆசையும் எனக்கில்லை. இன்னும் பேசக்கூடாதா என்று தான் ஆவல் உண்டாயிற்று.

அப்பொழுது ஒரு சிறுவன் தட்டிலே சிற்றுண்டி கொண்டு வந்து வைத்தான். சிற்றுண்டியாவது சாப்பிடாமல் யாரும் கவிமணியிடம் விடை பெற்றுக் கொண்டு வர முடியாது. அவர், "சாப்பிடுங்கள். எல்லாவற்றையும் சாப்பிடுங்கள். கொஞ்சம் எடுத்துக் கொண்டு மீதி வைத்து விட்டால் எனக்குச் சம்மதமில்லை'' என்று எச்சரிக்கை கொடுத்தார். இடையிடையே தமது அறிவுரைகளை நிறுத்திக் கொண்டு, "சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள்'' என்று வற்புறுத்தினர். அவருடைய அன்பு யாருடைய உள்ளத்தையும் கவர்ந்து விடும்.

கவிதை, கலை, பாட்டு என்று இப்படிப் பலவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். எனக்கு மிகவும் பிடித்தமான பேச்சு; அவருக்கும் அவற்றைப்பற்றி பேசவே ஆர்வம் மிகுதியாக இருப்பதை நான் உணர்ந்தேன். இசைப் பாடல்களைப் பற்றிய பேச்செழுந்தது. "உங்கள் பாடல்களை நான் கவனமாகப் பார்த்திருக்கிறேன் — அவற்றைக் கிராமபோன் ரிகார்டுகளுக்குக் கொடுக்கும் போது எச்சரிக்கையாக இருங்கள். பாடுகிற வித்வான்கள் பலர் பாட்டைக் கெடுத்துவிடுகிருர்கள். பதங்களைப் பிரித்துப் பாடுவதிலோ, உச்சரிப்பதிலோ எல்லோரும் ஒரே மாதிரி கவனம் செலுத்துவதில்லை. அது எனக்கு மிகவும் வருத்தத்தை உண்டாக்குகிறது'' என்று எனக்கு முன்னெச்சரிக்கை சொன்னர். அவருடைய கீர்த்தனைகள் ஒன்றிரண்டைத் தவருகப் பாடியுள்ளதையும் எடுத்துக் காட்டாகக் கூறினர்.

இசையரங்குகளிலே தமிழ்ப் பாடல்கள் நிறையப் பாடவேண்டும் என்பது பற்றி மேற்கொண்டிருந்தோம். "உள்ளத்தை எளி

த்ர்க உருக்குவதற்குத் தாய் மொழியைப் போல வேறு சிறந்த சாதனம் இருக்க முடியுமா? அதிலும் தமிழுக்கு இதிலே தனியான சிறப்புண்டு. தெய்வபக்தியை வெளியிடத் தமிழ் மிகச் சிறப்பான மொழியாக அமைந்திருக்கிறது ’’ என்று அவர் கண்களிலே ஒளி வீசப் பேசினார். ‘‘தமிழ்ப் பாடல்களை நிறையப் பாடவேண்டும் என்பதை நானும் விரும்புகிறேன். அப்பொழுது நமது பாட்டுக் கச்சேரிகளிலே புதிய மலர்ச்சி நிச்சயம் உண்டாகும். ஆனால் தமிழிலே பாடவேண்டும் என்பதற்காகப் பாடல்களை இயற்றுபவர்கள் சில விநோதமான முயற்சிகள் செய்கிறார்கள். எடுத்துக்காட்டாகக் கீர்த்தனைகளை அச்சிடும்போது பல்லவி, அநுபல்லவி, சரணம் என்பதற்குப் பதிலாக முதல் நிலை, இடைநிலை, இறுதிநிலை என்றும் எடுப்பு, விரிப்பு, முடிப்பு என்றும் இன்னும் எப்படியெல்லாமோ புதுமைகளைக் கையாளுகிறார்கள். அது எனக்கு சம்மதமில்லை’’ என்று தெரிவித்தேன். அவருக்கும் அது சம்மதமில்லை. அந்த மாறுதல் அனாவசியம் என்று திட்டமாகச் சொன்னார். ‘‘ முக்கியமானதை விட்டுவிட்டு இவ்வாறான முயற்சிகளில் இறங்குவது




AMAZING VALUE

GOOD TOBACCO

GOOD SMOKE

FOUR SQUARE

FILTER TIPPED

GOOD FILTER

GOOD FLAVOUR

AMAZING QUALITY

*THE MAN WHO BLEW SMOKE RINGS...*

Obviously he enjoys his smoke...so does the child watching him blow out ring after ring with the consistency of a railway engine!

But think of the nausea it creates in non-smokers and smokers alike in a crowded compartment!

Besides causing nuisance, a carelessly thrown live cigarette could create a blaze and thereby cause passengers and the railways serious injury.

**HELP RAILWAYS MAKE YOUR TRAVEL ENJOYABLE AND CARRY SUPPLIES TO THE JAWANS ON THE FRONT.**

ISSUED BY THE

SOUTHERN RAILWAY

நாம் நினைத்த பலனைக் கொடுக்காது'' என்று அவர் தெளிவாகக் கூறினார்.

படிப்பதற்கும் எழுதுவதற்கும், காண வருபவர்களுடன் அளவளாவுதற்கும் கவிமணி அவர்கள் உயரம் அதிகமில்லாத ஒரு மேல் மெத்தையில் உள்ள ஒரு சிறிய அறையைப் பயன்படுத்தினார். அவர்கள் ஆராய்ந்து சொன்ன பல முடிவுகள் பலராலும் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கின்றன. மேல்நாட்டார் பலர் நமது நாட்டுப் பழைய வரலாற்றை அறியவேண்டி ஆராய்ச்சி செய்வதையும், அவர்கள் நடுவு நிலைமையோடு உண்மையைக் காண முயல்வதையும் கவிமணி பாராட்டினார்.

"மேல் நாட்டாரைப் போல நாம் நடுவு நிலைமையோடு முயன்றால் எளிதில் பல உண்மைகளைக் காண முடியும். அவர்களைப் போலச் சிலவற்றில் நாம் ஏமாறமாட்டோம். அவர்களுக்கு நமது பண்பாடு. சாஸ்திரங்கள் நன்றாகத் தெரியாதாகையால் சில வேளைகளிலே தவறிவிடுகிறார்கள்'' என்று கூறி அதற்கு எடுத்துக் காட்டாக ஒரு வேடிக்கையான உதாரணத்தையும் சொன்னார். மேல்நாட்டிலே அமேசான் என்ற பலம் பொருந்திய வீரப்பெண்கள் இருந்தார்கள். அவர்கள் வில்லில் அம்பைத் தொடுத்து இழுத்து எய்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டுத் தமது வலது பக்கத்து மார்பகத்தையே வளரவிடாது இளமையிலேயே தடுத்து விடுவார்களாம். மேல்நாட்டான் ஒருவன் நமது நாட்டு சிலைகள் சிலவற்றைக் கண்டபோது, "ஓ, இந்நாட்டிலும் அமேசான்கள் இருந்திருக்கிறார்கள்'', என்று முடிவுகட்டினானாம். உண்மையில் அவன் கண்டது மங்கை பங்களாக விளங்கும் சிவபெருமானுடைய வடிவம்.

மறுபடியும்பேச்சுமாறிற்று. தமிழிலே அறிவு நூல்களெல்லாம் வரவேண்டும். நிறைய வரவேண்டும் என்று அவர்உற்சாகத்தோடுகூறலானார். அதைக் கேட்டவர் உள்ளத்திலே ஒரு புதிய வேகம் பிறக்காமலிருக்க முடியாது.

நான் கவிமணியைப் பார்க்கச் சென்றிருந்தபோது அவருக்கு வயது எழுபத்து மூன்று. மெலிந்த உடல். "துரும்பென மெலிந்த தேகம்'' என்று நாமக்கல் கவிஞர் பாடியுள்ளவாறே அவர் தோற்றமளித்தார். முதுமையால் நடை தடுமாறிற்று. ஆனால் இறுதியாக அவரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்படும்போது மாடியை விட்டுக் கூடவே இறங்கி வந்தார். "பையச் செல்ல வேண்டும், பைய, பைய'' என்று



# " DEVI "

De - luxe Model

35 mm Cinema Projector

Pioneers of its kind manufactured in India.

Also manufacturing

DEVI SUPER

&

35/70 MM TOD AO PROJECTORS,

## DEVI CINE PROJECTOR MANUFACTURING COMPANY

**B-7, Industrial Estate Guindy, Madrs - 32.**

*

Technical Consultants and Sole selling Agents :

## DEVI FILMS PRIVATE LTD.,

**498, MINT STREET, MADRAS - 3.**

எனக்கு எச்சரிக்கை செய்து கொண்டே. அவர் அடியெடுத்து வைத்தார். நான் வணக்கம் செலுத்தினேன். "உங்களுக்குக் கடவுள் அருள் செய்யவேணும்" என்று வாழ்த்தினர். அவர் கண்களில் நீர் தளும்பிற்று. அத்தனை கருணை. உள்ளன்போடு வாழ்த்தும் அவருடைய பெருங்குணத்தைக் கண்டு என் கண்களும் கலங்கின. இரு கையையும் கூப்பி வணங்கி விடைபெற்றுக் கொண்டே மெதுவாகப் புறப்பட்டேன்.

ஆசிய ஜோதியான புத்தரின் கருணை நிறைந்த வாழ்க்கையைத் தமிழில் தருவதற்குப் பொருத்தமான அன்புக் கவிஞர் இவர் என்ற எண்ணம் என் உள்ளத்திலே எழுந்தது. புத்தருடைய சாந்தி பொலியும் திருவுருவம் கவிமணியின் "துலங்கிடும் குளிர்ந்த பார்வை"யுடைய வடிவமும் என் மனக்கண் முன்பு மாறி மாறித் தோன்றின.

கவிமணியுடன் கழித்த ஒரு மணி நேரம் எனக்குப் புதிய உணர்ச்சிகளைத் தந்தது. அன்பும், எளிமையும், அடக்கமும் அவரிடத்தில் இயல்பாக அமைந்திருந்தன. அவைகளெல்லாம் அவருடைய கவிதைகளிலே அழகோடும் பக்தியோடும் பொலிவதையும் நாம் காண்கிறோம்.


Grams : MURSOKS

Phone : 51388

WHITE HORSE SOAP

REGD. No. 141241

Regd. No. 141241

**WHITE HORSE SOAP**

A Superfine Soap
For Silk and Linen Wash

*MANUFACTURERS :*

**D. BANGARU CHETTY,**

NATIONAL INDUSTRIES
220, T. H. ROAD, TONDIARPET, MADRAS - 21.

# கலைமகள் வெளியீடுகள்

✻

இலக்கியம், சமயம், சிறுகதை, சிறுவர் நூல்கள், நாடகம், நாவல், வரலாறு, விஞ்ஞானம், முதலிய பல துறைகளில் திறமை பெற்ற ஆசிரியர்களால் எழுதப்பட்ட 300க்கும் அதிகமான புத்தகங்கள் குறைந்த விலையில் சிறந்த பதிப்பில் எங்களிடம் கிடைக்கும். மொத்தமாக வாங்குவோருக்கு சலுகை உண்டு. விபரங்களுக்கு எங்கள் காரியாலயத்திற்கு எழுதவும்.

✻

## பத்திரிகைகள் சந்தா விவரம்

| | உள் நாடு | | வெளி நாடு |
|---|---|---|---|
| | ஆண்டுச் சந்தா | ஆறுமாதச் சந்தா | ஆண்டுச் சந்தா |
| கலைமகள் | ரூ. 7-00 | 3-50 | 9-00 |
| மஞ்சரி | 6-00 | 3-00 | 7–00 |
| கண்ணன் | 4-50 | 2-50 | 6–00 |
| குடும்பச் சந்தா | 17-50 | 9-00 | 20–00 |

கலைமகள், கண்ணன் தீபாவளி மலர்கள் தனி. கலைமகள் மலர் விலை ரூ. 4–00. கண்ணன் மலர் விலை ரூ. 2–00. சந்தாதாரர்கள் மலர்கள் பெற விரும்பினால் மலர்களுக்குரிய தொகையோடு, பதிவுத் தபாலில் அனுப்ப, மலர் ஒன்றுக்கு ரூ. 0–50 சேர்த்து அனுப்பவேண்டும்.

குடும்பச் சந்தா கட்டுபவர்களுக்குக் கண்ணன் மலர் மட்டும் இனாமாக அனுப்பப்பெறும்.

# திருக்குற்றாலக் குறவஞ்சி
## — ஒரு நாடகம்

தர்மா ராஜாராமன்

' உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.''

உலகில் புகழ்பெற்று விளங்கும் உயர்தனிச் செம்மொழிகளுள் நம் தேனினுமினிய செந்தமிழ் மொழியானது பல்லாற்றானும் சிறப்புற்று விளங்குகிறது. இனிமையும் தொன்மையும் இலக்கண வரம்பும் இலக்கிய வளமும் தன்பால் கொண்டுள்ள நம் மொழியில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பே இயல், இசை, நாடகம் என்ற முப்பிரிவுகள் இருந்தன. இந்த இலக்கியப் பூங்காவில் தோன்றிய தொண்ணூற்றாறு சிறு பிரபந்தங்களுள் திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சியும் ஒன்றாகும். இக் குறவஞ்சியைக் குறவஞ்சி நாடகம் என்றே கூறுவர். இத் தலைப்பினை இலக்கியத் திறனாய்வின் வழி நின்று ஆய்வது இக் கட்டுரையின் நோக்கம்.

நாடகத்தின் வகைகளைப் பலர் பலவிதமாகக் கூறுபடுத்துவர். பல அங்கங்கள் கொண்ட நாடகம், ஓரங்க நாடகம், கூத்து நாடகம் என முப்பிரிவாகப் பிரிப்பது ஒரு வகை. இம் மூன்றனுள் குறவஞ்சி கூத்து வகையைச் சார்ந்தது. தொல்காப்பியர் காலத்திலேயே நம் நாட்டில் வசைக் கூத்து, புகழ்க் கூத்து, வேத்தியல் கூத்து, பொதுவியல் கூத்து, ஆரியக் கூத்து எனப் பல் வகைக் கூத்துக்கள் இருந்தமை நாம் அறிவோம். இத்தகைய கூத்து வகையைச் சார்ந்து அமைந்தவையே பள்ளர் வாழ்க்கையைச் சித்திரிக்கும் பள்ளு இலக்கியமும் குறவர் வாழ்க்கைக் குணம் கூறும் குறவஞ்சி வகைப் பிரபந்தமும் ஆகும்.

மேலும் குறவஞ்சியில் இயலும் இசையும் நாடகப் பண்பும் விரவி வருகின்றமையின் இதனை இயலிசை நாடகம் என்றும் குறிப்பிடலாம்.

வேறு சில திறனாய்வாளர்கள் துப்பறியும் நாடகம், சமூக நாடகம், இலக்கிய நாடகம், பாத்திரப் படைப்பு நாடகம்

# VEMBANAD WHITE CEMENT

Vembanad White Cement is a true Portland Cement complying with the requirements of the Indian Standards Specification No. 269 – 1958 and with the added advantage of a whiteness of exceptional purity.

Mixed with suitable pigments a variety of pleasing colours can be obtained.

❋

## USE VEMBANAD WHITE CEMENT

**FOR**

Stucco
Ornamental Concrete Units
Tiles, Mosaic etc.
Cement Paints
Floor and Wall Finishes
Swimming Pools
Artificial Marble

❋

*Manufacturers :*

## THE TRAVANCORE CEMENTS LIMITED,

**Kottayam, Kerala State.**

எனவும் நாடகங்களை வகைப்படுத்துவர். இப்பிரிவு முறையில் குறவஞ்சி இலக்கிய நாடகம் என்ற பாகுபாட்டினால் வைத்து எண்ணப்படல் வேண்டும்.

எவ்வகை நாடகம் ஆயினும் சரி குறவஞ்சியில் நாடகத்திற்குரிய இலக்கண அமைப்பு அமைந்துள்ளது என்பது திண்ணம்.

**அமைப்பு :** முதற்கண் எந்நாடகத்திற்கும் ஒரு கட்டுக்கோப்பான அமைப்பு இருத்தல் இன்றியமையாதது. ஒரு சிறந்த உட்கரு, அதன் வளர்ச்சி, உச்சநிலை, சூழ்ச்சி, அவிழ்ப்பு மங்களகரமான முடிபு – இவை எந்த நாட்கத்திற்கும் அமைதல் வேண்டும்.

இந்தக் கரு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு காட்சி, களம் என்னும் பாகுபாடு அமையும். இப்பாகுபாட்டினை ஆசிரியர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கலாம் ; குறிப்பிடாமலும் இருக்கலாம்; ஆனால் பொதுவான அமைப்பு இருந்தே தீரும்.

திருக்குற்றாலக் குறவஞ்சியில் நான்கு காட்சிகள் உள்ளன. ஒவ்வொரு காட்சியிலும் நான்கு களங்கள்;அமைகின்றன.

தெய்வத் திருவுலா, வசந்தவல்லி பந்தடித்தல், திருவுலாக் காணல், தோழியைத் தூது விடல் என்பவற்றை முதற் காட்சி

---




FRITZ FILTERS FILTER FINEST

# FRITZ AND SINGH PRIVATE LTD.

MANUFACTURERS OF

OIL, AIR AND FUEL FILTERS
FOR ALL TYPES OF INTERNAL
COMBUSTION ENGINES

*

*HEAD OFFICE:*
**"FRITZ HOUSE"**
227, Netaji Subhas Bose Road,
TOLLYGUNGE, CALCUTTA - 47.

*

*BRANCH OFFICE:*
B-29 B, Kailash Colony,
NEW DELHI - 14.

யாகவும், குறவஞ்சி வருகை, குறிகேட்டல், குறிமுகம் கூறல், பரிசு வழங்கல் என்ற நான்கு களங்களை இரண்டாவது காட்சியாகவும் கொள்ளலாம். மூன்றும் காட்சியில் குறவன் வருகை, குருவி வேட்டை, பிரிவாற்றுமை, சிங்கன் சிங்கியைத் தேடி அலைதல் முதலியவை அடங்கும். சிங்கன் சிங்கியைக் காணல், புதுமை கேட்டல், பரிசு கிளத்தல், வாத்தல் — இவற்றைக் கொண்டது நான்காவது காட்சி.

இந் நாடகத்தின் கரு யாது? குறி சொல்லி வாழும் குறவர் வாழ்க்கையைச் சித்திரிப்பது ஆசிரியரது நோக்கம். இந்தக் கருவிற்கு ஏற்றதொரு சூழ்நிலை அமைப்பதற்காக முதல் காட்சி அமைக்கப்பெற்றிருக்கிறது. இரண்டாவது காட்சியில் கருவின் வளர்ச்சி தெரிகின்றது. சிங்கியைக் காணுது புலம்பும் சிங்கன் 'கண்டிடம் எல்லாம் அவளாகத் தோணுதே பாவியே' என்று இரங்குவது உச்சநிலை. எளிய வாழ்க்கை அதில் பிரிவின் ஆற்றுமையைத் தோற்றுவிக்கிறது இவ்விடம். சிங்கியைக் காண்கிறுன் சிங்கன். அவளுடன் உறவாடுகிறுன். இது சிக்கல் அவிழ்ப்பு. இறுதியில் இருவரும் குற்றுலத்துறை ஈசனையும் அம்மையையும் வாழ்த்துகின்றனர். இதுவே நூலுக்கு மங்கல முடிபாகிறது.

**கூற்று வகை அமைப்பு:** இனி, ஏனைய இலக்கியங்களினின்றும் நாடகத்தை வேறுபடுத்திக் காட்டுவது கூற்று வகை அமைப்பாகும். ஒருவர் கூற மற்ருெருவர் பதில் இறுக்கும் வகையில் அமையும், சிறப்பு நாடகத்தில் தான் விரிவாகக் காணப்படும். குறவஞ்சியில் கூற்று முறையில் வரும் சில பகுதிகளை நாம் காணலாம்.

வசந்தவல்லி ஈசன்மீது காதல் கொண்டாள். அவள் தோழி கேட்கிறுள்...

“ துரைப்பெண்ணே வசந்த வல்லி
சொன்னபே தைமைக்கென் சொல்வேன்
வரைப்பெண்ணுக் காசை பூண்டு
வளர்சங்க மறுகின் ஊடே
நரைத்தமா டேறு வார்க்கோ
நங்கைநீ மயல்கொண் டாயே ”

தோழி சொன்னவை கேட்டு வசந்தவல்லி திரிகூட நாதரைப் புகழ்ந்து பதில் கூறுகிறுள்

... ... ...

நன்னகரில் ஈசருக்கு நான்தானே
ஆசைகொண்டேன் மானே பல
கன்னியரும் ஆசைகொண்டார் பன்னியரும்
ஆசைகொண்டார் மானே!

Telephones : 45155 & 42434 Telegrams : 'UNIGEN'

UNITED INDIA

*Stands for*

SECURITY, SERVICE & SATISFACTION

FOR ALL TYPES OF GENERAL INSURANCE

*Please write to Manager*

**UNITED INDIA FIRE & GENERAL INSURANCE CO. LTD.**

**'K' Block, Connaught Place,**
**NEW DELHI.**

*Head Office :*

**United India Fire & General Insurance Co. Ltd.,**
**151, Mount Road,**
**MADRAS - 2.**

பாட்டுத் தலைவி சிங்கிக்கும் அவளது அன்புக் கணவன் சிங்கனுக்கும் நிகழும் உரையாடல் நகைச்சுவை நிறைந்த பகுதியாக உள்ளது.

"மாண்டஎ தவளைஉன் காலிலே கட்டிய
மார்க்கம தேதுபெண்ணே சிங்கி!
ஆண்டவர் குற்றாலர் சந்நிதிப் பெண்கள்
அணிமணிக் கெச்சமடா சிங்கா!"

... ... ...

"சுண்டு விரலிலே குண்டலப் பூச்சி
சுருண்டு கிடப்பானேன் சிங்கி!
கண்டிய தேசத்திற் பண்டுநான் பெற்ற
காலாழி பீலிஅடா சிங்கா

... ... ... ...

சொருகி முடித்ததில் தூக்கணம் ஏதடி சிங்கி! தென
குருகையூ ரார்தந்த கும்மியும் தொங்கலும் சிங்கா

... ... ... ...

விந்தைக் காரியுன்னை வெல்லக் கூடாதடி சிங்கி! அது
சந்தேக மோவுன் தலைப்பேனைக் கேளடா சிங்கா"

**அறிமுகம்:** அடுத்து ஒரு நாடகத்தில் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் தன்மை நோக்கற்பாலது. சார்த்து வகையில் தலைவனாக அமையும் ஈசன் வருகையாக் கட்டியங்காரன் அறிவிக்கிறான்.


## நவராத்திரி – தீபாவளி,
## நன்னாளைக் கொண்டாட

உயர்ந்த ரகங்களில் நியாயமான விலையில் பட்டுச் சேலைகள், பாவாடைகள், சோளி பீஸ்கள் மற்றும் ஆர்ட் க்ரேப் கைத்தறி நூல் ஜவுளிகளும் கிடைக்கும்.

*

## காஞ்சீபுரம் ஸில்க் ஹவுஸ்

பட்டு, ஜவுளி வியாபாரம்

5/28-29, W. E. A. KAROL BAGH — NEW DELHI-5

PHONE: 53981

# PRODUCTS OF FINE VALUE

**Quality Controlled Production units of the Govt. of Madras**

**GOVT. FOOTWEAR UNIT**
Perambur, Madras-12



All types of Malu Footwear, Shoes, Chappals etc. and any other leather goods to specification.



Finished Leather of all types like Suede, Zugrain, Sole Leather (Chrome bark) etc.

**TANNING & FINISHING UNIT**
Ambur, N. Arcot Dt.

**FARM IMPLEMENTS UNIT**
Tiruchi



Agricultural Implements, like improved Ploughs, Puddlers, etc.



Hard Drawn Copper Wires, Annealed Copper Wire and Double Cotton covered wires, Drawing of Copper Wire, polishing of wire drawing dies enamelling.

**ELECTRICAL GOODS UNIT**
Industrial Estate, Madras-32.

**BRASSWARE UNIT**
Kumbakonam.



Dusters and Sprayers, Oxidized Building Fittings.



Sanitaryware like European Water Closets, Urinals, Wash Basins, Sinks etc. and Art Pottery of pleasing designs

**GOVT. CERAMIC CENTRE**
Vridhachalam

**BOLTS & NUTS UNIT**
Erode



Manufacture of Bolts, Nuts and Rivets of various sizes.



I C M Bicycle with long service

**CYCLE ASSEMBLY UNITS**
Thanjavur & Vellore

**GOVT. LOCK UNIT**
Dindigul



Manufacture of pressed components for lock industry, door locks and latches of all types and servicing also.

Contact:
The Deputy Director (Sales)
**DEPARTMENT OF INDUSTRIES AND COMMERCE**
**MADRAS-5**

9882

'பவனி வந்தனரே — மழவிடைப் பவனி வந்தனரே'
'அவனி போற்றிய குறும்ப லாவுறை
மவுன நாயகர் எவன நாயகர்
சிவனு மால்அரி அயனு மானவர்
கவன மாய்விடை அதனி லேறியே'

எனக் கட்டியம் கூறுகிறான்.

இறைவன் உலாக்காட்சியுடன் இணைந்து வருகை தருகிறாள் வசந்தவல்லி. 'பெண்ணுக்குப் பெண் மயங்க' பொன் அணித் திலதம் தீட்டிப் பூமலர் மாலை சூட்டி வண்ணமோ கினியைக் காட்டி ஓவியம்போல் அவள் அவள் வரும் அழகை ஆசிரியர் கூறுகிறார்.

அடுத்து வருபவள் தலைவியான சிங்கி

'கூடல்வளைக் கரம்அசைய மாத்திரைக்கோல்
ஏந்திமணிக் கூடை தாங்கி' அவள் வருகிறாள்.
'வஞ்சி எழில்அப ரஞ்சி வரிவிழி
நஞ்சி முழுமற நெஞ்சி பலவினில்
அஞ்சு சடைமுடி விஞ்சை அமலனை
நெஞ்சில் நினைவொடு விஞ்சு குறிசொல'

வஞ்சி வந்தனளே மலைக்குற வஞ்சி வந்தனளே என அவள் வரும் அழகைப் பாங்குறப் புனைகிறார் ஆசிரியர்.

இறுதியாக வரும் முக்கியப் பாத்திரம் சிங்கன்.

'வக்காவின் மணிசூடி வகைக்காரி சிங்கிவரும் வழியைத் தேடி
மிக்கான புலிகரடி கிடுகிடென நடுநடுங்க வெறித்து நோக்கிக்
கக்காஎன் றேலமிடும் குருவிகொக்குக் கேற்றகண்ணி கையில் வாங்கித்
தொக்கான நடைநடந்து திரிகூட மலைக்குறவன் தோன்றி னானே'

இது சிங்கன் அறிமுகம்.

**பாத்திரப் படைப்பு:** ஒவ்வொரு பாத்திரத்தையும் ஒவ்வொரு முறையில் அறிமுகப்படுத்தும் ஆசிரியன் குறிப்பிட்ட ஒரு பாத்திரத்திற்குக் குறிப்பிட்ட குணநலன் அமைப்பது நாடகத்தின் சிறப்பையும் ஆசிரியனது கைவண்ணத்தையும் காட்டும்.

குற்றாலக் குறவஞ்சி நாடகத்தில் வசந்தவல்லி செல்வச் சீமாட்டி. பொருள் ஈட்டி வாழவேண்டிய நிலை அவளுக்கு இல்லை. உண்டு, உறங்கி விளையாடுவதுதான் அவள் செய்யும் காரியங்கள். இத்தகைய உல்லாச வாழ்க்கையில் குறிக்கிடுகிறது அவள் இறைவன்மீது கொண்ட காதல். செல்வச் செழிப்பில் கொழித்த அவள் 'அழகு குடிகொளு முகத்தினளாக'வும், 'அன்ன நடையிலொரு சின்ன நடை பயிலுபவளாக'வும் இருக்கின்றாள்.

தலைவி சிங்கியோ குறிசொல்லி, உழைத்து வாழும் வஞ்சியாக வருகின்றாள். தன் மலையின் வளத்தையும் நாட்டு வளத்தையும் அவள் பாடும் அழகைக் கண்டால் அவளுக்கு அவற்றினும் உயர்ந்த வேறு எவையும் இல்லை எனத் தோற்றுகிறது.




*There's health in*

# *Phosfomin*

*for all the family*

There's Vitamin B Complex in Phosfomin, there's multiple Glycerophosphates, too...to keep your family strong, lively, healthy. No more that feeling of tiredness and fatigue with Phosfomin in the home. Phosfomin restores vigour, revives appetite, builds up stamina, strengthens body's resistance. The whole family enjoys good health with Phosfomin—the green, **fruit-flavoured vitamin tonic.**

**SQUIBB** *A century of experience builds faith*

**SARABHAI CHEMICALS**

'வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்'

அவள் மலை.

'தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்'

அவர் மலை.

'முக்க ணன்விளை யாடிய நாடு
முதிய நான்மறை பாடிய நாடு
மைக்க ணாள்குழல் வாய்மொழி பாகர்
வசந்த ஆரிய நாடெங்கள் நாடு'

இது சிங்கியின் நாடு.

சிங்கி என்னும் பாத்திரம் எளிய பாத்திரம். ஆனால் நாட்டுப் பற்று, அன்பு உணர்ச்சி, வீரம், அஞ்சாமை, தொழில் திறம், – இவை யாவும் அவளிடத்துக் காணப்படும் திறங்கள்.

சிங்கியின் காதலன் சிங்கன் சைவப்பற்று மிகுந்தவனாகத் தோற்றுகிறான்.

"காதலஞ் செழுத்தார் போதநீ றணியார்
கைந்நரம் பெடுத்துக் கின்னரம் தொடுத்துப்
பாதகர் தோலால் பலதவில் அடித்துப்
பறவைகள் படுக்கும் குறவனும் நானே"

தொழில் திறம் படைத்தவனாகவும், சிங்கி மீது தீராக் காதல் கொண்டவனாகவும், மதப்பற்று மிகுந்தவனாகவும் சிங்கனைப் படைத்திருக்கிறார் ஆசிரியர்.


*With the Best Compliments*
*from*

**JAMMI VENKATARAMANAYYA & SONS,**

5 – A, KAMALA NAGAR,

(Near Birla Mills)

**DELHI - 7**

Phone No, 228375.

Manufacturers of '**Jammi's Livercure**'

REPUTED REMEDY FOR LIVER AND SPLEEN

COMPLAINTS IN CHILDREN.

இந்தியத் தொழிற்துறை வரலாற்றில் புதிய சகாப்தம்

செயற்கை வைரத் தளங்கள்

சகல நிறங்களிலும் தயாரிக்கும்

**ஆசியாவின் ஓரே தொழிற்சாலை**

தந்தி : "இண்டோஸ்விஸ்" போன் : பாக்டரி 127, ஆபீஸ் 136

# தி இந்தோ-ஸ்விஸ் சிந்தட்டிக் ஜெம் மானுபாக்சரிங் கம்பெனி லிட்,

**மேட்டுப்பாளையம் — கோயம்புத்தூர் ஜில்லா**

ஏக விநியோகஸ்தர்கள் :

| | |
|---|---|
| ஜி. எஸ். & கம்பெனி<br>6, ஜாபர்ஷா தெரு<br>திருச்சிராப்பள்ளி.<br>தந்தி : 'MANEK' போன் : 2006 & 2084 | ஜி. எஸ். & கம்பெனி<br>கோபால்ஜி ரஸ்தா,<br>ஜெய்ப்பூர்.<br>தந்தி : 'இண்டோஸ்விஸ்' போன் : 2814 & 2825 |

**சுவை நலம் :** வியப்பு, வீரம், அச்சம், இழிப்பு, உவகை, அவலம், வெகுள், நகை ஆகிய எண் சுவையுள் பெரும்பான்மை யானவை இந் நாடகத்தில் அமைந்துள்ளன. அவற்றை விரித் தற்கு ஏடு இடம் தரவில்லை.

**குறவஞ்சி வாழ்க்கையின் திறனாய்வு :** இலக்கியம் என்பது வாழ்க்கையின் திறனாய்வு என்பது மறுக்க இயலாத கொள்கை. எந்த ஒரு இலக்கியமும் தான் எழுந்த காலத்தின் நிலையைக் காட்டும் கண்ணாடியாக இருத்தல் வேண்டும். அவ்வகையில் அறத்தின் வழியில் பொருள் ஈட்டி இன்பம் துய்ப்பின் வீடுபேறு அடைதல் திண்ணம் என்பதை எளிய முறையில் காட்டுகிறது குறவஞ்சி.

அத்துடன் அக்காலப் பொருளியல், இன்பியல், அன்பியல், சமய நிலைகள் நூலின் பற்பல பகுதியிலும் காணப்படுகின்றன. அவற்றை அந் நூலைப் படிப்போரால் நன்கு உணர இயலும்.

எனவே திருக்குற்றாலக் குறவஞ்சி நாற்பொருள் பயக்கும் நன்னடைத்தாகி, தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய், வருணனை அமையப்பெற்றதாய், சிறந்த முறையிலமைந்துள்ள ஓர் இயலிசைத் தமிழ் நாடகம் என்று திண்ணமாகக் கூறலாம்.


# ஐடெக்ஸ்

## அழகு சாதனங்கள்!




- ஐடெக்ஸ் கண் மை — சாஸ்திரீய முறையில் தயாரிக்கப்பட்டது — சிறு குழந்தைகளும் உபயோகிக் கலாம்.
- ஐடெக்ஸ் / பிந்தி / குங்கும் / சாந்து பல கவர்ச்சியான கலர்களில் எங்கும் கிடைக்கும்.
- ஐடெக்ஸ் குங்கும் பேஸ்ட்.




**அரவிந்த் லாபரட்டரீஸ்**

தபால் பெட்டி நெ. 1415.

**மதராஸ் - 17.**

# நூலகத்திற்கேற்ற

## சிறந்த நூல்கள்!

✽

டி. என். ராமச்சந்திரன்

விடியற்காலை (நாவல்) ... ரூ. 7–00

நாமும் நமது உலகமும் (அறிவியல்) ... 2–50

பெண்ணையும் காவிரியும் (சரித்திர வரலாறு) 2–50

சிறுவயதில் ஐன்ஸ்டீன் (வரலாறு) ... 1–75

அப்பா என்னை மன்னிக்கமாட்டாயா? (அச்சில்)
(விஜயநகர சரித்திர நவீனம்)

வை. சாம்பசிவம்

மாபெரும் மரக்குதிரை (கிரேக்கக் கதைகள்) 1–25

பொன்னுத் தாத்தா சொன்ன கதைகள்
அணுவின் ஆடல் (அறிவியல்) ... 1–50

யாரோ? எவரோ? (கருத்தோவியம்) ... 3–00

மஹா வீரரும் புத்தரும் (அச்சில்)

எம். என். ராய்

உலகம் மாறவேண்டும் (அரசியல் கருத்துரை) 1–75

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

காலம் மிகமிகக் குறுகியது! ,, ... 1–50

மாப்பசான்

இலக்கிய விமர்சனம் ... 1–00

புது இலக்கியப் பதிப்பகம்

61, தம்பு செட்டித் தெரு, சென்னை – 1.

கிளை: 22, ஆறுமுகம் பிள்ளையார் கோயில் தெரு, குகை, சேலம்-6.

# நன்றி

நமது 'சுடர்' 14-வது மலர், கவிமணி மலராக வெளிவருகிறது. அதற்கேற்ப, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களைப் பற்றிப் பல பெருமக்கள் வழங்கிய கருத்தோவியங்கள் மலரில் இடம் பெற்றுள்ளன. வேறுபல கவிதை, கதை, கட்டுரைகளும், மலரை அலங்கரிக்கின்றன.

செயற்குழு உறுப்பினர்களும், மற்றும் சில அன்பர்களும், மலருக்கு வேண்டிய எழுத்தோவியங்களும் விளம்பரங்களும் சேகரிப்பதில் தீவிரமாக உழைத்தார்கள். அரசாங்கத்தினரும் வணிகத்துறைப் பெருமக்களும் வழக்கம் போல், – ஏன் வழக்கத்திற்குச் சற்று அதிகமாகவே விளம்பரங்கள் தந்து உதவியுள்ளார்கள்.

கவிமணி அவர்களின் மருகர் திரு. கே. குமாரசாமி அவர்கள் பல குறிப்புக்கள் தந்து உதவினார்கள். அட்டைச் 'சுடரி'ல் ஒளிரும் கவிமணியவர்களின் திருஉருவப்படமும் வேறு பல படங்களும் கவிமணிதாசன் திரு. எஸ். ஆதிமூலப்பெருமாள் அவர்கள் உதவியது. உள்ளே முகப்புப்படமாக அழகிய முழுப் படத்தின் 'பிளாக்'கை மிக்க ஆர்வத்தோடு வழங்கியவர், சென்னை பாரி நிலையம் உரிமையாளர் திரு. க. அ. செல்லப்பன் அவர்கள்.

புலவர் திரு. க. ஆறுமுகனார் அவர்கள் ஆசிரியப் பொறுப்பு ஏற்றிருக்க, வழக்கம்போல் திரு. தி. கோ. அனந்தசாமி அவர்களும் திரு. கே.எஸ். ஜம்புநாதன் அவர்களும் சுடருக்கான வேலைகளைச் சென்னையில் கவனித்தார்கள்.

'சுடர்' மலரை எழில் மணக்க அச்சிட்டுத் தந்தவர் திரு. டி. என். ராமச்சந்தின் அவர்கள்.

சுடர் வெளியீடு தில்லித் தமிழ்ச் சங்கப் பணிகளிலே முக்கியமான ஒன்று. அதிலே துணைநின்று உதவிய அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்; உளங்கனிந்த நன்றி.

செயற்குழு,

தில்லித் தமிழ்ச் சங்கம்,

*With the best compliments of :*

## THE NATIONAL ELECTRICAL INDUSTRIES LTD.

*MAKERS OF*

Power, Distribution Transformers, Motors, Bench & Pedestal Grinders, Monobloc Pumps, etc. etc.

●

*ASSOCIATES*

**M/s. Wandleside National Conductors Ltd.**

**M/s. Crescent Iron & Steel Corporation Ltd.**

**M/s. Machine Tool Reconditioning Private Ltd.**

●

*HEAD OFFICE*

**Industrial Estate, Lalbaug,**

**BOMBAY - 12.**

●

*DELHI OFFICE*

32 – 34, INDRA PALACE LODGE,

CONNAUGHT CIRCUS, NEW DELHI-1.

Grams : NATELIN — Phone : 45737

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

# this could be you



## in DCM shirting

Crisp, fresh, and dressed just right for a long, busy working day. DCM shirtings bring you smart good looks, hard wear and a choice of white, pastel shades and designs. Rs. 1.14 to Rs. 4.47 per metre.

**D C M** *for the finest value in textiles.*

THE DELHI CLOTH & GENERAL MILLS CO. LTD., DELHI

Look of Elegance in the Drawing room

*Co-optex*

**HANDLOOM FABRICS**

**DRESS & FURNISHINGS**

*Available at all our selling units*

**The Tamil Nadu (Madras State) Handloom Weavers' Co-operative Society Limited.**
34/1-A, Pantheon Road, Egmore, Madras-8.



1. Madras State Handloom Co-optex Sales Emporium, No. 11–E, Lajput Nagar, New Delhi.

2. Madras State Handloom Co-optex Sales Emporium, 70, Bhagat Singh Market, New Delhi-1.

3. Madras State Handloom Co-optex Whole Sale Depot, 10174, Gurudhwara Road, Karolbagh, New Delhi.

4. Madras State Handloom Co-optex Sales Emporium, 10174, Gurudhwara Road, Karolbagh, New Delhi.

5. Madras State Handloom Co-optex Sales Emporium, 22–B, Khan Market, New Delhi.

6. Madras State Handloom Co-optex Sales Emporium, 185, Sarojini Market, Sarojini Nagar, New Delhi-3.

Wrapper Printed at Gnanodaya Press, Madras-1